ரண ாத்திரை

1755

சிரஞ்சீவி

...AJAH SERFOGI'S SARASWATHI MAHAL...

ர்ாம்நாத் பப்ளிகே...
ராயப்பேட்டை : :

விலை ரூ...

முதற் பதி[illegible]
உரிமை பெ[illegible]

[illegible]க்கதையில் வரும் [illegible]கள், சம்பவங்கள், [illegible]கள் அனைத்தும் கற்[illegible]. இறந்தோர், இருப்போர் எவரையுமே குறிப்பிடுவன அல்ல.

சிரஞ்சீவி

இதே ஆசிரியரால் எழுதப்பட்ட
ஏனைய துப்பறியும் நாவல்கள்

மர்மம் நிறைந்த மாயவில்லா
சூனியக்காரி

பதிப்புரை

சமூகக் கதைகள், காதற் கதைகள் இவற்றையே திருப்பித் திருப்பிப் படித்துச் சலிப்படைந்த வாசகர்களுக்கு துப்பறியும் கதைகள் சிருஷ்டிப்பதில் வல்லவரான சிரஞ்சீவி, தான் எழுதியிருக்கும் 'மரண யாத்திரை' மூலம் ஓர் சிறந்த பொழுது போக்கை யளிக்கிறார்.

இன்பியல் நாடகங்களையே எழுதி வந்த ஆங்கில மகா கவி ஷேக்ஸ்பியர், துன்பியல் நாடகங்களை எழுத முற்பட்டதும் மேலும் புகழடைந்தாராம். அதைப் போல் சமூகக் கதைகளையும் காதற் கதைகளையும் திறம்பட எழுதி வந்த சிரஞ்சீவி, துப்பறியும் கதைகளை எழுத முற்பட்டதும் வாசகர்கள் உள்ளத்தில் ஓர் நிலையான ஸ்தானத்தைப் பெற்று விட்டார்.

இதே ஆசிரியரின் கதைகளை இதுவரை படித்திராத புதுவாசகர்கள்கூட 'மரண யாத்திரை'யைப் படிக்கும்போது சிரஞ்சீவியின் கதை புனையும் திறனைப் பாராட்டுவார்கள் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இப்புத்தகத்தை வெளியிட்டுள்ளோம்.

1

ராகினியின் வீட்டிற்குள்ளே ரமணி நுழைந்தபோது, என்றுமில்லாத குதூகலத்தோடு துள்ளிக் குதித்துக் கொண்டு மாடிப் படிகளில் இறங்கி ஓடி வந்தாள் அவள். ராகினியின் உள்ளக் கிளர்ச்சியையும் அதே சமயம் அவளிடம் துளிர்த்திருக்கும் ஒரு இன்ப உணர்ச்சியையும் கண்டு, 'ஏன இந்த மகிழ்ச்சி!' என்ற ஆவத்தோடு அவளையே பார்த்துக்கொண்டிருந்தான் அவன்.

"இதோ பாருங்கள், இந்தப் பேப்பரை! என் சிநேகிதி இவள்!... என்னுடைய பால்ய சிநேகிதி! இங்கே வந்திருக்கிருள்!" என்று அடக்க முடியாத ஆனந்தத்தோடு ஒரு தினசரியை அவனிடம் கொடுத்து விட்டு நெருக்கியடித்துக் கொண்டு அவனை ஒட்டினற்போல உட்கார்ந்து கொண்டாள் ராகினி.

"இதற்காகவா இவ்வளவு சந்தோஷப் படுகிருய்!" என்று அலக்ஷியமாகச் சிரித்துவிட்டுப் பேப்பரைப் பிரித்துப் படித்துப் பார்த்தான் ரமணி ராகினி குறிப்பிட்டுக் காட்டிய பகுதியைப் படிக்கப் படிக்க அவனது முகத்திலே இருந்த அலக்ஷிய பாவம் சிறிது சிறிதாக மறைந்து வியப்பு மிளிர்ந்து பிரகாசிக்கத் தலைப் பட்டது!

"சென்னை செய்த பாக்கியம்! கோடீஸ்வரி சுதாராணி விஜயம்! இளமை பூத்துக் குலுங்கும் இளநங்கையின் தாராள நன்கொடை!"

பத்திரிகையில் அமர்க்களமாகத் தலைப்பு கொடுத்து வெளி வந்திருக்கும் விஷயங்களை ஒரே மூச்சில் படித்து முடித்த அவன் நிமிர்ந்து ராகினியைப் பார்த்தான்.

"இப்போதே சுதாராணியைப் பார்த்துவிடப் போகிறேன். என் வாழ்க்கைக்கு விடி வெள்ளி தோன்றி விட்டது! அவள் என்னைப் பார்த்ததும் அப்படியே என்னைச் சேர்த்துப் பிடித்துக் கட்டிக் கொள்வாள்! 'எப்படி இருக்கிருய், என்ன, ஏது?' என்றெல்லாம் ஆசையோடு கேட்பாள். ஒன்று விடாமல் எல்லாவற்றையும் சொல்லுவேன்! உங்களைப் பற்றியும் பிரஸ்தாபிப்பேன். அவள் உள்ளம் மகிழ்வாள். பிறகு ..பிறகு ..நமது எதிர்கால வாழ்வு இன்பமயமாக இருக்கும்! பிரகாசத்தோடு விளங்கும்! நானும் நீங்களும்... ஆஹா! எவ்வளவு ஆனந்தமாக இருக்கலாம் தெரியுமா?"

தன் உள்ளத்திலிருந்தும் துள்ளித் துள்ளி எழும் இன்ப வெள்ளத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பொரிந்து கொட்டினுள் ராகினி.

"சுதாராணி உன் சிநேகிதியா!" என்று ஆச்சர்யத்தோடு கேட்டான் ரமணி.

"ஆமாம்! எனக்கும் அவளுக்கும் நினைவு வந்த நாளிலிருந்து சிநேகிதம். என் அப்பா பெங்களூரில் வேலைக்கிருந்தபோது, நாங்கள் இருந்த வீட்டிற்கு அடுத்த வீட்டிலே சுதாராணி குடி இருந்தாள். நூறு ருபாய் சம்பளத்தில் ஒரு சைக்கிள் கம்பெனி மானேஜராக இருந்து உயிரைவிட்ட ஏழைத் தந்தையின் மகளாக அவள் இருந்தாள்! தந்தை செத்து தாயும் நோய்வாய்ப் பட்டு குடும்பம் சீரழிந்த நிலையில் அவதிப் பட்டுக்கொண்டிருந்த போது. என் அப்பா எவ்வளவோ தரம் ஒன்றும் இரண்டுமாகக் கொடுத்து உதவி செய்திருக்கிறார். அப்போது சுதாராணி பாவாடையும் சித்தாடையும் அணிந்து திரிந்த பத்து வருஷச் சிறுமி! அதே சுதாராணி இப்போது கோடீஸ்வரியாகி விட்டாள்! தானதர்மம் செய்கிறாள்! தயவு தாக்ஷிண்யம் காட்டுகிறாள்! பத்திரிகைகள் புகழும் அளவுக்கு வள்ளலாக விளங்குகிறாள்! இதையெல்லாம் பார்க்க எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா!"

"திடுதிப்பென்று அவள் எப்படி கோடீஸ்வரியானாள், ராகினி?"

"அதிருஷ்டம் அப்படிக் கண் திறந்தது! சுதாராணியின் அத்தை ஒருத்தி தன் கணவனோடு சிங்கப்பூரில் வாழ்ந்து வந்தாள். யுத்த காலத்திற்கு முன்னால் சுமாரான பணக்காரர்களாயிருந்த அவர்கள் யுத்த காலத்தில் நிறையப் பொருள் திரட்டி அளவற்ற செல்வந்தர்களானார்கள். ஐஸ்வர்யம் கூடிவரும் போது துரதிருஷ்டமும் பின் தொடரும் என்று சொல்லுவதற்கேற்ப அத்தையின் புருஷன் திடீர் மரணமடைந்தார். செல்வமனைத்தும் அந்த அத்தையின் கைக்கு மாறியது. அவள் லோகானுபவங்களில் ஊறிப் போனவளாதலால் புருஷன் விட்டுச்சென்ற ரொக்கத்தை வீணாக்கவில்லை. பர்மா, மலேயா, கொழும்பு ஆகிய இடங்களில் ரப்பர் தோட்டங்களும் தேயிலை எஸ்டேட்டுகளுமாக வாங்கிப் போட்டாள். செல்வம் மேலும் மேலும் பெருகிற்று. ஆனால் இவ்வளவிருந்தும் ஆண்டு அனுபவிக்க அவளுக்குச் சந்ததியில்லை! இருந்த ஒரு மூன்று வயதுப் பையனும் காலகதியடைந்தான். சமீபத்தில் அவளும் இறந்தாள். அவளது மரண சாஸனப்படி செல்வமனைத்துக்கும் சுதாராணி வாரிசாக வந்து விட்டாள்!... இப்போது கிட்டத்தட்ட என் வயசு அவளுக்கு! இருபத்தோரு வயதிருக்கும்! எப்படி அழகாக இருப்பாள் தெரியுமா!"

"சுதாராணி பெற்றிருக்கும் செல்வத்திற்கு நீயே வாரிசு போலல்லவா பூரித்துப் போகிறாய்!" என்று பரிகாசம் செய்தான் ரமணி.

"நம்மைச் சுற்றியிருப்பவர்கள் நன்றாய் இருந்தால்தான் நாமும் நம்பிக்கையோடு இருக்கலாம்! இன்றில்லா விட்டாலும்

நாளையாவது நன்றாக வாழலாம். இன்னும் வெளிப்படையாகச் சொல்லப் போனால், என் அதிருஷ்டத்திற்குத்தான் சுதாராணி சென்னை வந்திருக்கிறாள்! நான் இங்கே இருப்பது அவளுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் என்னைக் காண ஓடோடி வந்து நிற்பாள்! அவளுக்கு அந்த நாளிலேயே என் பேரில் அவ்வளவு பிரியம்!''

''அப்படியானால் நீ அவளைச் சந்திக்கப் போகிறாயாக்கும்?''

''ஆமாம், நிச்சயமாக! ..அதுவும் இப்போதே போகப் போகிறேன்! போனவுடன் 'ராகினி! சௌக்கியமா?' என்று கேட்பாள். 'ஏதோ இருக்கிறேன்' என்பேன். 'வாழ்க்கை எப்படிக் கழிகிறது?' என்று விசாரிப்பாள். 'நித்யகண்டம் பூர்ணாயுசு!' என்று சொல்லுவேன். 'கல்யாணம்...!' என்று ஆவலோடு கண் சிமிட்டுவாள்! அப்போது நான்...நான்...உங்களைப் பற்றிச் சொல்லுவேன். 'கவலைப்படாதே ராகினி!' என்று என்னைத் தேற்றுவாள். நம்பிக்கை ஊட்டுவாள். என் நலனில் அக்கறை காட்டுவாள், அப்புறம்...அப்புறம்...''

''காசு பணம் தந்து நமக்குக் கல்யாணம் செய்து வைப்பாளாக்கும்!'' என்றுப் பக்ஷமும் நேசமும் கலந்த குரலில் கண் சிமிட்டியபடி ராகினியைப் பார்த்தான் ரமணி.

'ஆமாம்' என்பது போல புன்முறுவலோடு தலை அசைத்து விட்டு, ஆனந்தம் தாங்கமாட்டாமல் அவன் மீது சாய்ந்தாள் ராகினி. அவளது கண்களில் துளும்பிய ஆனந்தக் கண்ணீர் அணைத்திருந்த ரமணியின் கரங்களிலே சொட்டிக் கொண்டிருந்தது! அவன் அவளது கண்களை ஆசையோடு பார்த்தான். அவளும் அவனை விழுங்கி விடுவது போலப் பார்த்தாள். அந்தப் பார்வையில் தன்னம்பிக்கை மிளிர்ந்திருந்தது. 'அன்பரே! காதல் வாழ்விற்கு சட்டிப் பொன் இருந்தால்தான் கனிரஸம் ததும்பும் என்பார்கள். இத்தனை நாள் அதற்குத்தான் ஏங்கி இருந்தோம். அந்த ஏக்கத்தை நிச்சயம் சுதாராணி துடைத்தெறிவாள். உங்களை உன்னத ஸ்தானத்திற்கு உயர்த்துவேன். நானும் நீங்களும் மணம் செய்து கொண்டு நாலு பேருக்கு முன் ராஜநடை போடலாம்' என்றெல்லாம் அந்தப் பார்வை சொல்வது போலிருந்தது.

''ராகினி!'' என்று ஆசை ததும்ப அவள் கன்னத்தை வருடினான் ரமணி. ''சுதாராணியைப் பார்த்து நீ என்ன கேட்கப் போகிறாய்? 'காசு பணம் கொடுத்து கல்யாணம் செய்து வை' என்று சொல்லப் போகிறாயா?''

''அப்போது என் மனதிற்கு என்ன தோன்றுகிறதோ அதையெல்லாம் கேட்கப் போகிறேன். நான் வாய்சைத்தால் போதும், வேண்டியதையெல்லாம், விட்டுக் கொடுக்காமல் தருவாள்!

அதோடு மட்டுமா?...'என்னுடனேயே இருந்து விடேன்' என்று கூடக் கூறுவாள். ஆனால்...ஆனால்..."

"ஆனால் என்ன ராகினி?"

"நீங்கள் எனக்கு வேண்டும்! நீங்களில்லாத ராஜ வாழ்வு எனக்கு வேண்டவே வேண்டாம்! அதைத்தான் சுதாராணியி டம் அழுத்தம் திருத்தமாகச் சொல்லப் போகிறேன். அவளால் தடை சொல்ல முடியாது!..."

"நான் உன்னோடு இருப்பதானால் என் புருஷனும் என் கூட இருக்கவேண்டும் என்று உன் சிநேகிதியிடம் சொல்லப் போகிறாயா?"

"அவ்வளவு கேவலமாக நான் உங்களை விட்டுக் கொடுக்கப் போவதில்லை! என் ஆசைக் குகந்தவரை அவ்வளவு அவமானத் திற்குள்ளாக்கவும் நான் முற்படப் போவதில்லை. எந்த விதத்தில் நான் அவளது உதவியை நாடப் போகிறேன் என்பதை இப் போது சொல்லமாட்டேன். அந்த உதவி கிடைத்த பிறகு நீங்களே பூரித்துப் போவீர்கள்!"

"ராகினி!" என்று குறுக்கிட்டான் ரமணி. "நான் ஒன்று சொல்கிறேன் கேட்பாயா? நான் கூறுகிறபடி நீ நடந்து கொண் டால் ஆயுள் பூராவும் ஆனந்த வாழ்க்கை நடத்த சுதாராணி யிடமிருந்து அத்தனை நலன்களும் பெறலாம்! என்ன சொல் லுகிறாய ராகினி?" என்று கேட்டான்.

'சரி' என்பது போல பலமாகத் தலை அசைத்தாள் ராகினி. இருவரும் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

* * *

சுதாராணியைப் பற்றிய பேச்சு ரமணிக்கும் ராகினிக்கு மிடையே மட்டும் நடக்கவில்லை. அவளை அறிந்த அத்தனை பேரும் அவளைப் பற்றியே பேசி அளவளாவிக் கொண்டிருந்தார் கள். அதில் சுதா ராணியின் மாமன் மகனான ஆனந்த ரங்கனும் ஒருவன்.

"அப்போது அழுது அழுது கெஞ்சினேன். 'அந்த ஏழைப் பெண் எதற்கடா? நல்ல பணக்காரப் பெண்ணைப் பார்க்கி றேன்' என்று கலாட்டா செய்தீர்கள். அதோடு விட்டீர்களா? சுதாராணியை அழைத்துக் கொண்டு அத்தை இங்கே வந்து எனக்கு மணமுடித்து வைக்கும்படிக் கெஞ்சியபோது 'சுதா அழகில்லை ..அவலக்ஷணம்..அப்படியிப்படி' என்று இகழ்ந்து புறக்கணித்தீர்கள். இப்போது அவள் கோடீஸ்வரியாகி விட்டதனால் அழகும் அந்தஸ்தும் வந்து விட்டது! இல்லையா அப்பா?" என்று ஆனந்தன் தன் தகப்பனோடு ஏதோ சண்டை போட்டுக் கொண்டிருந்தான்.

''ஆனந்த்! அப்போது என் புத்தி அப்படி இருந்தது. ஒரு பணக்கார மருமகளை அடைய என மனம் ஆசை கொண்டது. அதனால் சுதாராணியைப் புறக்கணித்தேன். இப்போதுகூட ஒன்றும் காரியம் கெட்டுவிடவில்லை. நீ நேரிலே போய் சுதாவைப் பார்த்தால் அவள் மனசு திரும்பும்; உறவு முறையை உதாசீனப் படுத்தமாட்டாள்; உள்ளம் மகிழ்ந்தாலும் மகிழ்வாள்! போய்வா ஆனந்த்! வலியப்போய் பார்ப்பதால் அவமானமெதுவுமில்லை. சுதாவின் குணம் உனக்குத் தெரியாதா?'' என்று உருவேற்றிக் கொண்டிருந்தார், அவனது தந்தையும் சுதாராணியின் தாயோடு கூடப் பிறந்த மாமனுமான மதுசூதனர்.

அந்தக் காரியம் நடைபெறும் என்று அணுவளவுகூட ஆனந்தனுக்கு நம்பிக்கையில்லை. ஒரு காலத்தில் நேருக்கு நேர் சுதாராணியிடம், 'எனக்கு இஷ்டமில்லை' என்று கூறிவிட்டு, இப்போது போய் 'என்னை மணந்து கொள்!' என்றால் அவள் இசைவாளா, என்பது அவனுக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் பணத்தாசை கொண்ட மதுசூதனர், எந்த விதத்திலேனும் சுதாவைத் தன் மகனுக்கு மணமுடித்து வைக்கப் பல வழிகளிலும் புகுந்து புறப்பட ஆரம்பித்தார். அதனால் வேறு வழியில்லாமல் முயற்சி செய்து பார்த்து விடலாம் என்ற எண்ணத்தோடு சுதாராணியை நேரில் சந்திக்க ஆனந்தன் மூட்டை முடிச்சு கட்டிக் கொண்டிருந்தான்.

* * *

சுதாராணியின் உறவினர்களில் மதுசூதனர்தான் இப்படியென்றால், அவளது தாயோடு கூடப் பிறந்த சித்தியான வைதேகி, தன் புதல்வனோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தாள்.

''உனக்கு இஷ்டமிருந்தால் நீயே சுதாராணியைப் போய்ப் பார்! நான் உனக்காக அவளிடம் போய் முகம் கொடுக்கக்கூட வெட்கமாயிருக்கிறது. 'உன் பிள்ளை என்ன உத்தியோகம் செய்கிறான்?' என்று அவள் கேட்டுவிட்டால், தலைகுனிந்து நான் ஊமையாக இருக்கவேண்டும் உனக்கு வயது இருபத்திரெண்டு ஆகிறது. ஒரு நிலையான உத்யோகமோ அந்தஸ்தோ உனக்கு இருக்கிறதா? எந்த முகங்கொண்டு நீ அவளைப் பார்த்து உதவி கேட்கப் போகிறாய்?'' என்று சலித்துக் கொண்டாள்.

''இத்தனை நாள் வேலையில்லாமல் இருந்தேன். இனியாவது வேலை பார்க்க வேண்டும் என்ற கருத்தோடுதானே, உன்னைச் சிபாரிசு செய்யும்படி அழைக்கிறேன். நானாக சுதாராணியிடம் போய்க் கேட்டுவிடுவேன். ஆனால் நீயும் கூட வந்தால் நல்லது என்று தோன்றுகிறது. வரமாட்டாயா அம்மா?'' என்று பட்டாபி குழந்தைபோலக் கெஞ்சினான். ''சுதா என்னை வேலைக்கு வைத்துக் கொள்ள இஷ்டப்பட்டால் வைத்துக் கொள்ளட்டும்; இல்லையோ கொஞ்சம் காசு பணமாவது

வாங்கிக்கொடு. கடை கண்ணியாவது வைத்துக்கொண்டு இனி ஒழுங்காக இருக்கிறேன். வாம்மா! சுதாராணியைப் பார்த்து வரலாம்'' என்று தாயை மேலும் மேலும் கட்டாயப் படுத்திக் கொண்டிருந்தான் அவன்.

தான் பெற்றெடுத்த பிள்ளை இப்படி கெஞ்சுகிறபோது ஒரு தாய் இப்படியா பிடிவாதம் செய்வாள் என்று நினைப்பதற்கு, பட்டாபியை அறிந்தவர்கள் முற்படவே மாட்டார்கள். ஊரிலே பட்டாபிக்கு அவ்வளவு நல்ல பெயர் இருந்தது! நல்ல மனிதர்களின் நடுவே அவனைக் காண முடியாது! அவனை நாள் பூராவும் முடிச்சவிழ்க்கிறவர்களிடையேதான் காணமுடியும். மது, சூது, மங்கை இவைகள் இருக்குமிடத்திலே நிச்சயமாக அவனைப் பார்க்கலாம்! அவனைத் தெரியாத போலீஸ்காரர்கூட இல்லை! அவ்வளவு பிரக்யாதி! போதும் போதாததற்கு ஒரு வைப்பாட்டி வேறு! அவளைத் திருப்தி செய்வதற்காக அம்மாவினுடைய நகைகளில் ஒன்றுகூட பாக்கி வைக்காமல் வீட்டிலிருந்து திருடிக் கொண்டு போய் அவளது பாத கமலங்களில் கொட்டியாகி விட்டது. இப்போது வேலை பார்க்கக் கரிசனை! தன் பிள்ளையின் குணத்தை நன்கு அறிந்த ஒரு தாய் எப்படி இவனுடைய வார்த்தையை நம்பிவிட முடியும்?

தன் பிள்ளையின் வேண்டுகோளை ஏற்கவும் அவளுக்கு மனமில்லை. ஏற்காமல் இருக்கவும் திடம் கொள்ள முடியாத நிலையில் பட்டாபியுடன் சுதாராணியைப் போய்ப் பார்த்துவர நிச்சயம் செய்துகொண்டாள் வைதேகி.

சுதாராணியின் சுக வாழ்விலே தங்களுக்கும் பங்கு தேடிக் கொள்ள ஒருபுறம் உறவினர்கள் ஆயத்தம் செய்து கொண்டிருக்க, அவளது நண்பர்களும், 'சுதா! சுதா!' என்று சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். ஏழை எளியவர் என்றால் கனிவு காட்டும் சுதாவின் இளைந்த மனதை இளக வைத்து, காசு கரண்டுவதிலே பலரும் பல வழிகளில் முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

எல்லோரும் நினைத்துக் கொண்டிருப்பது போல சுதா அவ்வளவு அசடல்ல என்பது அவள் நடந்து கொண்ட ஒவ்வொரு காரியங்களின் மூலம் நிரூபணமாகிக் கொண்டிருந்தது. தன் உதவி நாடி, தன் தயவு நாடி, தன் மாளிகையில் வந்து மண்டிக்கிடந்து அத்தனை பேருக்கும் அமைதியாகப் பதில் கூறி ஒருவர் பின் ஒருவராய் அவள் அனுப்பிக் கொண்டிருந்தாள். அப்படி வந்திருந்தவர்களில் தாய் மாமனாகிய மதுசூதனரும் தாயுடன் கூடப்பிறந்த சித்தியான வைதேகியும் குறிப்பிடத் தகுந்தவர்களாவார்கள்.

தான் ஏழையாய் இருக்கும்போது உதாசீனப்படுத்திவிட்டு இப்போது உறவு கொண்டாட வந்திருக்கும் தன் மாமனாகிய

மதுசூதனரை சுதாராணி வெறுத்துப் புறக்கணிக்கவில்லை. அவர் என்ன காரணத்திற்காக வலிய வந்து உச்சிகுளிரப பேசுகிருர் என்பதை அவள் நன்ருகப் புரிந்து கொண்டாள்! "மாமா! உங்கள்பேரில் எனக்குப பிரியமில்லாமல் இல்லை. ஆனந்தனின் மீதும் எனக்கு அன்பு இல்லாமலில்லை. நீங்கள் ஏதோ சொல்லு கிறீர்களே, அதைத் தவிர உங்களது வேறு எந்தவித ஆசையையும் தயங்காமல் நான பூர்த்தி செய்து வைக்கிறேன், இதைவிட வேறு எதுவும் நான் கூறுவதற்கில்லை" என்று கண்டிப்பான குரலில் சுதாராணி மதுசூதனருக்குக் கூறினுள்.

மதுசூதனரின் முகம் சுண்டிவிட்டது! இருந்தாலும் அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்ற வேதாந்தத்தைக் கடைப்பிடித்துப் பார்க்கலாம் என்ற நப்பாசையோடு ஆனந்தனைக் கூட்டிக் கொண்டு சுதாராணியிடம் விடை பெற்றுக்கொண்டு சென்ருர்.

மாமனுன மதுசூதனரை வாசல்வரை சென்று வழி அனுப்பிய சுதா திரும்பி உள்ளே வந்ததும் சித்தியிருந்த அறைக்கு வந்தாள். வரும்போதே, "சித்தி! மாமாவோடு நான் பேசிக்கொண்டிருந்தது உங்கள் காதிலே விழுந்திருக்கும். நான் கூறியதில் தப்பு ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டுக்கொண்டே வந்து, வைதேகியின் அருகிலே உட்கார்ந்து கொண்டாள்.

வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாகக் கச்சிதமாக ஒன்றிரண்டு வார்த்தைகளில் தன் அபிப்பிராயத்தைக் கூறி விடுகிற சுதாராணியின் கெட்டிக்காரத்தனத்தைக் கண்டு வியந்து கொண்டிருந்த வைதேகி "உன் மனதிலுள்ளதை நீ சொன்னுய்! இதிலென்ன பிசகு இருக்கிறது?" என்ருள்.

"மாமா போவதைப் பார்த்தால் மிகவும் சலிப்போடு செல்வதுபோல இருக்கிறது. எல்லோர் மனதையும் எல்லாவிதத்திலும் திருப்திப் படுத்துவது என்பது ஆகக்கூடிய காரியமா சித்தி?"

"அது எப்படியம்மா முடியும்?" என்று அவளுக்கு அனுசரணையாகவே பேசினுள் வைதேகி.

அவர்கள் இருவருக்குமிடையே நடந்த பேச்சு பல விஷயங்களில் புகுந்து புறப்பட்டது. வந்து அதிக நேரம் ஆகிவிட்டதால் தான் வந்த காரியத்தைப் பேச முற்பட்டாள் வைதேகி.

"சுதா! நான் எதற்காக இப்போது உன்னிடம் வந்திருக்கிறேன் தெரியுமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் சித்தி.

"இது என்ன கேள்வி சித்தி! என்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையோடு வந்திருப்பீர்கள்" என்ருள் சுதா.

எதிலும் பட்டும் படாமலும் பதில் கூறும் சுதாவின் சாமர்த்தியத்தைத் தனக்குள்ளே மெச்சிக்கொண்டாள் வைதேகி. "சுதா ரொம்ப நாட்களுக்குப் பிறகு ஒருவரை ஒருவர் பார்ப்பதற்கென்று வந்தால் காரியம் எதுவும் இல்லாமல் இருக்காது. அது அண்ணனாலும் சரி; அக்காவானாலும் சரி! நீ சென்னை வந்து இன்றோடு பத்து நாள் ஆகிறது. தாயோடு கூடப்பிறந்த சித்தி ஒருத்தி இருக்கிறாளே என்று நீ என்னைப் பார்க்க என் வீடு தேடி வரவில்லை. உலக நடப்புப்படிப் பார்த்தால் அதை ஒரு அவமானமாக நினைத்து, நான் இங்கே உன் வீட்டு வாசலில்கூட காலடி எடுத்து வைத்திருக்கக்கூடாது. அப்படியிருந்தும் நானே உன்னைப் பார்த்துப்போக வந்திருக்கிறேனென்றால் ஆசை என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டு பேச்சை நிறுத்தி, சுதாவை ஏறெடுத்துப் பார்த்தாள் வைதேகி. தான் செய்துவிட்ட தவறுக்காக அவள் மனம் வருந்துகிறாளா என்று பார்ப்பதற்காக இல்லை. 'வெகுளித்தனமாக மனதிலுள்ளதைக் கூறிவிட்டோமே, அதனால் நொந்துபோயிருக்குமோ?' என்று தயங்கினாள்.

சுதா அதை குற்றமாக எடுத்துக்கொள்ளவில்லை. சித்தியின் வெள்ளை மனதைக் கண்டு வியந்து கொண்டிருந்தாள். உலகத்திலே எல்லா மனிதர்களும் சித்தியைப்போல உள்ளத்திலே உள்ளதை உதடுகளில் வடித்துக் காட்டினால் எவ்வித மாச்சரியமும் ஏற்படாமல் சுமுகமாகப் போய்க்கொண்டிருக்குமே என்று எண்ணினாள். "சித்தி! அப்படியானால் என்னைப் பார்க்க வேண்டுமென்று வரவில்லையா?" என்று வருத்தத்தோடு கேட்டாள்.

'மனசிலே ஆசையில்லாமல் இருக்குமா சுதா? உன்னைப் பார்க்கவேண்டுமென்று உள்ளூரத் துடிதுடித்துக்கொண்டுதான் இருந்தேன். சரி இன்னும் பொறுத்துப் பார்க்கலாம் என்றிருந்தேன். ஆனால் பட்டாபி என்னைத் துளைத்தெடுத்து விட்டான். அவனது உபத்திரவம் தாங்காமல்தான் உன்னைப் பார்த்துப் போக அரைமனதோடு வந்தேன்..."

"அதைக் கேட்க மறந்தேபோய் விட்டேன் சித்தி!" என்று குறுக்கிட்டாள் சுதா. "அவன் கெட்ட சகவாசத்தால் மகா தூர்த்தனைத் திரிவதாகக் கேள்விப் பட்டேனே. இப்போது எப்படி இருக்கிறான் சித்தி? ஏதாவது திருந்தியிருக்கிறானா?"

"திருந்தி நல்ல பிள்ளையாகிவிட்டேன் என்று சொல்லுகிறான். வாயளவோடு சரி. நடத்தை மாறினதாகக் காணோம். என்னால் முடிந்தவரை அவனைத் திருத்தப் பார்த்து விட்டேன். அன்போடு சொன்னேன்; அழுது சொன்னேன்; கெஞ்சினேன்! வயிற்றெரிச்சல் தீர குமுறிக்கூடக் கொட்டி விட்டேன். அவன் கொஞ்சம் கூடத் திருந்தவில்லை! அதற்காகவே உன்னிடம் பேசிடப்போக வந்தேன். சுதா! உன்னை நான் காசு பணம் கேட்கவில்லை. நீ அதற்கெல்லாம் மனமுவந்து

வந்தால்கூட அவைகளை ஏற்றுக் கொள்ளமாட்டேன். நான் உன்னை உரிமையோடு கேட்பதெல்லாம் இதுதான்: அவனைத் திருத்தி நல்ல வழிக்குக் கொண்டுவரும் பொறுப்பை நீ ஏற்றுக் கொண்டாகவேண்டும். கூடப் பிறக்காவிட்டாலும் உன் சகோதரன் அவன்! ...என்ன சொல்லுகிறாய் சுதா?''

''உன் பேச்சுக்கு மசியாதவனா என் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுக்கப் போகிறான்?''

''நான் அதைச் சொல்லவில்லை சுதா! வேலைவெட்டி எதுவுமில்லாமல் அவன் திரிவதனால்தான் இப்படியெல்லாம் கெட்டழிய புத்தி போகிறது. சுதா! நீயும் தனியாக இருக்கிறாய். திரண்ட செல்வத்திற்குச் சீமாட்டியாக இருக்கிறாய். என்ன இருந்தாலும் சிறுசு. உனக்கு ஆண்துணை போல அவனை வைத்துக் கொண்டால், உன் எஸ்டேட்டுகளைக் கவனித்து வருவதில் புத்தி போகும். கெட்ட குணமும் மாறிவரும். அப்படி ஏதாவது செய்ய முடியுமா பாரேன்?''

சித்தியின் வேண்டுகோளுக்கு என்ன பதில் சொல்வது, என்று தயங்கினாள் சுதா. அவள் மனதிலே அந்த விஷயம் பற்றி தெள்ளத் தெளிய ஒரு முடிவை யோசித்து வைத்திருந்ததால் மனம்விட்டுக் கூறி விடுவதே மேல் என எண்ணினாள் அவள். ''சித்தி! நம சுதாவா இப்படிப் பேசுகிறாள்!' என்று நீங்கள் வருத்தப்பட்டுக் கொள்ளக்கூடாது அண்ணன் உறவுள்ள ஒருவரை அடிமைபோன்ற ஒரு வேலைக்காரனாக வைத்துக் கொள்வது அவ்வளவு உசிதமாகப் படவில்லை அதில் பல இடையூறுகள் இருக்கின்றன. கிட்டின உறவாதலால் அவன் தவறு செய்யும் சமயங்களில் எஜமானி என்ற முறையில் நான் எதுவும் கடிந்து கூறமுடியாது; கண்டிப்போடு நடந்து கொள்ளவும் முடியாது. அதனால் மென்று விழுங்கும் நிலை ஏற்பட்டு அது நமக்குள்ளே கசப்பை ஏற்படுத்தினாலும் ஏற்படுத்திவிடும். அதை யோசிக்கும்போது ..சித்தி! நான் சொல்லுகிறபடி செய்கிறீர்களா?''

''என்ன?''

''போதுமான பணம் தருகிறேன். ஏதாவது நல்ல வியாபாரமாகச் செய்து, சாமர்த்தியமாகப் பிழைத்து முன்னுக்கு வரட்டுமே!''

''அவனை நம்பியா?... வேண்டவே வேண்டாம்! ஊரிலே இருக்கிற சிறுக்கிகளுக்குக் கொட்டி அழுதுவிட்டு 'இன்னும் கொண்டா' என்று கேட்பான். உன்னிடம்ருந்து காசை வாங்கி ஊராருக்குப் படைக்க என் மனசு ஒப்பவேண்டாமா சுதா? உன்னிடம் சொல்வதற்கென்ன? இதோ என் கழுத்தையும் கையையும் பாரேன். ஒரு நகை நட்டு இருக்கா?...பாவி, அவன் எனக்

குத் தெரியாமலேயே ஒன்றொன்ருக உருவி எல்லாவற்றையும் தொலைத்து விட்டான்! கொஞ்ச நஞ்ச நகையா?''

''அத்தனையையும் என்ன செய்தான் சித்தி?''

''பாலாமணியாம் ..... எவளோ ஒரு தேவடியாள்: அவள் வீடே கதியென்று மாய்ந்து கிடக்கான். பெத்த தாயே தன் பிள்ளையைப் பற்றி இவ்வளவு இழிவாகப் பேசுகிருளே என்று நீ நினைப்பே. என் வயிறு அப்படி எரிகிறது. ஒரோர் சமயம் அவன் என் பிள்ளை இல்லை என்று உதறிவிடலாமா என்றுகூடத் தோன்றுகிறது. நாலு பேர் நாலு தினுசாகப் பேசுவார்களே என்று தயங்குகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே கண்ணீர் சிந்திஞள் வைதேகி.

'இவ்வளவு தங்கமான குணம் கொண்ட சித்திக்கு இப்படிப்பட்ட ஒருபிள்ளை பிறக்க வேண்டுமா?' என்று மனம்குழைந்தாள் சுதா. சித்தி காசு பணம் கேட்டாலும் அவளுக்கிருக்கும் குணத்திற்கு எவ்வளவு கொடுத்தாலும் தகும். ஆனல் அவளுக்கு வேண்டியது அது இல்லையே!

யோசித்தாள் சுதா. சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு ஏதோ ஒரு மார்க்கம் கண்டுவிட்டது போல ''சித்தி! உங்களோடு பட்டாபி வந்திருந்தானே. அவன் எங்கே?'' என்று கேட்டாள்.

''பட்டாபி! ..பட்டாபி!'' என்று உரக்கக் குரல் கொடுத்தாள் வைதேகி. அத்தனை நேரமும் சுதாவின் அந்தரங்க அறையிலே எதையெதையெல்லாமோ ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்த அவன், ''ஏனம்மா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான்.

''நான்தான் உன்னை எங்கே என்று விசாரித்தேன். பட்டாபி! அம்மா இருக்கிற இருப்பு தெரியாமல் நீ கண்டபடியெல்லாம் திரிவது உனக்கே அழகாயிருக்கிறதா?'' என்று கடிந்து கொண்டாள் சுதாராணி. பிறகு வைதேகி பக்கம் திரும்பி ''சித்தி! இன்னும் ஒரு பத்து நாள் பல்லைக் கடித்துக் கொண்டு காலத்தைத் தள்ளுங்கள் பர்மா, மலாயா, சிலோன் ஆகிய இடங்களில் உள்ள எஸ்டேட்டுகளைப் பார்த்துவரப் புறப்படப் போகிறேன். கூடவே பட்டாபியும் வரட்டும் திரும்பும்போதாவது உலகத்திலுள்ளோரைப் போல ஆகிருஞ என்று பார்க்கலாம்'' என்ருள்.

கை நிறையப் பொன்னும் மணியும் அள்ளிக் கொடுத்திருந்தால் கூட வைதேகி அவ்வளவு சந்தோஷப் பட்டிருக்கமாட்டாள். கண்களிலே திருப்தி பிரதிபலிக்க, ''அப்படியே செய் சுதா! இந்தக் காரியம் நீ செய்தால் உனக்குக் கோடி புண்ணியமுண்டு!'' என்று வாஞ்சையோடு ஆசீர்வதித்தாள்.

விடைபெற்றுக் கொண்டு சித்தி புறப்பட்டபோது, 'செல வுக்கு வைத்துக் கொள்!' என்று ஆயிரம் ரூபாயை எடுத்து அவ ளிடம் கொடுத்தாள் சுதா. வைதேகி அதைப் பெற்றுக்கொள்ள வில்லை. ''சுதா! 'நாம் கொடுத்தோம், சித்தி வாங்கிக்கொள்ள வில்லை பார்த்தாயா!' என்று மனசு கஷ்டப்பட்டுக் கொள்ளாதே. இந்த ரூபாயை இவன் கண் எதிரே நீ கொடுக்கிறாய். வீடு போகிற வரைக்கும் என் கையிலே இருக்கும். அப்புறம் அதைக் கரைக்காத வரையில் இவனுக்குத் தூக்கம் வராது. சஷ்டம் என்றால் உன்னிடம் வராமல் நான் எங்கேபோகப்போகிறேன்? அப்போது பார்த்துக் கொள்ளலாம்'' அவளது முகவாயைப் பிடித்துத் தூக்கி சமாதானம் கூறினாள்.

'சித்திக்குத்தான் எவ்வளவு பெருந்தன்மை. பிறருடைய காசு என்றால் நஞ்சு போலல்லவா கருதகிறாள்!' என்று சுதா ராணி வியந்து கொண்டிருக்கும் போது, வேலைக்காரி மங்கம்மா உள்ளே வந்தாள். யாரோ ஒரு யுவதி சுதாவைப் பார்க்க வந் திருப்பதாகத் தெரிவித்தாள்.

யாரென்று பேரை விசாரித்தாள் சுதா. வந்திருப்பது இன் னார் என்று தெரிந்ததும் துள்ளிக் குதித்துக் கொண்டு வாசல் பக் கம் ஓடி வந்தாள்.

சுதாவை எப்போது காணப் போகிறோம் என்ற ஆசை யோடு உட்கார்ந்திருக்கக் கூட இருப்புக் கொள்ளாமல், அங்கு மிங்கும் நடைபோட்டுக் கொண்டிருந்தாள் ராகினி.

'ராகினி'' என்று அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு ஆனந்தப் பெருக்கில் அவளை உலுப்பி எடுத்தாள் சுதா. தனது பழைய சிநேகிதியைக் கண்டதும் அவளுக்குத் தலைகால் புரியவில்லை. ராகினியின் இரு கைகளையும் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டு உள்ளே ஓடி வந்து உட் கார்ந்து கொண்டாள்.

''ஏண்டி ராகினி! இப்பொழுதுதான் உனக்கு வழி தெரிந்த தாக்கும்! இத்தனை நாளாக ஒரு முக்காலணா கார்டு எழுதக் கூடவா உன்னிடம் காசில்லாமல் போய்விட்டது?'' என்று செல்லமாகக் கோபித்துவிட்டு, 'நீ என்னை மறந்திருந்தால் கூட நான் உன்னைப் பற்றி விசாரித்துக் கொண்டேதான் இருக்கி றேன். ஆமா, நீ ஏதோ ஒரு வெள்ளைக்காரன் கம்பெனியிலே டைப்பிஸ்டா இருப்பதாகக் கேள்விப்பட்டேனே, இன்னும் அதே வேலையிலேதான் இருக்கியா? அது சரி, எவனையாவது இழுத்துப் போட்டுண்டயா இல்லையா?''

பல நாட்களுக்குப் பிறகு தன் ஆருயிர் சிநேகிதியைச் சந்தித்த குதூகலத்தில் சரமாரியாகக் கேள்விகள் கேட்டு ராகினியைத் திணற அடித்தாள் சுதா. அவள் கேட்ட கடைசிக் கேள்வியை

நினைத்துக் கொண்ட போது ராகினி வெட்கப்பட்டவள் போலச் சிரித்தாள். "ஓஹோ...ஹோ! எனக்குப் புரிந்து விட்டது! யாரடி அவன்? என்ன வேலை? எத்தனை வயசிருக்கும்?" என்று கேட்டு சுதா அவளது கன்னத்தைக் கிள்ளினாள்!

"சொல்லட்டுமா சுதா? ஆனால் நீ திருஷ்டி வைத்துவிடக் கூடாது!" என்றாள், நமுட்டுச் சிரிப்புச் சிரித்துக் கண் சிமிட்டிய ராகினி.

"அவனைப்பற்றி ஓரேயடியாக வர்ணிக்கப் போகிறு யாக்கும்!"

அவ்வளவுதான்; ராகினி தன் காதலனைப் பற்றி பிரமாத மாகப் புகழ ஆரம்பித்துவிட்டாள். "சுதா! நான் சொன்னால் பெருமையடித்தக் கொள்வதாக நீ நினைப்பே. ஆனால் உள்ள படியே பார்ப்பதற்கு எவ்வளவு அழகாய் இருப்பார் தெரியுமா! அவர் தெருவிலே நடந்து போகும்போது அவரை திரும்பி பார்க் காத ஒரு பெண்ணைக்கூட காணமுடியாது. நல்ல திடகாத்திரம்; சாந்தசுபாவம்; துருதுருத்த விழிகள்; அமரிக்கையான நடத்தை; எப்போதும் சிரித்தமுகம்; பீடி, சிகரெட், வெற்றிலை பாக்கு எது வும் கிட்டக்கூட வரக்கூடாது. அது மட்டுமா? பீ ஏ. ஹானர்ஸ் பாஸ் பண்ணியிருக்கிறர். அவருக்கு என் பேரிலே எவ்வளவு பிரியம் தெரியுமா? நானும் அவரை ஒரு நாள் பார்க்க முடியா விட்டால்பைத்தியமா ஆயிடறேன். அவரோட பேசிச்சொண்டே இருந்தால் போதும்; பசி தாகம் எதுவும் எடுக்கிறதில்லை". இப்படிச் சொல்லும்போது ராகினியின் கண்களிலே அசாதாரண ஒளி வீசியது.

"அடேயப்பா! அப்புறம்?"

"நான் சொன்ன உனக்குப் பரிகாசமாத்தான் இருக்கும். அவரை நீ பார்த்தா...!"

"கடிச்சு முழுங்கிடுவேனுக்கும்!"

"மிஞ்சி மிஞ்சி நீ கடிச்சுட்டால் கூட கொஞ்சமாவது மிஞ் சுமே!.... நீயே மயங்கி மாய்ஞ்சுட்டா..."

"அப்படியானு அவரைப் பத்திரமாப் பூட்டி வச்சுக்கோ!".

"நான் சொன்ன நீ நம்பமாட்டே! சுதா! அவரையும் கூடவே கூட்டிக்கொண்டு வந்திருக்கேன். பார்க்கிறயா?... கூப்பிடட்டுமா?"

"அவரை வெளி வாசல்லேயே நிறுத்தி வைத்துவிட்டு வந் தாயா!" சமர்த்து! போடி போ! போய்க் கூட்டிக் கொண்டுவா" என்றாள் சுதா.

ஆனந்தத்தோடு துள்ளிக் குதித்துக் கொண்டு வெளியே ஓடினாள் ராகினி. அவள் திரும்பி வந்தபோது, அவள் பின்னே வந்து கொண்டிருந்த ஒரு வாலிபனை சுதா கண் கொட்டாமல் பார்த்தாள்.

உள்ளே நுழைந்த ரமணியின் தோள்மீது உல்லாசமாக கைபோட்டு சுதாவின் அருகே அழைத்து வந்த ராகினி, "என் சிநேகிதி, சுதா ராணி!" என்று கூறி சுதாவை தன் காதலனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள்.

"நமஸ்காரம்" என்று கை கூப்பினான் ரமணி. பதிலுக்கு இரு கைகளையும் கூப்பிய சுதா, வாய் திறந்து வாருங்கள் என்று வரவேற்கக்கூட மறந்துவிட்டாள்! ஒளி வீசும் அவளது கண்கள் அவனையே கூர்ந்து நோக்கின. "என்ன இருந்தாலும் ராகினி அதிருஷ்டசாலி தான்" என்று தனக்குள்ளே கூறிக்கொண்டு, ஆர்வத்தோடு அவனை மேலும் கீழுமாகப் பார்த்தாள். முகம் முதல் பாதம்வரையில் குற்றம், குறை, ஊனம் எதுவுமில்லாமல் அங்கங்கள் யாவும் அவனுக்கு நன்றாக அமைந்திருந்தன! சந்தேகமேயில்லை. ராகினி புகழ்ந்து கொண்டது கொஞ்சம்கூட மிகையாகாது. ராகினியைத் திரும்பிப் பார்த்தாள் அவள். பிறகு மீண்டும் ரமணியை பார்த்தாள். இன்னொருதரம் அவனைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. இந்த மனோ விகாரமும் புரியாத ஆசையும் கொஞ்சநேரம் அவளை உலுப்பி வைத்தன. பிறகு ஏனோ அவளது முகம் சடக்கென மாறியது. ஆசையும் நேசமும் சொரிந்த பக்ஷமான பார்வை அவளது கண்களை விட்டு மறைந்தது. மேகத்தினுள் மறைந்த மதி போல அவளது சோபிதம் அனைத்தும் ஓடி ஒளிந்து கொண்டன. அவளது மனதிலே ஏதோ ஒருவிதக் கிளர்ச்சி ஏற்பட்டு விட்டதை முகபாவம் தெள்ளத் தெளியக் காட்ட ஆரம்பித்தது. ரமணியின் வாலிபமும் வனப்பும் சுதாவிற்கு இன்பமளிக்கின்றன என்பது ஸ்பஷ்டமாகப் புலப்பட்டது.

இதையெல்லாம் ராகினி கவனித்துக் கொண்டுதானிருந்தாள். அதை நீடிக்கவிட மனம் பொறுக்கவில்லையோ என்னவோ, "என்ன யோசிக்கிறாய் சுதா?" என்று அவளைத் தன் பக்கம் இழுத்தாள்.

கனவிலிருந்து திடுக்கிடுபவள் போல, உலுப்பிக் கொண்டு ராகினியிடம், "ஒன்றுமில்லை" என்று கூறிச் சுதாரித்துக் கொண்டாள், சுதா.

"போகலாமா?" என்பது போல ராகினியைப் பார்த்தான் ரமணி. "போய் வரட்டுமா சுதா?" என்று கேட்டாள் ராகினி.

தலையாட்டி பொம்மை போல உணர்ச்சியின்றித் தலை யசைத்தாள் சுதா.

ரமணியோடு வாசல் வரை போய்விட்ட ராகினி ஏதோ நினைத்துக் கொண்டவளாய், "சுதா!" என்று கூப்பிட்டபடி மறுபடியும் உள்ளே வந்தாள்.

"முக்கியமானதை உன்னிடம் சொல்ல மறந்து விட்டேன். சுதா! உனக்குத்தான் எத்தனையோ இடங்களில் எஸ்டேட் இருக்கிறதே. ஏதாவது ஒரு இடத்தில் மானேஜராக நீ அவருக்கு வேலை கொடுத்தால் உன் சிநேகிதிக்கு நீ பெரிய உபகாரம் செய்த மாதிரி. என்ன சொல்லுகிறாய் சுதா?" என்று கேட்டாள்.

ஏதோ யோசித்தாள் சுதாராணி. "பிறகு சொல்கிறேன். எதற்கும் நாளை வந்து அவரைப் பார்க்கச் சொல்லேன்" என்றாள்.

"சரி ..ஆகட்டும்...நான் போய் வருகிறேன் சுதா. எந்த விதத்திலேனும் நீ எனக்கு உதவி செய்துதான் ஆகவேண்டும்... என்ன தெரிகிறதா?" என்று கூறிக் கொண்டே வாசலுக்கு வந்து ரமணியுடன் கைகோர்த்துக் கொண்டாள்.

வந்த காரியம் வீண் போகவில்லை, என்ற திருப்தியோடு ராகினி வழி நடக்க, ரமணி சுபீக்ஷமான ஒரு எதிர்காலம் தனக்குக் கிட்டிவிட்டது என்ற குதூகலத்தோடு ராகினியின் இடையைத் தன் வலக்கரத்தால் சுற்றி வளைத்தபடி உரையாடிச் சென்றான்.

ராகினிக்குக் கிட்டிய பாக்கியம் தனக்குக் கிட்டியிருக்கக் கூடாதா, என்று ஏங்கியது ஒரு மனம். அதற்குச் சொந்தக்காரி வேறு யாருமில்லை. கோடீஸ்வரி சுதாராணியேதான்!

2

மறுதினம்......

சென்னையில் பிரமாத 'மௌசு'டன் விளங்கிய 'ஹோட்டல் பௌராணி' பலவித வர்ண ஜால மின்சார விளக்குகளுடன் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. என்றுமில்லாமல் வழக்கத்தை விட அன்று முழுதும் ஜனக்கூட்டம் கும்பல் கும்பலாக வந்து போய்க் கொண்டிருந்தது. சென்னையிலே இருக்கும் பல பணக்கார மாமிசப் பிரியர்களை இருபத்தைந்து வருஷ காலமாகத் தொடர்ந்து சம்ரக்ஷித்து விதவித ருசிகாட்டி வந்த அந்த ஹோட்டல், 'ஸில்வர் ஜூபிலி' விழா கொண்டாடியதால் தன் வாடிக்கைகாரர்களுக்கு அது பிரமாதமான வரவேற்பளித்துக் கொண்டிருந்தது. வந்திருந்தவர்கள் 'பேஷ் பலே ஜோர்!' என்று எலும்பையும் சதையையும் கடித்து சுவைத்து சப்புக் கொட்டிக் கொண்டிருக்க, ஒரு மூலையிலே உட்கார்ந்திருந்த ஒருவர் மட்டும் தனக்காக தருவித்த ஐஸ்கிரீமை ஒரு

சிறு கரண்டியால் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துச் சுவைத்த படி அங்கு வந்திருந்த அத்தனைபேரையும் ஒவ்வொருவராக ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'ஹோட்டல் பௌராணி' கல்யாண மண்டபம் போல விளங்கிக் கொண்டிருந்தது. அதுவரை தயாரிக்கப்படாத புது விதமாமிச உணவுகள் தயாரிக்கப்பட இருப்பதாக அதன் முதலாளி ஏற்கனவே பிரமாதமாக விளம்பரப்படுத்தி இருந்த தால், சென்னை நகரமே அங்கு திரண்டு வந்தது! டாலடிக்கும் சினிமா நக்ஷத்திரங்கள் கூட கொஞ்சநஞ்சக் கூச்சத்தையும் உதறி எறிந்துவிட்டு, தத்தம் ஆசைக்குகந்த அன்பர்கள் சகிதம் அங்கே பிரசன்னமாகி ஆனந்தமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந் தார்கள்! சாப்பிடுவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. சிரிப்பதும் களிப்பதுமாக ஒவ்வொருவரும் நிர்த்தூளி செய்து கொண்டிருந்தார்கள்.

மூலையிலே உட்கார்ந்து ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந் தவர் நாலாபுறமும் கண்ணோட்டம் செலுத்திக் கொண்டிருந்த போது, 'களுக்'கென்று இரு வாலிபர்கள் ஏககாலத்தில் வாய் விட்டு பலமாகச் சிரிக்கும் சப்தம் அவரது கவனத்தைக் கவர்ந் தது. எதைக் கண்டு இத்தனை ஆனந்தப்படுகிறார்கள் என்று திரும்பிப் பார்த்தார் அவர்.

இரு வாலிபர்கள் யாரையோ பற்றிப் பரிகாசமாக கிண்டல் செய்து கொண்டிருந்தார்கள். அதில் ஒருவன் மற்றொருவ னிடம் கூறிக் கொண்டிருந்ததை காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தார் 'ஐஸ்கிரீம் பேர்வழி!'

"டே சோப்ளாங்கி! நீயும் எம். ஏ பாஸ் செய்திருக்கிறாய்; தினச்சவரம் செய்துகொள்கிறாய்; அரும்பு மீசையை அழகாக வளர்க்கிறாய்; மாலை மங்கினால் 'ஜம்'மென்று பௌராணி ஹோட்டலுக்கு வந்துவிடுகிறாய்! எவளெவளை யெல்லாமோ பார்த்து பார்த்துப் பெருமூச்சு விட்டுவிட்டு போய்க்கொண்டே இருக்கிறாய். இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் எவ ளாவது ஒரு பணக்கார யுவதி சிக்கமாட்டாளா என்று கஜ கர்ணம் போட்டுப் பார்க்கிறாய்! பலன்? அள்ளப் போனாலும் அதிருஷ்டம் வேண்டாமா? இதைக் கேளு, போன வருஷ தீபாவளிக்கு யாரோ பாவம் பார்த்து தர்மமாக எடுத்துக் கொடுத்த ஒரு பாண்ட்டையும் கோட்டையும் விடாமல் தொடர்ந்து மாட்டிக்கொண்டு ஒவ்வொரு கம்பெனியாகப் படி யேறி இறங்கினவனுக்கு அதிருஷ்டம் எப்படித் தேடி வந்திருக் கிறது தெரியுமா? ஊரிலே எங்கே பார்த்தாலும் இதே பேச்சு. ஒரு கோடீஸ்வரிக்கு—அதுவும் கல்யாணமாகாத ஒரு கனிந்த கனிக்கு இன்று அவன் அந்தரங்க காரியதரிசி! அதிருஷ்டம் அப்படியல்லவா தேடிவர வேண்டும்? உன்னைப்போல அதை

தேடிக்கொண்டா அலேவார்சள்?'' என்று தன்னோடு இருந்த மற்றொருவனை 'கோட்டா' செய்து கொண்டிருந்தான ஒருவன்.

யாரைப்பற்றி இப்படி குறிப்பிடுகிறுன் என்று உன்னிப்பாக காது கொடுத்துக் கேட்க ஆவல் கொண்டிருந்தார் ஐஸ்கிரீம் ஆசாமி. அதே சமயம் "அநத அதிருஷ்டசாலி யாரபபா?" என்று கேட்டுக் கொண்டிருந்தான் மற்றொரு சகா.

"அதோ... அந்த வலது கோடியில் பாரு... இளிப்பச்சை புட வைக்காரி! அவளருகே உட்கார்ந்திருக்கிறுனே, அவனைத் தான் சொல்லுகிறேன்."

ஐஸ்கிரீம்காரர் அந்தத் திசையை நோக்கினர். அவரது புரு வங்கள் நெளிந்து பிறகு பழைய நிலேக்கு நிமிர்ந்தன. அங்கே ரமணியும் ராகினியும் அற்புதமான ஜோடியாக விளங்கிச் சிரித் துக் களித்துக் கொண்டிருந்தார்கள். 'ஹோட்டல் பௌராணி' யின் சொந்தக்காரர் கூட அவ்வளவு குதூகலத்தில் ஆழ்ந்திருக்க மாட்டார்! அதற்கும் மிஞ்சிய பரவசத்தில் ரமணி இருந்து கொண்டிருந்தான்!

தூர இருந்து அவர்களைப் பார்ப்பதில் திருப்திபடாததிருலோ என்னவோ, ஐஸ்கிரீம் ஆசாமி தன் ஆசனத்தை விட்டு எழுந்து ரமணியின் அருகே இருநத மற்றொரு மேஜைப் பக்கமாக உட் கார்ந்து கொண்டார்.

ரமணியும் ராகினியும் உள்ளப் பூரிப்போடு என்னவெல் லாமோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

"ராகினி! எனக்காக நீ ரொம்பவும் சிரத்தை எடுத்துக் கொண்டு அலேகிருய்! இபபோது தியாகம் செய்யக்கூடத் துணிந்து விட்டாய்! என்னவோ போ...உன் தொந்திரவு பொறுக்கமாட்டாமல்தான் நானும் வேலேயை ஒப்புக் கொண் டேன். இனிமேல் நீயும் நானும் இப்படி அடிக்கடி சந்திக்க முடியுமா? அதுவும் இன்னும் ஒரு வாரத்திற்குள் கடல் தாண்டி இருக்கும் தன் எஸ்டேட்டுகளைப் பார்ததுவர சுதாராணி கொழும்பு, பர்மா, மலாயா ஆகிய இடங்களுக்குப் புறப்படப் போகிருள். நான் உன்னேப் பிரிந்து எப்படி இருக்கப் போகி றேனே தெரியவில்லே...! என் மனதே சரியிலலே."

"உங்களிடம் பைத்தியமாகி இருக்கும் நானே ஆசையை யெல்லாம் அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் போது நீங்கள் இப்படி மனம் குழையலாமா? கொஞ்ச நாள்தானே! அதறகப் புறம் நம் முன்னே இருக்கும் சுகபோக வாழ்வை நினைத்துப் பாருங்கள்."

"இப்போது நாம் இருப்பதை விட அதிக ஆனந்தம் தருவ தாக இருக்கும் என்று நினைத்து, கைப்பழத்தைவிட்டு தொரட்டுப்

பழத்துக்கு ஆசைப்படுகிருயே ராகினி! மனித மனம் நிலையானதா?... எதாவது விபரீத மாறுதல் ஏற்பட்டு விட்டால்?''

''உங்களை நம்புகிறேன், ஆனுல்... ஆனுல்...'' தயங்கினுள் ராகினி.

''என்ன ''ராகினி?''

''என்னை மறந்து நிஜமாகவே சுதாவிடம் மாய்ந்து விட்டா...ல்?''

ராகினி அதோடு நிறுத்திப் பெருமூச்சு விடுவதை ஓரக் கண்ணுல் பார்த்தார் ஐஸ்கிரீம்காரர்.

''என்ன அசட்டு நினைவு ராகினி! இந்த சுதா இல்லை... இவளையும் மிஞ்சின அப்ஸரஸ் குறுக்கிட்டால் கூட என் ஹிருதயத்திலே நான் உனக்கு அளித்திருக்கும் ஒரு அந்தரங்க சுத்தியான ஸ்தானத்தை அடைந்துவிட முடியாது! தின்கிற சோற்றை எதிரே வைத்துக் கொண்டு சொல்லுகிறேன் ராகினி, நம் சுக வாழ்விற்கு விடிவெள்ளி காண்கிற வரையில் நான் சுதாராணியிடம் வேலைக்கு இருப்பேன். அவளது ஆட்டத்திற்கெல்லாம் ஆடும் அடிமை போல இருப்பேன். பிறகு...ராகினி! நம்மை மிஞ்சிய வைகுந்தவாசிகள் இவ்வுலகிலே வேறு யாரும் இருக்க முடியாது!''

''அந்த நம்பிக்கையில்தான் உங்களை விட்டிருக்கிறேன். ஆனுல் விஷயங்கள் வேறு தினுசாக மாறுவதைப் பார்த்தேனேயானுல் உங்களையும் வாழ விடமாட்டேன்; நானும் உயிரோடு இருக்கமாட்டேன்...!''

'எவ்வளவு ஆசை மனது இவளுக்கு!' என்று ஐஸ்கிரீம்காரர் வியப்போடு ராகினியைப் பார்த்துவிட்டு, ஒன்றையும் கவனிக்காதவர் போல வேறு பக்கம் திரும்பிக் கொண்டார். ஆனுல் அவரது கவனம் மட்டும் நாலாபுறமும் உஷாராகவே இருந்தது.

திடீரென்று கூட்டத்திடையே ஒரு சலசலப்பு ஏற்பட்டது. அங்கிருந்த எல்லோரது கண்களும் ஆவலோடு ஒரு திசைக்குத் திரும்பின. ஐஸ்கிரீம் பேர்வழியும் அந்தப் பக்கம் பார்த்தார்.

அழகு ராணி என்று தமிழ் நாடே போற்றிப் புகழுகிற பாலாமணி என்ற நாட்டியக்காரி நர்த்தனமாடுவது போல ஒயிலோடு நடந்து வந்து கொண்டிருந்தாள். அவளை ஒட்டினுற்போல உராய்ந்து கொண்டு வரும் பாக்கியவான் யாரென்று ஒருவரையொருவர் விசாரித்துக் கொண்டார்கள்.

பாலாமணியோடு வந்த வாலிபனை இமை கொட்டாது பார்த்தார் ஐஸ்கிரீம்காரர். அவளோடு வந்தவன் வேறு யாரு

யில்லை. பட்டாபி! பல நாட்களாக ஏங்கிக்கிடந்த தவப்பலன் அன்றுதான் கிட்டியதுபோல செருக்குடன் நடந்து வந்தான் அவன். அவனது நேர் நிமிர்ந்த பார்வை, 'உங்களுக்கெல்லாம் கிட்டாத ஒரு பாக்கியம் எனக்குக் கிட்டியிருப்பதைப் பார்த்துப் பொறாமைப படுங்கள்!' என்று ஒவ்வொருவருக்கும் சொல்லி பெருமிதம் கொள்வதுபோல ஒளி வீசியது.

"இந்த பரதப் பயலுக்கு அடித்த யோகத்தைப் பாருடா!" என்று பொறாமையில் சிலர் வயிறு எரிந்தார்கள்.

"கோடீஸ்வரனுக்குக்கூட கிட்டிவராத பாலாமணி இவனிடம் மயங்கிவிட்டாளே!" என்று சிலர் ஏங்கினார்கள்.

"உலக மகா அழகிகளின் காதலைப்பற்றிய சரித்தை அறியாமலேயே இவர்களெல்லாம் ஏதேதோ உளறுகிறார்கள்! சாதாரணமாகவும் எளிய வாழ்க்கை நடத்துபவனாகவும் இருப்பவனிடம்தான் பல அழகிகள் தங்கள் மனதைப் பறி கொடுத்து இருக்கிறார்கள்!" என்று ஒருவர் தத்துவம் பேசினார்.

ஆனால் ஐஸ்கிரீம்காரரின் அபிப்பிராயம் யாரோடும் ஒவ்வாது தனி நினைப்பில் மூழ்கியது. 'பாலாமணியின் கடைக்கண் பார்வைக்கு அவள் கழுத்திலே சோபையுடன் விளங்கும் முத்துமாலை யல்லவா ஒளி தருகிறது' என்று தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார். அதற்குப் பிறகு அவரது பார்வையும் கவனமும் பட்டாபி—பாலாமணி பக்கமே தீவிரமாகப் பதிந்து விட்டது.

சிறிது நேரம் அமரிக்கையாக உட்கார்ந்திருந்தபடி பாலாமணியையும் பட்டாபியையும் கவனித்துக் கொண்டிருந்த ஐஸ்கிரீம் மனிதர், பாலாமணி உட்கார்ந்திருந்த மேஜைக்கு அடுத்த இடத்தில் காலியாக இருந்த நாற்காலியில் போய் உட்கார்ந்தார். அவர்களிருவரும் கனகுஷியோடு எதைப்பற்றி அவ்வளவு சுவாரஸ்யமாகப் பேசுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள ஆசைப்பட்டாரோ என்னவோ!

"பாலா! உன் கழுத்துக்கு அந்த முத்துமாலை எவ்வளவு பாந்தமாகவும் அழகாகவும் இருக்கிறது தெரியுமா? இப்படிப் பட்ட ஒரு பொருளையே உனக்குப் பரிசளிக்கவேண்டும் என்று எத்தனையோ நாட்களாக ஆசை கொண்டிருந்தேன். பாலா! எல்லோரும் உன் முக விலாசத்தை ஆசையோடு பார்ப்பதை விட, உன கழுத்திலிருக்கும் முத்துமாலையைத்தான் அதிசயத்தோடு பார்க்கிறார்கள்..."

"ஆமாம்...இதை என்ன விலைக்கு வாங்கினீர்கள்?"

"நீ ஆசைப்பட்டது முத்துமாலை. அது உனக்குக் கிடைத்து விட்டது. விலையைப் பற்றி நீ ஏன் விசாரிக்கிறாய்?"

அதுவரை 'கம்'மென்றிருந்த ஐஸ்கிரீம் நபர் 'சட்'டென்று பாலாமணி பக்கம் திரும்பினார். "அதை என்னிடம் கேள் சொல்கிறேன். அதன் விலை ஐம்பதாயிரம் ரூபாய்! தன் காசைக் கொடுத்து வாங்கியிருந்தால்தானே பட்டாபி அதன் பெறுமானத்தைக் கூறுவதற்கு? பாலாமணி! அது ஒரு திருட்டுப் பொருள்!" என்றார்.

குறுக்கே பாய்ந்த புதுப் பேர்வழியை ஏறெடுத்துப் பார்த்து "என்ன சொன்னீர்கள்?" என்று திடுக்கிட்டாள் பாலா. திரும்பிப்பார்த்த பட்டாபி பரக்கப் பரக்க விழித்தான்.

உக்ரமான பார்வையை பட்டாபி மீது செலுத்தினார் ஐஸ்கிரீம்காரர். பாலாமணியின் விம்மிய மார்பு பயத்தினால் படபடத்துக் கொண்டிருந்தது. 'நிஜம்தானா?' என்று கேட்பதுபோல இருந்தது அவளது கூரிய பார்வை.

"பாலா!" என்று மெதுவாகக் கூப்பிட்டார் அந்த மர்ம மனிதர். "பல பிரமுகர்கள் சூழ்ந்த இடம் இது. நீ அவமானப்படுவதிலிருந்தும் தப்பிப் போகவேண்டுமானால் எழுந்து ஒதுப்புறமாக வா. விபரமாகக் கூறுகிறேன்" என்று எழுந்து நடந்தார். நிழல் போல பாலாமணி அவரைப் பின் தொடர்ந்தாள். பட்டாபி தானிருந்த இடத்திலேயே இடித்த புளிபோல உட்கார்ந்திருந்தான்.

சிறிது நேரம் சென்றது.

ஐஸ்கிரீம்காரரோடு சென்ற பாலாமணி திரும்ப வந்தாள். கைப் பையை எடுத்துக்கொண்டு பட்டாபிபிடம் கொஞ்சம் கூட முகம் கொடுக்காமல் 'விர்'ரென வெளியே சென்றாள். "என்ன பாலாமணி!" என்று கலவரத்தோடு கேட்டுக்கொண்டே அவளைப் பின் தொடர்ந்த பட்டாபி. அவளது கழுத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டான். முத்துமாலை அவள் கழுத்தை அலங்கரித்து இருக்கவில்லை. "உன்னோடு வந்தவன் எங்கே பாலா? நீ மோசம் போய்விட்டாய்! இல்லாத பொய்யைச் சொல்லி, உன்னைப் பயமுறுத்தி மிரட்டி முத்துமாலையை அபகரித்துக்கொண்டு ஓடிவிட்டான்!" என்று குதியாய் குதித்தான் பட்டாபி.

பாலாமணி திரும்பிக்கூட அவனைப் பார்க்கவில்லை. "சீ...! போ" என்று உதறித் தள்ளிவிட்டு காரில் ஏறி உட்கார்ந்து காற்றாய்ப் பறந்து மறைந்தாள்.

பட்டாபி தலை கிறுகிறுக்க பிளாட்பாரத்திலே நின்று பரிதாபமாகச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

ஹோட்டல் பௌராணியின் மூன்றாவது மொட்டை மாடியில் நின்றபடி இதையெல்லாம் கவனித்துச் சிரித்துக்கொண்டிருந்த ஐஸ்கிரீம்காரர், கையிலிருந்த முத்துமாலையைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு இடிஇடியென்று சிரித்துக்கொண்டிருந்தார்!

3

அந்தச் சமயம் பட்டாபியின் தாயான வைதேகியும், அவளது சகோதரரான மதுசூதனரும் அவள் வீட்டிலே பேசிக் கொண்டிருந்தனர். கிட்டத் தட்ட ஒருமாத காலமாகத் தன்னைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் இருந்த தன் அண்ணன், தன்னைத் தேடித் தன் வீடுவரை வந்தது வைதேகிக்கு ஆச்சரியமா யிருந்தது.

தனது திடீர் விஜயத்திற்கு விசேஷ காரணம் எதுவுமில்லாதது போல வைதேகியுடன் பேசிக் கொண்டு வந்த மதுசூதனர் மெதுவாக சுதாராணியைப் பற்றிப் பேச்செடுத்தார்.

"வைதேகி! நேற்று நான் சுதாவைப் பார்க்கப் போயிருந்தேன். முன்பு இருந்த சுதாவாகவா அவள் இருக்கிறாள்? மரியாதையே சிறிது கூட இல்லை. அடியோடு மாறிவிட்டாள்!"

வருத்தமாகச் சொல்லிய போது வைதேகி குறுக்கிட்டாள். "அந்தப் பெண்ணைப் பற்றி அப்படியெல்லாம் பேசாதே அண்ணா. அவள் தங்கக் கம்பி. நேற்று நீ அவளைப் பார்க்க வந்திருந்த போது நானும் அங்கேதான் இருந்தேன். அவள் எப்படி உன்னை வரவேற்றாள். எத்தனை பிரியத்தோடு பேசிக் கொண்டிருந்தாள் என்பதையெல்லாம் காது கொடுத்து நான் கேட்காமல் இல்லை. எடுப்பாக அவள் எதுவுமே பேசவில்லையே!"

"அப்படியானால் நாங்கள் இருவரும் பேசியதெல்லாம் உனக்குத் தெரியும் என்று சொல்லு!"

"ஆமாம். அதோடு சுதாவும் என்னிடம் வந்து கூறினாள்!"

"நான் கிளப்பிவிட்ட விஷயமாய் ஏதாவது அபிப்பிராயம் சொன்னாளா?"

"சொல்லாமல் இருப்பாளா?...எல்லாம் கூறினாள்! நான் தான் உன்னைக் கேட்கிறேனே. சுதா சாதாரண நிலையிலே இருக்கும் போது அவளை உன் பிள்ளைக்கு முடித்து வை என்று சுதாவின் அம்மா உன்னிடம் அலையாக அலைந்தாள். இவ்வளவிற்கும் உன் சகோதரி என்று கடுகளவும் அன்பு காட்டாமல் ஏழை என்று சொல்லிக் கழித்துக் கட்டினாய். அதெல்லாம் சுதாவின் மனசிலே இருக்காதா? அவள் வாய்விட்டே என்னிடம் சொன்னாள்: 'அன்று நான் ஏழை; அதனால் மாமா 'முடியாது' என்றார்! இன்று நான் கோடீஸ்வரி; அதனால் இப்போது வந்து உரிமை கொண்டாடுகிறார். ஆனால் அதே சுதாவாகவும் அதே அழகோடும்தானே இன்றும் இருக்கிறேன். அப்படியானால் அர்த்தம் தெரிகிறதா சித்தி! என்னை மருமகளாக அடைய அவருக்கு ஆசையில்லை. என் பணம், செல்வம், சொத்து—இவைகளையே விரும்புவதாகத்தானே ஆகிறது' என்று கேட்கிறாள். அவள் அழுந்தின சமர்த்து! நாலையும் நன்கு யோசிக்கக் கூடிய புத்திசாலிப் பெண்! அவளை நீ ஏமாற்ற முடியுமா?

"அப்படியானால் அவள் யாரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாளாம்?"

"அதைப் பற்றியும் கேட்டுப் பார்த்தேன். 'அந்த நினைப்பே இன்னும் எனக்கு ஏற்படவில்லையே' என்கிறாள் இன்னும் சந்தர்ப்பம் இருக்கிறது. விட்டுப் பிடியேன். நாளைக்கே அவள் மனது மாறினாலும் மாறலாமில்லையா?"

"அப்படித் தோன்ற வில்லை வைதேகி. தாக்ஷிண்ய மில்லாமல், 'முடியாது' என்று சொல்லிவிட்டாளே!"

"அதனால் அதுவே அவளது முடிவான தீர்மானம் என்று சொல்லிவிட முடியுமா?...என்னைத்தான் எடுத்துக் கொள்ளேன். என் பிள்ளை பட்டாபியை வேலைக்கு வைத்துக் கொள் என்று சுதாவிடம் கேட்டேன். அதைத் தவிர வேறு எது வேண்டுமானாலும் கணக்கு வழக்குப் பார்க்காமல் செய்கிறேன் என்றாள். அவள் அதற்குக் கூறிய காரணத்தை நிதானமாக யோசித்துப் பார்த்தபோது சரி என்றே என் புத்திக்குப் பட்டது. யாராகட்டும் சரி, தனக்கு உதவியாகத் தேடிக் கொள்கிற வேலைக்காரர்களையும், ஆயுள் வரை கூடிக் களித்திருக்க வேண்டிய கணவனையும் ஆய்ந்தோய்ந்து பாராமல் 'சட்'டென்று தேர்ந்தெடுத்து விடுவார்களா? மற்றொன்றையும் யோசித்துப் பாரேன். குவிந்து கிடக்கும் செல்வத்திற்கு ராஜாத்தி போல இருக்கும் போது, தன் மனதுக்குப் பிடித்த புருஷனைத் தேடிக் கொள்ள எந்தப் பெண்ணுக்குத்தான் ஆசை இருக்காது? இதையெல்லாம் யோசிக்காமல் அவளிடம் நாம் மனஸ்தாபப்பட்டு பிரயோஜனம்?"

"சுதாவிடம் நீ ரொம்பவும் மயங்கிப் போய் விட்டாய். அவளுக்கு ஏற்றபடி நீயும் பேசுகிறாயே! முறை இருப்பதினாலே தானே அவளைக் கேட்டேன். அதற்காகப் பழங் குப்பைகளையா கிளறுவது?"

"மறுபடியும் அதையே சொல்லாதே அண்ணா. இந்த உறவும் முறையும் முந்தி எங்கே போச்சு?"

"சரிதான்! இந்த என் முயற்சியிலே நீ ஏதாவது உதவி செய்வாய் என்று வந்தேன். நீயும் அவளோடு ஒத்துப் பாடுகிறாய்!"

"என்னை என்னதான் செய்யச் சொல்லுகிறாய்?"

'சுதாவுக்கு உன் பேரில் அளவில்லாத பிரியம் இருக்கிறது. நீயும் அடிக்கடி அவளிடம் போய் வந்து கொண்டிருக்கிறாய். கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்கு உபதேசித்து வழிக்குக் கொண்டு வர முடியாதா?"

"ஒருவர் சொல்லித் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு பெண்ணாக அவள் இல்லை. அவளுடைய பேச்சும் வெட்டு ஒன்று

துண்டு இரண்டாகவே இருக்கிறது. மேலும் நான் இந்தப் பேச்சை ஆரம்பிப்பது என் மனதிற்கே திருப்தியாகப் படவில்லை. நீ அதிகமாகக் கட்டாயப் படுத்தினல், உன்னைத் திருப்தி செய்வதற்காக ஏதோ ஆகட்டும் என்று சொல்லி மழுப்புவேனே தவிர, சுதாவிடம் துளிக்கூட இதைப் பற்றிப் பேசமாட்டேன். என் குணம் அப்படி. உன்னிடம் தலையாட்டிவிட்டு, அப்புறம் 'ஏனோதானோ' என்று இருந்துவிடுவதா லக்ஷணம்? அதோடு சுதாராணி பசப்பிலே மயங்குகிறவளாக இல்லை. நிஜப்பிரியத்தோடு பழகினல் உயிரைக்கூடத் தரும் அற்புதப் பெண்ணாக இருக்கிருள். நீயே அவளோடு நெருங்கிப் பழகி அவளை உன் போக்கிற்குத் திருப்பப் பாரேன். எனக்குத் தெரிந்த யோசனை அதுதான்!''

வைதேகி இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது யாரோ வேகமாக உள்ளே வரும் சாயல் தெரிந்தது. திரும்பிப் பார்த்தனர். ஏதோ கலவரமடைந்தவள் போல சுதாராணி வந்து கொண்டிருந்தாள்.

''சுதா! உனக்கு நூறு ஆயுசு. உன்னைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம்; நீயே வந்து விட்டாயே!'' என்று மகிழ்ச்சி ததும்ப மாமா மதுசூதனர் வரவேற்ருர். எப்பொழுதும் துருதுரு வென்று கள்ளம் கபடமின்றி விழித்துக்கொண்டு சிரித்த முகத்தோடு விளங்கும் சுதா, எதனுலோ பதட்டத்தோடு இருப்பதை உணர்ந்துகொண்ட வைதேகி, அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு ''என்ன சுதா?'' என்று பதைபதைத்தாள்.

''கொஞ்சம் இப்படித் தனியாக வருகிறீர்களா சித்தி? ஒரு விஷயம் சொல்ல வேண்டும்'' என்று சுதா நிலைகொள்ளாமல் பதறவே அவளைக் கூட்டிக்கொண்டு அடுத்த அறைக்குள் போனுள் வைதேகி.

நமக்குத் தெரியக் கூடாத ரகசியம் என்னவாக இருக்கும் என்று மண்டையைக் குழப்பிக் கொண்டிருந்தார் மதுசூதனர். அதே சமயம் உரத்த குரலில் ''நிஜமாகவா சுதா?'' என்று பரபரப்போடு வைதேகி சுதாவிடம் கேட்பது அவரது காதிலே விழுந்தது.

''ஆமாம் சித்தி. நேற்று அதிகாலையில் அந்த முத்துமாலையைக் கழற்றி படுக்கை அறை மேஜை மீது வைத்திருந்தேன். பத்து மணி சுமாருக்குக்கூட அது அங்கேயேதான இருந்தது. கண்ணுல் பார்த்தேன். அது நேற்று மத்தியானத்திற்கு மேலே தான் திருடு போயிருக்கிறது. ஒருக்கால்... ஒருக்கால்...'' சொல்ல நினைப்பதைச் சொல்ல முடியாமல் விழுங்கினுள் சுதா.

''ஏன் தயங்குகிருய் சுதா?.... சொல்லேன். நமக்குள்ளே தானே பேசிக் கொள்ளுகிருேம்.'' என்ருள் வைதேகி.

"நானும் நீங்களும் பேசிக்கொண்டிருந்தபோது பட்டாபி என் படுக்கை அறைக்குள் இருந்ததைப் பார்த்ததாக வேலைக்காரி சொன்னாள். ஒருக்கால் அவன் எடுத்திருப்பானோ என்ற ஒரு சந்தேகம்...ஒரு வார்த்தை கேட்டுப் பார்க்கலாம் என்று வந்தேன்...நீங்கள் வருத்தப்பட்டுக்கொள்ளக் கூடாது சித்தி!"

"பட்டாபி செய்திருந்தாலும் செய்திருப்பான். அப்படிப் பட்ட பிள்ளைதானே அவன்!"

எதையோ யோசித்தாள் வைதேகி. "சுதா! என் பிள்ளையைப்பற்றி நீ சந்தேகப்பட்டதற்காக நான் வருத்தப்படவே மாட்டேன். செய்யக்கூடியவன்தான்! ஆனால் திருட்டுப் புத்தியை உன் விஷயத்தில் காட்டியிருக்கமாட்டான் என்று என் மனதிற்குத் தோன்றுகிறது. எதற்கும் அவன் வந்ததும் நேருக்கு நேர் கேட்டுப் பார்க்கிறேன்...ஆமாம், அது என்ன பெறுமானம் இருக்கும்?"

"ஐம்பது ஆயிரம் ரூபாய்!"

"ஆ!" என்று திடுக்கிட்டாள் வைதேகி பிறகு அவளிடம் சிறிது கூடச் சலனம் இல்லை. ஸ்தம்பித்து விட்டாள்.

"சரி! நான் போகிறேன். அப்புறம் சாவகாசமாக வருகிறீர்களா சித்தி?" என்று கேட்டுக் கொண்டே வேகமாக வெளியே போனாள் சுதா. அவளுக்கிருந்த விசனத்தில் போகும் போது மதுசூதனரிடம் சொல்லிக் கொள்ளக்கூட மறந்து விட்டாள்.

சித்தியைச் சந்தித்து விட்டு சுதா தன் மாளிகையை அடைந்த போது, போலீஸ் இன்ஸ்பெக்டரும் மற்றும் சில ஜவான்களும் "அகப்பட்டதா?" என்று ஆவலோடு கேட்டனர். எல்லோருக்கும் பொதுவாக 'இல்லை' என்பது போல மௌனமாகத் தலை அசைத்துக் காட்டிவிட்டு கூடத்திலேயிருந்த சோபாவில் சாய்ந்து கொண்டாள் சுதா.

"நேற்று யாரெல்லாம் உங்கள் வீட்டிற்கு வந்து போனார்கள்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

சொல்லத் தயங்கினாள் சுதா. யாரையென்று சந்தேகப்படுவது என்பதே அவளுக்குப் பிடிபடவில்லை. ராகினி வந்திருந்தாள்; ரமணி வந்திருந்தார்; வைதேகி, பட்டாபி, மதுசூதனர் ..அத்தனை பேரும் மிகவும் வேண்டியவர்கள். இவர்களெல்லாம் வந்திருந்தனர் என்று சொன்னால் போலீஸ் அவர்களிடம் ரசாபாசமாக நடந்து கொள்ளும். இதையெல்லாம் எண்ணி மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தாள் சுதா.

அதே சமயம் உள்ளே நுழைந்தாள் வேலைக்காரி மங்கம்மா ''வீடு முழுதும் குடைந்து பார்த்தாச்சுது அம்மா! ஒரு முத்துக் கூட அகப்படவில்லை. யாரோ திருடிக்கொண்டுதான் போயிருக்காங்க..... எனக்கு ஒரு சந்தேகம் தோணுது. அம்மா! நாம் இந்த ஊருக்கு வந்ததிலே யிருந்து நம் வீட்டையே ஒருவன் சுற்றிச் சுற்றி வருகிறுன் என்று சொன்னேன் பாருங்கள், அவன் பேரிலே எனக்குப் பலத்த சந்தேகமாயிருக்கிறது. ஏனென்றுல் வழக்கமாக இங்கேயே வட்டமிடும் அவனை இன்று முழுதும் காணவே காணேம்......'' என்றுள்.

ஏதோ கிடைத்தற்கரிய புலன் அகப்பட்டுவிட்டதுபோல ''அவன் எப்படி இருப்பான் சொல்லு'' என்று ஆர்வத்தோடு குறுக்கிட்டார் இன்ஸ்பெக்டர்.

''தூரத்திலே இருந்தபடி பார்த்தது. அதனுல் துல்லியமாக அடையாளம் சொல்ல முடியவில்லை. சுட்டுமஸ்தான தேகம்; மா நிறம்; அரும்பு மீசை வைத்திருக்கிறுன்; சுருள் சுருளான கிராப் தலை; கிட்டத்தட்ட முப்பது வயதிருக்கும்'' என்று வர்ணிக்க ஆரம்பித்தாள் வேலைக்காரி.

''அது வேறு யாருமில்லை. நானேதான்!'' என்று கூறிக் கொண்டே உள்ளே நுழைந்தார் ஐஸ்கிரீம் பிரியர்.

''ஆமாம்...! இவரேதான் நான் சொன்ன ஆளு!'' என்று காணுததைக் கண்டவள்போல உரக்கக் கத்திஞள் வேலைக்காரி.

அவளைப் பரிகாசமாகப் பார்த்துச் சிரித்தார் வந்தவர். நிஷ்காம்ய புருஷராய் கள்ளம் கபடமின்றிச் சிரித்த அவரை இன்ஸ்பெக்டர் வியந்து பார்த்துக் கொண்டிருந்தார். ஆயாசத்தோடு இருந்த சுதாராணிக்கோ இதெல்லாம் விநோதமாக இருந்தது.

''சீமாட்டி! உங்களோடு சிறிது நேரம் தனித்துப் பேச வேண்டுமே'' என்றுர் வந்தவர். சுதா காட்டிய ஜாடையினுல் எல்லோரும் வெளி வராந்தாவுக்குப் போனுர்கள்.

சுற்றுமுற்றும் பார்த்தார் வந்தவர். யாருமில்லை. சட்டைப் பையிலிருந்து சுதாவின் முத்துமாலையை எடுத்து அவளது கையிலே கொடுத்தார்.

முத்துமாலையைக் கண்டதும் சுதாவின் முகம் சோடி சூரியப் பிரகாசம்போலப் பொலிவடைந்தது. ''என் முத்துமாலையே தான் இது...! இது எப்படி உங்கள் கைக்கு வந்தது?'' என்று கேட்டு அந்தப் புது மனிதரை வியப்போடு பார்த்தாள் சுதா.

''உங்கள் பொருள் உங்களிடம் சேர்ந்து விட்டது. எடுத்தது யார், எப்படி எடுத்தார்கள், எப்படி நான் கொண்டு வந்

தேன்...இதைப் போன்ற கேள்விகளை நீங்கள் தயவு செய்து கேட்கக் கூடாது. சொல்லுவேன் ; ஆனால் உங்கள் நலனைக் கருதி நான் அவைகளை யெல்லாம் கூற இஷ்டப்படவில்லை. சுமுகமான ஒரு சூழ்நிலையில் எல்லோருககும் அன்பு காட்டுப வராய் நீங்கள் விளங்கும் இந்தச் சமயத்தில் உண்மையைத் தெரிந்து கொள்வீர்களானால் குரோதம் வளரும். அதனால் விரோதிகள் ஏற்படுவார்கள்! அதனால்தான் தயங்குகிறேன். மன்னிக்க வேண்டும்."

அமைதியோடு, நிதானத்தோடு, தீர்க்கமாகக் கூறிய அந்த மனிதரை ஆச்சர்யத்தோடு பார்த்துக் கொண்டிருந்த சுதா. "நீங்கள் யார் என்பதையாவது கூறலாமா?" என்று கேட்டாள்,

"அதை நான் இப்போது சொல்லிக்கொள்ள வேண்டியது அவசியமாகிவிட்டது!" என்று கூறிக்கொண்டே கடிதம் ஒன்றை கோடீஸ்வரியிடம் கொடுத்தார் அவர்.

பரபரப்போடு சுதா அதை வாங்கிப் பிரித்துப் படித்தாள். அவளது முகத்திலே ஆச்சரியம் மிகுந்து பிரகாசித்தது.

4

ஐஸ்கிரீம் ஆசாமி கொடுத்த கடிதத்தைப் படித்துப் பார்த்தாள் சுதாராணி தன்னைக் கோடீஸ்வரியாக்கி விட்டுக் கண்மூடிய அத்தை தன் கைப்பட எழுதி யிருந்த கடிதமாக அது இருந்தது.

"அன்புடையீர்,

என்னுடைய திரண்ட செல்வம் முழுமைக்கும் என் சகோதரன் மகளாகிய சுதாராணியை வாரிசாக ஆக்கியிருக்கிறேன். அவள் தற்போது பெங்களூரில் இருக்கிறாள். சென்னை, இலங்கை, பர்மா, மலாயா ஆகிய தூர தேசங்களிலும் ஆஸ்திகள் இருப்பதால் அவளுக்கு அலைச்சல் அதிகமிருக்கும். அதோடு அவளைச் சுற்றிக் கழுகுபோல பலர் வட்டமிடவும் திட்டமிடுவார்கள். ஏனெனில் அவள் ஒரு அறியாப் பெண். திடுதிப்பென்று கோடீஸ்வரியாகஇருப்பதால் மோசக் கருத்தோடு அவளுக்கு நயவஞ்சகம் செய்யப் பலபேர் முனைந்தால் அதில் ஆச்சரியமில்லை. ஆதலால், சுதாராணியைக் கண்காணித்து வரும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறேன். அவள் மனதிற்கேற்ற கணவனைத் தேடிக் கொள்ளும் வரையில் அவளது உயிருக்கோ அல்லது உடமைகளுக்கோ ஏதும் ஆபத்து ஏற்படாமல் பாதுகாத்து வரவேண்டிய சுமையை உங்கள் மீது போடுகிறேன்.

உங்களது பிரக்யாதியையும், நேர்மையையும், நுண்ணறிவையும், சாமர்த்தியமான சமாளிப்புகளையும்பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனாலேயே சுதாராணி விஷயத்தில் நீங்களே ஏற்றவர் என்று கருதி உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.

அவள் மிகவும் புத்திசாலி. அதனால் நான் விட்டு வைத்துப் போகும் செல்வங்களைக் கொண்டு வாழ யார் உதவியும் தேவையிருக்காது. அவளுக்கு ஏதாவது இடையூறுகள் ஏற்பட்டால் அதைச் சமாளிக்கவே தங்களுதவி தேவை. இதற்காக எனது சிறு வெகுமானமான ரூபாய் 5000 /-க்கு செக் அனுப்பியுளளேன்."

இவ்வாறு கடிதத்தை முடித்து சுதா ராணியின் அத்தை கையொப்பமிட்டிருந்தாள். கடிதத்தைப் படித்து முடித்த சுதா, அக் கடிதம் யார் பெயருக்கு எழுதப் பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தாள். அது தெரிந்தபோது அவளுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்திற்கு அளவேயில்லை!

அவர்தான் துப்பறியும் ராஜாமணி!

"உங்களைச் சந்திக்க மிகவும் குதூகலிக்கிறேன். கிட்டாத பாக்கியம் அனைத்தையும் அள்ளித் தந்திருக்கும் என் அத்தை அவைகளைப் போற்றிக் கண்காணிக்க உங்களையும ஏற்பாடு செய்திருப்பது என் அதிருஷ்டமேயாகும்!" என்று சுதா சிரித்துக் கொண்டே கூறினாள்.

"உங்கள் அத்தையின் கோரிக்கையை எவ்வளவு ஜரூராக நான் நிறைவேற்றி வருகிறேன் என்பது இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும்!" என்று ராஜாமணியும் கூடச்சேர்ந்து சிரித்தார்.

"என் வீட்டிலிருந்து முத்துமாலை திருடு போகும் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"என் பிழைப்பே அதுதானே! எப்பொழுது உங்கள் அத்தையின் கடிதம் எனக்குக் கிடைத்ததோ அன்றிலிருந்து உங்கள் வீட்டையே வட்டமிட்டுக் கொண்டிருக்கிறேன். யார் யார் உங்களைச் சந்திக்க வருகிறார்கள்; எவரெவர் எப்படிப்பட்டவர்கள்; வருகிறவர்கள் எந்த நோக்கத்தோடு உங்களைப் பார்க்க ஆவல் கொண்டுள்ளார்கள்—இதையெல்லாம் அறிவதிலேயே முனைந்திருந்தேன் உண்மையாகவே சொல்லுகிறேன். இந்த முத்துமாலை திருடுபோன தகவலே எனக்குத் தெரியாது! ஆனால் உங்களிடம் விலையுயர்ந்த முத்துமாலை ஒன்று இருப்பது எனக்குத் தெரியும். நீங்கள் வெளியே போகும்போதும் வரும்போதும்

உங்கள் கழுத்திலே இந்த முத்துமாலையைப் பார்த்திருக்கிறேன். இதைப்போன்ற முத்துமாலை சென்னையில் எவரிடமும் கிடையாது என்பதையும் நான் நன்கு அறிவேன். இன்று எதேச்சையாக ஒரு விழாவிற்குப் போயிருந்தேன். அங்கே ஒருவரை நான் சந்தித்தபோது கிட்டத்தட்ட உங்களுடையதைப்போன்ற முத்துமாலை ஒன்றை அவரது கழுத்திலே பார்த்தேன். முதலில் நான் அதைப்பற்றி அவ்வளவாக அக்கறைகாட்டவில்லை. ஏனெனில் முத்துமாலை அணிந்திருந்தவர் நல்ல அந்தஸ்தோடு வாழ்பவராயிருந்தார். அதே சமயம் அவரோடு கூடவந்திருந்த ஆசாமியைப் பார்த்தேன். அந்த ஆசாமி நேற்று இங்கு வந்துபோயிருப்பது என் கவனத்திற்கு வந்தது. பிறகுதான் எனக்கு முத்துமாலையைப்பற்றிச் சந்தேகம் தட்டியது...''

''என் வீட்டிற்கு வந்து போன ஒருவரா! அது யார்?'' என்று வியப்புடன் கேட்டாள் சுதா.

''பெயரைக் குறிப்பிட நான் விரும்பவில்லை. மன்னிக்க வேண்டும்.''

''என் மாமா மதுசூதனரா?''

''இல்லை.''

''என் சித்தியான வைதேகியா?''

''பாவம்! அவள் நல்ல உத்தம குணம் கொண்டவளல்லவா?''

''என் சிநேகிதிரா கினியா?''

''அவள் வாய் திறந்து கேட்டாலே நீங்கள் அதைக்கொடுத்திருப்பீர்களே! அவள் ஏன் திருட வேண்டும்?''

''இவர்களைத் தவிர வேறொருவரும் வரவில்லையே!...சரி, யாரென்றுதான் சொல்லுங்களேன்.''

''தயவு செய்து அதைக் கேட்காதீர்கள்; சட்டாயப்படுத்தினாலும் கூறமாட்டேன்! முத்துமாலையை உங்களிடம் கவர்ந்து சென்றவர் தன் குடும்பச் செலவின் நிமித்தமோ அல்லது வேறு தனது சொந்தச் செலவுகளுக்காகவோ சின்னத்தனத்தில் ஈடுபடவில்லை. பெண் மோகம்! அதோடு வாலிப வயதுடையவனானவன்! மோகப் பித்தில் செய்திருக்கிறான் என்று நானே இத்தடவை அவனை மன்னித்து விட்டேன். அதனால் நீங்கள் அதைக் கிண்டிக் கிளற வேண்டாம்'' என்று ராஜாமணி மூடி மறைத்த போது அவர் குறிப்பிட்ட 'மோகம்' என்ற வார்த்தையை வைத்து கற்பனை செய்து யோசித்துப் பார்த்தாள். மோகம்!—அது ராகினிக்கும் ரமணிக்குமிடையேதான் இருக்கிறது. ஒருக்கால் ரமணி அதைக் கவர்ந்து சென்றிருப்பாரா?

அந்த சமயத்தில் உள்ளே நுழைந்தான் ரமணி.

"வாருங்கள்!" என்று சுதா அவனை வரவேற்று விட்டு ராஜா மணியின் பக்கம் திரும்பினுள். "இவரை உங்களுக்குத் தெரியு மல்லவா? பெயர் ராஜாமணி" என்று அறிமுகப்படுத்த முன் வந்தாள்.

"உங்களது அந்தரங்கக் காரியதரிசி என்பதும் தெரியும்!" சிரித்துக் கொண்டே இப்படிக் கூறிய ராஜாமணியை, தன் பெரிய விழிகளை உருட்டி ரமணி கூர்ந்து கவனித்தான். பார்த்த முகமாக இருக்கிறதே என்று எண்ணி நினைவுபடுத்திப் பார்க்க முயன்ருன்.

மெதுவாக ரமணி பக்கம் திரும்பினுர் ராஜாமணி. "என்னை எங்கே பார்த்திருக்கலாம் என்று தீவிரமாக யோசனை செய்கிறீர் கள் போலிருக்கிறது. ரமணி! அது உங்கள் நினைவுக்கு வரவே வராது. ஆசைக்குகந்த ஆரணங்குடன் ஆனந்தமாகப் பேச்சில் இருக்கும் போது அவ்வளவு உன்னிப்பாக நீங்கள் என்னைக் கவனித்திருக்கவும் முடியாது. ஏதோ அசப்பிலே பார்த்திருப் பீர்கள். அதனுல் ஞாபகத்திரையில் ஆழப் பதியவில்லை!"

"ஆசைக்குகந்த ஆரணங்கா! அது யார்?" என்று குறுக்கிட் டாள் சுதா. அப்போது அவளது முகம் சிறிது மாறுதலடைந்தது.

"வேறு யாருமில்லை உங்கள் சிநேகிதியான ராகினி!"

'அவர் சொல்வது நிஜமா' என்று கேட்பது போல ரமணி யைப் பார்த்தாள் சுதா. அந்தப் பார்வையில் மிளிர்ந்த ஆழ்ந்த உள்ளப் பேதலிப்பை ரமணியால் புரிந்து கொள்ள முடிய வில்லை. வெட்கப்பட்டவன் போல தலைகுனிந்து கொண்டான்.

"இவர்களை எங்கே சந்தித்தீர்கள்?" என்று மேலும் ஆவ லோடு ராஜாமணியிடம் விசாரித்தாள் சுதா.

சுதாவிற்கு இந்த விஷயத்தில் அதிகமான அக்கறை இருக் கத்தான் செய்யும் என்று எதிர்பார்த்திருந்த ராஜாமணி, "ஹோட்டல் பௌராணிக்கு இருவரும் வந்திருந்தார்கள். ஏன், ராகியோடு ரமணி வரக்கூடாதா? அதில் என்ன தப்பு இருக் கிறது? இன்றில்லா விட்டாலும் நாளை அவர்களிருவரும் புரு ஷன் மனைவியாக வாழப் போகிறவர்கள்தானே!" என்ருர்.

"மனுஷ வாழ்வில் அடுத்த நிமிஷம் என்ன நடக்கப் போகி றது என்பதை அறிந்தவர்கள் யாருமில்லை. அப்படியிருக்க நாளை அவர்கள் தம்பதி ஆகிவிடுவார்கள் என்று எப்படி நிச்சயம் சொல்ல முடியும்? ஏதோ இப்போது காதலிக்கிருர்கள். இந்தக் காதல் எப்போதும் நீடித்து இருக்கும் என்று எப்படிச் சொல்ல முடியும்?"—வேண்டா வெறுப்போடு சுதா கூறுவதுபோல ராஜா மணிக்குத் தோன்றியது.

'அவர்களிருவரும் புருஷன் மனைவி ஆகிறார்கள் அல்லது ஆகவில்லை. உன்னதமான உயர்ந்த உள்ளம் கொண்ட சுதா ஏன் அதைப்பற்றி அவ்வளவு கரிசனையோடு வியாக்யானம் கூற வேண்டும்?' என்று மலைத்தார் அவர். அதே சமயம் ஹோட்டல் பௌராணியில் இரு வாலிபர்கள் பேசிக்கொண்டதை ஞாபகப்படுத்திப் பார்த்துக் கொண்டார். 'அவனுக்கு அடித்த அதிருஷ்டத்தைப் பார்த்தாயா? பிடித்தாலும் பிடித்தான், சாதாரணப் பெண்ணாகவா பிடித்தான்? கோடீஸ்வரி! அதுவும் பருவத்தின் தலைவாசலில் நிற்கும் கடைந்தெடுத்த தங்கம். அவளிடம் இவனுக்கு இப்போது கிடைத்திருக்கும் வேலை என்ன தெரியுமா? அந்தரங்கக் காரியதரிசி! இனிமேல் போகப்போக அவனது அந்தஸ்து எந்த நிலைக்கு உயரும் சொல்லட்டுமா? காதலன்!' என்று அந்த இருவரில் ஒருவன் குறிப்பிட்டுப் பேசியது கிட்டத்தட்ட உண்மையாகி வருவதைக் கண்டார். ரமணியும் ராகினியும் சந்திப்பதால் சுதா தடுமாறுவானேன்? அதற்கு அர்த்தம்...?

இருவரையும் மாறி மாறிப் பார்த்தார் ராஜாமணி. என்ன நினைத்தானோ என்னவோ, ரமணி வெளி வரந்தாவில் போய் நின்று கொண்டான்.

அங்கே சிறிது நேரம் மௌனம் குடிகொண்டது. அந்த மௌனத்தைப் பேச்சுக் கொடுத்து ராஜாமணி கலைக்க முற்பட்டார்.

''ரமணியை உங்களுக்கு ரொம்ப நாட்களாகத் தெரியுமா?''

''இல்லை. நேற்றுதான் அறிமுகமானேன். ராகினி எனது உயிருக்குயிரான சிநேகிதியல்லவா? அவளோடு நேற்று இங்கே வந்திருந்தார்!... ஆமாம்... நீண்ட நாட்களாகத் தெரியுமா என்று ஏன் கேட்டீர்கள்?'' என்று சுதா கேட்டபோது, கெட்ட நடத்தையுடையவன், மோசக்காரன், அப்படியிப்படி என்று அவரைப் பற்றிக் கூறாமல் இருக்க வேண்டுமே என்று அவளது மனம் படபடத்துக் கொண்டது.

''நீங்கள் அவரை அந்தரங்கக் காரியதரிசியாக வைத்துக் கொண்டிருப்பதால் கேட்டேன்...''

''அதில் என்ன தவறு இருக்கிறது?''

''தவறு என்று சொல்லவில்லை. நாலாபக்கமும் சிதறிக் கிடக்கும் செல்வங்களுக்கு அதிபதியாய் உள்ளவர்கள் யாரும், அனுபவமில்லாதவர்களை அந்தரங்கக் காரியதரிசியாக வைத்துக் கொண்டதைப் பார்த்ததில்லை. அதனால்...''

''அனுபவமில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?''

''ஒரு அனுமானம்தான்! மேலும் ஒரு வாலிப வயதுடையவரை அந்தப் பதவிக்கு வைத்துக் கொண்டிருப்பதால் ஊராரின் வித்தியாசமான பேச்சுக்கு ஆளாகி இருக்கிறீர்கள்...''

"அதனால் எனக்கும் அவருக்கும் முடிச்சுப் போட்டுப் பேசுகிறார்களாக்கும்! பேசினால் பேசிவிட்டுப் போகட்டுமே!... அவர்களது வாயை அடக்குவது போல என்றாவது ஒருநாள் அப்படி நடந்தே விட்டால்...?"

சுதாவின் போக்கு ராஜாமணியைத் தூக்கி வாரிப்போட வைத்தது. கடைசியாக அவள் கூறிய வார்த்தைகள் அவளது உள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடிபோல அவருக்குத் தோன்றின.

அவள் ஒரு சீமாட்டி. நினைத்ததை யெல்லாம் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய அவ்வளவு வசதிகளும் பெற்றவள். மேலும் அவளது அந்தரங்க விஷயங்களில் தலையிட ராஜாமணிக்கு எந்த விதப் பொறுப்பும் இருக்க வில்லை. அதனால் மேலும் அதைப் பற்றி சர்ச்சை செய்ய விரும்பாமல் பேச்சை வேறு திசைக்குத் திருப்பினார்.

"சீமாட்டி! எனக்கு நீங்கள் அனுமதி தந்தால் என் மனதிலுள்ள ஒரு சிறு அபிப்பிராயத்தைக் கூறலாம் என்று நினைக்கிறேன்" என்று ஆரம்பித்தார் ராஜாமணி.

'ரமணி சம்பந்தப்பட்ட விபரீத எண்ணத்தை விட்டுவிடு' என்று அந்த ரீதியில் ஏதாவது கூறப்போகிறாரோ என்ற மன அதிருப்தியில் 'கம்' மென்றிருந்தாள் சுதா.

"நான் கூற விரும்பியது உங்களது சொந்த வாழ்வைப் பற்றியல்ல. என் கடமைகளுக்கு ஒத்த சில விண்ணப்பங்களையே சொல்ல முற்பட்டேன். நீங்கள் இன்னும் இரண்டொரு நாளில் கடல்கடந்த பிரதேசங்களுக்கு எஸ்டேட்டுகளைப் பார்த்து வரப் போகப் போவதாக அறிகிறேன். கூட யார் யார் வருகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாமா?"

"என் வேலைக்காரி வருகிறாள்! மேலும் ரமணியும் கூட வரப் போகிறார். ஏன்?"

"நீங்கள் போவது நீண்ட தூரப்பிரயாண மாகையால் உங்களது நம்பிக்கைக்குகந்த ஒருவரைக் கூட அழைத்துப் போவது பல விதங்களிலும் அனுகூலமானது என்பது என் அபிப்பிராயம். மேலும் சரியான துணையாகவும் இருக்குமல்லவா?"

"இப்போது என்கூட இருப்பவர்களில் எவருமே உற்ற துணை இல்லை என்கிறீர்களா?"

"யாரை நீங்கள் உற்றதுணையாகக் கருதுகிறீர்கள் என்பது லேசுபாசாக எனக்குப் புரிகிறது. ரமணி நேற்று வந்தவர். அவரை ஒரு துணையாக நம்பிவிட, அவரோடு உங்களுக்கு நீண்ட நாள் கட்பில்லையே!"

"இருந்தாலும்..." என்று ஏதோ கூறவந்த சுதா உதட்டைக் கடித்துக் கொண்டு சொல்ல வந்ததை நிறுத்தினாள். பிறகு சிரித்துக் கொண்டே, "மங்கம்மாள் இருக்கிறாளே!" என்றாள்.

"என்ன இருந்தாலும் அவள் ஒரு வேலைக்காரிதானே! அந்தஸ்தான இடங்களுக்கு நீங்கள் போகும் போது அவளையும் கூடவே அழைத்துக் கொண்டு போக முடியுமா?"

"உங்கள் யோசனையைச் சொல்லுங்களேன்."

"உங்கள் நலன்களில் அக்கறை கொண்டவர்கள் யாராவது உங்களோடு இருப்பது நல்லது. ஒன்று செய்யுங்களேன். ராகினி உங்கள் உயிருக்கு உயிரான தோழியாயிற்றே; நல்ல துணை. அவளை ஏன் அழைத்துப் போகக் கூடாது?"

ராஜாமணி மனப்பூர்வமாக இந்த யோசனையைத் தெரிவிக்கவில்லை. தன் மனதிலே தோன்றியிருக்கும் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதற்காகவே பலவழிகளிலும் சுதாவின் மனதை அறிய முற்பட்டார். அவர் எதிர்பார்த்தபடியே அவளது பதிலும் வந்தது. ராகினியைக் கூட்டிச் செல்வது ஆகாத காரியம் என்று சுதா தட்டிக் கழித்து விட்டாள்! ஆமாம், ரமணி கூட வரும்போது ராகினியை அழைத்துப் போவது எவ்வளவோ விஷயங்களுக்கு அசம்பாவிதமல்லவா?

பிறகு சிறிது நேரப் பேச்சுக்குப் பிறகு சித்தியான வைதேகியைத் தன் துணைக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தாள் சுதா.

அப்போது சுவர் கடிகாரம் கிண்கிணித்தது. "மணி ஆறு ஆகி விட்டதா?" என்று கேட்டுக் கொண்டே எங்கோ வெளியே புறப்பட ஆயத்தமானாள் சுதா. குறிப்பறிந்து ராஜாமணி விடைபெற்றுக் கொண்டார்.

சொல்லிவைத்தாற் போல ஷெட்டிலிருந்து காரை எடுத்து வந்து வாசலுக்கு நேராக நிறுத்திக் காத்திருந்தான் டிரைவர். முன்னே சுதாராணி செல்ல இரண்டு எட்டு இடைவெளி விட்டு பின்னால் ரமணி பின்தொடர்ந்து வந்து காத்திருக்கும் கார் அருகில் வந்தார்கள்.

டிரைவர் பின் சீட் கதவைத் திறந்து விட்டு மரியாதையோடு ஒதுங்கி நின்றான். அதே சமயம் டிரைவரருகில் உட்கார்ந்து கொள்ளலாம் என்ற நினைப்போடு முன் சீட் கதவை ரமணி திறந்தபோது "பின் சீட்டிலேயே உட்கார்ந்து கொள்ளுங்களேன்" என்று குரல் கொடுத்தாள் சுதா.

காருக்குள்ளே சுதாவும் ரமணியும் உட்கார்ந்திருந்த அழகு புதுமணத் தம்பதிகளைப் போலச் சோபித்தது.

அந்தச் சமயம்தானு வைதேகி வரவேண்டும்! தன்னைத்தான் தேடி வருகிருள் என்று கருதி, 'சித்தி! கடைத் தெரு வரை போய் பத்தே நிமிஷத்தில் திரும்பி விடுகிறேன். உள்ளே போய் இருங் கள்'' என்று கூறிவிட்டு டிரைவருக்கு ஜாடை காட்டினுள்.

சுதாவின் அருகில் உட்கார்ந்திருந்த ரமணியைக் கண்டு அதிசயித்தபடி கார் போகும் திசையையே பார்த்துக் கொண் டிருந்தாள் வைதேகி.

''ஏன் நிக்கிறீங்க அம்மா? உள்ளே வந்து உட்காருங்க. அம்மா சீக்கிரம் திரும்பிடும்'' என்று மரியாதையோடு வைதேகி யை அழைத்தாள் வேலைக்காரி

''மங்கம்மா! சுதாவோடு போகிற அந்தப் பிள்ளையாண் டான் யார்?'' என்று விசாரித்தாள் சித்தி.

''அவராம்மா? புதிசாக வேலைக்குச் சேர்த்திருக்கிறது'' என்று மங்கம்மா சொல்லிவிட்டு ஏதோ ஒரு மாதிரியாகச் சிரித் தாள்!

''பேஷ்! எஜமானியின் மதிப்பும், வேலைக்காரியின் மரியா தையும் வெகு அழகாக இருக்கிறது!'' என்று வெறுப்போடு முணுமுணுத்துக் கொண்டே வைதேகி உள்ளே போய் உட் கார்ந்து கொண்டாள். பாவம்! கர்நாடகமான சித்திக்கு இள மனத் துடிப்புகளையும் கொந்தளிக்கும் கொள்ளை ஆசைகளைப் பற்றியும் எப்படித் தெரிந்திருக்கப் போகிறது? அதோடு ஒன்றி ரண்டு ஆடையோடு இருக்கும் ஏழை ரமணிக்கு வேண்டிய துணிமணிகளை எடுத்துக் கொடுப்பதற்காகவே சுதா அவ்வளவு அவசரமாக ஜவுளிக் கடைக்குப் போயிருக்கிருள் என்பது தெரிந்தால் மேலும் வைதேகி எவ்வளவு ஆச்சரியப்பட்டிருப் பாளோ தெரியாது!

5

இலங்கையில் பிரபல எஸ்டேட் ஏஜண்டுகளாக விளங்கும் தாமஸ் அண்டு தாஸ் காரியாலயத்தின் நிர்வாக பாகஸ்தரான தாஸ், அன்று வந்த தபால் களையெல்லாம் கவனித்துவிட்டு, தனது பிரத்தியேக அறையில் உட்கார்ந்து ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருந்தார். அவரது முகத்திலே என்றுமில்லாத கவலை குடிகொண்டிருந்தது. இடது கையால் நெற்றியை அழுத்திப் பிடித்துக்கொண்டு வலது கையால் 'காலிங் பெல்' மேல் ஓங்கி ஒரு தட்டுத் தட்டினுர்.

''இதோ வந்துவிட்டேன் ஸார்'' என்று குரல் கொடுத்த படி எதிரே வந்து நின்றுன் ஒரு பையன்.

''சின்ன எஜமானனை இங்கே வரச்சொல்லு'' என்று உத்தர விட்டார் தாஸ்.

பையன் வெளியே போன சிறிது நேரத்திற்கெல்லாம் ஸ்ரீமான் தாமஸ் சிரித்துக் கொண்டே அறைக்குள்ளே நுழைந்தார். தாஸைக் கண்டதும் சிரிப்பு சட்டென மறைந்து முகம் கருத்தது. "என்ன தாஸ், ஒரு மாதிரியாய் இருக்கிறீர்கள்?" என்று பரபரப்போடு கேட்டு எதிரே இருந்த நாற்காலியில் தாமஸ் உட்கார்ந்து கொண்டார்.

தாஸ் எதுவும் பேசவில்லை. மேஜைமீதிருந்த ஒரு கடிதத்தை எதிர்ப்புறமாகத் தள்ளிவிட்டார். அதை எடுத்து ஆவலோடு வாசித்தார் தாமஸ்.

"எனது பிரிய ஏஜண்டுகளுக்கு,

வருகிற வெள்ளிக்கிழமையன்று இங்கிருந்து ஏர் ஸிலோனில் புறப்பட்டு கொழும்பு வருகிறேன். அங்கு ஒரு வாரம் தங்கிவிட்டு பர்மா, மலாயா நோக்கி என் பிரயாணத்தைத் தொடங்குவதாக உத்தேசம். தாங்கள் என்னைக் கொழும்பு ரத்னமாலா விமான நிலையத்தில் சந்திப்பீர்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கிறேன். மேலும் நான் தங்குகிற ஒருவார காலத்திற்குள் நமது எஸ்டேட்டுகளைப் பார்வையிட விரும்புவதோடு, கணக்கு வழக்குகளையும் சரிபார்க்க விரும்புவதால் அதற்கான ஏற்பாடுகளையும்செய்து வைக்கவும்.

—சுதாராணி."

'பளபள'வென்று மின்னிக்கொண்டிருக்க வேண்டிய தாமஸின் முகம் சுருங்கிச் சுண்டியது. "எதிர்பாராததாய் இருக்கிறது" என்று முணுமுணுத்துவிட்டு, "என்ன செய்யப்போகிறீர்கள் ஸார்?" என்று கலவரத்தோடு கேட்டார்.

இருவர் கண்களும் மௌனமாக சந்தித்துப் பிரிந்தது.

"என்ன செய்யலாம் தாமஸ்?" என்று திரும்ப அவரையே யோசனை கேட்டார் தாஸ்.

"உங்களுக்குத் தோன்றாதது எனக்குத் தோன்றப் போகிறது?"

"அதுதான் நானும் யோசிக்கிறேன்!" என்று சுவாரஸ்யமில்லாமல் சஞ்சலத்தோடு கூறிய தாஸ், சிறிது நேரத்திற்கெல்லாம் தனது குயுக்தியான மூளைக்கு ஏதோ தோன்றி விட்டதுபோல "தாமஸ்" என்று கூப்பிட்டார். "இன்றைய விமானத்தில் நான் இந்தியா புறப்படப்போகிறேன். சென்னைக்கு அல்ல; பம்பாய்க்கு!"

"உங்களது திட்டம் எனக்குப் புரியவில்லையே!" என்று விழித்தார் தாமஸ்.

''சுதாராணி இங்கே வருவதற்கு முன்னால் நான் வெளியூர் சென்றுவிட்டால், அவள் வந்து இங்கே தங்கும்போது 'நான் ஊரிலில்லை' என்று நீங்கள் சொல்லிக் கொள்ளலாம்.''

''அதனால் எந்தவித சாதகமிருக்கிறது?''

''சுதாராணி அவசியம் கணக்கு வழக்குகளைப் பார்வையிட விரும்புவாள். அப்போது அது சம்பந்தப்பட்ட யாவும் என்னுடைய கவனிப்பின் கீழ் இருப்பதாகப் போக்குக் காண்பித்து விட்டால், கணக்கு வழக்குகளைக் காட்டாமல் மழுப்பிவிடலாம். நான் ஊரிலில்லாமல் இருப்பது அதற்குத் தோதாக இருக்கும்.''

''மற்றொன்றை மறந்து விட்டீர்கள் தாஸ். சுதாராணி மிகவும் நுட்பபுத்தியோடு கூடியவள் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். 'என் லெட்டர் பார்த்த பிறகுமா தாஸ் பம்பாய்க்குப் புறப்பட்டுப் போனார்?' என்று குறுக்குக் கேள்வி கேட்டால் நான் என்ன பதில் சொல்வது? அவளிடமிருந்து காலையில்தான் கடிதம் வந்திருக்கிறது. நீங்களோ மாலையில்தான் புறப்படப் போகிறீர்கள். கடிதம் பார்த்த பிறகே நீங்கள் கிளம்பியிருப்பதாகச் சந்தேகம் கொள்ள மாட்டாளா?''

''யோசிக்க வேண்டிய விஷயம்தான்!''—கையிலிருந்த பென்சிலால் நெற்றியில் தட்டிக்கொண்டே சிந்திக்க ஆரம்பித்தார் தாஸ். ''ஒன்று செய்யுங்கள் தாமஸ். 'கடிதங்கள் வரவு' புஸ்தகத்தில் இந்தக் கடிதம் இன்று வந்ததாகக் குறிப்பிட வேண்டாம். இதை நீங்களே வைத்திருந்து நாளைத் தபால் வந்த பிறகு ஏனைய கடிதங்களோடு இதையும் குமாஸ்தாவிடம் கொடுத்து விடுங்கள். நாளைத் தேதியை அவன் கைபடக் குறித்து 'பைல்' செய்து விடுவான். பிற்பாடு சுதாராணி கேட்கும்போது அவளது கடிதம், நான் புறப்பட்டுப்போன மறுநாள் வந்ததாகச் சொல்லிக் கொள்ளலாம். சந்தேகம் தோன்றாது!''

''சரியான யோசனை!'' என்று உடனே ஒப்புக்கொண்டார் தாமஸ். அப்படிச் செய்வதைத் தவிர, தப்பித்துக்கொள்ள வேறு வழியும் கிடையாது. வரவு செலவுக் கணக்கில் எவ்வளவோ தில்லுமுல்லுகள் இருக்கின்றன. அதையெல்லாம் சரிவர ஜோடிக்கவில்லை. இந்த நிலையில் தாஸை பம்பாய்க்கு அனுப்பி விடுவதே சரியான தந்திரமாக தாமஸின் புத்திக்குப் பட்டது. அதன்படி அன்று மாலை விமானத்தில் தாஸ் பம்பாய் புறப்பட்டுப் போய் விட்டார்.

* * * *

சுதாராணி புறப்படக் குறிப்பிட்டிருந்த வெள்ளிக் கிழமையும் வந்து விட்டது. மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தன் நண்பர்களிடம் பிரியா விடை பெற்றுக்கொண்டிருந்தாள் சுதாராணி.

அவளுக்குச் சற்று தூரத்தில் ஒதுப்புறமான இடத்தில் ராகினியும் ரமணியும் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரது கண்களும் பிரியவேண்டியிருக்கிறதே என்ற துக்கத் தாலோ என்னவோ சிவந்து கலங்கியிருந்தன. தனது மனதி லுள்ள வேதனையை வெளிப்படுத்த முடியாமல் ராகினி தத்தளிப் பது போல் தவித்தாள். கவலை தோய்ந்த அவளது முகத்தில் மகிழ்ச்சிக்குறி காணவில்லை.

"உன் மனத்துயரம் எனக்குத் தெரியாமல் இல்லை. ராகினி! இன்னும் இரண்டொரு மாதங்கள்தான்! பிறகு நமக்காகக் காத் திருக்கும் ஆனந்த வாழ்வை நினைத்துப் பார்த்து பல்லைக் கடித் துக் கொண்டு சகித்திரு. இரண்டு மாதம் இரண்டு நாள் போல ஓடிவிடும்! பிறகு...பிறகு..."

"பாவம்! எவ்வளவு ஆசை கொண்ட உள்ளங்கள்!" என்று வியந்தபடி அங்கிருந்த கிழவி ஒருவள் ஆசையோடு அவ்விரு வரையும் கண் கொட்டாது பார்த்துக் கொண்டே இருந்தாள்.

ராகினியின் கண்கள் சுனைபோல நீரைச் சுரந்துகொண்டிருந் தன. "நீங்கள் சுதாவிடம் மாய்ந்து மருகி ஒரேயடியாக என்னை மறந்துவிட்டால் துக்கத்தை என்னால் தாங்கித் திரிய சக்தி இருக்காது. தற்கொலை செய்துகொண்டு விடுவேன்! அந்தப் பாவம் உங்களை லேசில் விடாது. பேயாய் அலைந்து உங்களையே சுற்றிக்கொண்டிருப்பேன். இதையெல்லாம் நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டால்..."

"பைத்தியம்போல பேசாதே ராகினி. எனக்காக நீ செய்து கொண்டிருக்கிற தியாகத்தை மறந்து நன்றிகெட்ட தனமாக நடந்துகொள்ளவே மாட்டேன். நான் புறப்படுகிற சமயத்தில் நீ அழக்கூடாது..." என்று கூறி ரமணி அவளது கண்களைத் துடைத்து விட்டுக்கொண்டிருந்தபோது, சுதாராணி சுட்டெரித்து விடுவதுபோல தன்னையே முறைத்துப் பார்த்துக்கொண்டிருப்ப தைக் கண்டதும், ராகினியை விட்டு ரமணி ஒதுங்கி நின்று கொண்டான். அதே சமயம் ராகினியும் சுதாவின் கூரிய பார்வையை ஊடுருவினாள்.

"அப்பப்ப.. ! என்ன பேச்சுத்தான் இருக்குமோ! இத்தனை நாள் தொண தொணத்ததெல்லாம் போதாதா? ராகினி! என் னுடன்தான் சிறிது நேரம் பேசிக் கொண்டிரேன்!" என்று சாதாரணமாகப் பரிகசிப்பது போல ராகினியை ரமணியிட மிருந்து பிரித்துத் தன் பக்கம் இழுத்துக் கொண்டாள் சுதா.

பாம்பின் கால்களைப் பாம்பு அறியாதா? ரமணியோடு தான் நெடுநேரம் பேசிக் கொண்டிருப்பதைக் காண சுதாவிற்கு பொறுக்கவில்லை என்பது ராகினிக்கு நன்கு தெரிந்திருந்தது.

சகஜமான சுபாவத்தை பலவந்தமாக வரவழைத்துக் கொண்டு சுதாராணியோடு கலகலப்பாகப் பேச ஆரம்பித்தாள்.

''ராகினி! ரமணியின் மேல் இவ்வளவு ஆசை வைத்திருக்கிருயே, அவர் உன்னை விட அழகான ஒருத்தியைக் கண்டு ஆசைப்பட்டு கல்யாணம் செய்து கொண்டு விட்டால் நீ என்ன செய்வாய்?'' என்று சுதா கேலியாகக் கேட்பது போலக் கேட்டாள்.

''அவரா? ஒருக்காலும் அப்படிச் செய்யவே மாட்டார். என்னை அவ்வளவு தூரம் நேசிக்கிருர்...! மனதார நேசிக்கிருர்! கனவில் கூட வேறு ஒருத்தியை நினைக்கவே நினைக்கமாட்டார்!'' என்று ராகினி அடுக்கிக்கொண்டே போனுள்.

''அப்படி ஏதோ நடந்துவிட்டது என்று வைத்துக்கொள். மனம் பொறுக்க முடியாமல் உயிரையே மாய்த்துக்கொண்டு விடுவாயா?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் சுதா.

''என் உயிரை லேசிலே போக்கிக்கொண்டு விடுவேன் என்று நினைக்காதே. அவர் என்னைவிட்டு வேறு பெண்ணை மணந்து கொண்டால் காளிபோல கனல் கக்கிக்கொண்டு விடுவேன், அவரையும் அவரது ஆசைக் கிளியையும் சித்திரவதை செய்து துடிக்க வைத்து, அணு அணுவாகப் பற்றி எரியும்படிச் செய்து......''

''போதும்...போதும்! அதோடு நிறுத்திக்கொள்! ரொம்ப ரொம்பப் பயமுறுத்துகிருயே!'' என்று பதிலுக்கு சுதா சொல்லிக் கொண்டிருக்கும்போதே விமான நிலையச் சங்கு 'ஓ' என்று ஊதியது. அதைத் தொடர்ந்து ''விமானம் புறப்படத் தயாராக இருக்கிறது. பிரயாணிகள் இப்போது அதில் ஏறிக்கொள்ளலாம்'' என்று ஒலிபெருக்கி உத்திரவு கொடுத்தது.

''எல்லோருக்கும் நமஸ்காரம். நான் போய்வருகிறேன்'' விமானத்தை நோக்கி நடந்தாள் சுதாராணி. ராகினியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே கலங்கிய மனதுடன் சுதாராணியைப் பின் தொடர்ந்தான் ரமணி. ராகினியின் உதடுகள் துடிதுடிப்பதையும் கண்களில் நீர் ததும்ப கையை ஆட்டி வழியனுப்புவதையும் காணும்போது வைதேகிக்கே அழுகை வந்துவிடும் போலிருந்தது.

''வைதேகி! நான் சொன்ன விஷயங்களில் அசட்டையாக இருந்துவிடாதே. உன்னுல் முடிந்த அளவு முயற்சி செய்து பார், என்ன...? சரிதானு?'' என்று மதுசூதனர் வைதேகியைப் பின் தொடர்ந்து கூறிக் கொண்டிருந்தார்.

விமானத்தில் ஒவ்வொருவராக ஏறிக்கொண்டிருக்கும் போது விமானக் கம்பெனியின் ஏஜண்டு ஒருவர் பிரயாணி

களின் பெயரை உரக்கக் கூப்பிட்டு சரிபார்க்க ஆரம்பித்தார். "சுதாராணி! ரமணி! வைதேகி! பட்டாபி! மங்கம்மா! ராஜா மணி!"

'ராஜாமணி' என்ற பெயரைக்கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் சுதா. "நீங்களும் கூடவருவதாக என்னிடம் சொல்லவே யில்லையே! ஏதோ என்னை வழியனுப்ப வந்திருப்பதாக அல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன்!" என்றாள் ஆச்சரியப் படுபவள் போல.

துப்பறியும் ராஜாமணி வார்த்தைகளின் மூலம் பதில் சொல்லவில்லை. கண்களைச் சிமிட்டிக் கொண்டே சிரித்தபடி விமானத்திற்குள் நுழைந்தார்.

விமானம் உயரப்பறக்க ஆரம்பித்தது. சுதா மிகவும்குதூகலத்தோடு இருந்தாள். அவளது அருகே ஒட்டினாற்போல உட்கார்ந்திருந்த ரமணி, கண்ணாடி பதித்த ஜன்னலின் வழியே கீழே நிற்கும் ராகினியைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான்.

"காதல் பாதையில் முதல் பிரிவு இது! அதனால்தான் ரமணியால் அதைத் தாங்கிச் சகிக்க முடியவில்லை. பாவம்!" என்று தனக்குள்ளே பச்சாத்தாபப் பட்டுக்கொண்டார் ராஜாமணி.

அதுவரை ரமணியையே பார்த்துக் கொண்டிருந்த சுதா "கழுத்துச் சுளுக்கிக் கொள்ளப் போகிறது!" என்று பரிகசிப்பது போலக் கூறி ரமணியின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பினாள்.

விமானம் வேறு திசைக்குத் திரும்பிவிட்டதால் விமான நிலையம் பார்வையினின்றும் மறைந்துவிட்டது. கண்களைத் துடைத்துக்கொண்டு ரமணி நேராகத்திரும்பி உட்கார்ந்து கொண்டான்.

அவனது மனக் கலக்கம் விமான 'ஹோஸ்ட'சுக்கு எப்படித் தெரியும்? 'பாவம்! ஏதோதலைவலி போலிருக்கிறது' என்று நினைத்துப் பரிவோடு ரமணியை நெருங்கி, "'ஆஸ்பிரின்' சாப்பிடுகிறீர்களா?" என்று அன்போடு கேட்டாள்.

"வேண்டாம்!" என்று சொல்லி கண்களை இறுக மூடிக் கொண்டு மோன வெளியில் ராகினியை உருவகப்படுத்திப் பார்க்க ஆரம்பித்தான் ரமணி.

"நிஷ்டை பிரமாதமாக இருக்கிறது!" என்று சொல்லிக் கலகலவென்று சிரித்தாள் சுதா, அவனருகே இடித்தபடி அவள் உட்கார்ந்திருந்த உணர்ச்சி அளவில்லாத ஆனந்தத்தை அவளுக்கு ஊட்டி விட்டது. அவளும் கண்களை மூடிக்கொண்டு இன்பக் கனவுகள் காண ஆரம்பித்தாள்!

விமான நிலையத்தை விட்டு வெளியே நடைப்பிணம் போல போய்க் கொண்டிருந்தாள் ராகினி. அவளது மன உளைச்சல் அதிகமாகி விட்டது. "சீ—! என்ன புத்தி எனக்கு! கிட்டாத வாழ்வுக்கு ஆசைப்படப் போய், கைக்குக் கிட்டிய காதலனையே பறிகொடுத்து விட்டால்...?" என்று கலங்கி தன்னையே நொந்து கொண்டாள் அவள்.

6

சுதாராணி கொழும்பு வந்து சேர்ந்த பிறகு யாரும் எதிர்பாராத பல நிகழ்ச்சிகள் மளமளவென்று ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற ஆரம்பித்தது. சுதா அடியோடு ஒரு புது மனுஷியாக மாறிவிட்டதை அவளோடு புறப்பட்டு வந்த அத்தனை பேர்களும் உணர ஆரம்பித்தார்கள். ஊர் வந்து சேர்ந்த அன்று தனது எஸ்டேட் ஏஜண்டான தாமஸைச் சந்தித்த ஒரு காரியம் தவிர வேறு எதிலும் அவள் கவனம் செலுத்தவேயில்லை. எஸ்டேட்டுகளைப் பார்க்க வேண்டும், கணக்கு வழக்குகளை யெல்லாம் சோதிக்க வேண்டும் என்றெல்லாம் அவள் திட்டமிட்டு வைத்திருந்த அத்தனையும் நடைபெறவே யில்லை. ரமணியைக் கூட்டிக் கொண்டு தனிமையில் எங்கெங்கோ செல்வதும், இஷ்டப்படித் திரிவதும், சினிமா, நடனம், ரேஸ்...இப்படியாகக் கேளிக்கைகளில் ஈடுபடுவதுமாக தலைகால் புரியாமல் ஆட்டம் போட ஆரம்பித்தாள். அவளது புதுமோகமும் விபரீதப் போக்கும் தங்கமான குணம் படைத்த வைதேகிக்கே அருவருப்பைத் தந்தது. ரமணியிடம் அவள் மிக நெருங்கிப் பழகுவது எந்த விபரீதத்தில் கொண்டு விடுமோ என்று ஏங்கிக் கொண்டிருந்தாள்.

சுதாவைப் பற்றி நினைக்கும்போது மற்ற எல்லோரையும்விட வைதேகியின் மனமே பெரிதும் புண்பட்டது. ஊர்பேர் தெரியாத ஒரு நாடோடியோடு, குலம் கோத்திரம் தெரியாத ஒரு தடிப் பிரம்மச்சாரியோடு கால நேரமில்லாமல் தன் இஷ்டப்படி அவள் திரிவதைக் கண்கொண்டு பார்த்துக் கொண்டிருப்பதை விட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலிருந்தது.

சுதாவிற்கு திரண்ட தன் ஆஸ்திகள் அத்தனையும் எழுதி வைத்துப் போன அத்தை அம்மாளை நினைத்துப் பார்த்தாள் வைதேகி. செல்வத்திலே கொழித்துக் குலுங்கிய அவளது இளமைப் பருவ வாழ்க்கையையும் ஞாபகப்படுத்திப் பார்த்தாள். கடல் கடந்து தொலை தேசத்திற்குப் போய் அவள் வாழ்க்கை நடத்தி வந்தாலும்கூட மதாசாரம், குலவழக்கம், தெய்வபக்தி ஆகிய இவைகளில் அந்த அத்தையம்மாள் எவ்வளவு நியமத்தோடு இருந்தாள் என்பதையெல்லாம் வைதேகி கேள்விப்பட்டிருந்தாள். அப்படிப்பட்ட ஒரு புனிதவதியின் சொத்து சுதாவைப் போல ஒரு மோசமான பெண்ணிற்காகப் பலியிடப்படுகிறதே என்று நினைத்தபோது வைதேகியோடு கூடவே பிறந்த

சாந்த குணம் குன்றிப் போய், மனதிலே அடக்க முடியாத கொந்தளிப்பு ஏற்பட்டது.

வைதேகி யாரையும் அண்டிப் பிழைக்கக் கூடியவளல்ல. அப்படி வாழ்ந்தவளும் இல்லை. அதனால் தன் மனதில் தோன்றியதை அப்பட்டமாகக் கூறுகிற குணம் அவளிடம் இருந்தது. அதற்கிணங்க தன் மன அதிருப்தியை சுதாவிடம் நேருக்கு நேர் குமுறிக் கொட்டினாள். ரமணியின் அந்தஸ்தென்ன, சுதாவின் கௌரவமென்ன, அவனது ஜாதி எது, சுதாவின் குலம் என்ன என்பதையெல்லாம் தனித்தனியே எடுத்துக் கூறினாள். எவ்வளவோ நிதானத்தோடு உலகத்து அனுபவக் கசப்புகளையெல்லாம் எடுத்துக் கூறி புத்தி சொல்லிப் பார்த்தாள். பலனில்லை. "சித்தி! இதைத் தவிர வேறு எது சொன்னாலும் கேட்டு நடக்கிறேன். உங்கள் வார்த்தைக்கு மறுபேச்சுப் பேசமாட்டேன். ஆனால் இது என் சொந்த விஷயம். என் சுகத்தையும் ஆனந்தத்தையும் பொறுத்த ஒரு பந்தம். இதில் நீங்கள் தயவு செய்து குறுக்கே நிற்கக் கூடாது" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். மனம் மாறுவதாகக் காணோம். குடும்ப விவகாரத்தில் அழுந்திய அனுபவம் பெற்ற வைதேகி, அதற்கு மேல் எதுவும் பேச இஷ்டப்படவில்லை. அவளோடு பேசுவதையே அடியோடு நிறுத்தி விட்டாள்.

இருந்தாலும் வைதேகியின் மனது கேட்கவில்லை. குடும்பம், குலம், கோத்திரம் இவைகளை நழுவவிட்டு, சுதா நாசமாவதைப் பார்த்துக் கொண்டிருக்க அவளுக்குச் சகிப்பில்லாமல் போய்விட்டது. என்றாவது ஒரு நாள் காதோடு காது வைத்தது போல காரியத்தை நடத்திவிட்டு திடுதிப்பென்று 'ரமணியை மணம் செய்து கொண்டு விட்டேன்' என்று மாங்கல்யத்தோடு எதிரே வந்து நின்றால் ஊரும் உலகமும் சிரிக்காதா? அதனால் வெள்ளம் வருமுன் அணை கட்டியாக வேண்டும் என்று, பல வழிகளில் முயற்சிக்க முற்பட்டாள்.

இது பரம்பரை கௌரவம் சம்பந்தப்பட்ட ஒரு விஷயமாதலால் வைதேகி வெகுவாகக் குழம்பினாள். ஏதாவது எக்கச்சக்கமாக நடந்து விட்டால் தானும் உடந்தையாக இருந்துவிட்டதாக உறவு முறையோர்கள் நிந்திப்பார்களே என்று பயந்து சுதாவின் புது மோகத்தை, கிட்டிய பந்துவாக இருக்கும் மதுசூதனருக்குத் தெரிவித்துவிட நினைத்தாள்.

அப்போது சுதாராணி வெளியே போயிருந்ததால் தக்க தருணமாக அது வாய்த்தது. தன்னந்தனியாக ஒரு அறைக்குள்ளே போய் உட்கார்ந்து கொண்டு தன் தமையனுக்கு வைதேகி பின் வரும் கடிதம் எழுதலானாள்.

அண்ணு,

எவ்வளவோ விதத்தில் கெட்டிக்காரப் பெண் என்று நாமெல்லாம் இதுவரை நினைத்து வந்த சுதா, இப்போது குணம் கெட்டு, அடியோடு மாறிப் போய், எதிர்காலத்தையும் தன் அந்தஸ்தையும் சிறிதும் சிந்திக்காத நிலையில் கீழ்த்தர உணர்ச்சி களுக்கு இடம் கொடுத்திருப்பதைக் காண மிக வும் கலங்கிப் போயிருக்கிறேன். ஊர் பேர் தெரி யாத, சுயஜாதியற்ற ரமணியிடம் அவள் ஒரேயடி யாக மோகங்கொண்டு மயங்கி, அவனையே மணம் புரிந்து கொள்ளும் அளவுக்கு அவளது மனம் துணிந்து விட்டதாக உணர்கிறேன். மானம், மரியாதை, மதம், தெய்வ நம்பிக்கை – இவைகளை யெல்லாம் குப்புறக் கவிழ்த்து விட்டு எந்தச் சம யத்தில் கழுத்திலே மாங்கல்யத்தோடு என் முன்னே வந்து நிற்கப் போகிருளோ என்று கதி கலங்கிக் கொண்டிருக்கிறேன்.

இதில் என் குறுக்கீடு பலன் தரவில்லை. ரமணி யிடம் அவள் முழுக்க முழுக்க மாய்ந்து விட்டாள். காதலோ, காமமோ அல்லது வேறு எதுவோ, சுதாவின் கண்களையும் தீக்ஷண்ய புத்தியையும் திரையிட்டு மூடிவிட்டது. அண்ணு! அடுத்த நிமிஷத்தில் அவளது போக்கு எப்படி மாறும் என்று கூறுவதற்கில்லை. ஆதலால் உடனே நீங்கள் புறப்பட்டு வந்து குடும்ப கௌரவத்தை நிலை நிறுத்த எந்தவிதத்திலேனும் முயற்சி செய்யவும். இந்தக் கடிதம் உங்களுக்கு அந்தரங்கமாகவே எழுதியிருக்கிறேன். சுதா இப்போது – இக்கடி தம் எழுதும்போது வீட்டிலே இல்லை. ரமணி யைக் கூட்டிக் கொண்டு சினிமா பார்க்கப் போயிருக்கிருள்.

பிரிய சகோதரி,

வைதேகி.''

வைதேகியின் இந்தக் கடிதம் மதுசூதனருக்குக் கிடைத்த போது அதை ஒன்றுக்குப் பலமுறை திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்துக் கொண்டார். கடிதம் எழுதப்பட்ட தேதியைக் கவ னித்தார். இரண்டு நாளைக்கு முன் எழுதப்பட்டிருக்கிறது. இந்த மூன்று நாட்களுக்கு என்னென்ன நடந்திருக்குமோ தெரியவில்லையே என்று கலங்கினுர். குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு என்று குதியாய்க் குதித்தார். அவரது ஆத்திரம் எல்லை மீறியது. "ஆமாம்... இதை இப்படியே விட்டுக்கொண்டு போகக்கூடாது; நிறுத்தியே ஆகவேண்டும்.

இந்த விவகாரம் சம்பந்தமான என் அபிப்பிராயத்தையும் தீர்மானத்தையும் நிலைநிறுத்தியே ஆகவேண்டும். அதனால் எத்தகைய விபரீதங்களும் கஷ்ட நஷ்டங்களும் ஏற்பட்டாலும் சரி! என் இச்சைக்கு விரோதமாக நிலைமை மாறுமேயானால், சுதா தன்னிச்சைப்படியே ரமணியை மணந்து கொள்வாளேயானால் அவளை உயிரோடு விட்டுவைத்து வேடிக்கைப் பார்க்கச் சகிக்கவேமாட்டேன். அது முடியவும் முடியாது!'' என்றெல்லாம் கத்திக்கூப்பாடு போட ஆரம்பித்தார்.

''சுதாராணி கொழும்பிலே இருக்கிறாள்; நீங்கள் சென்னையிலே இருக்கிறீர்கள். இங்கிருந்து குதித்துக் கூப்பாடு போட்டுவிட்டால் சரியாகப் போய்விடுமா?'' என்று அவரது புதல்வனான ஆனந்தரங்கன் கூறி மேலும் அவரைக் கிளப்பிவிட்டான்.

''சரிதான் போ! இதை எப்படிச் சமாளிக்க வேண்டுமென்பது எனக்குத் தெரியும்'' என்று ஒரு அதட்டுப் போட்டுவிட்டு புனுகுப் பூனைபோல ஹாலைச் சுற்றிவர ஆரம்பித்தார்.

அந்தக் கலவரமான குழப்பத்திலும் அவரது மூளை அதி தீவிரமாக வேலை செய்தது. எவ்வாறு சூழ்ச்சிகளைக் கையாண்டு சுதாராணியை நாசம் செய்துவிடலாம் என்று திட்டம் போட்டுக் கொண்டிருந்தார். அவரது சூட்சமமான புத்திக்கு ராகினியைப் பற்றிய ஞாபகம் வந்தது. சுதாராணி மணக்க இருக்கும் ரமணி ராகினியின் ஆசைக் காதலனல்லவா? ஆம், அவளைத் தூண்டிவிட்டுத் தானும் உதவியாக இருந்தால்...?

''ஆமாம்! குழப்பங்களை விளைவித்துத்தான் சுதாவின் ஆசைகளையெல்லாம் சிதறடிக்க முடியும். அதற்கு ராகினி நமக்குப் பலவிதத்திலும் கைப்பொம்மையாக இருப்பாள். இந்த செய்தியும், சுதா – ரமணி இருவரது காதல் நாடகமும் அவளது செவிகளுக்கு எட்டியிருக்க வழியில்லை. தெரிந்தால் காளி ரூபம் எடுப்பாள். கண்ணகியைப் போல கனல் கக்கிக் கிளம்புவாள்! அவளைப் பார்த்துப்பேசித் தூண்டிவிட்டால்?''

மதுசூதனரின் மனித மனம் மட்டரகத்தில் புகுந்து புறப்பட ஆரம்பித்தது. கையில் வைதேகியின் கடிதத்தோடு ராகினியைச் சந்திக்க செக்ரட்டேரியட் நோக்கிக் கிளம்பினார்.

அப்போது மாலை மணி ஐந்து. கோட்டை வெளி வாசலில் நின்றபடி, ராகினி எப்போது வெளியே வருவாள் என்று ஆவலோடு எதிர்பார்த்து இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தார்.

வேலை முடிந்து எல்லோரும் கும்பல் கும்பலாக வெளியே வந்து கொண்டிருந்தார்கள். கழுத்து ஒடிவதுபோல எம்பி

எம்பிப் பார்த்து மதுசூதனர் ராகினியைத் தேடித் துருவினர். கும்பல் வரவரக் குறையக் குறைய அவரது மனம் பதைபதைத்தது. ராகினி இன்று வேலைக்கு வந்திருக்கமாட்டாளோ என்ற சந்தேகத்தோடு அவள் வருகையைக் காணுமல் ஏக்கங் கொள்ள ஆரம்பித்தார்.

அவரது தவிப்பை ராகினி அதிக நேரம் நீடிக்க வைக்கவில்லை. தன் சக தோழிகளோடு சிரித்துக் களித்து ஆட்டம் போட்டபடி வெளியே வந்தவள், மதுசூதனரைக் கண்டதும் திகைத்து நின்ருள். அதே சமயம் அவளை நெருங்கி வந்த அவர், "ராகினி! உன்னைத் தேடித்தான் வந்திருக்கிறேன்" என்ருர்.

"என்னைத் தேடியா? எதற்காக? ஏன்?" என்று பிரமிப்படைந்தாள் ராகினி. ஏதாவது கெட்ட செய்தியைக் கொண்டு வந்திருப்பாரோ, ரமணிக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்றெல்லாம் எண்ணுத எண்ணம் எண்ணியபடி, "அவருக்கு ஒன்றுமில்லையே?" என்று பதை பதைப்போடுக் கேட்டாள்.

"அவனுக்கு ஒன்றுமில்லை. ஆனல் உனக்குத்தான் போதாத காலம் ஆட்டிவைக்க ஆரம்பித்திருக்கிறது. ராகினி! உன்னைப் பார்க்கப் பார்க்க எனக்கு ரொம்பவும் பரிதாபமாக இருக்கிறது. சுதாவிடம் எவ்வளவுக் கெவ்வளவு நீ அதிக நம்பிக்கை வைத்தாயோ அவ்வளவுக் கவ்வள்வு அவள் உன் விஷயத்தில் இழிவான கழிசடைப் பெண்ணுக நடந்து கொண்டு உனக்கு பெரிய துரோக மிழைத்துவிட்டாள்!...இதோ பார் இந்த லெட்டரை!"

மதுசூதனர் கொடுத்த கடிதத்தைப் பிரித்து ஆவலோடு படிக்க ஆரம்பித்தாள் ராகினி. அவளது கரங்கள் நடுங்கி உதரலெடுத்தன. சகஜநிலை மாறி பயங்கரமும் பரபரப்பும் அவளுடைய முகத்திலே குடி புகுந்தன. பற்களை ஒன்ருேடொன்று நெறித்து "துரோகம்...! மகா துரோகம்! பெரிய துரோகம்...!" என்று அவளை யறியாமல் பைத்தியம்போலக் கூச்சல் போட ஆரம்பித்தாள்.

அக்கம்பக்கத்தில் நடமாடுபவர்கள் கூட்டம் கூடி விடுவார்களே என்று பயந்த மதுசூதனர், "ராகினி! இது நடுத்தெரு. நாலுபேர் நடமாடும் இடம். குமுருதே! என்னேடு வா. நான் சொல்கிற யோசனைப்படி நட...இன்னும் காரியம் கெட்டுவிடவில்லை. உன் காதலனை நீ அடைய இனியும் நிறைய அவகாசம் இருக்கிறது. என்னேடு வா ராகினி... ஆகவேண்டியதை யோசிக்கலாம்" என்று அவளை ஒதுக்குப்புறமாக அழைத்துச் சென்ருர் மதுசூதனர்.

ராகினியை ஒரு கருவியாக வைத்துக்கொண்டு மதுசூதனர் சதுரங்கம் விளையாடத் திட்டமிட்டது வெகு சுலபமாகக் கைகூடியது. சிறிதும் தாமதியாமல் இருவரும் சேர்ந்து இலங்கை புறப்படத் தீர்மானித்தார்கள்.

ரயிலில் போனுல் காலதாமதமாகி விடும் என்று கருதி மறு நாள் அதிகாலையிலேயே முதல் விமானத்தில் புறப்பட்டு சரியாகப் பத்துமணிக்கெல்லாம் கொழும்பு வந்து சேர்ந்தார்கள். சுதாராணியின் பங்களா விலாசம் ஏற்கனவே வைதேகி மூலம் துல்லியமாகக் குறிப்பிடப் பட்டிருந்ததால் வெளியே நின்ற டாக்ஸி ஒன்றில் ஏறிக்கொண்டு கிளம்பினூர்கள்.

சுதாராணியின் பங்களா வாசலை அடைந்தபோது மதுசூதனர் தீயை மிதித்து விட்டவர்போலக் கதிகலங்கிச் சிலைபோல நின்ருர். எதைத் தடுத்துவிட வேண்டும் என்று வைராக்கிய எண்ணங்களோடு இருவரும் ஓடோடி வந்தார்களோ அது நடை பெற்று விட்டது என்று தெரிந்தவுடன் ராகினிக்குத் தலை சுற்றி மயக்கம் வருவதுபோல இருந்தது.

ஆடம்பரமில்லாமல் கோவிலில் வைத்து மணச் சடங்குகளை முடித்துக்கொண்டு விட்ட சுதா, அன்று தனக்குத் தெரிந்த நண்பர்களுக்கெல்லாம் விருந்தளித்துக்கொண்டிருந்தாள். எதேச்சையாக அவள் பார்வை வெளிப்பக்கமாகச் சென்ற போது அங்கே சிவப்பேறிய கண்களோடு ராகினி மலைத்து நின்று தன்னையே விழுங்கி விடுவதுபோலப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டதும் சுதாவின் உடல் வெடவெடக்க ஆரம்பித்தது. அருகே இருந்த ரமணியின் உள்ளங்கையில் அழுத்தி ஜாடை காட்டினுள் அவள்.

ரமணி ராகினியைப் பார்த்தான். அதற்குள் புயல் வேகத்தில் ஆக்ரோஷமாக அவர்களிருவரையும் நெருங்கிவிட்டாள் ராகினி. எல்லோரும் கூடியிருக்கும் இந்தச் சமயத்திலே ராகினியின் குமுறல் மானத்தை வாங்கி விடுமோ என்று அஞ்சிய சுதா வேகமாக உள்ளே போகத் திரும்பினுள்.

ராகினி அவளைத் தடுத்து நிறுத்தவில்லை. பளபள வென்று ஜ்வலிக்கக்கூடிய அவளது கண்கள் தீப்பிழம்பு போல ஜ்வாலை வீச, ரமணியையே அவள் பார்த்துக் கொண்டு நின்ருள்.

தன்னுல் பறிக்கப்பட்டு பிறகு வாடிப்போன மலரை ஒருவன் எப்படிப் பார்ப்பானே, அவ்விதமாக ராகினியைப் பார்த்துக்கொண்டிருந்தான் ரமணி!

7

ராகினியைக் கண்டதும் வெல வெலத்துப் போய் பேயறைந்தவள் போல சுதாராணி உள்ளே சென்று விட்டதையும், ரமணியும் ராகினியும் ஒருவரை யொருவர் பார்த்தபடி இடிந்து மலைத்துப் போய் பேசாத பதுமைகள் போல நின்று கொண்டிருப்பதையும் தூர இருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தாள் வைதேகி. இந்த இக்கட்

டான நிலையில் தான் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென் பதே அவளுக்குப் புரிபடவில்லை. நல்ல வார்த்தை சொல்லி ராகினியைத் தனியாக அழைத்துப் போய்ச் சமாதானப்படுத்தி, குழப்பம் எதுவும் ஏற்படாமல் இப்போதைக்குச் சமாளித்து வைத் தால் என்ன என்று அவள் மனம் தீவிரமாகச் சிந்தித்தது. ஆனால் தான் தலையிடுவதைக் கண்டு, "மத்யஸ்தம் செய்ய நீ யாரடி?" என்று ராகினி கேட்டு விட்டால் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொள்ள நேரிடுமே என்று ஒரு பக்கம் பயமும் கொண்டாள்.

இருந்தாலும் முயற்சி செய்து பார்க்கலாம் என்று மனதைத் தேற்றிக் கொண்டு, உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்த போது, "சித்தியம்மா!" என்று யாரோ பின்னுலிருந்து கூப்பிடு வது கேட்டுத் திரும்பினுள். துப்பறியும் ராஜாமணி ஜாடை காட்டித் தன்னை அழைப்பதைக் கண்டு அவரருகே சென்ருள்.

"உங்கள் எண்ணம் எனக்குப் புரிகிறது. ராகினியைச் சமாதானப் படுத்தலாம் என்று நினைக்கிறீர்கள். என்னைக் கேட் டால், இது அவர்களுள் தீர்த்துக் கொள்ளக்கூடிய ஒரு விஷ யமேயல்லாது, நாம் தலையிடுவதற்கொன்றுமில்லை. சிறுசுகளின் அவலக் கூத்துக்கு மத்தியிலே மதிப்பிற்குரிய நீங்கள் அவமான மடைய நேரிட்டாலும் நேரிட்டுவிடும். ஆதலால் இதில் எதுவும் பட்டுக் கொள்ளாமல் ஒதுங்கி இருப்பதே நல்லது."

ராஜாமணி கூறுவது ஒப்புக் கொள்ளக் கூடியதென்றே வைதேகியின் மனதிற்குப்பட்டது. 'தான் விரித்த வலையில் தானே சிக்கிக் கொண்டுள்ள சுதா, தன் சாமர்த்தியத் தாலேயே கட்டவிழ்த்துக் கொண்டு வரட்டுமே!.... வேண்டு மானால் விஷயம் விபரீதமான நிலையை அடையும் போது தலை யிட்டுக் கொள்ளலாம்' என்று சும்மா இருந்து விட்டாள்.

ராஜாமணியும் வைதேகியும் சண்டமாருதமான ஒரு புயலை ராகினியிடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் ராகினி நடந்து கொண்ட விதம் அவர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. ரமணியை அவள் திட்டவில்லை; ஏசிப் பேசவில்லை; ஏகக் கூச்சல் போட்டுக் கும்பலைக் கூட்டவில்லை. அதையெல் லாம் தூக்கி யடிக்கும்படியாக 'நீ ஒரு புருஷனு?' என்று கேட் பது போல ரமணியின் முகத்திலே காரி உமிழ்ந்து விட்டு, அவனை அலக்ஷியமாக அப்பால் தள்ளி, சுதா சென்ற வழியே வெகு வேகமாக உள்ளே நுழைந்தாள்.

அவள் சுதாவின் அந்தரங்க அறையை அடைந்த போது, கட்டிலிலே குப்புறப்படுத்தபடி பிணம் போல அவள் கிடப்பதையும், மாமாவான மதுசூதனர் சண்டப் பிரசண்டமாக சுதாவை வாய்க்கு வந்தபடி பேசிக் கொட்டுவதையும் பார்த்த படி ராகினி ஒரு ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டாள். தன்

பிள்ளையைப் புறக்கணித்துவிட்டு எந்தவித அந்தஸ்தும் இல்லாத ரமணியை மணந்து கொண்டாளே என்று வயிறெரிந்து அவர் போட்ட கூச்சல் அந்த மாளிகை முழுதும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

சுதா ஒரு அபலை போல கதியற்ற பெண்ணாகக் குமுறிக் கொண்டிருந்தபோது, ரமணி வெகு கோபத்தோடு உள்ளே நுழைந்தான். மதுசூதனர் அப்போதும் தன் ஆர்ப்பாட்டத்தை அடக்கிக்கொள்ளாமல் ஆவேசம் வந்தவர்போல கத்திக் கூவிக் கொண்டிருப்பதைப் பார்க்கப் பார்க்க அவன் ரத்தம் கொதிப் பேறியது. அவன் எவ்வளவோ அடக்கிப் பார்த்தும் முடியா மல் போகவே. "மதுசூதனரே! மரியாதையோடு வெளியே போகிறீரா இல்லையா?" என்று ஒரு அதட்டல் போட்டான். அந்த அதட்டலில் அசாதாரணத் துணிச்சலும், அதிகார ஆணவ மும் நிறைந்திருந்தன. சுதாவுக்குப் பரிந்து கொண்டு ரமணி வரமாட்டான் என்று எதிர்பார்த்த மதுசூதனர் திடுக்கிட்டு அரண்டு போனார்!

பதுங்கி இருந்த புலி பாய வருவதுபோல மதுசூதனரை நோக்கி நெருங்கி வந்தான் ரமணி. "உம்மை யாரும் இங்கே அழைக்கவில்லை. அழையாத வீட்டில் நீர் நுழைந்ததே தப்பு. யாரைக் கேட்டு உள்ளே வந்தீர்கள்? சுதாவைத் திட்டுவதற்கு உங்களுக்கு என்ன சுதந்திரமிருக்கிறது?" என்று கோபத்தோடு கத்தினான்.

"நான் அவளுடைய தாய் மாமன்; கேட்க எனக்கு எல்லா விதத்திலும் சுதந்திரமிருக்கிறது."

"நான் அவளது புருஷன்! இந்த வீட்டிலே நடக்கும் எந்த ரஸாபாசத்தையும் தடுத்துச் சமாளிக்க எனக்குப் பரிபூரண பாத்தியதை இருக்கிறது!"

"ஆஹா!... என்ன அக்கறை! என்ன பரிவு! என்ன பாசம்! என்ன பாத்தியதை!" என்று குறுக்கிட்டு ரமணிக்கும் மதுசூதனருக்கு மிடையே பாய்ந்துவந்து நின்ற ராகினி, "சீமாட்டி யின் நாயகனே! இதோ என்னைப் பாருங்கள். என் முகத்தைப் பாருங்கள்! நான் கேட்க சுதந்திரமுண்டா இல்லையா என்ப தற்கு என் கண்களைப் பார்த்துப் பதில் சொல்லுங்கள். சுதாவின் பழைய ஏழ்மை வாழ்வில் மதுசூதனர் அக்கறை எதுவும் காட் டாமல் ஒதுங்கி இருந்திருக்கலாம். அதனால் அவருக்கு ஏதும் வாயில்லை என்று வாதாடலாம். இதோ இப்போது நான் கேட் கிறேன்! கேட்கப் பலவிதத்திலும் சுதந்திரம் உள்ள நான் கேட் கிறேன்! குப்பையில் கிடந்த உங்களைக் கோபுரத்தில் ஏற்றி வைத்த நான் கேட்கிறேன்! உடுக்க உடையும், போட்டுக் கொள்ளச் சட்டையுமில்லாமல் கிழிந்த ஆடைகளுடன்

அழுதை மாணவன்போல பரீக்ஷை ஹாலுக்குள் நுழைந்த போது, உடுக்க உடை யெடுத்துக் கொடுத்து உள்ளே உட்கார வைத்த நான் கேட்கிறேன்! வேலை வெட்டி எதுவுமின்றி சென்னை ரஸ்தாவெங்கும் ஊதாரிபோலத் திரிந்த நாடோடியான உங்களுக்கு நல்லவழி காண்பித்த நான் கேட்கிறேன்! நாற்பது ரூபாய் சம்பளத்தில் நரக வேதனைப்பட்டுக் கொண்டு நானும் சாப்பிட்டு, உங்களுக்கும் படைத்தேனே, அந்த ராகினி கேட்கிறேன்! 'வானமே இடிந்து விழுந்தாலும், பூமியே பிளந்து விழுங்கினாலும் ராகினி, உன்னை மறக்கமாட்டேன். உன்னையல்லாது வேறு பெண்ணை மணக்கமாட்டேன்!' என்றெல்லாம் பசப்பி யாருடைய பருவ மொட்டை புஷ்பிக்க விடாமல் புழுதியில் போட்டு நசுக்கிவிட்டீர்களோ, அந்த ராகினியே கேட்கிறேன்! நீங்கள் மனிதனா? மனச்சாட்சி உள்ள மானிடனா? மானமுள்ள ஒரு ஆண் மகனா? சொல்லும்! என்னைப் பார்த்துச் சொல்லும்!''

கொதித்தெழுந்த எரிமலை போல கனல் கக்கும் ராகினியை முறைத்துப் பார்த்தான் ரமணி. அவள் பேசுவதை நிறுத்தவேயில்லை. ''ராகினி!'' என்று கத்திக்கொண்டே முன்னேறி வந்த ரமணி, தன் முழு பலம் கொண்டு ராகினியின் கன்னத்தில் 'பளா'ரென அறைந்தான்.

அந்த அடியின் வேகத்தால் அவள் அடங்கிவிடவில்லை. அடி விழுந்த கன்னத்தைக் கைகளால் தேய்த்துக் கொண்டே ரமணியை இன்னும் நெருங்கி நின்று கொண்டாள். ''அடியுங்கள்! கொல்லுங்கள்! சித்திரவதை செய்யுங்கள்! நான் ஓயமாட்டேன்! ஓயவேமாட்டேன்! சுகம் எங்கேயிருக்கிறது என்று நீங்கள் இருவரும் எங்கு தேடிப்போனாலும், இப்படி ஓலமிட்டுக் கொண்டே உங்களைப் பின் தொடர்வேனே ஒழிய, ஓயவேமாட்டேன்! யாராலும் என்னை ஓய வைக்கவும் முடியாது! உங்கள் மனச்சாட்சி உங்களைக் குத்தி எடுத்து, அழ வைத்து, அணு அணுவாக வேகவைத்து அல்லோலகல்லோலப் படுத்தும்வரை ஓயவேமாட்டேன்''

ராகினி கொதித்தெழுந்து வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டே இருந்தாள். ரமணிக்கு ஆத்திரம் அதிகரித்தது. ''போ போ, வெளியே போ!'' என்று பேய்க் கத்துக் கத்திக் கொண்டே ராகினியைப் பிடித்து கரகரவென்று இழுத்துச் சென்று வெளிவாசல் பக்கம் தள்ளினான். ''ஐயோ! வேண்டாம்'' என்று குறுக்கே வந்து ரமணியை பின்னுக்குப் பிடித்துத் தள்ளினாள் சுதா.

அப்போதும் ராகினி ஓயவில்லை. சுதாவைப் பார்த்ததும் அவளுக்கு மேலும் ஆத்திரம் வந்தது.

"சீமாட்டியே!...பார்!...நன்ருகப் பார்! கண்கள் இரண்டையும் பரக்க விழித்துப் பார்!...நான் உன் சிநேகிதியடி சிநேகிதி!...முகத்தை ஏன் மூடிக் கொள்ளுகிருய்?...எடு கையை! என்னைப் பார்...! முகத்தை மூடிக் கொள்ளாதே! உம்...எடு!...எடு!...சுதா! என்னை இப்போது நீ சேற்றிலே போட்டு மிதித்து விட்டாய். ஆனல் நீ வாழ்ந்து விடப்போகிருயா? உன் வாழ்க்கை மொட்டு மலரா வண்ணம் உலகத்தினர் எல்லோரும் உன்னைச் சேற்ருேடு சேராக அழுகவிட்டு வேடிக்கைப் பார்க்கப் போவதை நீ நிச்சயம் பார்ப்பாய்! அனுபவித்துப் பார்ப்பாய்!...அடியே! ஆறு வருஷகாலம் அந்தரங்க சுத்தியோடு என்னை நேசித்த ஒருவனையே நீ நேசிக்கிருய். ஆறு வருஷம் அன்பைச் சொரிந்த ஒருவன் அவளை மறந்து, இன்னெருத்தியை நாடினல், நாடப்பட்டவள் முந்திய காதலியை நினைத்துக் கொள்வாள்! அவளது பரிதாப நிலையை எண்ணிப் பார்ப்பாள்! இன்னெருத்தியோடு ஆறு வருஷம் அன்போடு இருந்துவிட்டு இப்போது வேருெருத்தியை நாடுகிறவன், எத்தனை நாள் தன்னேடு வாழப்போகிருன் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பாள் படித்தவள்! அவள் மாத்திரமல்ல; பட்டிக் காட்டுப் பெண்கூட ஆலோசனை செய்யக்கூடிய விஷயத்தை உன்னல் நினைத்துப் பார்க்க முடிந்ததா? கோடீஸ்வரியே! நீ வாழ விரும்பியிருப்பது நிஜ வாழ்வல்ல; சொப்பன வாழ்க்கை! உன் இளமையும் ஆசையும் ஓய்ந்த நாளில், பருவத்தின் குருத்து மரத்துப்போன நாளில், இதை நீ நிச்சயம் உணரத்தான் போகிருய்! சுதா! ஒருவர் வாழ்வைக் கெடுத்து வாழும் வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? அனுபவிக்கும் சுகம் ஆனந்தம் தருமா? இதையெல்லாம் உனக்கு நான் நிருபிக்காமல் விடப் போவதில்லை. நீ வாழ்ந்து பார்! பாரடி...பார்!...என்னை நீ இழுத்து விட்டிருக்கும் இந்த வேதனையிலிருந்து மீள சரியான வழி எது என்பதை நான் கண்டே தீருவேன்! அதற்குக் கண்டிப்பாக நான் ஒரு வழி கண்டுபிடித்தே தீருவேன்! அப்போது அப்போது...சுதா! உன் உயிர் ஓலமிடும்! மனச்சாட்சி மருகி அழும்! சீக்குவாரற்று உன் உடல் சீரழியும்!...இன்னும்....."

கொதித்துக் குமுறும் ராகியையும், குமுறி அழும் சுதாவையும் காணச் சகியாமல் ஓடிவந்த வைதேகி, "ராகினி! வா இப்படி! இந்த விஷயத்தில் சுதாவிடம் கேட்டுக் கொள்ள உனக்கு ஒரு உரிமையும் இல்லை! உனக்குத் துரோகம் செய்த உன் காதலனிடம் வம்பு செய்! அதுதான் நியாயம்" என்று குறுக்கிட்டாள்.

"நியாயமும் தீர்ப்பும் உங்களிடம் கேட்டுக் கைகட்டி நிற்கவில்லை. சித்தியம்மா! உங்களை நான் அவமதிப்பதாக எண்ண வேண்டாம். இந்த விஷயத்தில் நீங்கள் என் ஸ்தானத்தில் இருந்து யோசிக்க வேண்டும். நான் இப்போது நடந்து கொள்

வது தவறு? நான் துடிதுடிப்பது அர்த்தமற்றதா? மனமபுழுங்க வேதனைப்படுவது வேண்டாத ஒரு செய்கையா? சொல்லுங்கள் சித்தியம்மா; சொல்லுங்கள்! நான் உங்கள் பெண்ணாக இருந்தால் நீங்கள் என்ன தேறுதல் சொல்வீர்கள் சித்தியம்மா? அதைச் சொல்லுங்கள்'' என்று படபடத்தாள் ராகினி.

''உன் மனவேதனை எனக்குத் தெரியாததில்லை ராகினி! என்னோடு வா சொல்லுகிறேன்! வாம்மா!'' என்று தன்னோடு சேர்த்துக் கட்டி அணைத்துக் கொண்டு வேறொரு அறைக்குள் சென்றாள் வைதேகி.

சுதாவின் முகத்தை ஏறிட்டுப் பார்க்க ரமணிக்கு வெட்கமாயிருந்தது. ரமணியின் முகத்தைக் கூர்ந்து நோக்க சுதாவிற்கு மனமேயில்லை. இருவரும் வெவ்வேறு திசையில் திரும்பிக் கொண்டார்கள்.

* * * *

ஒரு புறம் ராகினியை வைதேகி சமாதானப்படுத்திக் கொண்டிருக்க, மற்றொரு புறம் துப்பறியும் ராஜாமணி மதுசூதனருக்கு நல்வார்த்தை சொல்லிக் கொண்டிருந்தார். தன்னோடு பேசிக் கொண்டிருப்பவர் ஒரு பிரபல துப்பறியும் நிபுணர் என்பதை அறியாமல், மதுசூதனர் அவரிடமும் சண்டப் பிரசண்டம் செய்து ஆவேசமாகப் பேசலானார். ராஜாமணியால் சகித்திருக்க முடியவில்லை.

''நடந்தது நடந்து விட்டது. இனி கத்திக் கூப்பாடு போட்டு அமர்க்களப்படுத்த என்ன இருக்கிறது? எப்போது சுதாராணியின் செய்கை ஜாதி கெட்டதாக உங்களுக்குத் தெரிந்து விட்டதோ, அதோடு அவளை விட்டு ஒதுங்குவதல்லவா பெரிய மனிதர்களுக்கு அழகு!'' என்று மதுசூதனரைப் பார்த்துக் கொஞ்சம் கடுமையாகவே கேட்டார் ராஜாமணி.

''அதற்காக நான் இவ்வளவு தூரம் வரவில்லை. இன்று அவள் எந்தத் துணிவு கொண்டு மதம், ஊர், வாய், குடும்பம், ஆகியவைகளை அனுசரியாமல் எங்களையெல்லாம் அலக்ஷியம் செய்தாளோ, அந்தத் துணிவுக்குப் பக்கபலமாக இருக்கும் அத்தையின் சொத்து சுகங்கள் அவளுக்குக் கிடைக்காமல் செய்து விட எனக்கு வழி தெரியும். அதை நிறைவேற்றி அவளை நடுத் தெருவில் நிறுத்தாமல் நான் ஊர் திரும்பப் போவதில்லை!''

ராஜாமணியின் கடுகடுப்பான கண்கள் வீராப்புப் பேசும் மதுசூதனரைப் பார்த்துக் கொண்டிருந்தன. ''மதுசூதனரே! நீங்கள் மோசமாக நடந்து கொள்ளுகிறீர்கள்; அதைவிட மிகமிக மோசமாகப் பேசுகிறீர்கள். நீங்கள் சுதாராணியின் மீது எதற்காக இவ்வளவு வர்மம் காட்டுகிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். நீங்கள் மனப்பால் குடித்துத் திரிகிறீர்கள். சுதாராணி

யின் சொத்து சுதந்தரங்களை அவளை விட்டுப் பிரிக்க, நீங்களல்ல, உங்களை விடப் பெரிய மல்லாதி மல்லன் வந்தால் கூட முடியாது. ஏன் இந்த வீண் குழப்பம்! பேசாமல் ஊர் திரும்பிப் போங்கள். உங்களால் எதுவுமே ஆகாது'' என்று ராஜாமணி கூறினார்.

மதுசூதனர் அப்போதும் மசியவில்லை. ''காரியத்தில் செய்து காட்டக் கூடியவன் நான்! சொன்னதை மயிரிழை பிசகாமல் கூசாமல் செய்யக்கூடியவன் நான்! நிச்சயம் நடத்திக் காட்டுவேன். அத்தையின் உயில் சுதாவின் இந்த முறையற்ற செய்கையால் செல்லாது என்று வழக்காடுவேன். முறை தவறிய இந்த மணத்தால் சொத்தின் பாத்யதையை அவள் இழந்து விட்டாள் என்று வழக்காடுவேன். கடைசி வரையில் என் சொத்து சுதந்திரம் யாவற்றையும் இந்தப் போராட்டத்திற்காக வாரி இறைப்பேன். சுதாராணியை கந்தல் புடவையோடும் கிழிசல் ரவிக்கையோடும் தெருத் தெருவாகப் பிச்சை எடுக்க விடுவேன்!...''

இடைமறித்து குறுக்கே பாய்ந்தார் ராஜாமணி. ''வீண் பேச்சு! ஆகாத காரியம்! சுதாவை ஒரு அணுகூட உம்மால் அசைக்க முடியாது!...முடிந்தால் செய்து பாரும்!...உடனே செய்து பாரும்!...தைரியம் இருந்தால் நடத்திக் காட்டும்!... மதுசூதனரே! சுதாவின் இந்த விவகாரத்திற்கு அத்தையின் உயில் அதிகாரபூர்வமாக அனுமதி அளிக்கிறது!...அது உமக்குத் தெரிந்தா பேசுகிறீர்?''

''என்ன?'' என்றார் திடுக்கிட்டு.

''ஆமாம்!...அவள் அத்தையே அனுமதித்திருக்கிறாள். 'எச்சாதியானாலும், எம்மதமானாலும், சுதாராணி தன் இஷ்டத்திற்கிசைந்த கணவனைத் தேடிக் கொள்ளலாம். சமூக முறைகளான இந்த விஷயத்தில் தலையிட நான் விரும்பவில்லை!' என்பதாக அத்தை தன் உயிலில் எட்டாவது பிரிவில் குறிப்பிட்டிருக்கிறாள்! மதுசூதனரே! வேண்டுமானால் இதோ உம் கண்ணாலேயே அதைப் பார்த்துக் கொள்ளும்! உயிலின் அசல் நகல் இது!'' என்று கத்தைக் காகிதத்தை எடுத்து அவர் முன்னே வீசி யெறிந்தார் ராஜாமணி. மதுசூதனர் நடந்து கொண்ட விதம் அவருக்கு அத்தனை ஆத்திரத்தைக் கிளப்பி விட்டிருந்தது.

உயிரைப் பிடித்துக் கொண்டு உயில் முழுவதையும் ஓரே மூச்சில் படித்துப் பார்த்த மதுசூதனர் தலைதூக்கி ராஜாமணியைப் பார்த்தார். அதே சமயம் ராஜாமணியும் மதுசூதனரைப் பார்த்தார். ''மதுசூதனரே! உம் வஞ்சத்தை தீர்த்துக் கொள்வதானால் உம்மால் செய்யக்கூடியது ஒன்றே ஒன்றுதான். கொலை...!'' என்று குத்திக் காட்டுவதுபோல இருந்தது அந்தப் பார்வை!

"நீங்கள் யார் என்று தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டார் மதுசூதனர்.

"உங்கள் கூட்டத்திலேயும், உங்கள் ஆசை அபிலாஷைகளிலும் சம்பந்தப்படாத ஒரு அன்னியன் நான்!" என்று கூறி விட்டு வெகு அலக்ஷியமாக எழுந்து நடந்தார் ராஜாமணி.

ராஜாமணிக்குக் கோபமே வராது; கோபம் வந்தால் எத்தகைய ஆபத்தான பேர்வழியாக ஆகி விடுவார் என்பதை அறியமாட்டாமல், அவர் போகும் திசையையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார் மதுசூதனர்.

"அவரை முறைத்துப் பார்த்து நீர் என்ன செய்துவிட முடியும்?" என்ற குரல் பின்னிருந்து வந்தது. திடுக்கிட்டுத் திரும்பினார் மதுசூதனர்.

"பெரிய மனிதரே! அதோ இருக்கிறது வாசல்படி! அதைத் தாண்டினால் தெரு! அதோடு நேராகப் நடக்க வாரம்பித்தால் சமுத்திரக் கரையை அடையலாம். அதில் போய் ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, 'சுதாராணியின் செல்வத்திலே செல்லாக் காசு கூடக் கிடைக்காதே சேதுராஜா!' என்று ஒருமுறை அழுது விட்டு, உயிராவது மிஞ்சிற்றே என்று ஊரைப் பார்க்க நடையைக் கட்டுங்கள்" என்று எகத்தாளத்தோடு கூறி, வாசலுக்குப் போகும் வழியை வலது கையால் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தான் ரமணி.

அதற்கு மேலும் அங்கு நிற்கத் தயங்கிய மதுசூதனரின் கால்கள் வாசலை நோக்கி துரித நடை போட்டது. வாசற்படி அருகே போய் நின்ற அவர் ரமணியைத் திரும்பிப் பார்த்து, "முழுக்குப் போடுவது நீயா அல்லது நானா என்பதை உனக்கு காட்டிவிட்டுத்தான் ஊர் திரும்புவேன்! போய்விடுவேன் என்று மனப்பால் குடிக்காதே!" என்று சவால் விட்டு மேலும் நடந்தார்.

8

ரமணியை நேசித்து, அவனிடம் மனதைப் பறி கொடுத்து, மணம் செய்து கொண்டுவிட சுதாராணி முடிவு செய்தபோது, பிற்காலத்தில் விரும்பத்தகாத, மானம் போகக்கூடிய விபரீத வம்புகள் பல திணுசில் வந்துசேரும் என்று அவள் சிறிதுகூடச் சிந்திக்கவில்லையாதலால், இப்போது மாமாவான மதுசூதனர் ஒரு பக்கமும், ராகினி மற்றொரு பக்கமும் ஒரே சமயத்தில் தாக்கி துன்பப்படுத்துவதை அவளால் தாங்கிச் சகித்திருக்க முடியவில்லை. 'தனது ஆசைக் குகந்தவனை நயவஞ்சகமாக சுதா இழுத்துப் போட்டுக் கொண்டு விட்டாளே பாவி!' என்று சிறிது நாள் புலம்பி அழுது விட்டு, காலப் போக்கில் ராகினி ரமணியை மறந்து விடுவாள் என்று அவள் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக, ராகினியின் நிஜ

சொருபத்தை நேருக்கு நேர் பார்த்தபின், தன் எதிர்கால வாழ்வு சஞ்சலம் நிரம்பியதாக இருக்குமோ என்று சுதா தடுமாற ஆரம்பித்தாள். தன்னிடம் குடிகொண்டிருந்த உத்தமமான குணங்கள் யாவும் பொசுங்கிப் போய், எல்லோரும் துச்சமாக நினைக்கக்கூடிய அவமானத்தை அடைந்து விட்டதாக மனம் புழுங்கலானாள். இவ்வளவு நாளாகச் செல்வச் செருக்குடனும் கண்யமான தன்மையுடனும் நடமாடி வந்த கம்பீரப் பாதையிலிருந்து தான் தூக்கி எறியப்பட்டு ஏதோ கிடுகிடு பாதாளத்தில் தலைகீழாக விழுந்து விட்டது போலவும், காப்பாற்றிக் கொள்ளத் திராணியற்று விட்டது போலவும் ஓர் உணர்ச்சி அவளது சஞ்சல மனதிற்குள்ளிருந்து தலைதூக்கியது. மகிழ்ச்சியூட்டும் மனோராஜ்யங்கள், பலவித ஆசைக் கனவுகள், கட்டிய மனக்கோட்டைகள் ஆகிய ஒவ்வொன்றும் ஒன்றன் பின் ஒன்றாகச் சிதறிச் சின்னாபின்னமாகி விட்டது போல மனம் நைந்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்த போது, சித்தியான வைதேகி முகத்திலே கவலையை தேக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

"பார்த்துப் பேசினாயா சித்தி?" என்று ஆவலோடு கேட்டாள் சுதா. தான் விரும்பியது கிடைக்குமா என்று தாயின் முகத்தை ஏக்கத்தோடு பார்த்து நிற்கும் குழந்தை போல அவள் வைதேகியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"பார்த்தேன்!..." என்று அலுப்போடு சித்தி கூறியபோது சுதாவின் முகம் சிறுத்து விட்டது.

"சுதா! உனக்காக அவள் காலிலே விழாததுதான் பாக்கி; ஆனமட்டும் சொல்லிப் பார்த்தேன். கொஞ்சம் கூட அவள் அசைந்து கொடுக்கவில்லை. வீம்பும் பழி மனப்பான்மையும் தான் அதிகரிக்கிறது. சுதா! இந்தச் சமயத்தில் சித்திகூட இப்படிப் பேசுகிறாளே என்று வருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது. அவள் சொல்வதெல்லாம் நியாயமாகவே இருக்கிறது. அவள் கேட்கும் ஒவ்வொரு கேள்வியும் என்னையே தலை குனிய வைக்கிறது...சுதா! அவள் ஸ்தானத்தில் நீ இருந்து யோசித்துப் பார்த்தால்...

"யோசிக்காமலா இருக்கிறேன்? யோசிக்கிறேன்—இப்போது கூட யோசித்துக் கொண்டிருக்கிறேன். என் மண்டைதான் குழம்புகிறது!...சித்தி! அப்படியானால் அவள் முடிவாக என்னதான் சொல்லுகிறாள்?"

"இந்த விஷயம் எப்படித் தீரப் போகிறது என்பதே எனக்குப் புரியவில்லை. அவள் ஒரே பிடிவாதமாக இருக்கிறாள். ஒன்று ரமணியைச் சீர்குலைத்து உன்னோடு வாழவொட்டாமல் செய்ய வேண்டும்; அல்லது அவன் கண்முன்னாலேயே

தற்கொலை செய்து கொண்டு சாக வேண்டும — இந்த இரண்டில் ஒன்றேனும் நடக்காமல் விடப்போவதில்லை என்று வீம்போடு சொல்கிருள். சுதா! வாழ்விலே எதைத் தன் விடி மோக்ஷமாக எண்ணி காலமெல்லாம் தள்ளி வந்தாளோ, அந்த ஆசைப் பொருள் தன்னை விட்டுப் பறிபோனதும் அவள் உள்ளம் தூள்தூளாகச் சிதறி விட்டது! அந்த துக்கத்தில் அவளுக்குப் புத்தியே பேதலித்துப் போயிருக்கிறது!''

''சித்தி! ஆனது ஆகிவிட்டது! இனி நடந்ததைப் பற்றிக் கிண்டிக் கிளறிப் பிரயோஜனமில்லை! அவள் மனத்துடிப்பையும் நான் உணரத்தான் செய்கிறேன். ஒரு பெண் மன சமாதானத்துடனும் சந்தோஷத்துடனும், பெருமிதத்துடனும் வாழவேண்டுமானுல் ஒன்று கைநிறைந்த செல்வம் இருக்க வேண்டும்; அல்லது கண்நிறைந்த கணவன் இருக்க வேண்டும். ராகினிக்கு இப்போது இந்த இரண்டுமே இல்லாமல் போய்விட்டது. சித்தி! நான் சொல்கிறபடி செய்து பார்க்கிறீர்களா?''

''சொல்லேன்...''

''காதலனைப் பறிகொடுத்த அவளுக்குக் கை நிறையப் பொருள் கொடுத்தால் ஏதோ ஓரளவாவது சமாதானப்படுவாளில்லையா?''

''அதற்காக?''

''நான் ஒரு பத்தாயிரம் ரூபாய் தருகிறேன். அதை அவளிடம் கொடுத்து சமாதானம் செய்து ஊருக்கு அனுப்பி வைத்து விட முடியாதா?''

வைதேகி தயங்கினுள். பணத்தை எடுத்துக் கொண்டு ராகினியிடம் போய், காரியம் பலிக்காமல் அவமானப்பட நேர்ந்து விட்டால்..? 'என்னுல் முடியாது!' என்று சுதாவிடம் சொல்லவும் முடியவில்லை. தர்மசங்கடமான நிலையில் 'சரி' என்று தலையாட்டினுள் சித்தி.

சித்தி சம்மதித்ததுதான் தாமதம். விடுவிடுவென்று உள்ளே போய் பெட்டியைத் திறந்து 'செக்' புஸ்தகம் எடுத்து வந்து ராகினி பெயருக்குப் பத்தாயிரம் ரூபாய்க்கு 'செக் எழுதி' வைதேகியிடம் கொடுத்தாள். மனதை அழுத்திக் கொண்டிருந்த ஒரு பாரம் நீங்கியது போல பெருமூச்சு ஒன்று வெளியே வந்தது.

''சுதா! ராகினி இதைப் பெற்றுக் கொண்டு விட்டால் அது உன் அதிருஷ்டம்! அம்பாள்தான் உனக்கு பக்கபலமாக இருக்க வேண்டும். நான் போகட்டுமா?'' என்று கேட்டு எழுந்தாள் வைதேகி.

"சித்தி! நீ போய் வருகிற வரையில் எனக்கு இங்கு நிலை கொள்ளாது. அவரைக் கூட்டிக் கொண்டு வெளியே போய் வருகிறேன். மனசாவது கொஞ்சம் நிம்மதிப்படும். நான் திரும்பி வரும்போது 'காரியம் ஜெயம்' என்று இரண்டே வார்த்தைகள்தான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். எனக்குத் தைரியம் சொல்லுங்கள் சித்தி, ராகினி ஒப்புக்கொண்டு விடுவாளில்லையா?"

"என்னால் முடிந்த வரைக்கும் அவளைக் கெஞ்சிக் கூத்தாடிப் பார்க்கிறேன். நீ வெளியே போய் சிறிது நேரமாவது வேதனையில்லாமல் சுற்றிவிட்டு வா. அதற்குள் இரண்டில் ஒன்று தீர்ந்து போகும்'... போம்மா!... புறப்படு!... நானும் ராகினியைப் பார்த்து விட்டு வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே வைதேகி அறையை விட்டு வெளியே போனாள்.

அதே சமயம் உள்ளே நுழைந்தான் ரமணி.

"அவளை நீங்கள் பார்த்தீர்களா?" என்று ஆவலோடு கேட்டுக் கொண்டே ரமணியை எதிர்நோக்கி ஓடிவந்து ஒட்டி நின்று கொண்டு சுதா அவனது முகத்தைப் பார்த்தாள்.

"பார்க்கவில்லை. பார்க்க வேண்டிய அவசியமுமில்லை. இப்போது என் கவலையெல்லாம் அவளை எப்படித் தீர்த்துக் கட்டலாம் என்பதிலேயே இருக்கிறது!... ஒருவரைத் தீர்த்துக் கட்ட முடிவு கட்டி விட்டேன்..."

"யாரை?" என்று பதைபதைப்போடு கேட்டாள் சுதா.

"உன் மாமாவை!"

"என்ன நடந்தது?"

"ஒன்று நான் அவரை ஒழித்தாக வேண்டும்; அல்லது அவர் என்னை அழித்தாக வேண்டும். இந்த இரண்டில் ஏதாவது ஒன்று நடைபெற்றாக வேண்டியிருக்கிறது!...சுதா! உனக்கிருக்கிற கவலை போதும்! இதையெல்லாம் இப்போது நீ கேட்டுக் கொள்ளாதே!...நீ எங்கேயோ கிளம்புகிறாயே! எங்கேயாவது போக வேண்டியிருக்கிறதா?"

"ஆமாம், நீங்களும் கிளம்புங்கள். விரோதிகளை வீட்டிலே வைத்துக் கொண்டு என்னால் நிம்மதியாகவே இருக்க முடியவில்லை...வாருங்கள், எங்கேயாவது போய் வரலாம்."

"கொஞ்சம் இரு. இதோ உடை மாற்றிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று தன் அறைக்குள்ளே நுழைந்தான் ரமணி. படி தாண்டிய அவன் கால்கள் பரபரப்போடு பின்வாங்கின. அதைத் தொடர்ந்து "யார் நீயா!" என்ற வியப்பொலி அவன் உதட்டிலிருந்து வெளியே புறப்பட்டது.

அங்கே அவனை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள் ராகினி!

"என்னைக் கண்டால் எமனைக் காண்பது போல இருக்கிறதோ! நான் ஒரு பேதை! நீர் ஒரு ஆண்மகன்! என்னைக் கண்டு ஏன் இப்படித் திகைக்க வேண்டும்? பாவம்! நேரமாகி விட்டதே என்று சுதா துடியாய் துடித்துக் கொண்டிருப்பாள்; உடைகளை மாற்றிக் கொண்டு சீக்கிரம் ஓடுங்கள்!... அடடா! ஏன் நிற்கிறீர்கள்...? சீக்கிரம் போங்கள்..." என்று பரிகாசத்தோடு பைத்தியம் போல ராகினி கிண்டலாகப் பேச ஆரம்பித்தாள்.

சற்றும் எதிர்பாராத வகையில் ராகினியைச் சந்தித்துவிட்ட நிலையில் திகைத்து நின்ற ரமணி, அவள் நிற்குமிடத்தில் தான் நிற்க விரும்பாதவன் போல 'விர்'ரெனத் திரும்பிச் சென்றான்.

அடுத்த சில நிமிஷங்களுக்கெல்லாம் சுதாவும் ரமணியும் வாசலிலே தயாராக இருந்த காரில் ஏறிக்கொண்டு வெளியே புறப்பட்டுவிட்டனர்.

அவர்கள் போகும் திசையையே இமைகொட்டாது பார்த்துக் கொண்டு நின்றாள் ராகினி.

"ராகினி! நீ இங்கேயா இருக்கிறாய்? உன்னைக்காண வீடு முழுதும் தேடிக் கொண்டிருக்கிறேனே!"

"யாரது?" என்று கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் அவள். வைதேகி நின்று கொண்டிருந்தாள்.

"என்ன சித்தியம்மா? என்னைத்தேடி நீங்கள் அலைய வேண்டிய காரியம் என்ன? ஏதாவது ரொம்பவும் முக்யமானதா?"

"ஆமாம்!" என்று சொல்லிக் கொண்டே வைதேகி ராகினியை நெருங்கி மிக மெதுவான குரலில் பேச ஆரம்பித்தாள்.

இவர்கள் இங்கே பேசிக் கொண்டிருக்க ரமணியும் சுதாவும் கொழும்பு மாநகரத்திலே பார்க்க வேண்டிய பல இடங்களையும் பார்த்துவிட்டு முடிவில் மிருகக் காக்ஷி சாலையை வந்தடைந்தார்கள்.

"சுதா! ஒருவிதத்தில் ராகினிக்கு நீ நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறாய்!" என்றான் ரமணி சிரித்துக் கொண்டே.

"ராகினிக்கா? நன்றியா? எதற்காக!" என்று ஆச்சரியப் பட்டுப்போய்க் கேட்டாள் சுதா.

"அவள் வீட்டிலே முற்றுகையிட்டபடி முணுமுணுத்துக் கொண்டிராவிட்டால் நீ உன் அறையைவிட்டு வெளி வந்திருப்

பாயா அல்லது கொழும்புமா நகரத்திலுள்ள மியூசியம், மருகக காக்ஷிசாலை இவைகளைப் பார்த்திருக்கத்தான் போகிறுயா!''

''என்னவோ என்று பார்த்தேன்! நீங்கள் ராகினி என்ற பெயரைச் சொன்னதும் எனக்குத் தூக்கிவாறிப் போட்டது. நம் மானத்தை வாங்க இங்கேயும் வந்துவிட்டாளோ என்று நடு நடுங்கிப் போய்விட்டேன்! ஆமாம். நான் அந்தரங்கமாக உங்களை ஒன்று கேட்கப்போகிறேன். என்னிடம் நீங்கள் எதை யும் மறைக்காமல் சொல்ல வேண்டும். 'மணம் செய்து கொண்டால் உன்னையே மணப்பேன்' என்று ராகினிக்கு நீங்கள் சத்தியம் ஏதாவது செய்து கொடுத்திருக்கிறீர்களா?''

''எதற்காக இதை கேட்கிறுய்?''

''சொல்லுங்களேன்!''

''சிறு குழந்தைகள் மண் வீடு கட்டி, சொப்பு செய்து வைத்து, புருஷன் பெண்டாட்டி விளையாட்டெல்லாம் விளையாடுவ தில்லையா?''

''அதைப்போல?''

''புது மோகத்தில் ஏதாவது உளறி யிருக்கலாம். இப் பொழுது எதற்காக இதையெல்லாம் கிண்டுகிறுய் சுதா?''

''நீங்கள் ராகினிக்கு எவ்வளவு வாக்குறுதி கொடுத்திருந் தால் அவள் இப்போது சுதந்திரத்துடன் சண்டையிடுவாள் என்று யோசித்தேன். அதனுல்...''

''உனக்கு என்ன தோன்றியது?''

''எப்போதாவது ஒரு காலத்தில் நானும் ராகினிபோல ஆகிவிடுவேனு...!''

''சீ! பைத்தியமே! அவளுக்கும் உனக்கும் வித்தியாசமில் லையா? மன நிம்மதிக்காக வீட்டைவிட்டு வெளியே வந்தாய். இங்கேயுமா ராகினியின் பயம் உன்னை விடவில்லை? அவள் என்ன செய்துவிட முடியும் என்று தடுமாறுகிறுய்? ஏதோ நான் கிடைக்காத ஏமாற்றத்தில் குமுறுகிறுள். இரண்டு நாள் அப்படி இருக்கும்; பிறகு மனதை சமாதானப்படுத்திக் கொண்டு ஊர் போய் சேரப்போகிறுள்!''

''போகாவிட்டால்?''

''போக வைப்பது என் காரியம்! சுதா! கொழும்பு மிருகக் காக்ஷியில் விசேஷமாகப் பார்க்க வேண்டியது ஒன்று இருக் கிறது. அது என்ன சொல்லு.''

''தெரியவில்லையே!''

"உன் அப்பாவோட அப்பாவை நீ பார்த்திருக்கிறயா?"

"ஓ! எனக்கு பத்து வயசாகி யிருந்தபோதுதான் அவர் செத்தார். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது! ஏன்? எதற்காகக் கேட்கிறீர்கள்?"

"தாத்தாவுடைய தாத்தாவை உனக்குத் தெரியுமா?"

"நேரிலே பாத்ததில்லே. வீட்டிலே இருக்கும் கையால் எழுதப்பட்ட பெரிய படத்தில் பார்த்திருக்கிறேன்."

"அந்த தாத்தாவின் தாத்தாவிற்கு தாத்தாவானவருடைய தாத்தாவை நீ பார்த்திருக்கிறயா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் ரமணி.

"ரொம்ப நீளமாகக் கேட்கிறீர்களே! நான் பார்த்ததில்லே! நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று குறும்பாகக் கேட்டாள் சுதா.

"பார்த்ததில்லே. கேள்விப் பட்டிருக்கிறேன்! இப்போது அதை நேரிலேயும் பார்க்கப் போகிறேன். நான் மட்டுமல்ல. நீ கூட!" என்று சொல்லிக் கொண்டே, கைக் கெடிகாரத்தை பார்த்த ரமணி, "ஐந்தரை மணி ஆகிவிட்டது. சீக்கிரம்வா சுதா! அதைக் காட்டுகிறேன்" என்று அவளை கையைப் பிடித்து இழுத்து சென்றான்.

'ராகினிக்குப் பிடித்த பைத்தியம் இவருக்கும் பிடித்துவிட்டதா!' என்று ஆச்சரியம் ததும்ப ரமணியைப் பார்த்துக் கொண்டே நடந்தாள்.

கொஞ்ச தூரம் சென்றதும் ஒரு இரும்புக் கிராதி தென்பட்டது. அதைச் சுற்றி ஜனங்கள் கும்பலாகக் கூடி யிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் சுதாவை இழுத்துச் கொண்டு முண்டியடித்து முன்னே போய் நின்றான் ரமணி.

அந்தக் கூண்டுக்குள்ளே 'கொரில்லா' என்று சொல்லப் படும் பெரிய மனிதக் குரங்கு ஒன்று மனுஷன் உயரத்திற்கு ஆஜானுபாகுவாக நின்றுகொண்டு 'சிகரெட்' குடித்தக் கொண்டிருந்தது. பெரிய மனிதனைப் போல முழுக்கால் சட்டையும், சட்டையும் அணிந்து கழுத்துப் பட்டையும் அழகாகக் கட்டிக் கொண்டு, தலையிலே ஈவினிங் ஹாட்டுடன் வெண்மையான பற்களைக் காட்டிச் சிரித்துக் கொண்டிருந்த அதைப் பார்த்து சிறு குழந்தைபோல கைதட்டிக் கலகலவென்று சிரித்தாள் சுதா.

சுற்றிலும் கூடியிருந்த ஜனக் கூட்டத்தில் ஒவ்வொருவரும் "சார்லி! சார்லி!" என்று கூப்பிட்டு, பலூன், ரொட்டி, சோடா இதைப்போல ஆளுக்கொன்றாகக் கொடுத்தார்கள். அழகாக அது நடந்துவந்து கம்பிக்கூண்டு வழியாக கைநீட்டி வாங்கிக்

கொண்டு 'தாங்க்ஸ்' என்று சொல்லும்போது சுதாவின் வியப்பு எல்லையில்லாமல் அதிகரித்தது.

சார்லி இருந்த அந்த கம்பிக் கூண்டுக்குள் சைக்கிள் ஈஸி சேர், மேஜை, நாற்காலி எல்லாம் போடப்பட்டிருந்தன. "ஜோர்! சைக்கிள் ஓட்டு பார்க்கலாம்" என்று சத்தமிட்டுக் குரல் கொடுத்தான் ஒரு ஆங்கிலோ இந்தியச் சிறுவன்.

'கொரில்லா' அச்சிறுவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு சைக்கிள் ஏறி வெகுவேகமாகச் சுற்றிச் சுற்றி ஓட்டியது! சர்க்கஸில் வரும் சைக்கிள் வித்தைக்காரன் கூட அவ்வளவு ஜோராக ஓட்ட மாட்டான். அப்படி அற்புதமாக சவாரி செய்தது அது. சிறிது நேரம் ஓட்டியபின் களைப்பு ஏற்பட்டு விட்டதுபோல சைக்கிளை விட்டு இறங்கி ஈஸிசேரில் உட்கார்ந்து கொண்டது.

"சுதா! இப்போதே நன்றாகப் பார்த்துக்கொள். பிறகு பார்க்கும் பாக்யம் கிடைக்குமோ கிடைக்காதோ!... இவர் தான் உன்னுடைய, என்னுடைய, இங்கே வந்திருப்பவர்கள் அத்தனை பேருடைய தாத்தாவின் தாத்தாவிற்குத் தாத்தாவான கொள்ளுத் தாத்தாவுடைய எள்ளுத் தாத்தா!" என்று கூறிச் சிரித்தான் ரமணி.

"அப்படியானால் அவர் காலிலே விழுந்து நமஸ்காரம் செய்யுங்கள்...!" என்று குறும்போடு கூறிவிட்டு, "எல்லோரும் அதற்கு ஆளுக்கொரு பொருளைக் கொடுக்கிறார்கள். நானும் ஏதாவது ஒன்று கொடுக்கப் போகிறேன். நான் கொடுக்கப் போவது என்னவாக இருக்கும்? சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்று கேட்டு ராணியின் முகத்தைப் பார்த்தாள்.

"முத்தமாக இருக்கும்!" என்று சொல்லிக் கடகடவென்று சித்தான் ரமணி.

"குறும்பு ஜாஸ்தி!" என்று கன்னம் சிவக்க அவனைக் கண்ணால் பார்த்த சுதா, கொரில்லா பக்கம் திரும்பி 'சார்லி' என்று கூப்பிட்டுக் கையை ஆட்டினாள்.

மனிதக் குரங்கு அவளுக்கு நேராக வந்து நின்று சிரித்துக் கொண்டே ரோமம் அடர்ந்த தன் வலது கையை தன் குவிந்த உதடுகளின் மேல் வைத்து முத்தமிட்டுக் காட்டி பிறகு கையை ஆட்டி நீட்டியது. "அட போக்கிரி!" என்று சிரித்துக் கொண்டே பர்சைத் திறந்து ஒரு ரூபாய் வெள்ளி நாணயத்தை எடுத்து அதனிடம் நீட்டினாள் சுதா.

சார்லியின் முகம் மாறியது. "நோ!...தாங்க்ஸ்!" என்று சொல்லிக் கொண்டே திரும்பிப் போய் ஈஸிசேரில் உட்கார்ந்து கொண்டது!

"பணம் என்றால் பிணம்கூட வாயைத் திறக்கும் என்பார்

கள்! இதோட ராகினியைப் பார்த்தீர்களா!" என்று சொல்லிச் சிரிக்க ஆரம்பித்தாள் சுதா.

"குரங்குக்குள்ள இந்த குணம்கூட மனிதனுக்கு இல்லையே!" என்று யாரோ பின்னாலிருந்து கூறியது உரக்கக் காதில் விழவே ஏக காலத்தில் சுதாவும் ரமணியும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள். அப்படிக் கூறியது யார் என்பதை அறிந்த போது இவருடைய நெஞ்சும் மார்பும் படபடக்க ஆரம்பித்தது. ராகினி அங்கே நின்று கொண்டு பரிகாசமாக அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உன் காசு பணத்தைக் கொண்டு உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் எளிதில் நீ வாங்கிவிடுவது போல மனிதர்களின் மனச்சாட்சியை விலை கொடுத்து வாங்கிவிட முடியாது! ...சுதா! குலைக்கிற நாய்க்கு எலும்புத் துண்டம் போடுவது போல இந்தச் 'செக்'கை எனக்குக் கொடுத்துவிட்டால் எல்லாம் சரியாகப் போய்விடும் என்று நினைத்து விட்டாய்! அப்படித்தானே ?...இந்தா உனது 'செக்'! இந்த ரூபாயைக் கொண்டு இன்னொருத்தியின் வயிற்றெரிச்சலைக்கூடக் கொட்டிக் கொள்ளலாம்! ஏன் முழிக்கிறாய் ? இன்னும் பச்சையாக எடுத்துச் சொல்லட்டுமா ?"

கூடியிருந்த கும்பல் முழுதும் ரமணியையும், ராகினியையும், சுதாவையும் சூழ்ந்து கொள்ள ஆரம்பித்தது. ஈஸிசேரில் ஒய்யாரமாக உட்கார்ந்திருந்த 'சார்லி' கூட கம்பிக் கிராதிக்கு அருகே வந்து நின்று கொண்டது!

ஜனக்கூட்டத்தைச் சுற்றுமுற்றும் பார்த்தாள் ராகினி. "பாருங்கள் இந்தக் கோடீஸ்வரியை! இதோ இந்தப் பெரிய மனிதரையும் பாருங்கள்! நம்பிக்கை துரோகத்திற்கு உதாரண உருவங்களாக விளங்கும் இந்த இருவரையும் இப்போதே நன்றாகப் பார்த்துக் கொண்டுவிடுங்கள். பிறகு உங்களுக்கெல்லாம் காணக் கிடைக்குமோ கிடைக்காதோ?" என்று ராகினி பிரசங்கம் செய்வது போலக் கத்தத் தலைப்பட்டாள்.

ரமணிக்கு அந்த சமயம் தான் எப்படி நடந்து கொள்வது என்றே தெரியவில்லை. சுற்று முற்றும் கூடியிருந்த ஜனங்களைத் தலைதூக்கிப் பார்க்கவும் சக்தியில்லாமல் அவமானத்தால் குன்றிப் போயிருந்தான்.

சுதாராணிக்குக் கண் இருண்டு வந்தது. திடீரென ஏற்பட்ட திகைப்பால் அவளது ஹிருதயத் துடிப்பு சிறிது ஓய்ந்து தணிந்தது. தலை சுற்றுவது போலவும், கால்கள் பூமியில் பாவி நிற்க முடியாமல் தள்ளாடிக் கீழே தள்ளுவது போலவும் ஒரு மயக்க நிலையில் சிக்கி, கீழே விழாமலிருப்பதற்காகக் கம்பிக் கிராதியைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

கூட்டத்தில் 'கசமுசா' ஏற்பட்டது. 'கொஞ்சம் வழிவிடுங்கள்' என்று கத்திக் கொண்டே ஒருவர் முண்டியடித்துக் கொண்டு ஜனத்திரளில் புகுந்து உள்ளே வந்தார். "ராகினி!" என்று அதிகாரத்தோடு மிகக் கோபத்துடன் அழைத்த அவர், "நீ ஒரு பெண்ணா அல்லது பேயா?" என்று கேட்டு நெருங்கி வந்து, ராகினியின் கையைப் பிடித்து சரகர வென்று கூட்டத்தை விட்டு வெளியே இழுத்துக் கொண்டு போனார்.

சுதா மெதுவாகத் தலை நிமிர்ந்து பார்த்தாள். "யாரது? மாமாவா! தன் மான அவமானத்தில் அவருக்கு இவ்வளவு அக்கறை தோன்றி யிருக்கிறதா?" என்று அவளது மனம் புரு புருத்தது!

9

மிருகக் காக்ஷி சாலையிலிருந்து திரும்பிய சுதா கண்களிலே தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்த வண்ணம் கட்டிலில் மல்லாந்து படுத்துக் கொண்டிருந்தாள். துக்கம் ஒரு பக்கம், அவமானம் ஒரு பக்கமும் அவள் வேதனையை அதிகப்படுத்திக் கொண்டிருந்தது. அவள் முகம் மிக விகாரமாக இருந்தது.

மிருகக் காக்ஷி சாலையில் ராகினி நடந்து கொண்ட விதத்தை அவளால் மறக்கவே முடியவில்லை. அவ்வளவு ஜனங்களுக்கு மத்தியில் தன்னை எத்தகைய அவமானத்திற்கு உட்படுத்தி விட்டாள் என்று நினைக்க நினைக்க அவள் மனம் மிகவும் வேதனைப்பட்டுப் புழுங்க ஆரம்பித்தது. கேவலம் ஒரு சாதாரண நிலையிலுள்ள ஒரு பெண்ணுக்கு இவ்வளவு துணிச்சலும் மிரட்டல் உருட்டலும் இருக்குமேயானால் அவளுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கவேண்டும் என்று அவள் சிந்திக்கச் சிந்திக்க வைராக்ய எண்ணங்கள் பல தலை தூக்க ஆரம்பித்தன.

மனச்சாட்சி என்ற ஒன்று இருந்ததால் ராகினியைக் கண்டு இதுவரை சுதா தலைகுனிந்து நடந்து கொண்டாள். அதை அவள் நினைத்துப் பார்க்க வில்லை! தான் செய்தது தப்போ சரியோ அழாக்குறையாக அவள் காலிலே விழுந்து மன்னிப்புக் கூடக் கேட்டுக் கொண்டாகி விட்டது. அதை அவள் உணரவில்லை! பெண்ணுக்குப் பெண் காட்ட வேண்டிய ஒரு பச்சாத்தபம் அவளுக்குக் கடுகளவுகூட இல்லை! சித்தியை அனுப்பி சமாதானப் படுத்த எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்தாகி விட்டது! அபராதம் செலுத்துவது போல கணிசமான ஒரு தொகையைக் கூட மனமுவந்த கொடுத்துப் பார்த்தாகி விட்டது. எதற்கும் அவள் மசியவில்லை. தார்மீக முறையில் எவ்வளவு தூரம் பணிந்து போக வேண்டுமோ, அவ்வளவு

கிமோகப் போய் முயற்சிக்க வேண்டிய அத்தனை வழிகளையும் முயன்று பார்த்து விட்டாள். சிறிதாவது அனுகூலம் கிடைத்ததா ?... இல்லை ! அப்படியானால் ராகினியின் மனதிலே இருக்கும் எண்ணம் என்னவாக இருக்கும்? தன்னை அவள் ஒழித்து விடப் பார்க்கிறாளா ?...

யோசித்தாள் சுதா. '' ஆமாம்... அப்படியும் ஏன் இருக்கக் கூடாது...? இல்லை ! அவள் பெண்ணல்லவா ? கொள்ளை கொலை என்றால் அஞ்சக் கூடியவளல்லவா ? அவ்வளவு துணிச்சல் இருக்குமா ?... இருக்காது ! இருக்கவே இருக்காது !

அப்படியானால் ராகினியின் எண்ணம் தான் என்ன ? ஓட ஓடத் துரத்துகிறாளா ? இது நீடித்துக் கொண்டே போனால் ?

'' அவளுக்கு நாம் எந்த விதத்தில் சளைத்தவள் ?''— ஹிருதய மில்லாதவளுக்குப் பாடம் கற்பிக்க வேண்டுமென்றால் ஹிருதய மில்லாதவளாகவே எதிர் நின்று போராடுவதன் மூலமே ஒரு முடிவைக் காண முடியும் என்ற தீர்மானத்திற்கு வந்தாள் சுதா. அவள் மனம் எதற்கும் துணிந்தது போல மறுத்து விட்டது.

'' ஒன்று அவள் வாழட்டும். அல்லது என்னை அவள் வாழ விடட்டும். இரண்டிலொன்று தெரிந்து கொள்ளாமல் ராகினியை விடப் போவதில்லை. நான் மான அவமானத்திற்குப் பயந்து ஓட ஓட அவள் விரட்டினாள். இப்போது எதிர்த்து எதற்கும் துணிந்திருப்பதைக் கண்டு அவள் என்ன செய்கிறாள் பார்க்கிறேன் '' என்று முணுமுணுத்துக் கொண்டே அறையின் வெளியே வந்து யாராவது இருக்கிறார்களா என்று எட்டிப் பார்த்தாள். பிறகு வேகமாகத் திரும்பி வந்து பெட்டியைத் திறந்தாள். அதிலிருந்த ரிவால்வரை எடுத்து தோட்டாக்களைப் போட்டுக் கிட்டித்தாள்.

''சுதா ! உன்னைப் போன்ற புத்திசாலிப் பெண்கள் செய்யக் கூடிய காரியமில்லை இது !''

யார் இப்படிக் கூறுவது என்று திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் சுதாராணி. அவள் முகம் வெளுத்தது.

'' முதலில் அதைப் பெட்டியில் வைத்துப் பூட்டு. ரிவால்வரை எடுக்கக் கூடிய அளவு மோசமாக எந்தக் காரியமும் நடைபெற்று விட்டதாக எனக்குத் தெரியவில்லை. சீமாட்டி ! முறுக்கிய கயிற்றை மெதுவாகத் தான் தளர்த்தி விட வேண்டும். அவசரமும் ஆத்திரமும் பட்டால் சிக்கு பிரியாது ; மேலும் அதிகமாகவே யாகும் !''

முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார் ராஜாமணி !

எதிர்பாராத வகையில் அவர் வந்துவிட்டதாலோ என்னவோ சுதா தலை குனிந்து பேசாமல் நின்று கொண்டிருந்தாள்.

"ஏக்கம், சஞ்சலம், தடுமாற்றம் ஆகியவைகளுக்கு நீ அதிக இடம் கொடுத்து விட்டாய் என்று நினைக்கிறேன், சுதா! அதை உதறி விடு. தீரச் சிந்திக்கும் தூரதிருஷ்டியான புத்தி நுட்பத்தைக் கொண்டு வாழ்க்கையை நேருக்கு நேர் பார். இப்போது நீ செய்யத் துணிந்த காரியத்தால் உனக்கு எந்த வகையிலாவது ஆனந்தம் எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கிறதா?"

'சொல்லு சுதா!' என்று கேட்பது போல அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார் ராஜாமணி.

"இந்த ராகினியால் என் வாழ்க்கை ரொம்ப மோசமாகி விட்டது. என் ஆனந்தமெல்லாம் பறந்தே போய்விட்டது. இன்று, நாளை, வருங்காலம் எல்லாம் இவளால் மோசமாகி விடும்போலிருக்கிறது..."

"அதற்காக?" என்று குறுக்கிட்டார் ராஜாமணி.

"அவளைக் கட்டோடு வெறுக்கிறேன்; என் முழு மனதோடு வெறுக்கிறேன். எனக்குச் செய்த அவமானத்திற்காக அவளை நான் மன்னிக்க முடியாதவாறு அவ்வளவு வெறுக்கிறேன்..."

"அவளுக்கு ஏற்பட வேண்டிய உணர்ச்சி உனக்கு ஏற்பட்டிருக்கிறது!"

"என்ன?...சொல்கிறீர்கள்...?"

"அதைச் சொல்லத்தான் வந்திருக்கிறேன். சுதா! உள்ளபடியே பார்க்கப் போனால் ரிவால்வரை எடுக்கும் பிரமேயம் உனக்கு ஏற்படவேயில்லை. ராகினி கைக்கொண்டிருக்கவேண்டிய காரியம் அது...! அதை அவள் எடுத்திருந்தால் அதன் குறி உன் மீது இருக்காது...! ரமணி பக்கம் திரும்பியிருக்கும்!"

"நீங்கள் சொல்வது..."

"உலக நடப்பு! சுதா! ஒரு சிறு நிகழ்ச்சியைச் சொல்லட்டுமா?...கேள். சில வாரங்களுக்கு முன் சென்னையில் உல்லாசமாகப் போய் வரலாம் என்று கடற்கரைப் பக்கம் போய் மணல் வெளியில் உட்கார்ந்திருந்தேன். இரு இளம் ஜோடிகள்—வாழ்க்கைக் கனியை வளர்த்துவிட வேண்டிய இரு மலர்ந்த மொக்குகள்—எனக்கு அருகே உட்கார்ந்து ஆனந்த மயமாய் சொக்கிக் கொண்டிருந்தது. அவளுக்கு வயது பதினெட்டு இருக்கும். மிஞ்சி மிஞ்சிப் போனால் அவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். என் கண்களுக்குக் குளிர்ச்சியாக இருந்தது அந்தக் காக்ஷி. அவர்களது அன்புப் பேச்சும், பாசப் பரிவுகளும்

என் மனதிற்கே குதூகலமாய் இருந்தது. அவர்களையே இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தேன். என் காதுகளைக்கூட அவர்கள் பக்கம் சாய விட்டிருந்தேன். அன்று மாத முதல் தேதி. அவள் எங்கோ வேலை செய்து சம்பாதித்த காசை கல கலவென்று அவன் மடி மீது கொட்டியதைப் பார்த்தேன். அப்போது அவள் முகத்தில் சோபை எப்படி ஒளி வீசியது தெரியுமா?...அவன் அவளை அப்படியே சேர்த்து அணைத்துக் கொண்ட காக்ஷி...சுதா! அது இப்போதும் என் கண்முன்னால் நிற்கிறது! இருவரிடையே என்ன அன்பு...எவ்வளவு பிரேமை! அப்போது என்னையறியாமல் பிரார்த்தித்தேன். 'ஈஸ்வரா! இந்த இளம் ஜோடிகளைப் பிரிக்காதே; வாழ வை!' என்று. ஆனால்...ஆனால்...''

அவர் கூறி வரும்போது அநுதாபம் அவர் கண்களிலே சிவப்புக் கோடுகளைப் போட்டு வர ஆரம்பித்தது. தூசி விழுந்து விட்டால் எப்படி கண்களைத் துடைத்துக் கொள்வார்களோ, அதே போல அவர் துடைத்துக் கொண்டார்.

''மேலும் கேள் சுதா! அதே ஜோடியை மீண்டும் சந்திக்க நேர்ந்தது ஒரு ஹோட்டலிலே! நமக்கு விடிந்து விட்டது!'' என்று அவள் குதூகலத்தோடு குதித்துக் கும்மாளம் போட்டாள். தன் சிநேகிதி மூலம் அவனுக்கு ஒரு வேலை ஏற்பாடு செய்து விட்டதாக ஆனந்தத்துடன் கூறினாள்! அதைக் கேட்கும் போது என் மனம்கூட குதூகலித்தது. பாவம்! இருவரும் கை நிறைய சம்பாதித்து ஆனந்தமாக வாழட்டும் என்று ஆசீர்வதித்தேன். ஆனால் இன்று ... இன்று ... அவள் வாழ்வு அந்தரத்திலே தொங்குகிறது! அவனை வேறொருவள் இழுத்துக் கொண்டு விட்டாள். அந்த வேறொருவள்தான் நீ! கோடீஸ்வரியான நீ!''

ராஜாமணியின் பார்வையில் கடுமையும் கனிவும் மாறி மாறிப் பிரதிபலித்தது. ராஜாமணி தன் பேச்சை விடவில்லை.

''சுதா! நான் சொல்லுவது கதையில்லை. கண் கொண்டு பார்த்ததைச் சொல்லுகிறேன். அந்த யுவதியான ராகினி, வேறொருத்தியான நீ—இருவருக்குள்ளே யாருடைய மனதிலே தீராத துயரம் இருக்கும்? பொறுக்க முடியாத வேதனை உருவெடுத்திருக்கும்? யோசித்துப்பார் சுதா! அந்தத் துயரத் துடிப்பு அவ்வளவு சீக்கிரம் அடங்கி விடுமா?''

''அதனால் ராகினி செய்தது, செய்வது, செய்துவரப் போவது எல்லாமே, எனக்கு வேண்டிய தண்டனைதான் என்கிறீர்களா?'' என்று அழுகையும் ஆத்திரமும் கொண்டு கேட்டாள் சுதா.

மௌனமாகத் தலையசைத்தார் ராஜாமணி.

"அதனால் என் வாழ்க்கை பாழாவது நியாயமே என்கிறீர்களா?"

"அப்படி நான் சொன்னேனா?"

"உங்கள் பேச்சின் தோரணை...?"

"பதட்டமோ, ஆத்திரமோ, வேதனையோ நீ படுவதால் பிரயோஜனமில்லை. உன் சேலைத் தலைப்பு முள்ளிலே அகப்பட்டுக் கொண்டுவிட்டது. எதேச்சையாக சிக்கிக்கொண்டு விட்டது என்றுகூடச் சொல்வதற்கில்லை. என் சேலை பலமுள்ளதாக இருக்கும்போது. கேவலம் தான்தோன்றியாய் வளர்ந்து கிடக்கும் இந்த முள் என்ன செய்துவிடப் போகிறது என்று அலக்ஷியத்தோடு முந்தானையைக் காற்றில் பறக்க விட்டு விட்டாய்! ஏதோ ஒரு விதத்தில் முள்ளில் துணி சிக்கி கொண்டுவிட்டது. ஆற அமரத்தானே அதை எடுக்க வேண்டும். யோசித்துப் பார் சுதா! ராகினிக்குப் பரிந்து பேசுகிறேன் என்று தடுமாறுதே! பச்சாத்தாபமும் பரிவும் ராகினியைவிட உன் மேலேயே நான் அதிகம் வைத்திருக்கிறேன். அந்த எண்ணத்திலேயே அபாயமான ஆயுதங்களை எடுக்காதே என்று கூற வந்து தடுத்தேன்! உன் அத்தை எனக்கும் பொருப்பு சுமத்தி வைத்திருப்பதை எண்ணி..."

"எனக்கு என்ன விடி மோக்ஷத்தைத் தேடி வைத்து விட்டீர்கள்?"

"தேடி வைக்கத்தான் உன்னைத் தேடி இப்போது வந்திருக்கிறேன். நீ எப்பொழுது பர்மா புறப்படுவதாக உத்தேசம்?"

"எதற்காகக் கேட்கிறீர்கள்?"

"நீ எந்தக் கப்பலுக்குப் புறப்படுவதாக இருக்கிறாயோ அதை ராகினிக்குத் தெரியப்படுத்தாமல் புறப்பட்டுவிடு. அவள் உன்னைப் பின் தொடர வழியில்லாமல் போய்விடும். பிறகு அவள் தொல்லை உனக்கு இருக்காது. இங்கிருந்தபடியே ஊருக்குத் திரும்பிவிடுவாள். இதைத் தவிர எனக்கு வேறு யோசனை ஒன்றும் தோன்றவில்லை! நான் போகட்டுமா?" என்று எழுந்தார் ராஜாமணி.

அறையை விட்டு அவர் வெளியே கிளம்பியபோது, ஹாலின் குறுக்கே யாரோ வேகமாக நடந்து 'பால்கனி' பக்கமாகச் செல்வதுபோலப் பட்டது. 'பேசியதை யாராவது ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார்களா? அப்படியானால் அது யார்?' என்று தெரிந்துகொள்ளும் அவாவுடன் அவரும் பால்கனிப் பக்கமாகத் திரும்பி நடந்தார்.

10

ஒளிந்து நின்று பால்கனி பக்கமாக மறைந்தது யாராக இருக்கலாம் என்று ராஜாமணி நினைத்தாரோ, அதே ராகினி அங்கே போடப்பட்டிருந்த நாற்காலி ஒன்றில் ஏதுமே அறியாதவள் போல உட்கார்ந்திருந்தாள்.

''ராகினி! உனக்கு அன்பு செலுத்தத்தான் தெரியும் என்று இதுவரை நினைத்திருந்தேன். அடம் செய்வதோடு, ஒட்டுக் கேட்கும் கெட்ட குணங்களும் உன்னிடம் உண்டு என்பதை இப்போது அறிந்து கொண்டேன். ஹாலிலிருந்து சற்று நேரத்திற்கு முன்புதானே இங்கே வந்து உட்கார்ந்து கொண்டாய்?'' என்று கேட்டார் ராஜாமணி.

''ஆமாம்''—ராகினியின் இந்த பதில் முரட்டுத்தனத்தோடு விளங்கியது.

''ஹாலிலே மறைந்து நின்று ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாய்?''

''இல்லை, எதேச்சையாக இங்கே வந்தேன். உள்ளே நீங்கள் பேசிக் கொண்டிருக்கும் குரல் கேட்டு, நேராகப் பால்கனிக்கு வந்து உட்கார்ந்தேன்.''

'நீ சொல்வது நிஜந்தானா?' என்பது போல அவளையே குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருந்தார் ராஜாமணி. எதைப் பற்றியும் பயப்படாதவள் போலவும், யாரையும் லக்ஷ்யம் செய்ய வேண்டிய அவசியம் இல்லாதது போலவும் வேறு பக்கம் திரும்பிக் கொண்டிருந்தாள் ராகினி.

''ராகினி! திரும்பி இப்படிப் பார் என்னை. நீ அலக்ஷியப் படுத்தும் அளவுக்கு உன்னை போல மட்ட ரகமானவன் இல்லை நான். உன்னைப் போலவோ அல்லது உன்னைத் தனக்கு சாதகமாக இங்கே அழைத்து வந்திருக்கும் மதுசூதனரைப் போலவோ சொக்கட்டான் ஆட முற்பட்டிருக்கும் சூதாடியல்ல. இப்போது நான் மனது வைத்தால் உன் சாகஸம், நாடகம், நடிப்பு, நீலித்தனம் ஆகிய எல்லாவற்றிற்கும் ஒரே நிமிஷத்தில் முடிவைக் காட்டுவேன். என்னை நீ இன்னார் என்று இன்னும் நீ அறிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன்...''!

''அதுவும் எனக்குத் தெரியும்! நீங்கள் ஒரு துப்பறிபவர். கொலையோ கொள்ளையோ நடந்தால் துப்புத் துலக்க முன்வரும் தொழில்காரர் நீங்கள். ஆனால் ஒன்றும் நடக்காத போது உங்களால் யாரையும் உருட்டவோ அல்லது மிரட்டவோ அதிகாரம் இல்லை என்பதும் எனக்குத் தெரியும்!''

'ஓஹோ! அப்படியா?' என்பது போல அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டார் ராஜாமணி.

"ராகினி! நீ நடமாடுகிற இந்த இடம் யாருக்குச் சொந்தம் தெரியுமா?"

"என்னுடையதல்ல என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்!"

"யாருடைய அழைப்பும் இல்லாமலேயே நீயாக சுதந்திரமெடுத்துக் கொண்டு இங்கே தங்கியிருக்கிறாய் என்பதையாவது உணருகிறாயா?"

"அதை சிறு குழந்தை கூடச் சொல்லும்!"

ஒவ்வொரு கேள்விக்கும் தன்மையற்ற முறையில் ராகினி பதில் கூறினாலும் கூட, ராஜாமணி ஆத்திரப்படவில்லை. நிதானமாகவே நடந்து கொண்டார்.

"சுதாராணியை நீ சுற்றிச் சுற்றி வருகிறாய். இந்த மாளிகையில் உன் இஷ்டம் போல எந்த இடத்திலும் தாராளமாகப் புகுந்து வருகிறாய். இங்கே உனக்கு அவ்வாறு நடந்துகொள்ள என்ன பாத்யதை இருக்கிறது?"

"சுதாவிற்குள்ள பாத்யதை எனக்கும் இருக்கிறது. அவள் தன் வசம் இழுத்துக் கொண்டுள்ள ரமணி என் நாயகன். என் நாயகனுக்குள்ள உரிமை எனக்கும் உண்டு!"

'புத்தியில்லாத சிறு பெண்!' என்று தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார் ராஜாமணி. "உன் உரிமை எந்த அளவுக்குச் செல்லும் என்பதை சுதாவால் நடத்திக் காட்ட முடியும். அப்போது நீ இங்கே இருக்க முடியாது!"

"நடுத்தெருவிலே நிற்பேன் என்கிறீர்கள். அதற்காக நான் பயந்து விடமாட்டேன். வெயிலிலும் மழையிலும் நிற்க வேண்டுமே என்று ஓடிவிடமாட்டேன். வாசலிலே உட்கார்ந்தபடியே இருவர் மானத்தையும் வாங்கிக் கொண்டிருப்பேன்!... மேலும் துணிந்து விட்டேனால் என்ன நடக்கும் தெரியுமா?... அப்போது தங்களுக்கும் வேலை அதிகரிக்கும்!" என்று சொல்லிக் கொண்டே கைப்பையைத் திறந்து ஒரு பொருளை வெளியே எடுத்தாள்.

அழகான சிறு கைத் துப்பாக்கி அது! அதைப் பார்த்ததும் ராஜாமணியின் முகம் சுருங்கி, பின் மலர்ந்தது.

"துப்பறியும் நிபுணரே! இதனால் அந்த இருவரையும் சுட்டு ரத்தம் ஆறாகப் பெருகி ஓடும்போது, அதைப் பார்த்துச் சிரிக்க வேண்டும் என்று என் மனம் அவ்வளவு ஆசைப்படுகிறது! 'செய் செய் செய்' என்று ஒவ்வொரு நிமிஷமும் என்னைத் தூண்டிவிட்டுக் கொண்டே இருக்கிறது. ஆனால் ஆனால்... அதை செய்யத் தயங்குகிறேன்".

"அதாவது உன் உடலும் தூக்குமரத்திலே ஊஞ்சலாடுமே என்பதற்காக!"

"இல்லே! இல்லவே யில்லே! நான் சாவதைப்பற்றி பயப்படவே யில்லே. இனி என்ன சுகத்தை எதிர்பார்த்து நான் வாழ வேண்டும்? ஆனாலும் அவ்வளவு சீக்கிரம் இந்தக் கைத்துப்பாக்கியை அவசரப்பட்டு உபயோகிக்கப் போவதில்லே. அதற்கு மேலான ஒரு சித்திரவதையைச் செய்ய எனக்குத் தெரியும்! சுதாவின் மனதை வாள்கொண்டு அறுப்பதுபோல அணு அணுவாக அது அறுத்துக் கொண்டிருக்கும்! எந்தெந்த இடத்திற்குப் போனால் ஆனந்தமாக இருக்கும் என்று அவர்களிருவரும் செல்கிறார்களோ, அங்கெல்லாம் நானும் நிழல்போலப் பின் தொடர்வேன்! அவர்களது குதூகலத்துக்குக் குறுக்கே நிற்பேன். கூரான ஆயுதத்தால் அவளது நெஞ்சிலே குத்திக் குத்தித் துளைத்தால் கூட அவளுக்கு அவ்வளவு வேதனே இருக்காது! என்னைப் பார்க்கப் பார்க்க அவள் மனம் அழுது புலம்பும்! ஆனந்தம் சொல்லிக் கொள்ளாமல் அவளே விட்டுப் புறப்பட்டு விடும்! எதிலே சுகம் இருக்கப் போவதாக அவள் கருதிக் கனவுகள் கண்டாளோ, அதிலெல்லாம் துன்பமும் துயரமுமே இருக்கிறது என்று குன்றிப் போவாள். அப்போது நான் சிரிப்பேன்! கட கடவென்று சிரிப்பேன்! எங்கேடி சுகம்? என்று கேட்டு எதிரொலிப்பதுபோல் சிரிப்பேன்! நிபுணரே! உயிரைப் போக்கி வஞ்சம் தீர்த்துக் கொள்வதைவிட, உயிரோடு வைத்து உழலச் செய்து உள்ளக் கொதிப்பைக் கிளப்பி உடலெங்கும் பொசுக்க வைப்பது எவ்வளவோ விதத்தில் சரியான பழிக்குப்பழி அல்லவா?"

அவள் கூறி வரும்போது அவள் முகத்திலே ஏற்படும் பல மாறுதல்களே ராஜாமணி கவனித்துக் கொண்டிருந்தார். ராகினிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? புத்தி பேதலித்து விட்டதா!

"ராகினி!" என்று கனிவோடு கூப்பிட்டார் ராஜாமணி. "இப்படியெல்லாம் நீ செய்வதால் உனக்கு என்ன பலன் கிடைத்துவிடப் போகிறது?"

"துடித்துக் கொண்டிருக்கும் என் ஆத்மாவிற்கு ஒரு சாந்தி!"

"ராகினி! நான் சொல்வதைக் கேள். ஏதோ நடந்தது நடந்துவிட்டது. பழசை மறந்துவிடு. எதிர்காலத்தை நோக்கு. பதட்டமும் ஆத்திரமும் மனித வாழ்விற்கு சாத்தான். சுதாவிற்காக இப்படி நான் உன்னே சமாதானப்படுத்துவதாக நினைக்காதே! உன் வாழ்வு பாழடைந்து விட்டதுபோலப் பதறுகிறாய்! என்னைக் கேட்டால் அது மோசமடையவில்லே! 'ரமணியை மணக்காமல் போனதும் உன் நல்லதற்குத்தான்! யோசித்துப்

பார். நீ அவன்மேல் எவ்வளவு அன்பு செலுத்தினாய்? எத் தகைய பரிவு அவன் மீது காட்டினாய்? பலன்? அவன் உன் கண் எதிரேயே இன்னொருத்தியோடு சேர்ந்துவிட்டான்! காதல் எங்கே? பிரேமை எங்கே மறைந்தது? நீ அவனை மணம் செய்து கொண்டிருந்தால் இதைப்போல என்றாவது ஒரு நாள் அவன் உன்னைக் கைவிட்டு ஓடக்கூடியவன்தான் என்பதை இப் போது தெரிந்துகொண்டு விட்டாயல்லவா? பிறகு ஏன் இந்த துவந்த யுத்தம்?''

''நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்! ரமணி என் மீது எவ்வளவோ பிரியமாக இருந்தார்! இப்போதும் இருக்கிறார்! சுதாவும் அவரும் ஒருவரை யொருவர் காதலித்து கல்யாணம் செய்து கொண்டிருப்பதாக நீங்கள் நினைத்தால் அது சுத்தத் தவறு. சுதா அவரைக் காதலித்திருக்கலாம். ஆனால் அவர் அவளை ஒருக்காலும் காதலித்திருக்க முடியாது! அவ ளுக்கு இஷ்டமான பொருளை விலை கொடுத்து வாங்குவதுபோல, அவரையும் அவள் பணத்தைக் காட்டி மயங்க வைத்திருக் கிறாள். ஆனந்தமாக சுகித்திருக்கலாம் என்று ஆசைவார்த்தை காட்டி மோகத்தளையில் சிக்க வைத்திருக்கிறாள். அந்த பந்தம் எத்தனை நாள் நீடிக்கும் என்று நினைக்கிறீர்கள்? சந்திரனைப் பாருங்கள்! அது எவ்வளவு அழகோடு பிரகாசிக்கிறது? பார்க்க எவ்வளவு களையோடு இருக்கிறது! ஆனால் சூரியன் பிரகாசிக்க ஆரம்பித்தால் அதை நம்மால் பார்க்க முடிகிறதில்லை. அந்த சூரிய ஒளி நம் பார்வையை மறைத்துவிடுகிறது. இருந்தாலும் சந்திரன் எங்கேயோ பிரகாசிக்கத்தான் செய்கிறது. அதைப் போல நான் அந்த சந்திரன். சூரியனாகிய சுதாவின் செல்வம் குறுக்கிட்டு மின்னுவதால் என்னைப் பார்க்க முடியாமல் ரமணி யின் கண் கூசுகிறது. அவ்வளவுதான். அந்த சூரியன் மாலையில் மறையும்போது...?''

''அந்த ஒரு சுபதினத்தை எதிர்பார்த்து நீ நம்பிக்கை வைத் திருக்கிறாயாக்கும்!'' என்று குறுக்கிட்டார் ராஜாமணி. ''அப்படி யானால் என்றாவது ஒரு நாள் ரமணி சுதாவைக் கைவிட்டு உன் னோடு ஓடிவந்து விடுவான் என்று எதிர்பார்க்கிறாய்! இல்லையா?''

'ஆம்' என்று ராகினி பதில் சொல்லுவாள் என்று எதிர்பார்த் தார் ராஜாமணி. ஆனால் அவளோ தலைகுனிந்தபடி எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

''உனக்கு உன் காதலன் வேண்டும். அவன் சுதாவோடு வாழக் கூடாது. அதுதானே உன் எண்ணம்? அத்தகைய ஒரு நிலையை ஏற்படுத்துவதற்காகத்தானே இந்த அழக்காட்டி யமும் ஆகாத்தியமும் நீ செய்கிறாய்?... இனி அனேகமாக அதற்கு ஒரு விமோசனம் ஏற்பட்டு விடும். நீ உன் காதலனைக் கை கோர்த்தபடி ஊருக்குத் திரும்பி விடலாம்...''

ராஜாமணியின் பேச்சைக் கேட்டு மலரவேண்டிய ராகினி யின் முகம் வெறுப்பைப் பிரதிபலித்தது. "நிஜமாகவா?" என்று கேட்டாள். அவள் கேள்வியில் ஆத்திரமும் கலக்கமும் சேர்ந்து தொனித்தன. அதில் ஆர்வம் வெளிப்படவில்லை.

'ஆமாம்' என்பது போல தலையசைத்தார் ராஜாமணி. "சுதா விடம் இதைப் பற்றித்தான் இத்தனை நேரமும் பேசிக் கொண் டிருந்தேன். அவள் வாழ்க்கை நிம்மதியாகக் கழிய வேண்டு மானால், உன்னைப் போன்றவர்களின் உபத்திரவங்களுக்கு ஆளாகிப் புண்படாமல் இருக்க வேண்டுமானால் ரமணியை மறந்து விவாக ரத்து செய்து கொள்வதே உத்தமமான காரியம் என்று அவளுக்கு யோசனை கூறி அது பற்றி சர்ச்சை செய்து கொண்டிருந்தேன்! அநேகமாக அவளும் அதற்குச் சம்மதித்து விட்டாள். இதுபற்றி கலந்தாலோசிக்க விடிந்ததும் முதல் காரி யமாக அவள் வக்கீலைப் போய் பார்ப்பாள் என்று நினைக்கிறேன்! அவள் புத்திசாலியாய் இருந்தால் அப்படித்தான் செய்வாள்! நான் நினைப்பது போல அவள் நாளை புத்திசாலித்தனமாகவே நடந்து கொள்ளுவாள் என்று எதிர்பார்க்கிறேன். விவாகரத்து விரைவில் முடிவது அவளுக்கும், ஏன், உனக்கும் கூட பல வகையிலும் விடுதலையாக இருக்கும்...?"

"விவாகரத்து வழக்குத் தொடர சுதாவும் சம்மதித்து விட்டாளா?"

"ஏன் கலவரப்பட்டது போல இதைக் கேட்கிறாய்? உனக்கு அனுகூலமான காரியமாயிருக்கும் போது நீ குதூகலிக்க வல்லவா வேண்டும்!"

"ராஜாமணி சொல்லிய யோசனை நூற்றுக்கு நூறு சரி... உனக்கு விடிமோக்ஷம் கிடைத்து விட்டது ராகினி!...நீ ஆனந்தப் பட இதைவிட வேறு நல்ல சேதி என்ன இருக்கிறது?" என்று கேட்டுக் கொண்டே அவர்களிருக்குமிடத்திற்கு வந்தார் மதுசூத னர். "மிஸ்டர் ராஜாமணி! நீங்கள் கூறியுள்ள யோசனையை சுதா முழுமனதோடு ஏற்றுக் கொண்டு விட்டாளா?... அதன் படியே காரியத்திலும் தயங்காமல் செய்து விடுவாளா!" என்று மேலும் ஆவலோடு கேட்டார் அவர்.

சட்டென பதில் வரவில்லை. நகத்தைக் கடித்துக் கொண்டே இருவரையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தார் ராஜாமணி. பிறகு ஒரு தரம் கனைத்துக் கொண்டார். "சுதாவின் விவாகரத் தால் ராகினிக்குத்தான் அனுகூலம் இருக்கிறது. ஆனால் நீங்கள் ஆனந்தப்பட ஒன்றுமேயில்லை. விவாகரத்து செய்து கொண் டால்கூட அவள் உங்கள் மகனை மறுமணம் செய்து கொள்ளப் போவதில்லை! அது தீர்மானமாகி விட்டது!" என்று கூறிக்

கொண்டே அவர்கள் இருவரையும் கவனித்து விட்டு வெளியே நடந்தார் ராஜாமணி.

இரண்டு ஜோடிக் கண்கள் ஏமாற்றம் பிரதிபலிக்க வெளி வாசற் பக்கமே ஊடுருவிக் கொண்டிருந்தன.

அவர்களது பார்வையை விட்டு மறைந்த பிறகு தனக்குத் தானே சிரித்துக் கொண்டார் ராஜாமணி. 'விவாக ரத்து' என்று பொய் சொன்னாலும் கூட, அந்த ஒரு பொய்யைச் சொன்ன தன் மூலம் இரு உள்ளங்களில் ஒளிந்திருந்த உண்மைகளை ஓரளவு தெரிந்து கொண்டு விட்டது போல மகிழ்ச்சி யடைந் தார் அவர்.

'ரமணி தனக்கு வேண்டும் என்பதே ராகினியின் கருத்தாக இருக்குமானால், சுதா விவாக ரத்து செய்துவிடப் போகிருள் என்று கூறியபோது அவள் குதூகலமாய் கூத்தாடி யிருக்க வேண்டும். ஆனால் அவள் அப்படி ஏதும் ஆனந்தப்படவில்லை. அதற்கு நேர்மாருக அவள் முகத்திலே வேதனைச் சுழி கோல விட்டது. அந்தச் செய்தியைக் கேட்கக் கலவரப்படுவது போல் திகைப்புடன் ராகினி காணப்பட்டாள். அப்படியானல் அவள் உள் மனதில் வேறு எதுவோ இருக்கிறது! ராகினி விஷயம் தான் இப்படி! மதுசூதனர்...? குலம், கோத்திரம், மதாசாரம், சமூகக் கட்டுப்பாடு—இதையெல்லாம் பிரமாதமாக அளந்து கொட்டி அமர்க்களம் செய்தவர் விவாகரத்து செய்து கொண்ட ஒருத்தியை மருமகளாக்கிக் கொள்ளச் சித்தமாயிருக்கிருர்! அவரது உண்மை ஸ்வரூபம் வெளிப்பட்டு விட்டது! சுதாவின் மீது அவருக்குக் கண் இல்லை. அவளிடமிருக்கும் குவிந்த செல் வம் அவர் கண்களை மூடி மறைத்து விட்டது! அந்தச் செல்வத் தைத் தன் வசப்படுத்திக் கொள்வதற்கு சாத்தியமான வழிகளி லெல்லாம் புகுந்து புறப்பட எதற்கும் அவர் துணிந்திருக்கிருர்!'

யோசித்த ராஜாமணி தனக்குத்தானே தலையாட்டிக் கொண்டார். இருவர் மனதைக் கலைத்தாகி விட்டது. இன்னும் ஒருவர் பாக்கி. அவரது மனதையும் தெரிந்து கொண்டு விட் டால் திட்டம் தெளிவாகப் புரிந்து விடும்.

அந்தச் சமயத்தில் "ஸார்!" என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே வந்தான் பட்டாபி. "சுதா உங்களை அவசரமாகப் பார்க்க விரும்புகிருள்!" என்ருன்.

"அவசரம்...!...?"

சுதாராணியின் அறையை நோக்கி வேகமாகச் சென்ருர் ராஜாமணி. அவர் உள்ளே நுழைந்த போது சுதாராணிக்குச் சொந்தமான சமான்களெல்லாம் மூட்டை கட்டப்பட்டு தயா ராக இருப்பதைக் கண்டார்!

11

மலாயா நாட்டின் பிரதான நகரமாகிய கோலாலம்பூர், என்றும்போல குபேர பட்டினமாக கோலாகலத்துடன் விளங்கிக் கொண்டிருந்தது. அந்த நகரிலே, வானத்தை எட்டிப் பிடிக்க நான் உயர்ந்திருக்கிறேனு அல்லது வானம் என்னைத் தொடக் கீழே இறங்கி வருகிறதா என்று கேட்பதுபோல வானளாவி நின்ற ஜகத்ஜோதி என்ற மாளிகை ஜகத்ஜோதியாகவே விளங்கிக் கொண்டிருந்தது. சுதாராணியின் அத்தையான அனுசூயாதேவி அங்கே இல்லாத குறை ஒன்றைத் தவிர, வேறு எந்த விதத்திலும் அது மகிமை குன்ருது இருந்தது. ஏழை எளியவர்களிடம் இரக்கம் காட்டி, அவர்களைக் கசக்கிப் பிழியாமல், அவர்களது வாழ்க்கைத் தரமும் முன்னேற வேண்டும் என்ற கருணையோடு, அத்தையம்மாள், தான் உயிரோடு இருந்த காலத்திலேயே ஸ்தாபித்து நடத்திவந்த குறைந்த வட்டி லேவாதேவிக் கடை முதல் மாடியில் ஜரூராகத் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது. இரண்டாவது மாடியிலே கணக்கு வழக்கில்லாமல் காசுகள் 'கலகல' வென்று ஒலிக்கும்படியாக ரப்பர் தோட்டம் குத்தகைக்காரர்கள் குத்தகைப் பணத்தைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். மூன்ருவது மாடி ஒரு 'குட்டி' ஆடிட் ஆபீஸ் போல இருந்தது. பெரிய பெரிய கணக்குப் புஸ்தகங்களின் நடுவே குமாஸ்தாக்கள் புள்ளி விபரம் போட்டுக் கொண்டிருக்க, கட கட...டக் டக் கென்று பலர் டைப் அடிக்கும் சப்தம் தாளம் போட்டுக் கொண்டிருந்தது. கீழ்த்திசை நாடுகளனைத்திலும் பரவலாகக் கிடக்கும் திரண்ட ஆஸ்திகளுக்கும், பெரிய பெரிய எஸ்டேட்டுகளுக்கும் அனுசூயா தேவியின் நம்பிக்கைக்குகந்த தலைமை நிர்வாகியாக இருந்து இருபது வருஷமாகப் பொறுப்புகளைத் தலையிலே சுமந்து சுமந்து முன் தலை வழுக்கையாகி விட்ட மானேஜர் முகர்ஜி நாலாவது மாடியிலே 'ஏர் கண்டிஷன்ட்' அறையிலே உட்கார்ந்து உலகத்தின் எட்டாவது அதிசயத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது போல, கையில் ஒரு தினசரிப் பத்திரிகையை வைத்துக் கொண்டு ஆச்சரியத்தில் மூழ்கி இருந்தார்! இடையிடையே யாரையோ எதிர்பார்ப்பது போல வாசற்கதவுப் பக்கமாகப் பார்வையைத் திரும்பிக் கொண்டிருந்தார் அவர்.

அவர் யாரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாரோ அவரே தானே என்னவோ, கிட்டத்தட்ட இருபத்தைந்து வயதுள்ள ஒரு வாலிபன் உள்ளே நுழைந்து, "வாஸ்தவம்தானப்பா. சுதாராணியே டெலிபோனில் பேசினுள். பேப்பரில் வந்திருக்கும் செய்தி முழுக்க முழுக்க உண்மைதான்!" என்ருன்.

அவரது பிரகாசமான பெரிய உருண்டை விழிகள் மறுபடியும் தினப்பத்திரிகையைப் பார்த்தன. மலாயா நாட்டின் பிரபல செய்தித் தாளாகிய அதில் முதல் பக்கத்தில் பிரதானம்

கொடுத்து கொட்டை எழுத்தில் சுதாராணியின் திருமண விப ரங்கள் பின்வருமாறு வெளியிடப்பட்டிருந்தன.

"அனுசூயா தேவியின் ஆசைக்குகந்த வாரிசு! கீழ்த்திசை சீமாட்டியான சுதாராணியின் திருமணம்! ஆர்ய சமாஜத்தில் ஆடம்பரமற்ற வைபவம்!"

"அப்பா! எனக்கு இதையெல்லாம் பார்க்க வியப்பாக இருக்கிறது! அவசரமான ஒரு சூழ்நிலையில் சுதா திருமணம் செய்து கொண்டிருப்பாளா?" என்று ஆச்சரியப்பட்டான் ரூப்ராஜ்.

தன் மகனுக்கு எதுவும் பதில் கூருத முகர்ஜி மௌனமாக யோசனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு, "ரூப்! நீ நாளை கொழும்பு புறப்பட்டாக வேண்டும்" என்ருர்.

"சுதாவை நேரிலேயே சந்தித்து வரவேண்டுமா?"

"சுதாராணியை நீ சந்திக்க வேண்டியதில்லை. கூடவும் கூடாது. அவள் புறப்பட்டு இங்கு வரும்போது அதே கப்பலில் நீயும் கூடவே புறப்பட்டு வரவேண்டும். கூடியவரை நீ என் புதல்வன் என்பதைக் காட்டிக் கொள்ள வேண்டாம். புறப்பட வேண்டிய ஆயத்தம் செய்!...போ..."

தந்தை எதற்காகத் தன்னை அனுப்புகிருர், என்ன காரியத் தைக் கவனிக்க வேண்டுமென்று விரும்புகிருர் என்பது தெரியா மல் விழித்துக் கொண்டிருந்தான் ரூப்.

தயங்கி நிற்கும் தன் புதல்வனை ஏறிட்டுப் பார்த்தார் முகர்ஜி.

"நான் போய் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட் டான் ரூப்ராஜ்.

"என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிருயா? ரூப்! உனக்கு தீக்ஷண்யமான சமயோசித புத்தி இருக்கிறது; அதை உபயோகப்படுத்து. உன் கண்களைப் பரக்க விழித்துக் கொண்டு பார். செவிகளைச் சாய்த்தபடி கவனி. அவசியம் ஏற்பட்டால் தயங்காமல் நீ காரியத்தில் ஈடுபடு...மற்றவை யாவும் உன் கையிலே இருக்கிறது!" என்று கூறிவிட்டு தன் ஆசனத்தை விட்டு எழுந்து வாசல் பக்கம் போனுர் முகர்ஜி.

பிரயாணத்துக்கு ஆயத்தம் செய்ய ரூப்ராஜ் தனது வீட்டிற் குச் சென்ருன்.

பத்திரிகையின் மூலம் சுதாராணியின் திருமணத்தை அறிந்து விசாரித்துப் போக வந்த வாடிக்கைக்காரர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் பழம், பாக்கு, தேங்காய் கொடுத்துக் கொண்டிருந்தனர் குமாஸ்தாக்கள்.

சுதாராணியால் அவசரமாக அழைக்கப்பட்ட ராஜாமணி அவளது அறையை அடைந்த போது, அவள் வேறு யாரோ ஒரு புது மனிதருடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு உள்ளே போகலாமா கூடாதா என்று யோசித்துத் தயங்கினார். அதைப் புரிந்து கொண்ட சுதா, "பாதகமில்லை.. உள்ளே வந்து உட்காருங்கள்" என்று வரவேற்றாள்.

ராஜாமணி உள்ளே வந்து உட்கார்ந்து கொண்டார். இவர் யாராக இருக்கும் என்று சிந்தித்துச் சிந்தித்து அனுமானிக்கப் பார்த்தார். அந்தப் புது மனிதர், ராஜாமணியும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

இருவரும் ஒருவரை யொருவர் அறிந்து கொள்ள அவஸ்தைப்படுவதைக் கண்டாள் சுதாராணி. சிரித்துக் கொண்டே ராஜாமணியின் பக்கம் திரும்பினாள். "இவர்தான் இலங்கையிலுள்ள எஸ்டேட்டுகளுக்கு நிர்வாகி. பெயர் தாஸ்!" என்று சொல்லி ராஜாமணிக்கு அந்தப் புது மனிதரை அறிமுகப் படுத்தி வைத்தாள்.

தாஸ் தமது கரம் குவித்து ராஜாமணிக்கு அறிமுக வந்தனம் செலுத்தினார்.

பதிலுக்குக் கைகூப்பிய ராஜாமணி ஏதோ ஒரு வியப்போடு தாஸையே ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தார். "சமீபத்தில் இவரை எங்கேயோ பார்த்திருக்கிறேன்...!" என்று சுதா பக்கமாகத் திரும்பிப் பார்த்துவிட்டு, அதை ஞாபகப்படுத்திக் கொள்ள நெற்றியைப் பலமாக அழுத்திவிட்டுக் கொண்டார். பிறகு நினைவுக்கு வந்துவிட்டது போல, "ஆமாம் இப்போது ஞாபகம் வருகிறது! யாழ்ப்பாணம் விமான நிலையமான காங்கேசன் துறையில் நாம் வந்த விமானம் சுங்க இலாகா சோதனைக்காக இறங்கியதல்லவா, அப்போது அங்கே இவரைப் பார்த்தேன்!... நான் சொல்வது சரிதானா?" என்றார்.

தாஸ் பதில் சொல்லாமல் தயங்கினார்.

"அப்படியா!" என்று ஆச்சர்யத்தோடு கேட்டாள் சுதா.

"நீங்கள் எங்களைக் கவனிக்கவில்லையா தாஸ்?" என்று கேட்டார் ராஜாமணி.

"கவனித்திருக்கலாம். ஆனால்...ஆனால்..." கூற நினைப்பதை எப்படிச் சொல்லுவது என்று தவித்தார் தாஸ்.

"ஆனால், பார்த்திருந்தாலும் நான்தான் சுதாராணி என்பதை தாஸால் தெரிந்து கொண்டிருக்க முடியாது. நாங்கள் முன்பின் சந்தித்ததில்லை!...இப்போதுதான் சந்திக்கிறோம்!" என்று புன்னகையை உதிர்த்தாள் சுதாராணி.

"ஆமாம்" என்று ஒத்துப் பாடினார் தாஸ்.

"ஓ! அப்படியா?...தாஸ் அங்கே வந்தது நம்மை வரவேற்பதற்காகவா?" என்று கேட்டார் ராஜாமணி.

"அது எனக்குத் தெரியாது!" என்றாள் சுதாராணி.

"அவசரமாக பம்பாய் போகவேண்டியிருந்தது. சென்னை போய் சீமாட்டியையும் பார்த்துவிட்டு, அங்கிருந்தபடியே பம்பாய் போய் வந்து விடலாம் என்று நானும் அன்றுதான் கொழும்பை விட்டுப் புறப்பட்டேன்..."

"சுதா கொழும்பு வருவது பற்றி முன்னதாகவே உங்களுக்கு அறிவிக்கப்படவில்லையா?" என்று கேட்டார் ராஜாமணி.

"நான் புறப்பட்டுப் போன மறுநாள்தான் ஆபீஸிற்கு தகவல் வந்திருக்கிறது. அந்தக் கடிதத்தை பம்பாயிலிருந்த எனக்கு அனுப்பினார்கள்...அதுதான் சீக்கிரமே திரும்பி ஓடி வந்தேன்..."

"என் லெட்டர் தாமதமாகவா கிடைத்தது? சரியான நேரத்திற்கு நானேயல்லவா அதைப் போஸ்டு செய்தேன்?" என்றாள் சுதாராணி.

ராஜாமணி தாஸின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தார்.

"நீங்கள் சரியான நேரத்தில் தபாலில் சேர்த்திருக்கலாம் இந்தியாவிலிருந்து வருகிற தபால்கள் சாதாரணமாகவே இப்போதெல்லாம் தாமதமாகத்தான் கிடைக்கின்றன. ஸென்ஸார் செய்கிறார்களல்லவா!" என்று சிரித்துக் கொண்டே சமாதானம் கூறினார் தாஸ். அந்தச் சிரிப்பை அந்தரங்க சுத்தியானதாக ராஜாமணி கருதவில்லை. இருந்தாலும் "ஆமாம்...அப்படியும் இருக்கலாம்!" என்று சொல்லிவிட்டு அவர்களிருவரும் பேசிக் கொள்ள சந்தர்ப்பம் கொடுப்பது போல மௌனமாக உட்கார்ந்து கொண்டார். அவரது கண்கள் வேறு திசையில் ஊன்றி விட்டது போல பாவனை செய்தனவே ஒழிய, செவி அவர்களது பேச்சிலே வெகு கவனத்தோடு இருந்தது.

பொதுப்படையாக பல விஷயங்களைப் பற்றி பேசிய பிறகு "இதையெல்லாம் கொஞ்சம் கவனிக்கிறீர்களா?" என்று சொல்லிக் கொண்டே ஒரு கட்டுக் காகிதத்தை அவிழ்த்து சுதாராணிக்கு முன்பாக வைத்தார் தாஸ்.

"இதெல்லாம் என்ன?" என்று கேட்டாள் சுதா.

"சில தஸ்தாவேஜிகளில் உங்கள் கையெழுத்து வேண்டியிருக்கிறது. பல புதிய குத்தகை ஒப்பந்தங்கள் செய்திருப்பதால் அதை நீங்களும் கவனித்துக் கொள்வது நல்லதென்பது என் அபிப்பிராயம்."

''மிகவும் அவசரமானதா?''

''சிலது முக்கியம்; சில கடைமுறையிலுள்ளவை!'' என்று இழுத்தாற் போலக் கூறினார் தாஸ்.

''இதையெல்லாம் இப்போது கவனிக்க எனக்கு அவகாசம் இருக்காது என்று நினைக்கிறேன். நான் நாளைக் காலை வெளியூர் போய்வர உத்தேசம். திரும்ப வந்த பிறகு பார்த்துக் கொள்ள லாமே!''

''சரி... அப்படியே செய்யுங்கள்'' என்று ரிகார்டுகளை மீண்டும் கட்டி வைத்தார் தாஸ்.

சுதாவிடம் விடைபெற்றுக் கொண்டு தாஸ் திரும்பிச் செல்லும் வரை இமை கொட்டாது அவரது முகபாவங்களையே கவனித்துக் கொண்டிருந்தார் ராஜாமணி. அவர் வெளியே சென்ற பிறகு.''சுதா! என்னை அவசரமாகக் கூப்பிட்டனுப்பினீர்களாமே'' என்று கேட்டார்.

''ஆமாம், நீங்கள் கூறிய தந்திரங்களைக் கையாண்டே ராகினிக்குத் தெரியாமல் கோலாலம்பூர் புறப்பட முடிவு செய்து விட்டேன். இதோ பாருங்கள்...சாமான்கள் கூட மூட்டை கட்டியாகி விட்டது. இப்போது என் திட்டம் இதுதான். இலங்கைத் தீவிலுள்ள பார்க்க வேண்டிய சில ஊர்களுக்குப் புறப்படுவது போல கிளம்பப் போகிறேன். வருகிற எட்டாவது நாளில் புறப்படும் கப்பலுக்கு நம் அனைவருக்கும் நீங்கள் டிக்கட் வாங்கி விடுங்கள். கப்பல் புறப்படப் போகிற தினத்தன்று ஒரு மணி முன்னதாக கொழும்புத் துறைமுகத்திற்கு நான் நேராக வந்து விடுகிறேன். நீங்களும் டிக்கட்டுகள் சகிதம் துறைமுகத்திற்கு வந்து எங்களோடு சேர்ந்து விடவேண்டும். நான் கூறுவது சரி தானா?'' என்று கேட்டாள் சுதா.

''கூடவே எல்லோரையும் அழைத்துப் போய் பிறகு கப்பலுக்கு வருவதாக உத்தேசமா?''

''ஆமாம்.''

''யாரையெல்லாம் கூட்டிக் கொண்டு போகப் போகிறீர்கள்?''

''என் கணவர், சித்தி, பட்டாபி, வேலைக்காரி மங்கம்மா... இவ்வளவுதான்.''

''உங்களது திட்டத்தை அவர்களுக்கும் கூறியிருக்கிறீர்களா?''

''நாலு பேருக்குத் தெரிந்தால் ரகசியம் எப்படியாகும்! அதனால் யாருக்குமே கூறவில்லை. என் கணவருக்கு மட்டும் தான் சொல்லியிருக்கிறேன்...''

கூறிக்கொண்டிருக்கும்போதே உள்ளே நுழைந்தாள் சித்தி வைதேகி. அங்கே இருந்த மூட்டை முடிச்சுகளைப் பார்த்து, "என்ன சுதா! எங்கே திடீர் பிரயாணம்?" என்று கேட்டாள்.

"இந்த இலங்கைத் தீவிலே பார்க்கவேண்டிய இடங்கள் பல இருக்கின்றன சித்தி! நம் தேசத்தில் அஜந்தா குகை இருப்பது போல இங்கே சிக்ரியா என்ற இடம் வர்ணச் சித்திரங்களுக்குப் பேர்போனது. அதைப் பார்க்க எனக்கு ஆசை; கதிர்காமம்—நீங்கள் ரொம்ப நாளாகப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்ட முருகன் ஸ்தலம்! அனுராதபுரம் — சீதையை ராவணன் சிறை வைத்ததாகச் சொல்லும் அசோகவனம்! இன்னும் நுவேரா இலியா. இதெல்லாம் பார்க்க வேண்டாமா?... இதைச் சொல்லவே உங்களைக் கூப்பிட்டனுப்பினேன். சித்தி! அதிகாலை நாலுமணிக்கெல்லாம் தயாராக இருக்கவேண்டும்... அப்புறம்..."—இப்படியெல்லாம் வைதேகியிடம் சுதாராணி கூறிக்கொண்டிருக்கும்போது, சிரித்தபடியே வெளியே போனார் ராஜாமணி. "என்ன இருந்தாலும் சுதா புத்திசாலிதான்!" என்று அவரது உதடுகள் முணு முணுத்துக் கொண்டன.

சுதாவின் அறையைவிட்டு வெளியே வந்த ராஜாமணி மாடிப்படி இறங்கி கீழே வந்தபோது ராகினியின் அறைக்குள்ளிருந்து ரமணி வெளிவருவதைப் பார்த்துத் திகைத்துப் போனார்!

12

ராகினிக்குத் தெரியாமல்—அவள் தன்னைப் பின்பற்றுவதற்கு ஏதுமில்லாமல்—எந்த மாதிரியான தந்திரங்களைக் கையாண்டு மலாயா செல்ல சுதாராணி திட்டமிட்டிருந்தாளோ, அதன்படியே கதிர்காமம், சிக்ரியா போன்ற இடங்களுக்கு யாத்திரை போவது போல புறப்பட்டு, குறிப்பிட்ட நாளில் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்து பிரயாண டிக்கட் சகிதம் தயாராயிருந்த துப்பறியும் ராஜாமணியுடன் கப்பலில் ஏறிக்கொண்டாள். மலாயா செல்லும் கப்பலான 'கர்நாடகா,' இளமையும் லக்ஷணமும் கூடிய கோடீஸ்வரி ஒருவளைச் சுமந்து செல்லுகிறோம் என்ற பெருமிதத்தோடு நீலக் கடலைக் கிழித்துக் கொண்டு அலைகளை ஒவ்வொன்றாக எட்டிப் பிடித்துச் சென்றுகொண்டிருந்தது.

சுதாராணியும் ரமணியும் கப்பலின் வெளி தளத்தில் நின்றபடி மேல் திசையில் கொஞ்சம் கொஞ்சமாக மறைகிற சூரியனையும், அது அந்திவானத்தில் அள்ளிச் சொரிகிறவர்ண ஜாலங்களையும் ரஸித்துக் கொண்டிருந்தார்கள். கிட்டத் தெரிந்த கொழும்புத் துறைமுகம் எட்டிப் போக ராகினியும் அவர்களது வாழ்க்கைப் பாதையிலிருந்து விலகி சிறிது சிறிதாக எட்டிப்போய் பிரிந்துவிட்டது போலவே சுதாராணியின் உள்ளம் குதூகலித்

தது. அதைப் பிரதிபலிப்பது போல நீண்டதொரு பெருமூச்சு வெளிவந்தது.

"இன்றிலிருந்து சரியாகப் பதினைந்து தினங்கள்! நாம் கோலாலம்பூரில் குதூகலமாகச் சுற்றிக் கொண்டிருப்போம். இல்லையா சுதா?" என்று கொஞ்சுதலோடு கேட்டு அவளது இடையைத் தன் வலக்கரத்தால் சுற்றி வளைத்துக் கட்டியணைத்துக் கொண்டான் ரமணி.

ஆசை ததும்பும் கண்களோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்த சுதா, 'ஆமாம்' என்பதுபோல தலையை அசைத்துக் காட்டி அவனது தோள்மீது சாய்ந்து கொள்ள, அவளது தளிர்க்கரங்கள் துவண்டு அவனது கழுத்தைச் சுற்றிக் கொண்டன.

நீலக்கடலில் இருந்தபடி தலைதூக்கிப் பார்ப்பதுபோல ஜாலம் செய்து கொண்டிருந்த அந்திவேளைச் சூரியன் அவர்களுக்கு ஆனந்தமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த அடியோடு அதலபாதாளத்தில் மூழ்கியது. குதூகலமாக இருக்கவேண்டிய குஷியான ஜோடிகளைக் கும்மிருட்டிலே தவிக்க விடுவதா என்று முக்குளித்திருந்த முழுமதி, தன் முழுப் பிரகாசத்தையும் வீசிச் சுடர்விட ஆரம்பித்தது. வானத்தில் தோன்றிய மின்மினிகள் 'பார் அந்தப் பருவ ஜோடிகளை!' என்று ஒன்றுக்கொன்று கூறிக் கண் சிமிட்டிக் கொண்டன. 'கையளவு ஹிருதயத்துக்குள்ளே இவ்வளவு ஆசைகளையும் எப்படித்தான் மூடி மறைத்து வைத்துக் கொண்டிருந்தாயோ!' என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொள்வதுபோல இரு உள்ளங்கள் இருதயத்தோடு இருதயம் இடை வெளி சிறிதுகூட இல்லாமல் இறுக ஒன்றிக் கொண்டன! இன்பக் கடலிலே மூழ்கியிருக்கும் இரு உள்ளங்களையும் வீணாக உலுப்பி ஆட்டம் காண வைக்கக்கூடாதே என்று இளகி, நீலக்கடலிலே மிதந்த 'கர்நாடகா' ஆடாமல் அசையாமல் நிலை நீச்சலடிப்பது போல நீந்திக்கொண்டிருந்தது.

துப்பறியும் ராஜாமணி எல்லோருக்கும் உயர்தர வகுப்பு டிக்கட் எடுத்திருந்ததால் ஒவ்வொருவருக்கும் ஒரு தனி அறை கப்பலில் ஒதுக்கப்பட்டிருந்தது. வேலைக்காரி மங்கம்மா சுதாராணியின் பெட்டியைத் திறந்து அதிலிருந்த சாமான்களை வைக்கப்பட வேண்டிய இடத்தில் சீராக வைத்து ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தாள்.

ஆயுளிலேயே அது அவளுக்கு முதல் கப்பல் பிரயாணமாகையால் சித்தியான வைதேகி, கப்பல் முழுதையும் சுற்றிச் சுற்றி வந்து மேல் தளத்திற்கு வந்தாள். அந்த தளத்தின் இடது கோடியிலே கம்பிக் கிராதியில் சாய்ந்தபடி பட்டாபி எதையோ பார்த்து ரஸித்தபடி மெய்மறந்து இருப்பதைக் கண்டாள். அவனை வெகுவாகக் கவர்ந்திருக்கும் அற்புதக்காக்ஷி என்ன

வாக இருக்கும் என்று பார்க்க ஆசை கொண்டு அவனது கவனத்தைக் கவர்ந்திருக்கும் திசைப் பக்கம் திரும்பினாள். 'அட பாவி!' என்று அவளை அறியாமல் வார்த்தைகள் உதிர்ந்தன. அங்கே 'ஜில்'லென வீசும் தென்றல் காற்றில் 'ஜில்'லென விளங்குகின்ற ஒரு நடுத்தர ஸ்திரீ பட்டாபியையே இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவ்வளவுதான்! "பட்டாபி!" என்று உரக்கக் குரல் கொடுத்துக் கூப்பிட்டாள் வைதேகி.

தன் தாயின் குரலைக்கேட்டதும் கனவிலிருந்து விழித்தவன் போல பட்டாபி சுதாரித்துக் கொண்டான்.

வைதேகி அவன் அருகே வரும்போது இயற்கை அழகிலே லயித்து விட்டவன் போல, "ஆஹா!.. என்ன அற்புதமான காக்ஷி!...சந்திரப் பொன் ஒளியும் நீலக்கடல் அழகும் ஆஹா...!" என்று ஏதேதோ உளறிக் கொண்டிருப்பதைக் கேட்டாள்.

"ஆஹா! என்ன பசப்பு; எத்தகைய சாகஸம்! இதுகூட இல்லாவிட்டால் உன்னைச் சீந்துவார் யார்!... இங்கே பாருடா! இத்தனை நாழி உன் கண்களைக் கருவிக் கொண்டிருந்தது சந்திர ஒளியும் நீலக்கடலுமா அல்லது அதோ நிற்கிறளே ஒருத்தி. அவளா? ஏன்டா உன் புத்தி இப்படிப் போகிறது? எச்சபுத்தி இன்னுமா போகவில்லை!... போ கீழே" என்று அதட்டியபடி எரிந்து விழுந்தாள் வைதேகி.

"இந்த உலகத்திலே உனக்குத்தான் எதிலும் பற்றுதல் கிடையாது. என்னையும் உன்னைப் போலவே இருக்கச் சொல்லுகிருயா?" என்று முணுமுணுத்துக் கொண்டே கீழே சென்றான் பட்டாபி.

"அவனைக் குறைகூற என்ன இருக்கிறது? வயதுப் பெண் வலிய வந்து வலை வீசினால் வாலிப வயதுப் பையன் வசப்பட்டுப் போகமாட்டானா என்ன?" என்ற குரல்கேட்டு வைதேகி திரும்பினாள். எதிரே வந்து கொண்டிருந்த பட்டாபியின் முதுகிலே தமாஷாகத் தட்டி ஒரு 'ஷொட்டு'க் கொடுத்துவிட்டு தன்னை நோக்கிவரும் ராஜாமணியைப் பார்த்தாள்.

"செல்லம் கொடுத்து சீராட்டி, மனம்போல் திரியவிட்டு வளர்த்தபிறகு இப்போது ஒரே நாளில் திருத்திவிடப் பார்த்தால் முடிகிற காரியமா? பாலாமணியிடம் கொண்டிருந்த பைத்தியம் தெளிய வைக்க ஊரைவிட்டு ஊர் கிளம்பத் தீர்மானித்தீர்கள். ஆனால் பரத்தை மோகனுக்கு பல இடங்களிலும் பாலாமணி எதிர்ப்படுவாள் என்பதை மறந்து விட்டீர்களே!" என்று சிரித்தார் ராஜாமணி.

"என்ன? அங்கே நிற்பது பாலாமணியா!" என்று திடுக்கிட்டாள் வைதேகி.

''பாலாமணி இல்லே; அவளேப்போல இன்னெருத்தி! கொழும்பிலே சமீபத்தில் நடந்த சர்வதேச அழகுப்போட்டியில் பரிசு பெற்ற ஒரு மலாய் தேசச் சினிமா நடிகை!''

''நல்ல வேளை...பாலாமணியோ என்று பயந்து விட்டேன். ஆமாம், சுதாவை எங்கே காணும்?''

''அதோ பாருங்கள்!'' என்று வலது கோடி தளத்தைக் காட்டினர் ராஜாமணி. வைதேகி பார்த்தாள். அவளது முகம் மலர்ந்தது. ''பாவம்! சிறுசுகள்தானே! ஆசை இருக்காதா என்ன?'' என்று புன்னகை பூத்தாள்.

''அந்தக் காக்ஷி உங்களுக்கு மிகமிக மனோரம்யமானதாக இருந்தால் எட்ட நின்றபடியே பார்த்து மகிழுங்கள். கிட்ட மட்டிலும் நெருங்கி விடாதீர்கள்!...வெட்கப்பட்டு பிரிந்தோடிவிடப் போகிருர்கள்!'' என்று சிரித்துக் கொண்டே ராஜாமணி மேல் தளத்தை விட்டு இறங்கினர்.

கீழே சிறிய ஒரு ஹாலே அவர் கடந்தபோது அங்கே பேசிக் கொண்டிருந்த இருவர் பக்கம் திரும்பிப் பார்த்தார். அதில் ஒருவரை ஏற்கனவே தெரியும்; டாக்டர் சத்யம். மற்ருெருவன்...?

நடுத்தர வயதுடைய அவனேக் கவனித்தார் ராஜாமணி. அவன் அணிந்திருந்த ஆடைகள் அவன் ஒரு சோஷியலிஸ்ட்டாகவோ அல்லது கம்யூனிஸ்ட் தோழராகவோ இருக்கவேண்டும் என்பதைப் பிரதிபலித்துக் காட்டின. அத்தனை சுவாரஸ்யமாக அவர்கள் என்னதான் பேசுகிருர்கள், பார்ப்போமே என்று நெருங்கினர். யூகம் சரியாகப் போயிற்று! அவன் பொது உடமை கொள்கை பற்றி சண்டப் பிரசண்டம் செய்து கொண்டிருந்தான். அவனது பேச்சு சுவாரஸ்யமாக இருக்கவே, காலியாகக் கிடந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டார். வாலிபன் பிரமாதமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

''உயிர் விட்டு உழைப்பவன் ஒருவனுக்கவும், உண்டு அனுபவித்துத் திரிபவன் மற்ருெருவனுகவும் இருக்க வேண்டும் என்று விதித்தா இயற்கை மனிதனை சிருஷ்டித்திருக்கிறது? சொல்லுங்கள் டாக்டர்?'' என்று கேட்டுக் கொண்டிருந்தான் அந்த வாலிபன்.

டாக்டர் புன்னகை பூத்தார். ''மிஸ்டர் ஜகத்! இயற்கை அப்படி விதித்திருக்கிறதா இல்லையா என்பதெல்லாம் வேறு விஷயம். நம் நலன்களுக்காக நமக்குள்ளே நாம் இப்படி வகுத்துக் கொண்டிருக்கிறோம். தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையே பெரிய இடைவெளி காட்டி, முதலாளி என்பவன் மலே உச்சியில் கம்பீரமாக நின்று உலகத்து உன்னதங்களே ரஸிப்பவனுகவும், தொழிலாளி என்பவன் அடிபாதாளமான

மலை அடிவாரத்தில் இருந்தபடி அண்ணாந்து பாத்துப் பெரு மூச்சு விட்டு ஏங்கித் தவிப்பது போலவும் உபமானம் கூறினீர்களே, உள்ளபடியே அந்த இருவரில் யார் பத்திரமான அந்தஸ்தையும் ஆனந்தத்தையும் பெற்றிருக்கிறார்கள் தெரியுமா? ஜாக்கிரதை குறைந்தால் மலை உச்சியில் இருப்பவனின் கதி என்ன ஆகும் தெரியுமா? மேலும் ஒவ்வொரு நிமிஷமும் தனக்கு ஆபத்தை எதிர்பார்த்து கலங்குவதை நீங்கள் அறிய முடியாது. அடிவாரத்தில் இருப்பவன் முயற்சித்தால் முன்னேறலாம்; அதுவும் இல்லாவிட்டால் சீரான ஒரே நிலையில் இருக்கலாம். மலை உச்சியில் இருப்பவனுக்கு உள்ளது போன்ற ஆபத்தும் மனக் கலக்கமும் இல்லை! உள்ளபடியே சொல்லுகிறேன் ஜகத்! நான் எத்தனையோ செல்வந்தர்களுடன் பழகிவருகிறேன். அவர்களும் என்னிடம் மனம் விட்டுப் பேசியிருக்கிறார்கள். அவர்களது பேச்சிலிருந்து சில உண்மைகளைக் கூறினால் முகம் சிணுங்கினாலும் சிணுங்குவீர்கள். அவர்கள் யாரும் பொது உடமைக் கொள்கைக்குக் குறுக்கே நிற்கவில்லை; தொழிலாளிகளே அதை வெறுக்கிறார்கள்! எந்தத் திட்டம், யாருக்கு சுவர்க்க சுகம் தரும் என்று பிரசாரம் செய்கிறார்களோ, அவர்களே அதற்கு ஆதரவு தராத போது, கம்யூனிஸம் எப்படி வளரப் போகிறது!"

டாக்டர் சத்யம் தனது பேச்சை முடிக்கக் கூட இல்லை. குறுக்கே பாய்ந்தான் ஜகத். "உங்கள் அபிப்பிராயம் சுத்த அபத்தம். தொழிலாளிகள் ஆதரிக்கவில்லை என்று யார் சொன்னது? வாழ்வில் தொழிலாளிகளுக்கு இருக்கும் அளவு ஆனந்தம் கூட முதலாளிமார்களுக்கு இல்லை என்கிறீர்கள். அவர்கள் வாழ்க்கை கசப்பு நிறைந்ததா அல்ல கனிரஸம் ததும்பியதா என்பதற்கு இந்தக் கட்பலிலேயே உதாரணம் காட்டுவேன்..." என்று கூறி சிறிது நிறுத்தி டாக்டரை ஏறிட்டுப் பார்த்தான் ஜகத்.

'சொல்லேன், நானும் தெரிந்து கொள்ளுகிறேன்' என்பது போல ஜகத்தைப் பார்த்தார் டாக்டர்.

பரபரப்போடு தன் சட்டைப் பையிலிருந்த நீளமான காகிதம் ஒன்றை எடுத்துப் பிரித்து டாக்டரிடம் நீட்டினான் ஜகத். "இதோ பார்த்தீர்களா? இதில் எத்தனை கையெழுத்தைப் பார்க்கிறீர்கள்?...இதில் கையொப்பமிட்டிருப்பவர்களெல்லாம் யார் தெரியுமா? அவ்வளவு பேரும் தொழிலாளிகள்! நாளுக்கு நாள் நைந்து போகும் தேயிலைத் தோட்டத் தொழிலாளத் தோழர்கள்! நாளெல்லாம் பாடுபட்டும் நாழிக் கஞ்சிக்குக்கூட ஊதியம் கிடைக்கப் பெறாதவர்கள்! ஒருத்தி அடைய வேண்டிய சுக போகத்திற்காக ஓட்டி உலருகிற ஓராயிரம் தியாகிகள்!— இவர்கள் வேறொன்றும் பேராசைப்பட்டு கேட்கவில்லை. வயிறாரச் சோறு! உடலில் உயிரை ஓட்டவைத்துக்கொள்ள கைநிறைந்த கவளம்! அது அவர்களுக்குக் கிடைத்ததா? இதே போல பல தரம் கோரிக்கை செய்து கையெழுத்திட்டு அனுப்பியும் கொஞ்ச

மாவது ஈவிரக்கம் காட்டினார்களா? இல்லை...கொஞ்சம்கூட இல்லை! அப்படிப்பட்ட இரக்கமற்றவர்கள் இருப்பதைக் காட்டிலும் இல்லாமலேயே ஒழித்து விட்டால்?

''யாரை?'' என்று திடுக்கிட்டுக் கேட்டார் டாக்டர்.

''யாரையா?...கோடீஸ்வரி சுதாராணியை! உள்ளம் துடித்து உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தொழிலாளிகள் வெதும்பிக் கிடக்க, அவர்களது குறையைக் கேட்க செவிகூடச் சாயாமல் உல்லாச யாத்திரை கிளம்பியிருக்கும் உல்லாஸினி சுதாராணியை! அவளிடம் குவிந்திருக்கும் செல்வம் எப்படி வந்தது? மலாய்நாட்டு ரப்பர் தோட்டத் தொழிலாளிகள் உடலை உருக்கிச் சிந்திய வியர்வை! இலங்கைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள் சிந்திய ரத்தம்! ஒருவரா இருவரா? ஓராயிரம் பேர்கள்! அத்தனை பேருடைய சுகதுக்கமும் ஒருத்தியின் கையிலும் கருணைப் 'பார்வையிலும் இருக்கிறதென்றால், அதுவும் அவளால் தொழிலாளிகளின் வாழ்விற்கு லவலேசமும் கருணைகாட்ட முடியவில்லை யென்றால், தொழிலாளிகள் கொதித்தெழாமல் இருந்து விடுவார்களா?... அதற்கு ஒரு முடிவுகாண ஒருவனாவது உயிரைத் திரணமாக மதித்து முன் வராமல் போவானா?''

''அந்த ஒருவன் நீங்களாக்கும்! உழைப்பாளிகளுக்கு உங்களால் விமோசனம் ஏற்படப் போகிறதாக்கும்!''

''ஏன் ஆகாது?'' என்று கொதித்தெழுந்தான் ஜகத். ''வெறி பிடித்த நாய்களைப்போல ஒவ்வொருவராகச் சுட்டு வீழ்த்தினால்?'' என்று ஆக்ரோஷமாய்க் கேட்டான். அவனுக்கிருந்த ஆவேசத்தில் தன்னைத் தாக்கக்கூடத் துணிந்து விடுவானோ என்று பயந்தவராய் டாக்டர் மௌனமாக இருந்தார்.

அதுவரை பேச்சிலே கலந்து கொள்ளாமல் இருந்த ராஜாமணி ஜகத்தைத் திரும்பிப் பார்த்தார். ''ஜகத்! டாக்டர் பதில் கூறமாட்டார். நான் கூறுகிறேன். முதலாளிகளை அடியோடு விண்ணுலகிற்கு அனுப்பவேண்டும்! ஏன்? தொழிலாளிகள் முன்னேற்றமடைய!... அந்த நிலைவந்தால் உன்னைப் போன்றவர்கள் என்ன ஆவது காம்ரேட்!'' என்று கிண்டலாகக் கேட்டார்

கேள்வியின் அர்த்தம் புரியாமல் விழித்தான் ஜகத்.

''நான் கேட்பது உனக்கு விளங்கா விட்டால் விரிவாகச் சொல்லுகிறேன் ஜகத்! 'தொழிலாளிகளே! எழுங்கள்! வீறுகொண்டு எழுங்கள்! முதலாளிகளை ஒழித்துக்கட்டு!' என்றெல்லாம் காரசாரமாகப் பேசிவிட்டு, அவர்களிடமே காசு சுரண்டி வயிறு வளர்த்து, இப்படி 'ஜம்' மென்று பணக்காரனுக்குக் கிட்டாத பெரும் உல்லாசப் பிரயாணத்தை அனுபவிக்கிறீர்களே!... இப்போது நீர் செலவிடும் இந்தக்காசு ஏது? நெற்றிவியர்வையை

நீ நிலத்திலே சிந்தியதால் கிடைத்த காசா? கையும் மெய்யும் சோர்ந்து போகுமளவு பாடுபட்டுச் சேர்த்த காசா? இது எந்த ரகத்தைச் சேர்ந்தது?''

''என் உதிரத்தையும் உயிரையும் சிந்தத் தயாராயிருப்பதனால்...!''

''கொலை செய்யக்கூலி! அப்படித்தானே ஜகத்? உங்கள் திட்டம் அழிவுப்பாதைக்கு ஆணிவேர்! அழிவிலே ஆனந்தப் படுகிறவர்கள் நீங்கள்!''

கொஞ்சம் நிறுத்துங்கள். அழிவு என்று கேவலமாகக் குறிப்பிடுகிறீர்களே, அது ஏற்படாமல் உலகத்திலே எது புது உருக்கொள்கிறது? பழைய வீட்டை இடித்து மண்ணோடு மண் ஆக்கி மட்டம் செய்யாமல் புதுவீடு கட்டிவிடுவீர்களா?''

''பழைய வீடு தனக்குக் குறைந்தபடி சௌகரியத்தைத் தருகிற வரையில் அதை யாரும் இடித்துத் தள்ளுவதில்லை. வெயிலும் மழைநீரும் உள்ளே வருகிறதென்றால் ஓட்டைப் பிரித்து நெருக்கி மேய்வார்களே தவிர, அதைத் தாங்கி நிற்கும் சுவற்றை இடிப்பதில்லை!''

தோள்களை ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டான் ஜகத். அவன் கண்களில் சிவப்பேறியது. என் கொள்கைகளை எதிர்க்கும் நீ யார் என்பதுபோல ராஜாமணியை முறைத்துப் பார்த்துக் கொண்டு நின்றான். ''நீங்கள் எந்தத் தோட்டத்திற்கு முதலாளி என்பதை அறியலாமா?'' என்று கேட்டான் ராஜாமணியிடம்.

'உன் யூகம் அதுவானால் நீ பைத்தியக்காரன்!' என்பது போலச் சிரித்தார் ராஜாமணி. "தோழரே! நான் முதலாளி அல்ல. இந்தப் பிரம்மாண்டமான உலகிலே என்னுடையது என்று சொல்லிக்கொள்ள கையளவு பூமிகூட எனக்குச் சொந்தமில்லை. ஆனாலும் நான் ஆனந்தமாக வாழ்கிறேன்!''

''நில மில்லாவிட்டால் என்ன? கை நிறையக் காசு வைத்திருப்பீர்கள்!'' என்று வெகு அலக்ஷியமாகக் கூறினான் ஜகத்.

''அதுகூட என்னிடமில்லை; இருந்தும் எப்படி வாழ்கிறேன் என்று கேட்கிறாயா? எனக்கு மண்டை நிறைய மூளை இருக்கிறது. அது தேடித் தருகிறதப்பா சுகமெல்லாம்!'' என்று சொல்லி ராஜாமணி சிரித்தார்.

மண்டையிலே மூளை! அது தேடித் தருகிறதாம்! அப்படியானால் முதலாளிகளின் தாஸானு தாஸனாக இருப்பான்!— ஜகத்தின் மூளை இப்படித்திரும்பியது.

இந்த வல்லாள் கண்டனுக்கு ராஜாமணியைப்போல விட்டுக்

கொடாக்கண்டன்தான் ஏற்றவன் என்று நினைத்து வேடிக்கைக் பார்த்துக் கொண்டிருந்தார் டாக்டர்.

ராஜாமணிக்கு ஜகத்தை அதோடு விட்டுச் செல்ல மன மில்லை. "ஜகத்! என்னடா இவன் இப்படிப் பேசுகிறானே என்று என்மீது நீ வெறுப்படையக்கூடாது. நானும் ஒரு தொழி லாளிதான். என் மூளையைக் கொண்டு நான் பிழைக்கிறேன். ஒரு சாதாரணச் சுமை கூலிக்காரனையும் விட அதிக அலைச்சல் அலைகிறேன். சுற்றுத வேளை இல்லை. அலையாத இடமில்லை. நல்லவர்களிடையேயும் பழகுகிறேன். உன்னைப் போன்ற பயங் கரவாதிகளிடையேயும் நடமாடுகிறேன்...அப்படி என்ன தொழில் என்கிறாயா?...துப்பறிபவன்!" என்று சொல்லி எழுந் தார் ராஜாமணி.

பத்தடி தூரம் நகர்ந்திருக்கமாட்டார். "ஸார்!" என்று கூப்பிட்டுக்கொண்டே வெகு வேகமாக வந்தாள் சுதாராணி. அவள் குரல் பதட்டத்தோடு காணப்பட்டது. "என்ன சுதா?" என்று கேட்டு அவளது முகத்தைப் பார்த்தார் ராஜாமணி.

கலவரப் பட்டவள்போல காணப்பட்ட சுதா, "எனக்கு எங்குமே நிம்மதியில்லை. பிணமாகி நான் சுடுகாட்டிற்குப் போனாலும்கூட அங்கும் நிம்மதியோடு என் சவத்தை எரியவிட மாட்டாள் போலிருக்கிறது. என் வாழ்வு இனி பாழ்தானா?" என்று கேட்டுப் பதறினாள். அவளது கண்களில் நீர் ததும்பிவர ஆரம்பித்தது.

"சற்று நேரத்திற்கு முன்புவரை நீங்கள் குதூகலமாய் இருந் தீர்களே! அதற்குள் என்ன சுதா நடந்துவிட்டது?" என்று கலங்கினார் ராஜாமணி.

பரபரக்க விழித்த சுதா, "இங்கும் அவள் வந்து விட்டாள்!" என்றாள்.

"யார்?...ராகினியா?...இங்கேயா?...எப்படித் தெரிந்தது அவளுக்கு?" என்று சரமாரியாகக் கேட்ட ராஜாமணி, "அவள் இப்போது எங்கே இருக்கிறாள் சுதா?" என்று ஆத்திரமாகக் கேட்டார்.

"அதோ...அதோ பாருங்கள்!...எமன்போல இங்கேயும் என்னைப் பின் தொடர்ந்து வருகிறாள்!" என்று சொல்லிக் கொண்டே, பேயைக் கண்டோடும் பயந்தவளைப் போல வேறு பக்கமாக சுதா ஓடினாள்.

தலைநிமிர்ந்து மேல்தளத்தை அண்ணாந்து பார்த்தார் ராஜா மணி. வெண்மையான பற்கள் வெளியே தெரியும்படி இளித்துக் கொண்டே மேல்தளத்தை விட்டுக் கீழ்ப்பக்கம் வந்து கொண்டி ருந்தாள் ராகினி.

13

'கர்நாடகா' கப்பலில் சுதாவைப் பின்தொடர்ந்து ராகினி வருவதற்கு வழியேயில்லை என்று தீர்மான மாக நினைத்திருந்த ராஜாமணிக்கு அவளைக் கண்டதும் தூக்கிவாரிப் போட்டது. இன்ன கப்பலில்தான் சுதாராணி மலாயா புறப்படுகிறுள் என்பதை மூடு மந்திரமாக வைத்திருந்தும் அது எப்படி ராகினிக்குத் தெரிந்தது என்பதே புரியவில்லை. அதை அவளுக்கு யார் கூறியிருக்க முடியும் என்று தீவிரமாகச் சிந்திப்பதில் அவர் முனைந்தார். மலாயாப் பிரயாண மும், புறப்பட இருந்த தேதியும் மூவருக்கு மட்டிலுமே தெரியும். சுதாராணி, ரமணி, ராஜாமணி இந்த மூவரில் யாராவது ஒருவர் சொல்லி யிருந்தாலொழிய ராகினிக்குத் தெரிய இடமில்லை. அப்படியானல் யார் சொல்லி யிருக்கக் கூடும்?

சுதாராணி சொல்லியிருப்பாளா?—நிச்சயமாக அவள் கூறி யிருக்க மாட்டாள். சித்தியிடமே அவள் உண்மையை மறைத் தவளாயிற்றே! ரமணி?—அவன் உளறியிருக்கலாம்!

ரமணியை சந்தேகித்த போது ராஜாமணிக்கு சட்டென ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. சிகிரியா, கதிர்காமம் ஆகிய இடங்களுக்குச் செல்லுவதாக மூட்டை கட்டிய அன்றைய இரவை நினைத்துக் கொண்டார் ராஜாமணி. சுதாவோடு பேசி விட்டுத் திரும்பினுரல்லவா? அப்போது ராகினியின் அறையி லிருந்து ரமணி வெளிவருவதைக் கண்டார். ஜன்ம சத்ருவாகக் கருதப்படும் ராகினியின் அறையிலே ரமணிக்கு என்ன வேலை? அவன் எதற்காக அவளைச் சந்திக்க வேண்டும்? விட்டகுறை தொட்டகுறை என்பார்களே, அந்தச் சபல புத்தி ராகினியிடம் இன்னமும் ரமணிக்கு இருந்து கொண்டிருக்கிறதா?

அந்தச் சந்திப்பில் ஏதோ முக்யத்துவம் இருப்பதாகக் [illegible]க்குள் [illegible] ஞர் ராஜாமணி. ராகினி மூலமே இந்த உண்மையைக் கிர[illegible] என்ட வேண்டும் என்று எண்ணிய போது, "நமஸ்காரம் ஸார்!" என[illegible]ங்க இரு கைகளையும் சேர்த்துக் கூப்பியபடி ராகினி அவர் எதி[illegible] வந்து நின்ருள்.

"என்னை இங்கே காண[illegible]உங்களுக்குத் திகைப்பாயிருக் கிறதல்லவா!" என்ருள் சிரித்துக் கொண்டே.

"நான் திடுக்கிடமட்டுமல்ல, வருத்தப்படக்கூடச் செய்கி றேன்!" என்ருர் ராஜாமணி.

"வருத்தமா? ஏன்? சுதாவின் சந்தோஷத்திற்குக் குறுக்கே நிற்க இங்கேயும் நான் வந்து தொலைந்து விட்டேனே என்ரு?"

"இல்லை... உன்னை நினைத்து உனக்காக வருத்தப்படுகி றேன்!"

"அடடே! இந்த அக்கறை உங்களுக்கு எப்போதிருந்து ஏற்பட்டிருக்கிறது ஸார்?"

"விதி உன்னைத் தவருன பாதையில் இட்டு வந்திருக்கிறது!"

"என்னையில்லை; சுதாராணியை என்று சொல்லுங்கள்! நான் சரியான ராஜபாட்டையிலேதான் நடைபோடுகிறேன். நான் யாருக்கும் துரோகம் செய்யவில்லை. யாருடைய நல் வாழ்வையும் கெடுத்து நான் சுவீகரித்துக் கொள்ளவில்லை. அப்படியிருக்க விதி என்னோடு ஏன் விளையாட வரப்போகிறது! சுதாவை விட அது என்ன அவ்வளவு விவஸ்தை கெட்டதா?

"இன்னும் உனக்குப் பழி வாங்கும் மனப்பான்மை போகவில்லையே ராகினி!"

"எப்படிப் போகும்? சுதா எனக்குச் செய்த வஞ்சகம் லேசானதா?"

"அது தீர்ந்து போன விஷயம்."

"என் மட்டிலும் அது தீர்ந்து போனதாக இல்லை!"

"நீ வீணுக உன்னைக் கெடுத்துக் கொள்கிருய்! வீடு, வாசல், வாழ்க்கை யாவற்றையும் விட்டு அழிவுப் பாதையில் நீ பிரயாணத்தை மேற்கொண்டிருக்கிருய்!"

"நானு?...இல்லை...இல்லவேயில்லை...! மரண யாத்திரை செய்து கொண்டிருப்பவள் சுதாராணி! அன்னியவளின் ஆசை நாயகனை அபகரித்துக் கொண்ட கோடீஸ்வரி!"

கலட "அந்த யாத்திரைக்கு உன் மூலம் ஒரு முடிவு ஏற்படப் றதாக்கும்?"

என் "அதை நான் எப்படிச் சொல்ல முடியும்!"

"உன் வயதிற்குத் தகுந்த பேச்சில்லை இது!"

"உங்கள் அறிவுக்குத் தகுந்த போதனை இல்லை இது!"

"ராகினி!" என்று ஒரு அதட்டுப் போட்டார் ராஜாமணி. "இவ்வளவு துணிச்சல் உனக்கு எங்கிருந்து வந்தது என்று எனக்குத் தெரியும். உன்னை யாரோ தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிருர்கள். அல்லது மனதிலே நீ ஏதோ ஒரு சதியை உருவகப்படுத்திக் கொண்டு அதை நிறைவேற்றப் பேயாட்டம் ஆடுகிருய்! உனக்கு உதவி செய்பவர்கள், ஒன்று மதுசூதனராக இருக்கவேண்டும்; அல்லது ரமணியாகவே இருக்கலாம்!"

"யாரையும் என்னோடு இணைக்கவேண்டாம். பிறரது கைப் பொம்மையாக இருந்து ஆட்டி வைக்கப்படுகிற ஆட்டத்திற் கெல்லாம் ஆடுவதற்கு நான் சிறு குழந்தையுமல்ல! குறிப்பாகச்

சொல்லுகிறேன்...! நானும் ரமணியும் இப்போது கீரியும் பாம்பும் போல இருக்கிறோம்.''

''அந்த அற்புதமான உறவிலேதான நீயும் ரமணியும் வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் தனித்து சந்தித்துச் சரசமாடி வருகிறீர்களாக்கும்!'' என்ன ஏளனமாகக்கூறி அவளைப் பார்த்தார் ராஜாமணி.

''அபாண்டம்! அத்தனையும் பொய்! நான் அவரைச் சந்தித்ததே இல்லை. ஒரு வார்த்தையேனும் பேசியதும் இல்லை. பேச நான் விரும்பவும் இல்லை!''

''ராகினி! நான் தூங்கிக் கொண்டிருக்கவில்லை. திறந்த இமைகள் திறந்தபடி பரக்க விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். என் முகத்தை நேர் நிமிர்ந்து பார்த்துக்கூறு. நீ ரமணியைத் தனிமையில் சந்திக்கவே இல்லையா?''—ராஜாமணியின் இந்தக் கேள்வியிலே கடுமை நிறைந்திருந்தது.

''நான் சந்தித்ததேயில்லை!'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினாள் ராகினி.

''பொய்!...சுத்த பொய்! நினைவு படுத்திப்பார் ராகினி! நீ சந்தித்தாய்!...இல்லை என்று மறுபடியும் சொல்லாதே! நான் உனக்கு எப்போது என்று சொல்லட்டுமா?...சுதா சிக்ரியா போன்ற இடங்களுக்குப் பிரயாணப்பட்டபோது, அதற்கு முந்திய இரவு உன் அறைக்குள்ளிருந்து ரமணி வெளிவருவதைப் பார்த்தேன். அதைக்கண்ட இந்த எனது கண்கள் குருடாக இருக்கிறதா?''

ராகினியின் முகம் மின்னல்போல ஒரு மாறுதலடைந்து மீண்டும் பழைய சுபாவத்திற்கு வந்தது. பிறகு கலகலவென்று சிரித்துவிட்டு, ''நான் இல்லாத சமயத்தில் என் அறைக்குள்ளே திருடனைப்போல நுழையவும் அவர் கற்றிருக்கிறார் என்பது உங்கள் மூலம் எனக்கு இப்போதுதான் தெரிகிறது!...நீங்கள் குறிப்பிடுகிற நேரம் சுமார் பத்து மணி இருக்காதல்லவா?''

''ஆமாம்!''

''அந்த நேரத்தில் நான் என் அறையிலே இல்லை. நான் வைதேகியோடு கீழ் ஹாலில் பேசிக்கொண்டிருந்தேன். உண்மையா பொய்யா என்பதைச் சித்தியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.''

''ரமணி உன் அறைக்கு வந்த சமயம் நீ அங்கு இல்லவேயில்லை என்கிறாயா?''

''நான் அங்கே இருந்தேன் என்பதை உங்களால் நிச்சயப்படுத்திக் கூறமுடியுமா?''

ராஜாமணி பதில் சொல்லத் தயங்கினர். ஆமாம், அதை எப்படித் தீர்மானமாக அவரால் சொல்ல முடியும்? ராகினியின் அறையை விட்டு ரமணி வெளிவந்ததைத்தான் அவர் பார்த்தார். உள்ளே ராகினி இருந்தாளா இல்லையா என்பதை அறிந்து கொள்ள எட்டிப் பார்த்தாரா?—இல்லை! அப்படியிருக்க அவளும் இருந்தாள் என்பதைப்பற்றி எப்படி நிச்சயப்படுத்திக் கூறமுடியும்?

''ராகினி! ரமணி உன் அறைக்கு வந்த சமயம் நீ இல்லை என்பதை ஓரளவு ஒப்புக் கொள்கிறேன். ஆனல் மற்ஒரு சந்தேகத்தை நீ தெளிவு படுத்தவேண்டி யிருக்கிறது. ரமணி உன் அறைக்கு வரக்காரணம்?''

''உங்களால் யூகித்துப் பார்க்க முடியவில்லையா?...அகால வேளையில் திருடனைப்போல ஒருவர் இருக்குமிடத்திற்கு ஒரு பரம வைரி ஏன் வருவான் என்பது உங்களுக்குப் புரியவில்லையா?... துப்பறியும் ஸார்! சுதாராணியைக் கொன்று தீர்க்க நான் சமய சந்தர்ப்பம் பார்த்துச் சுற்றிக் கொண்டிருக்கிறேன் என்பதாக நீங்கள் கருதுகிறீர்கள். உண்மையை உள்ளபடி கூறட்டுமா? சுதாராணியின் தூண்டுதலின் பேரில் என் உயிரை வாங்க ரமணிதான் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கிருர். உண்டா இல்லையா என்பதை உங்களது உருண்டை விழிகளை ஊடுருவ விட்டுப் பாருங்கள்!''

"ஆகக் கூடி உன் உயிருக்கும் ஆபத்து காத்திருக்கிறது என்பது உனக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கிறதல்லவா?''

''ஆமாம்!...நிச்சயமாக எனக்குத் தெரியும்!''

"அப்படி இருக்கும்போது அதற்குத் தயாராக இருக்க நீ துணிவு கொண்டுள்ளதன் தாத்பர்யம்?''

"என் வாழ்வைக் கவர்ந்து கொண்டவர்கள் என் உயிரையும் அபகரித்துக் கொள்ளட்டும் என்றுதான் துணிந்து இருக்கிறேன்.''

"உனக்குச் சித்தம் கலங்கி விட்டாதா ராகினி? உன் உயிரைக் சூறையிடுவதில் என்ன ஆத்மதிருப்தி உனக்கு இருக்கிறது என்பது விளங்கவில்லையே!''

''உங்களுக்கு விளங்காது!...சுதாவை வாழவிடக் கூடாது. அதுதான் என் தீர்மானம்! என் ஆசை! தன் ஆசைக்குகந்தவனைப் பறி கொடுத்துவிட்ட எந்த ஒரு பெண்ணும் இதையே தான் விரும்புவாள்!...ரமணி என்னைக் கொன்று விடுவாரோ என்பதை நினைத்து நான் பயப்படவில்லை. என் ஆத்ம சுத்தியை நாசம் செய்தவன் என் ஆருயிரையும் துவம்சம் செய்யட்டுமே! என்னைக் கொன்று அவன் தப்பி விடுவானு? தூக்குமேடை அவனுக்காகக் காத்திருக்காதா?...கயிற்று நுனியிலே அவன் ஊச

லாடிய பிறகு சுதாவின் வாழ்வு சூனியமடையாதா?...அப்போது அவர்களது ஆனந்த வாழ்வு எங்கே போகும்?''

"சுதாவை நீ வாழவிட விரும்பவில்லை!''

''ஆமாம் ! சந்தேகமில்லாமல்...!''

''விபரீத வழிகளில் ஈடுபடாமல் இருக்கும்படி நான் ரமணியை எச்சரிக்கை செய்து விட்டால்...?''

''என் கைத்துப்பாக்கி அவருக்குச் சத்ருவாக மாறும். சுதாராணி எவனுடன் வாழ்ந்தால் சுகபோகத்தை அனுபவிக்கலாம் என்று நினைத்தாளோ, அது கிட்டாததாகச் செய்து விடுவதுதான் என் எண்ணம். துணிவும் கூட ! அவர்கள் இருவரும் சேர்ந்து வாழக் கூடாது ! வாழவிடவும் போவதில்லை!''

''ஓஹோ ! அப்படியா!'' என்று தலையை ஆட்டிக் கொண்டார் ராஜாமணி. அவளது பேச்சின் தரம் ராஜாமணிக்கு ஆத்திரத்தைத் தூண்டவில்லை. அவளது பைத்தியக்கார எண்ணங்களுக்காகப் பச்சாத்தாபப்பட்டார்.

''எதை என்னிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்பினீர்களோ அதையெல்லாம் அநேகமாக அறிந்து கொண்டு விட்டீர்கள் என்று நினைக்கிறேன். நான் போகிறேன்!'' என்று சொல்லிக் கொண்டே 'விர்'ரென வெகு வேகமாக அந்த இடத்தை விட்டு அகன்றுள் ராகினி.

அவள் போகும் திசையையே வெறிச்சிட்டுப் பார்த்துக் கொண்டு நின்ருர் ராஜாமணி. யாரோ பின்னுலிருந்து தோள்களைப் பிடித்து உலுப்பவே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார் அவர்.

''என்ன மிஸ்டர் ராஜாமணி ! சௌக்கியமா?'' கேட்டபடி சிரித்துக் கொண்டு நின்ருர், கப்பல் கர்நாடகாவின் காப்டனை கேதாரி.

''நீங்களா ! யாரோ என்று பயந்து விட்டேன்!'' என்று கூறிக் கொண்டே அவரது கைகளை இறுகப் பற்றிக் குலுக்கினுர் ராஜாமணி.

''ரொம்ப நேரமாக ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். உங்கள் சிநேகிதி ரொம்பவும் முறைத்துக் கொண்டு போகிருளே!'' என்று கேட்டு அவரது முகத்தைப் பார்த்தார் காப்டன் கேதாரி.

''எத்தனையோ பேர்கள் என்னைப் பார்த்து முறைக்கிருர்கள். அவர்களிலே இவள் ஒருத்தி!'' என்று அனுயாசமாகக் கூறிய ராஜாமணி, ''கொலைக்கு அஞ்சாத கொலைகாரர்கள் கூட

எனக்கு இவ்வளவு தொல்லைகள் கொடுத்தது கிடையாது. இவள் என்னை ஓரேயடியாக குழப்பத்தில் சிக்க வைக்கிருள்!'' என்று கூறினர்.

''ஏதாவது கொலை செய்துவிட்டு இந்தக் கப்பலிலே கம்பி நீட்டப் பார்க்கிருளா!'' என்று வியப்போடு கேட்டார் கேதாரி.

''அப்படியிருந்தால் என் காரியம் எவ்வளவோ சுலபமாயிற்றே! கொலை செய்து விடுவேன் என்று பயமுறுத்துகிருள்; ஆனல் சட்டு புட்டென்று அதைச் செய்யவும் இல்லை! சுட்டு விடுவேன் என்று துப்பாக்கியைக் காட்டுகிருள்; 'பட் பட்' என்று சுடவும் மாட்டேன் என்கிருள்! தீர்ந்த பாடும் இல்லை; தீராத பாடும் இல்லை! வெறும் பயமுறுத்தல் என்று அஜாக்கிரதையாகவும் இருக்க முடியவில்லை; செய்தாலும் செய்வாள் என்று நம்பி அதற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளவும் முடியவில்லை, என்னையே தடுமாற வைக்கிருள்!''

''என்னைப் போன்ற நிலையில் நீங்களும் தத்தளித்துக் கொண்டிருக்கிறீர்களாக்கும்!'' என்ருர் காப்டன்.

''உங்கள் நிலைக்கும் என் நிலைக்கும் ஏகப்பட்ட வித்யாசமிருக்கிறது. கப்பல் கவிழாமல் கொண்டு செலுத்தவேண்டியது உங்கள் கடமை! அதுவும் புயலும் கொந்தளிப்பும் இல்லாவிட்டால் உங்கள் பாடு மகா குஷி! என்னைப்போல அவஸ்தை உங்களுக்கு ஏன் : வரப்போகிறது!'' என்று சொல்லி கண் சிமிட்டினர் ராஜாமணி.

''இதுநாள்வரை அவஸ்தை எதுவும் இல்லாமல் இருந்தேன். ஆனல் இப்போது முளைத்திருக்கிறது. உங்களிடம் சொல்லுவதற்கென்ன! மறைத்து வைக்கவும் நான் விரும்பவில்லை. யாரோ ஒரு பயங்கரவாதி இந்தக் கப்பலிலே பிரயாணம் செய்வதாக இலங்கை இரகசியப் போலீஸ் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறது. கொள்ளை கொலைகளுக்கு அஞ்சாதவனும் அவன்! அவன் ஒரு கொலைகாரனக மட்டிலும் இருந்தால் நான் இவ்வளவு கவலைப்பட மாட்டேன், அவனே பயங்கரப் புரட்சிக்காரன். கையிலே ஏதாவது வெடி மருந்து கொண்டுவந்திருந்து அதன் மூலம் கப்பலையே கவிழ்த்துவிட்டால் என்ன செய்வது என்ற பீதிதான் அதிகமாக என்னை வாட்டி எடுக்கிறது. செய்தி கிடைத்ததிலிருந்து கண்களைப் பரக்க விழித்துக்கொண்டு கப்பலையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறேன். குறிப்பிட்ட ஆசாமி யாராக இருக்கும் என்பதை என்னல் சிறிதுகூட நிர்ணயித்துக் கொள்ள முடியவில்லை!''

''செய்தி கொடுத்தவர்கள் அவனது பெயரைத் தெரிவிக்கவில்லையா?'' என்று கேட்டார் ராஜாமணி.

உதட்டைப் பிதுக்கினார் காப்டன். "பெயரைக் குறிப்பிடா விட்டாலும் பாதகமில்லையே! அங்க அடையாளங்கள் கூட அவர்களுக்குத் தெரியாதாம்! காரணம், அவன் இலங்கையைச் சேர்ந்தவனில்லை! மலாய் நாட்டிலே இருப்பவனாம். கள்ளத் தோணியில் இலங்கைக்கு வந்த அவன், சிறிது நாட்களாய் காணாததால் 'கர்நாடகா' கப்பலில்தான் மாறு பெயரோடு புறப்பட்டிருக்கவேண்டும் என்பது அவர்களது யூகமோ என்னவோ! எப்படியானால் என்ன! மூன்று நாளாக எனக்குத் தூக்கமேயில்லை. யாரைச் சந்தேகிப்பது, யாரைச் சந்தேகப் படாமல் இருப்பது என்பதே எனக்குப் புரியவில்லை! மிஸ்டர் ராஜாமணி! நீங்கள் யாரையும் எளிதில் சிநேகம் பிடித்து, கல கலப்பாகப் பழகி ஆசாமிகளையும் ஆழ்ந்து நோட்டம் பார்ப்பீர் களே, இந்தக் கப்பலிலே பிரயாணம் செய்பவர்களில் யார் மீதாவது உங்களுக்கு நான் சொன்ன வகையில் சந்தேகம் தட்டுப்படுகிறதா?"

இடது கையால் நெற்றியைத் தடவியபடி சிறிது யோசித்தார் ராஜாமணி. அவரது மனக்கண் முன்னே ஜகத் காக்ஷி யளித் தான். அவளது காரசாரமான ஆவேசப் பேச்சு அவரது காது களிலே ரீங்கார மிட்டது. காப்டன் குறிப்பிடும் ஆசாமி அவனாக இருக்குமா?"

காப்டனிடம் 'சட்'டென்று அவன் பெயரைக் குறிப்பிட வில்லை ராஜாமணி, "காப்டன்! இந்தக் கப்பலிலே யார் யார் பிரயாணம் செய்கிறார்கள் என்பதற்கு ஒரு ஜாபிதா உங்களிடம் இருக்குமே. அதை எனக்குக் காண்பிப்பீர்களா?" என்று கேட் டார் அவர்.

"ஓ!... பேஷாக!...இந்தாருங்கள்" என்று சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து ராஜாமணியிடம் கொடுத்தார் காப்டன்.

வெகு ஆவலோடு அந்த ஜாபிதாவை வாசித்தார் ராஜாமணி. குறிப்பாக அவரது கவனம் இலங்கையிலிருந்து யார் யார் எங்கு புறப்பட்டிருக்கிறார்கள், என்பதிலேயே ஆழ்ந்தது. சுதாராணி, வைதேகி, பட்டாபி மங்கம்மா, ராஜாமணி, ராகினி, ஷைலோ...

"இது யார் இந்த ஷைலோ?"—தனக்குள்ளே கேட்டுக் கொண்டார் ராஜாமணி. ஆம்! பட்டாபி கண் கொட்டாது பார்த்த பர்மிய அழகியாக இருக்கலாமோ!...மேலும் ஜாபிதா வைத் தொடர்ந்து கவனித்தார்.

டாக்டர் சத்யம், ஜகத், ரூப்சந்த்...

இந்த ரூப்சந்த் யார்?.. ஓ! வயது இருபதுதானா!..ஏதாவது மாணவனாக இருப்பான்...!

மேலும் தொடர்ந்து வாசித்தார். அவர் முகம் சட்டென கறுத்தது. அந்த ஜாபிதாவில் சுதாவின் இலங்கை ஏஜண்டான தாஸின் பெயரும் காணப்பட்டது!

ஜாபிதாவை மடித்து காப்டனிடம் கொடுத்த ராஜாமணி, "மிஸ்டர் கேதாரி! மணி பதினொன்ருகி விட்டது. நாளைக் காலை நாம் சந்தித்து மேற்கொண்டு பேசலாம்" என்று எழுந்து 'விர்' ரெனக் கிளம்பினர்.

ராஜாமணியின் பதட்டத்திற்குக் காரணம் என்ன? கல கலப்பாகப் பேசிக் கொண்டிருந்தவர் கலங்கிப் போகக் காரணம்?—யோசித்தபடி சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்தார் காப்டன் கேதாரி.

14

கப்பல் பிரயாணிகளின் ஜாபிதாவைப் படித்துப் பார்த்ததிலிருந்து ராஜாமணியின் எண்ணங்கள் ஒரு நிலையில் இல்லை. எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்பதே அவர் கவலையாகி விட்டது.

சுதாராணிக்குப் பலவிதத்திலும் ஆபத்து சூழ்ந்திருப்பதாக ராஜாமணி தடுமாறினர். அவளுக்குத் தொல்லை கொடுக்க ராகினி ஒருவள் போதாதென்று மதுசூதனருமல்லவா பின்பற்றி வந்திருக்கிருர்? போதும் போதாததற்கு இலங்கை ஏஜண்டான தாஸ் இந்தப் பிரயாணத்தை மேற்கொள்ளக் காரணம்?

மதுசூதனரும் தாஸும் தங்களோடு பிரயாணம் செய்வதை சுதாராணியிடம் சொல்லி வைக்கலாமா என்று யோசித்தார் அவர். ஏற்கனவே ராகினியைப் பார்த்ததிலிருந்து அவள் கலங்கிப் போயிருக்கிருள். இப்போது இதைக் கூறுவதால் அவளது கலக்கம் மேலும் அதிகரித்து விடுமோ என்று தயங்கினர். சுதா அவள் மனக்கண் முன்னே தோன்றினள். இன்பம் எங்கிருக்கிறது என்று தேடப் போய் துன்பங்களையும் வேதனையையும் வரவழைத்துக் கொண்டிருக்கிருள் அவள். பாவம்! இந்த அகால வேளையில் மேலும் அவளைக் கவலைகளுக்குள்ளாக்க வேண்டுமா என்ற எண்ணத்தோடு தனது அறையை நோக்கி நடந்தார் அவர்.

அப்போது மணி பதினொன்றுக்கு மேலாகியிருந்ததால் நீலக் கடலின் பயங்கரத்தோடு இரவின் கருமையும் சேர்ந்து ஒரு அந்தகாரத்தை எழுப்பிவிட்டிருந்தது. சுமாரான வெளிச்சம் கூட அந்தக் கப்பலிலே இல்லை. சுற்றுமுற்றும் பார்த்துத் தடவிக் கொண்டு நடந்தார் ராஜாமணி.

அருகாமையிலிருந்து யாரோ இருவர் பேசிக் கொண்டிருக்கும் குரல் சன்னமாகக் கேட்டது. அதில் ஒரு குரல் பெண்ணுடையது! இந்த நிசாஷர வேளையிலும் கூதல் காற்றிலும் வெட்ட வெளியான தளத்திலே நின்றபடி அவ்வளவு சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருப்பவர்கள் யாராயிருக்கும் என்ற ஆவலோடு, பேச்சு சப்தம் வந்த திசையைக் கவனித்தார் ராஜாமணி. சுமார் ஐம்பதடி தூரத்தில் யாரோ இருவர் நின்று கொண்டிருப்பது பனிப் படலத்தின் மத்தியிலே தெளிவற்றுத் தெரிந்தது.

மங்கிய வெளிச்சத்திலே ராஜாமணியால் அவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. குரலின் மூலமாகப் பேச்சு சப்தம் காதிலே அவ்வளவு ஸ்பஷ்டமாக விழாவிட்டாலும் சம்பாஷணையின் தோரணை, அவரால் ஊகிக்க முடிந்த நிலையில் காற்றிலே தவழ்ந்து வந்தது.

"வாய் அளவிலேதான் அன்பு, ஆசை, ஆழ்ந்த மோகம் என்றெல்லாம் பேசுகிறீர்களே தவிர, உங்கள் அன்புக்குகந்தவளுக்கு ஆசையோடு என்ன தந்து விட்டீர்களாம்?"

'அழகு ராணி ஷைலோவின் குரல் போலல்லவா இருக்கிறது! அவள் யாரிடம் இப்படிக் கூறுகிறாள்! அவளது மோகனப் பார்வையில் வகையாகச் சிக்கிக் கொண்டுவிட்ட மனோகரன் யார்?'—காதைத் தீட்டிக் கொண்டு கவனித்தார் ராஜாமணி. இப்போது ஆண் குரல் கேட்டது.

"என்ன வேண்டும் உனக்கு ஷைலோ? என்னையே உனக்குப் பரிசாகக் கொடுத்து விட்டேனே, அதை விடவா வேறொரு உயர்ந்த பரிசு இருக்கிறது!"

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததும், "அட பாவி!" என்று ஆச்சரியப்பட்டார் ராஜாமணி. அந்த ஆண் குரலுக்குச் சொந்தக்காரன் வேறு யாருமில்லை. பட்டாபி! வைதேகியின் அருமந்தப் புதல்வன்! கோடீஸ்வரி சுதாராணியின் ஒன்றுவிட்ட சகோதரன்!

தனக்குள்ளே சிரித்துக்கொண்டார் ராஜாமணி. அந்த இருவரைப் பற்றியும் நினைத்துப் பார்த்தார். பட்டாபியைக் குறை சொல்ல எதுவுமில்லை. அவனுக்குப் பருவத் துடிப்பு! ஆனால் அவளுக்கு...? முப்பது வயது கடந்துவிட்ட, பருவ காலத்தின் நீண்ட பதினாறு ஆண்டுகளை இளமை ஆசைகளுக்குப் பலி கொடுத்துவிட்ட அவளுக்கு வேறு என்ன சபலம் இருக்கப் போகிறது? அவளுக்கு வேண்டியது அன்பா?... இல்லை! பிரேமையா? அவளென்ன பித்துக்குளியா!...பிறகு...? நல்ல கறவை மாடு!...அவள் இப்போது தேர்ந்தெடுத்திருக்கும் கறவை மாடு லேசானதா? கோடீஸ்வரி சுதாராணியின் சகோதரனல்லவா!

பருவத்தின் இனிப்பைக் கோரி சவளைக் குழந்தைபோல அவளிடம் அவன் மருகிக் கொண்டிருக்கிறான். பாவம்! நாம் ஏன் கரடிபோலக் குறுக்கிடவேண்டும் என்று நினைத்து அந்த இடத்தை விட்டு அகன்றார் அவர்.

கப்பலின் இரண்டாவது தளத்திலே வலது பக்க வரிசையில் நான்கு காபின்கள். அதில் மூன்றாவது ராஜாமணியுடைய அறையாகும். இரண்டாவது அறைதான் வைதேகியுடையது. தன் அறைக் கதவை ராஜாமணி திறந்துகொண்டிருந்தபோது அடுத்த அறையில் வைதேகி யாருடனோ பேசிக் கொண்டிருப்பது அவரது காதிலே விழுந்தது.

'இந்தச் சித்தியம்மாளுக்குப் பேச ஆள் கிடைத்தால் போதும். பசி, தாகம் எதுவுமே எடுக்காது போலிருக்கிறது!' என்று நினைத்து அறைக்குள்ளே போய்க் கட்டிலில் படுத்துக் கொண்டார்.

வைதேகியை சந்தேகிக்கவோ அல்லது அவளது பேச்சை உற்றுக் கவனிக்கவோ ராஜாமணி விரும்பவில்லை. அவள் கள்ளம் கபடமற்றவள்! எதற்கும் ஆசைப் படாதவள்! யாருக்கும் மனதால்கூடத் தீங்கு நினைக்காதவள்! பேச்சுத் துணைக்கு யாராவது அகப்பட்டால் ஊர்க்கதைகள் பேசுவாள். மிஞ்சி மிஞ்சிப் போனால் தனது பால்ய நினைவுகளைப் பற்றிக்கூறி பெருமையடித்துக் கொண்டிருப்பாள். அப்படிப் பட்டவளிடம் உற்றுக் கவனிக்க என்ன மூடுமந்திரம் இருக்கப் போகிறது!

வைதேகியைப் பற்றி ராஜாமணியின் எண்ணம் இப்படி இருந்தது. ஆனால் ஓரிரு நிமிஷத்திற்குப் பின் அடுத்த அறையில் நடந்த விவாதம் படுக்கையில் படுத்திருந்தவரை எழுந்து உட்கார வைத்தது. வைதேகியுடன் பேசிக்கொண்டிருப்பது மதுசூதனர் போலல்லவா இருக்கிறது!

காது கொடுத்து கவனித்தார் ராஜாமணி. ஆம்! மதுசூதனரே தான்! வைதேகியிடம் உரத்த குரலில் ஏதோ காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

"வைதேகி! என்னைப் பார்த்துப் பணத்தாசை கொண்டவன் என்கிறாயே, பணத்தாசை யாருக்கு இல்லை? அதன் மீதுள்ள பற்றுதல் யாரை ஆட்டி வைக்கவில்லை. பந்துக்கள், மித்திரர்கள் நெருங்கிப் பழகியவர்களெல்லாம் என்னை எப்படியெல்லாம் காறித் துப்புகிறார்கள் தெரியுமா? 'உன் கூடப் பிறந்தவளின் பெண் கோடீஸ்வரியாக இருக்கிறாள். நீ கடன் கப்பியோடு மானமில்லாமல் தவிக்கிறாயே!' என்று பிறர் என்னை ஏசிக் காட்டும்போது ஒவ்வொரு மயிர்க்காலிலும் ஊசி எடுத்துக் குத்துவது போல இருக்கிறது! அதற்காகவே எனது மருமகளாகப் பெற எவ்வளவோ முயற்சி எடுத்தேன். ஏன்...? உன்னிடம்கூட

காலைப் பிடித்தேன். நீ அப்போது அசைந்து கொடுத்தாயா? அதை இப்போது கிளறிப் பிரயோசனமில்லை. வைதேகி! திருமண விஷயத்திலேதான் என்னை விட்டுக் கொடுத்து சுதாவுக்கு அனுசரணையாக இருந்துவிட்டாய். இப்போதாவது எனக்கு உதவியாய் இரு. நான் உன்னோடு கூடப்பிறந்தவன். தலைக்கு மீறிய கடனோடு தவித்துக் கொண்டிருக்கிறேன். சுதாவிடம் சொல்லி எனக்கு ஐம்பதாயிரம் வாங்கிக்கொடு. இந்தப் பணம் அவளுக்குப் பெரிதில்லை. அவள் போகிற போக்கிலே அனாவசிய மாகச் செலவழித்துவிடக் கூடிய அற்பத்தொகை! என்ன வைதேகி சொல்லுகிறாய்?'' என்று கேட்டு மதுசூதனர் வைதேகி யின் மனதை இளகவைத்துக் கொண்டிருந்தார்.

''அவளிடம் பிச்சை எடுக்க உனக்கு வெட்கமாயில்லையா அண்ணா!''—சற்று வெறுப்போடு சித்தியம்மாள் கூறிய இந்தப் பதிலும் ராஜாமணியின் காதில் ஸ்பஷ்டமாக விழுந்தது.

''ஒன்றுக்குள்ளே ஒன்று. வெட்கமென்ன வைதேகி? சுதா அன்னியப் பெண் அல்லவே?''

''நீ என்ன நினைத்துக் கொண்டாலும் சரி. சுதாவிடம் இது பற்றி ஒரு வார்த்தைகூட என்னால் பேசமுடியாது. 'உன் முகத் திலே இனி விழிப்பதில்லை' என்று என்னிடம் வைராக்யம் கொண்டாலும் சரியே. இந்த விஷயத்தில் சுதாவை நான் கட்டாயப் படுத்தவே மாட்டேன்?''

''எங்கிருந்தோ முளைத்த ராகினிக்கு இருபதாயிரம் கொடுக்க நீயும் இஷ்டப்பட்டபோது, எனக்குக் கேட்டு வாங்கித்தர உன் முகம் ஆயிரம் கோணலாகிறதே!''

''அது வேறே விஷயம்.''

''ஆகக்கூடி நீ எனக்கு உதவி செய்ய இஷ்டப்படவில்லை.''

''தானாகக் கனியாத காயைத் தடிகொண்டு அடிக்க நான் ஆளில்லை.''

''அவசியம் ஏற்படுமாயின் அப்படியும்தான் செய்கிறார்கள். தெரியுமா வைதேகி?''

''நான் அந்த முறையைக் கையாளத் தயாராக இல்லை!''

''முடிவான பேச்சா?''

''ஆமாம்!...சுதா கருமி இல்லை. மிகவும் இரக்க மனது கொண்டவள். அவளிடம் உதவி பெறுவது கஷ்டமில்லை. ஆனால் பயமுறுத்தி அவளிடம் காரியசாதகம் செய்துகொள்ள முடியாது. அவளது வெறுப்புக்குப் பாத்திரமானவர்களுக்கு செம்பாலடித்த செல்லாக் காசுகூடக் கொடுக்க மாட்டாள்!''

"நான் அவளுக்கு என்ன தீங்கு செய்துவிட்டேன்?"

"என்னைக் கேட்கிருயா?...உன் மனதையே நீ கேட்டுக் கொள். ராகினியைத் தூண்டிவிட்டு அவளை அழைத்துக் கொண்டு வந்திருப்பது நீ அல்லவா?"

"வைதேகி...!"

"அதட்டாதே அண்ணு. சுதாவிற்குத் தெரியாவிட்டாலும் எனக்குத் தெரியும். என் முகத்தைப் பார்த்துச் சொல்லு...... ராகினியை நீ கூட்டிவரவில்லையா?"

ஓரிரு நிமிஷம் பேச்சு சப்தம் கேட்கவில்லை.

"நீ அப்படிச் செய்யவில்லையென்ருல் கணீர் என்று பதில் சொல்லலாமே! அண்ணு! ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு எளிது. ராகினியை நீ கூட்டிவந்ததால் உனக்கு என்ன காரிய சாதகம் ஆகிவிடப் போகிறது என்று நினைக்கிருய்?... காலணு இல்லாத அவளுக்கு டிக்கட்டுக்கு முதல் நீயல்லவா செலவழித்து வருகிருய்!..உன் காசுதானே கரைகிறது!"

குறுக்கிட்டார் மதுசூதனர். "டிக்கட் செலவா? ராகினிக்கா? ..இல்லவேயில்லை! நான் கொடுக்கவேயில்லை" என்று அலறினர்.

"பொய் சொல்லாதே அண்ணு! நீ கொடுத்திராவிட்டால் அவளுக்குக் காசு ஏது?"

"ஏன் இல்லை?...சுதா கொடுத்த இருபதாயிரம் அவளிடம் இருக்கிறதே!"

"இல்லை!...இதோபார்!...அந்த இருபது ஆயிரம் ரூபாய் செக் என்னிடம் இருக்கிறது. நான் இதை அவளிடம் கொடுத்தபோது வீசி எறிந்தாளல்லவா! சலாம் போட்டுக் கொண்டு எடுத்து வைத்துக்கொண்டேன். இப்போது சொல் அண்ணு! மலாயாவரை கப்பல் டிக்கட் ராகினிக்கு வாங்கிக் கொடுத்தது நீ தானே?"

"இல்லை. ஆனல்...உண்மையைச் சொல்லட்டுமா? நீ யாரிடமும் சொல்லக்கூடாது. சுதாவின் இலங்கை ஏஜண்டான தாஸ் ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்திருக்கிருர்!"

"என்ன...? தாஸா? ராகினிக்கா? உன் பேச்சு விசித்திரமாக இருக்கிறதே!" என்று மலைத்துப்போய் உரத்த குரலில் கேச்சிட்டாள் வைதேகி.

ராஜாமணியின் கண்கள் அகல விரிந்தன. ராகினிக்குப் பணம் கொடுத்து சுதாவின் பின்னல் அவளைத் தொடர்ந்தோடச் செய்வதால் தாஸுக்கு என்ன லாபம்? அட கடவுளே! ஒவ்வொரு மனதிலும் ஒவ்வொரு வித சதித் திட்டமல்லவா உரு

வாங்கிக் கொண்டிருக்கிறது, என்று ராஜாமணி திடுக்கிட்டபோது அடுத்த அறையிலிருந்து மேலும் பேச்சு சப்தம் கேட்டது.

"அண்ணா! இப்போது கூடக் காரியம் கெட்டுவிடவில்லை. என் பேச்சைக் கேட்டு நடந்தால் நீ சௌகரியமான நிலையில் இருக்கலாம். சுதாவின் வெறுப்பை மேலும் நீ சம்பாதித்துக் கொள்ளாமல் ஊருக்குத் திரும்பிப்போ. சமயம் வரும்போது உன் நிலையை அவள் அறிந்து தானாகவே உதவி செய்ய முன் வருவாள்."

"இதெல்லாம் சமாதானப் பேச்சா என்ன! வைதேகி! உன்னால் ஆகக்கூடிய ஒன்றைக் கோரினேன். அதற்கு உனக்கு இஷ்டமில்லை. அதோடு விட்டுவிடு. தும்பைவிட்டு வாலைப் பிடிக்கச் சொல்லும் உன் யோசனை எனக்கு வேண் டாம். என் கஷ்டத்தை நிவர்த்தி செய்து கொள்ள எனக்குத் தெரியும்!"

இந்தப் பேச்சைத் தொடர்ந்து கதவு படாரென வேகத் தோடு சாத்தப்படும் சப்தம் ராஜாமணியின் காதுகளிலே இடி இடித்தது. வைதேகியின் அறையைவிட்டு மதுசூதனர் வெகு கோபத்தோடு கதவைத் திறந்துகொண்டு போகிறார் என்பதை அவர் எளிதாக ஊகித்துக் கொண்டார்.

ராகினி ரமணியின் உயிருக்கு எமனாக ரூபமெடுத்திருக் கிறாள்! மதுசூதனர் சுதாவின் ஐம்பதாயிரத்துக்கு அந்துவாகத் திரிகிறார்! இருவருக்குமே இடைஞ்சலா?

படுக்கையிலே எழுந்து உட்கார்ந்திருந்தவர் திரும்பப் படுக்க வில்லை. ஆபத்து அதிகரித்து வருவதாக ஒரு கலக்கம் அவருக் குள்ளே முளைத்தது. கோபத்தோடும் ஆத்திரத்தோடும் செல் லும் மதுசூதனர் நேராக சுதாராணியிடம் போய் ஏதாவது வம்பு செய்தாலும் செய்யலாமல்லவா?

கட்டிலைவிட்டுக் குதித்த அவர் கதவைச் சாத்திவிட்டு பூனை போல் சந்தடி செய்யாமல் மெதுவாக நடந்தார்.

சுதா ராணியின் 'காபின்' இரண்டாவது தளத்தின் இடது பக்கத்தில் இருந்தது. அங்கே வந்தடைந்த ராஜாமணி, சுதா வின் அறையை நெருங்காமல் எட்ட நின்று ஏதாவது பேச்சு சப்தம் வருகிறதா என்று கவனித்தார். நிசப்தமாக இருந்தது. பாவம்! அயர்ந்து தூங்குகிறாள் போலிருக்கிறது என்று எண்ணித் தன் அறைக்குப்போகத் திரும்பினார். இருட்டிலே அவரது கால் கள் கீழே வைக்கப்பட்டிருந்த பூந்தொட்டியில் மோதியது. 'தட் தட் தட தட' என்ற சப்தத்தோடு தொட்டி உருண்டோடியது. நிசப்தம் கலைந்தது.

"யார் அங்கே?" கணீரென்ற குரலொன்று கம்பீரமாக அதட்டுவது கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார் ராஜாமணி.

'டார்ச் லைட்' வெளிச்சம் அவரது முகத்துக்கு நேரே அடிக்கப் பட்டது. அதைத் தொடர்ந்து "ஓ! துப்பறியும் நிபுணரா? யாரோ என்று பயந்துவிட்டேன்" என்ற வியப்புக்குரல் எதிரொலித்தது. சுதாராணியின் அறையிலிருந்து ரமணி வந்து கொண்டிருந்தான்.

"என்னைவிட மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறீர்கள் போலிருக்கிறதே! ரமணி! சுதா முழித்துக் கொண்டிருக்கிருளா அல்லது தூங்கிவிட்டாளா?" என்று கேட்டார் ராஜாமணி.

"அயர்ந்து தூங்குகிருள். நான் புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தேன். சப்தம் கேட்கவே என்னவோ என்று பதறிப்போய் ஓடிவந்தேன். ஆமாம் நீங்கள் இந்த அகால வேளையில் எதற்காகச் சுற்றிக் கொண்டிருக்கிறீர்கள்?"

"அத்தையம்மாள் எனக்குக் கொடுத்த வேலை ரோந்து சுத்தும்படியாக ஆகிவிட்டது!...ரமணி! இந்தக் கப்பலிலே நமக்கு மிகவும் வேண்டப்பட்ட வேறு சிலரும் பிரயாணம் செய்கிருர்களே, அவர்கள் யார் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"ராகினியைச் சொல்லுகிறீர்களா?" என்று வெகு அலக்ஷியத்தோடு கேட்டான் ரமணி.

"இல்லை! ... மதுசூதனரைச் சொல்லுகிறேன்! .. மேலும் இலங்கை ஏஜண்டான மிஸ்டர் தாஸைக் குறிப்பிடுகிறேன்! இவர்கள் நம்முடனே பிரயாணம் செய்வது சுதாவுக்குத் தெரியுமா?"

"தெரிந்திருந்தால் என்னிடம் சொல்லாமல் இருக்கமாட்டாளே!...ஆமாம்...இன்ன தேதியில் இன்ன கப்பலில்தான் நாம் புறப்படுகிருேம் என்பது எல்லோருக்குமே தெரிந்திருக்கிறதே. அது எப்படி ஸார் வெளியாயிற்று?" என்று வியப்போடு கேட்டான் ரமணி.

"அதை உங்களிடம் கேட்கலாம் என்று நினைத்திருந்தேன். இப்போது நீங்கள் என்னிடம் விசாரிக்கிறீர்கள்! ரமணி! உங்களிடம் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். 'என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைத்துக் கொண்டீர்கள்?' என்று கேட்டு என் மீது கோபப்படாமல் இருந்தால் கேட்கிறேன்" என்று சொல்லி ரமணியின் முகத்தைப் பார்த்தார் ராஜாமணி.

"கேட்கும் உத்திரவாதம் பலமாக இருக்கிறதே!" என்று சிரித்தான் ரமணி.

"கேட்கலாமா?...ரமணி! கொழும்பு நகரை விட்டுக் கிளம்பிய முன் இரவு நீங்கள் ராகினியைச் சந்தித்தீர்கள் அல்லவா?"

ரமணியின் முகம் சிறுத்தது. "நானு?...ராகினியையா? தனிமையிலா?" என்று மலைத்துப்போய்க் கேட்டான்.

''அந்த இரவு ராகினியின் அறைக்கு நீங்கள் போனீர் களல்லவா?''

ரமணி பதில் சொல்லாமல் தயங்கினான். போனதென்னவோ உண்மை. அதைக் கூறுவதா அல்லது மறைத்து விடுவதா என்ற தடுமாற்றம் ஏற்பட்டது. கேள்வி கேட்பவர் ராஜாமணியாயிற்றே! ஓரளவு உண்மையாவது அவருக்குத் தெரிந்திருந்தாலொழிய எதைப் பற்றியும் யாரிடமும் விளக்கம் கேட்காத நிபுணரல்லவா! அவரது சுபாவம் ரமணிக்குத் தெரிந்திருந்ததால், மறைப்பது வீண் சந்தேகத்திற்கிடமாகுமென்று பயந்து, ''ஆமாம்'' என்றான்.

'இல்லை!' என்ற பதிலே தனக்குக் கிடைக்கும் என்று எதிர் பார்த்த ராஜாமணிக்கு 'ஆமாம்' என்ற தைரியமான பதில் வியப்பைத் தந்தது. ''ராகினியோடு எதுபற்றி நீங்கள் அப்போது பேசினீர்கள் ரமணி?'' என்று கேட்டார்.

''அந்த அறையிலே அவள் இருந்தாலல்லவோ பேசுவதற்கு!''

''அதனால் உடனே திரும்பி விட்டீர்களாக்கும்?''

ராஜாமணியின் கேள்விகள் வெகு சூட்சமமாக இருப்பதை ரமணி உணர்ந்தான்.

''உடனே திரும்பி விட்டேனா இல்லையா என்பதுதானே உங்கள் சந்தேகம்? 'இல்லை' என்று நான் உங்களுக்குப் பதில் சொன்னால் 'ராகினி வரட்டும் என்று காத்திருந்தீர்களாக்கும்' என்று மறுகேள்வி கேட்பீர்கள்! அதற்கும் 'இல்லை!' என்று பதில் சொன்னால், 'பின் எதற்காக அங்கே போனீர்கள்?' என்று வேறொரு திசைக்கு இழுப்பீர்கள்!...பேச்சு இழுக்கும். நேரம் ஓடும்: இரவு ஓய்ந்து பகல் எட்டிப் பார்க்கும். எல்லாவற்றையும் விவரமாக நானே சொல்லி விடுகிறேனே!'' என்று தமாஷாகப் பேசிக் கண் சிமிட்டினான் ரமணி.

லாகவமாகப் பேசத் தெரியாத குழந்தை போன்றவன் ரமணி என்று இதுவரை நினைத்திருந்த ராஜாமணியின் எண்ணம் பல்டியடித்தது. ''ரமணி! ஏதோ தீங்கு செய்யும் நோக்கத்தோடு நீங்கள் போனதாக ராகினி சொன்னாள். உண்மை தானா?'' என்று கேட்டார்.

''இல்லை!... அவளால் பிறருக்குத் தீங்கு விளைந்துவிடக் கூடாதே என்பதற்காக அவளது அறைக்குப் போனேன்!''

''அவளைப் பயமுறுத்தி எச்சரிப்பதற்காகவா?''

''இல்லை...எதைக் காட்டி அவள் எல்லோரையும் கலங்க வைத்துக் கொண்டிருக்கிறாளோ அதை அபகரித்து விடவே அவளில்லாத சமயத்தில் அவளது அறைக்குள்ளே புகுந்தேன். ஆனால் நான் தேடிய கைத்துப்பாக்கி அகப்படவில்லை. எமகாதகி! அதைத் தன் இடுப்பிலேயே சதா சர்வ காலமும் வைத்துக்கொண்டிருக்கிறாள்!''

"ரிவால்வரோடு விளையாடக்கூடிய அவ்வளவு துணிவு ராகினிக்கு இருக்கிறதா?"

"ஏன் இல்லை? அவளது போக்கு கட்டுக்கடங்காதது. மனதிலே ஒன்றைத் தீர்மானம் செய்து கொண்டு விட்டால் எதைச் செய்யவும் தயங்கமாட்டாள். அதனாலேயே கைத்துப்பாக்கியைத் திருடிக் கொண்டு வந்துவிட நினைத்தேன்!"

"அப்படியானால் அவளால் எந்த நிமிஷத்திலும் ஆபத்து இருக்கிறதில்லையா?"

"சந்தேகமேயில்லை. அதனால்தான் அவளது நடமாட்டத்திலேயே நான் கண்ணும் கருத்துமாய் இருக்கிறேன். இரவிலே சிறிது காலடி ஓசை கேட்டால் கூட நான் உஷாராக இருப்பதற்கும் அதுவே காரணமாகும். இரவு முழுதும் நான் கண் அயர்வதே இல்லை. கண்ணின் கருவிழிகளை இமை காப்பது போல நான் சுதாவின் தலைமாட்டிலேயே காவல் புரிந்து கொண்டிருக்கிறேன்."

"நான் அறிந்த உண்மையைச் சொல்லட்டுமா ரமணி. ராகினி கண்ணோட்டம் செலுத்துவது சுதாவை அல்ல. உங்களை! அவள் நேருக்கு நேராகவே என்னிடம் கூறினாள்" என்று சொல்லி ரமணியை ஏறிட்டுப் பார்த்தார் ராஜாமணி. ஆபத்தான அச்சேதி கேட்டு ரமணியின் முகம் சிறிதுகூடச் சலனப்படவில்லை. "ஒவ்வொரு நிமிஷமும் அதை எதிர்பார்த்துக் கொண்டு தானே இருக்கிறேன்!" என்று அமைதியோடு கூறினான்.

அதற்கு ஏதோ பதில் கூற வாய் திறந்தார் ராஜாமணி. 'வீல்' என்ற ஒரு அலறல் சப்தம் கடல் காற்றின் பேரிரைச்சலையும் கிழித்துக் கொண்டு சுதாவின் அறையிலிருந்து வெளிப்பட்டது. அதைத் தொடர்ந்து 'தடால்' என ஏதோ ஒரு கனமான பொருள் கீழே உருண்டு விழுவது போல சப்தம் கேட்டது.

"சுதா!" என்று கத்திக் கொண்டு ஓடினான் ரமணி. உடம்பெல்லாம் பதற சுதா படுத்திருந்த அறையை நோக்கி வேகமாகக் குதித்தோடினார் ராஜாமணி.

15

சுதாராணிக்கு ஏதோ பெருத்த அபாயம் ஏற்பட்டு விட்டது என்று பயந்தோடிய இருவரும் அறைக்குள்ளே நுழைந்ததும் வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள். சுதா ஏதோ கெட்ட சொப்பனம் கண்டு கட்டிலிலிருந்து உருண்டு கீழே விழுந்து கிடந்தாள்!

ராஜாமணியையும் ரமணியையும் கண்டதும் வெட்கிப் போன சுதா தரையினின்றும் எழுந்து சிறு குழந்தை போல நாணத்தோடு தலைகுனிந்து நின்றாள்!

''வர வர நீ மிகவும் சவலைக் குழந்தையாகி விட்டாய் சுதா. ஒரே நிமிஷத்தில் என்னைப் பதற வைத்து விட்டாயே!'' என்று வாஞ்சையோடு ரமணி அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''ரமணி! சுதா என்ன சொப்பனம் கண்டிருப்பாள் என்று சொல்லட்டுமா? ராகினிப் பிசாசு வந்து பயமுறுத்தியிருக்கும்!'' என்று பரிகசித்துக் கொண்டே சுதாவின் பக்கம் திரும்பி, ''அப்படித்தானே சுதா!'' என்று புன்சிரிப்புச் சிரித்தார் ராஜாமணி.

பதில் எதுவும் கூறாத சுதா புதுமணப் பெண்ணைப் போல புடவைத் தலைப்பைக் கைகளால் முறுக்கியபடி தரையைத் தன் கால் கட்டை விரலால் நிரடிக் கொண்டிருந்தாள். வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்றது.

''ரமணி! எலி பூனை எதுவும் சுதாவைத் தூக்கிக் கொண்டு போய்விடாமல் சுதாவைக் கவனித்துக் கொள்ளுங்கள். மற்றொரு விஷயம். இந்தக் கப்பலிலே கரப்பான்பூச்சி அதிகம், சுதாவிற்கு அதைக் கண்டால் பயமில்லையே!'' என்று கிண்டல் செய்து கொண்டே அறையைவிட்டு வெளியேறினார் ராஜாமணி.

நின்று கொண்டிருந்த சுதாவை கட்டிலிலே உட்கார வைத்தான் ரமணி. ''இன்னமும் உன் நெஞ்சும் மார்பும் 'பக் பக்' என்று அடித்துக் கொள்கிறதே! அப்படிப்பட்ட கனவு என்ன கண்டாய் சுதா? ராகினியின் பயமா?''

''ஆமாம்'' என்று தலையசைத்துக் காட்டிய சுதா ஆசையோடு அவன் தோள் மீது ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டாள். ''நான் ஒன்று கேட்கப் போகிறேன்; கோபித்துக் கொள்ளமாட்டீர்களே?'' என்று கேட்ட வண்ணம் அவனது கன்னத்தை வருடினாள்.

''கோபமா? அதுவும் உன் பேரிலா!... அசடு! சுத்த அசடு!'' என்று செல்லமாக அவளது கன்னத்தைக் கிள்ளினான் ரமணி.

''என்ன இருந்தாலும் ராகினியின் மீது உங்களுக்குக் கொஞ்சமாவது ஆசையில்லாமல் இருக்காது. இல்லையா?...

''உனக்கென்ன பைத்தியமா! அசட்டுக் கேள்வியெல்லாம் கேட்கிறாயே!''

''சொல்லுங்களேன்...!''

''என்ன பதில் நான் சொன்னால் உனக்குத் திருப்தியாக இருக்குமோ அதையே நான் சொல்லுவதாக வைத்துக்கொள்ளேன்!'' என்று சிரித்தான் ரமணி.

''எனக்குத் தெரியும்...ஒரோர் சமயம் உங்கள் மனது ராகினியின் பக்கம் சாய்கிறது! அப்போதெல்லாம் மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல் விழிக்கிறீர்கள்!''

"ஏன் இந்தச் சந்தேகம் உனக்கு?"

"முதன் முதலாக நீங்கள் என்னைப் பார்க்க வரும்போது உங்களையேதான் முற்றிலும் நான் கவனித்துக் கொண்டிருந் தேன். அந்தச் சந்திப்பின்போதுகூட ராகினியோடயே ஒட்டுப் பீத்தாக இருந்தீர்களே ஒழிய என்னை ஏறெடுத்துக்கூடப் பார்க்க வில்லை. அவளது முகத்தையும் கண்களையும் பார்த்துச் சொக்கிக் கொண்டிருந்தீர்கள். அத்தனை ஆசை அவள் பேரிலே உங்க ளுக்கு இருப்பதைக் கண்டேன்...அதன் பிறகு...அப்புறம்..."

"அப்புறமா?"

"ஆமாம்...இரண்டே நாளில் ராகினியை மறந்து என்னிடம் மாய்ந்துவிட்டீர்கள். அவ்வளவு அன்யோன்யமாக நீங்கள் இருவரும் இருந்துவிட்டு திடுதிப்பென்று அவளைப் புறக்கணித்து விடுவதென்றால்...அதை அப்போது நான் யோசிக்கவில்லை... இப்போது யோசித்துப் பார்க்கிறேன்...யோசித்தால்..."

"நான் உன்னிடம் கொண்டுள்ள பிரேமையெல்லாம் வெறும் வேஷம் என்று நினைக்கத் தோன்றுகிறதாக்கும்!"

"அப்படி நான் சொன்னேனா?"

"வேறு என்ன அர்த்தம்?"

"ராகினியிடம் திடீரென்று உங்களுக்கு மனமாற்றம் ஏற்படக் காரணம் என்னவாக இருக்கும் என்று அறிந்துகொள்ள எனக்கு ஆசை இருக்காதா?"

"சொல்லட்டுமா சுதா?...சூரியனை தினமும் கவனிக்கிறாயே, அது எவ்வளவு பிரகாசத்தைத் தருகிறது. அத்தனை வெளிச்சம் தருகிற அந்த சூரியனை நீ கண்கொண்டு பார்க்க முடிகிறதா?"

"இல்லை!...அதைப் போல...?"

"ராகினி ஒரு சூரியன். அவள் வாரிச் செறிந்த வெளிச் சம் ஒரு மோக லாகிரி. அந்த ஒரு உணர்ச்சியைத்தான் நான் உணர்ந்தேனே யொழிய, அதை அடக்கி வைத்துக்கொண்டி ருக்கும் அவள் மனதை நான் அறிய முடியாமல் இருந்தேன். அப்போது நீ குறுக்கிட்டாய். அதாவது உன்னைப் பார்க்கும் சந்தர்ப்பம் வாய்த்தது..."

"உடனே நான் உங்கள் கண்களுக்கு மாலைச் சூரியனாக விளங்கிவிட்டேனாக்கும்? அதனால் கண்கொண்டு பார்த்து விட்டீர்கள்!"

"நான் பார்த்தது மாலைச் சூரியனை அல்ல; மதியை மயக்கும் முழு மதியை!"

"ஓ! அப்படியா அது! எனக்குப் புரிகிறது. மனித மனங்களை போதையிலாழ்த்தி உணர்ச்சி ஊட்டுகிற சந்திரனையே அதிக மாக நீங்கள் விரும்புகிறீர்கள். மற்றொரு உண்மை உங்களுக்

குத் தெரியுமா!... சந்திரன் பிரகாசிக்கும்வரைதான் இள மனது கள் பருவத் துடிப்பில் பதைபதைத்துக் கொண்டிருக்கும். சூரியன் உதயமாகி விட்டால் 'உயிரே போனாலும் நமக்குள்ளே பிரிவு இல்லை' என்று ஒருடல்போல துவளுகிற ஜீவன்கள், நீயோரோ நான் யாரோ என்று கேட்பதுபோல விலகிவிடுவார் கள் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்!"

"சுதா! நீ ரொம்ப வாயாடியாகி விட்டாய்!"

"உள்ளதைத் தூண்டித் துருவினால் வாயாடியாக்கும்?"

"இல்லை ...வக்கணைப் பேச்சு!"

"ஆமாம்.. நான் ஒன்று கேட்கப் போகிறேன்...பதில் சொல்லுகிறீர்களா......?"

"உனக்குச் சொல்லாத பதிலா!"

"நிஜமாகச் சொல்ல வேண்டும். நான் அழகா? அல்லது ராகினி அழகியா?"

"சொல்லட்டுமா?......ஆமாம்....உதட்டளவில் சொல்லச் சொல்லுகிறாயா, அல்லது......"

"உள்ளத்தில் இருப்பதைக் கேட்கிறேன்!"

"சொல்லட்டுமா? ராகினி மல்லிகைப் பூ; நீ மகிழம்பூ!

"அதன் அர்த்தம்?"

"ஈரப்பசை இருக்கும் வரையில்தான் மல்லிகைப் பூ மணம் வீசி மனிதனை மயக்குகிறது. ஆனால் மகிழம்பூ இருக்கிறதே அது காய்ந்து சருகானால் கூட வாசனை இருந்து கொண்டே இருக்கும்!"

"ஆனாலும் ஆண்கள் ஆசையோடு அன்புக்குகந்தவளுக்கு வாங்கித் தருவது மல்லிகைப் பூவே தவிர, மகிழம்பூ இல்லையே!"

"க்ஷணப் பித்தம்தானே மனித ஆவல்; அந்த ஆவலுக் கேற்ற புத்திப்படி மனிதனின் மனப்போக்கும் இருக்கும்! எல் லோருமே மல்லிகைப் பூவா வாங்கி வருகிறார்கள். கனகாம் பரம் கூடத்தான் வாங்கிக் கொடுக்கிறார்கள்!"

"கருத்தழகை விடக் கண்ணுக்கழகைக் கவனிப்பவர் களாக அவர்கள் இருப்பார்கள்! பொதுவாக ஆண்கள் வெளி யழகில்தானே மயங்கி மாய்கிறார்கள்!"

"என் வரையில் நான் அப்படியில்லை!"

"ஆனால் நீங்கள் சொன்ன உபமானம்தான் எனக்குப் பிடிக்கவில்லை... அதாவது என்னை மகிழம்பூவுக்கு ஒப்பிட்டது!"

"அது எவ்வகையில் குறைவு?"

"சொல்லட்டுமா?" என்று கேட்டுக் கலகலவென்று சிரித் தாள் சுதா. கைவளைகள் கிலுகிலுக்க அவளது தளிர்க் கரங்கள் தாமரைக் கொடிபோல ரமணியின் கழுத்தைச் சுற்றி வளைத்து

முகத்துக்கு முகம் நேராகப் பார்க்கும்படி இழுத்துக் கொண்டது. "மகிழம் பூவைப்பற்றி எனக்குத் தோன்றுவதைச் சொல்லட்டுமா? அது பார்க்க அவ்வளவு அழகில்லை. ஆனால் மன மயக்கம் தருகிறது. அதைப்போல நான் அழகில்லை; எந்த ஒரு மணம் அதில் இருக்கிறதென்று சிலர் அதை வாங்குகிறார்களோ, அதேபோல என்னிடம் இருக்கும் செல்வத்திற்காக என்னை நீங்கள் விரும்பிவிட்டீர்கள். அந்த அர்த்தத்தில் தானே என்னை மகிழம்பூ என்று குறிப்பிட்டீர்கள்?"

ரமணியின் மலர்ந்த முகம் கைப்பட்டு கன்னிய தாழம் பூவைப்போல கருத்தது. உதடுகளில் சுறுக்கக்கோடு கண்டது. அவன் கண்களிலே மிளிர்ந்த தீக்ஷண்யமான பார்வை திடுமென மறைந்தது. அதை ஓரக்கண்ணால் கவனித்தாள் சுதா.

அவன் வேறு வழியில் ஏதாவது சமாதானம் சொல்லி அவளைச் சரிப்படுத்தி இருக்கலாம். ஆனால் அவனது வாய் திறக்க முடியாதபடி ஜவ்வுபோல ஒட்டிக் கொண்டுவிட்டது. சுதாவின் கன்னங்களை வருடிக் கொண்டிருந்த அவனது மென்மையான கரங்கள் கூட பிரமை தட்டியதுபோல நிலை நின்றுவிட்டன. 'என்னை பணத்தாசை பிடித்தவனாகக் கருதிவிட்டாய் பார்த்தாயா!' என்று கேட்க வேண்டும்போல ரமணியின் மனம் துடிதுடித்தது. ஆனால் ஏனோ அவனது அதரங்கள் அதை வெளிப்படுத்த மாட்டாமல் இறுக மூடிக்கொண்டன.

"என்மேல் கோபமா?" என்று அரைக் கண்களோடு ஆசை ததும்பப் பார்த்தாள் சுதா.

அந்தச் சமயத்தில் நல்ல வேளையாக அவன் சுதாரித்துக் கொண்டான். "சுதா! நீ வெறும் மகிழம் பூவோ அல்லது மல்லிகைப் பூவோ இல்லை. மனோ ரஞ்சிதமும் மருக் கொழுந்தும் கலந்து பின்னப்பட்ட மனதுக்கேற்ற மலர்மாலை!" என்று இறுகத் தழுவிக் கொண்டான் ரமணி.

அப்போது மேஜை மீதிருந்த அலாரம் கடியாரம் இரண்டு மணி ஆகிவிட்டது என்பதுபோல இருதரம் ஜலதரங்கம் வாசித்தது.

"மணி இரண்டாகிவிட்டதே! சுதா! தினமும் நீ இப்படி கண் விழித்திருந்தால் உடம்பு என்ன ஆவது? நிம்மதியாகத் தூங்கு" என்று சொல்லிக் கொண்டே போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்தான்.

சுதாவும் படுத்துக் கொண்டாள். ஏனோ அவளுக்குத் தூக்கம் வரவில்லை. சிறிது நேரம் சென்றது. ரமணியைப் பார்த்தாள். அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவளது மனதிலே ஏதோ கலக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தூங்காத அவளது கண்கள் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.

கட்டிலைவிட்டு மெதுவாக இறங்கி மேஜைக்கு எதிரில் உட்கார்ந்து ஏதோ கடிதம் எழுதுவதில் முனைந்தாள். பிறகு எழுதியதைப் பலமுறை படித்தாள். படித்தாள். கவருக்குள் வைத்து ஒட்டினுள்...அதை எடுத்துக்கொண்டு அடிமேல் அடிவைத்து ஓசைப்படாமல் வெளியேறி ராகினியின் அறையை சமீபித்தாள். கையிலிருந்த கடிதம் கதவிடுக்கு வழியாக உள்ளே போய் விழுந்தது.

சுதா ஒரு நிமிஷம்கூட அங்கே நிற்கவில்லை. திருடனைப் போல சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே தன் அறைக்குள் வந்து படுத்துக்கொண்டாள்.

பிறகுதான் அவளுக்குத் தூக்கம் வந்தது!

16

மறுதினம் சுமார் பத்துமணி இருக்கும். வழக்கம் போல கப்பலைச் சுற்றிவந்து ஒவ்வொருவரும் பிரயாணத்தை எப்படி அனுபவிக்கிறுர்கள் என்று க்ஷேம லாபம் விசாரித்தபடி சுதாவின் அறையை வந்தடைந்தார் துப்பறியும் ராஜாமணி.

அப்போது அங்கே சுதாவோடு ரமணியும் இருந்தான். இலங்கை ஏஜண்டான மிஸ்டர் தாஸ்"ும் உட்கார்ந்திருந்தார். சுதாவுக்கு எதிரே இருந்த பெரிய முக்காலியில் பல பத்திரங்கள் பிரித்தபடி பரப்பப்பட்டு கிடந்தன.

ராஜாமணியைக் கண்டதும் கை கூப்பி வணங்கினுர் தாஸ். "என்னை இங்கே பார்க்க உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா!" என்று கேட்டார்.

தலையை மெதுவாக அசைத்துக் காட்டிச் சிரித்தார் ராஜாமணி. "உங்களை இப்போது நேரில் பார்க்கும்போது எனக்கு வியப்பு ஏற்படவில்லை. ஆனுல் எதேச்சையாக கப்பல் பிரயாணிகளின் ஜாபிதாவை நேற்று கவனித்தபோதுதான் உங்கள் பெயரைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். நீங்களும் இந்தக் கப்பலில் வருகிறீர்கள் என்பதை நாங்கள் எதிர்பார்க்கவில்லையல்லவா!"

"நான் புறப்பட்டதும் எதிர்பாராத ஒரு பிரயாணம்தான். சீமாட்டி அவர்கள் ஸிலோனில் பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்துவிட்டு, மீண்டும் கொழும்பு வந்து சிறிது நாள் தங்குவார் என்று எதிர்பார்த்தேன். ஆனுல் திடுதிப்பென்று மலாயா புறப்பட்டு விட்டதால், நானும் அவரோடு கிளம்ப வேண்டியதாகி விட்டது. அவரால் கையெழுத்திடப்பட்டு பல பத்திரங்கள்

குத்தகைக்காரர்களுக்குக் கொடுபட வேண்டியிருக்கின்றன" என்று கூறி நிறுத்தினர்.

"இந்தக் கப்பலில்தான் நாங்கள் பிரயாணம் செய்கிறோம் என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது? சீமாட்டி முன்னதாக உங்களுக்கு அறிவித்திருந்தாரா?"

"இல்லை. மிஸ்டர் மதுசூதனர் சொல்லித்தான் எனக்குத் தெரியவந்தது. அதுவும் கப்பல் புறப்படுவதற்கு முன்தினம்தான் அவர் எனக்குக் கூறினர். உடனே நானும் புறப்பட ஆயத்தம் செய்தேன்."

"சரிதான்!" என்ருர் ராஜாமணி.

இந்த இருவரின் பேச்சிலேயும் கலந்து கொள்ளாமல் சுதா ஏதோ ஒரு பத்திரத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அதில் ஏதோ புரியாதவள் போல பக்கத்திலே உட்கார்ந்திருந்த தன் கணவனிடம் அதைக் கொடுத்து ஒரு வரியைக் குறிப்பிட்டுக் காட்டினுள்.

சுதா எந்தப் பத்திரத்தை வாசித்துக் கொண்டிருக்கிருள் என்பதை தெரிந்து கொண்டவர்போல தாஸ் அதில் குறுக்கிட்டார். "சீமாட்டி! ஒரு ஏகரா தேயிலைத் தோட்டம்; நூறு ரூபாய்க்கா குத்தகை என்று மலைக்கிறீர்கள். ஆனுல் இந்த குத்தகைதாரர் இருபது வருஷங்களுக்கு மேலாகவே நாணயமாக நம்மை நம்பி இருப்பதால் பழைய விகிதத்திற்கே இப்போதும் விடப்பட்டிருக்கிறது." என்ருர்.

"இப்போது சாதாரணமாக ஆயிரம் ரூபாயல்லவா?" என்று கேட்டாள் சுதா.

"இதுகூட நானுகச் சலுகை தரவில்லை. காலஞ் சென்ற அத்தை அவர்களது விருப்பப்படிதான் செய்யப்பட்டிருக்கிறது."

"உன் அத்தையின் தயாள குணத்துக்கு மிஸ்டர் தாஸ் எப்படிப் பொறுப்பாவார்? பாவம், அவன் ஏதோ ஏழையாயிருந்திருப்பான். அத்தை கருணை காட்டிச் சலுகை தந்திருப்பாள்! சரி சரி... போகட்டும் பாவம்... கை யெழுத்துப் போட்டு விடு சுதா! இதை யெல்லாமா குடைந்து கேட்டுக் கொண்டிருப்பது!" என்று தாராள மனப்பான்மை காட்டினுன் ரமணி.

சுதா சிரித்துக் கொண்டாள். "எஜமானர் சொல்லும்போது எனக்கென்ன வந்தது. ஒரு கை யெழுத்தில்லை. ஓராயிரம் வேண்டுமானுலும் போடத் தயார்!" என்று தன் புருஷனைப் பரிகசித்துக் கொண்டே அந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்டாள்.

அந்தப் பத்திரத்தை ஓரமாக ஒதுக்கி வைத்துவிட்டு மற்ருென்றை சுதாவின் முன்னே பிரித்து வைத்தார் தாஸ்.

சுதா அதைப் படிக்க ஆரம்பித்தாள்.

"முக்கியமான தொன்றுமில்லை. செட்டித்தெரு பெரிய வீட்டின் வாடகைப் பத்திரம். பழைய மாமூல்படியேதான்."

"அதைத்தான் படித்துக் கொண்டிருக்கிறேன்!" என்று கூறிக் கொண்டே அதை மேலும் படிப்பதில் ஈடுபட்டாள்.

"சுதா! பத்திரம் பூராவையும் படிக்கப் போகிருயா?" என்று கேட்டான் ரமணி.

"ஆமாம்...! படிக்காமலேயே கையெழுத்துப் போட்டு விடட்டுமா!" என்று கண்களைச் சிமிட்டினுள் சுதா.

"இருபது பக்கமிருக்கிறதே என்று பார்த்தேன். முழுதும் படிக்க முனைந்தால் ஒரு மணி நேரம் ஆகும்!"

"ஆகட்டுமே! படித்துத்தான் ஆகவேண்டும்! எதெது என்னென்ன என்பது எனக்கும் தெரிய வேண்டாமா?"

"படியம்மா படி!" என்று வேடிக்கையாகக் கூறிவிட்டு ஒதுங்கி உட்கார்ந்தான் ரமணி.

"மிஸ்டர் தாஸிடம் நம்பிக்கை யில்லாமல் நான் இதையெல்லாம் படித்து பிறகு கையெழுத்துப் போடவில்லை. அத்தை சாகும்போது எனக்குச் சொல்லிச் சென்றபடி நான் நடந்து கொள்ள வேண்டாமா?"

"அதென்ன சுதா?" என்று கேட்டார் ராஜாமணி.

"எதையும் படித்துப் பாராமல் கையெழுத்துப் போடாதே!" என்று கடிதம் எழுதியிருந்தாள்."

"ஆமாம், அவர் கூறியிருப்பது வாஸ்தவம்தானே! பெரிய செல்வத்திற்கு அதிபதிகளாய் இருப்பவர்கள் கையெழுத்து விஷயத்தில் அலக்ஷியமாக இருப்பதற்கில்லை!" என்ருர் ராஜாமணி.

"நான் இதையெல்லாம் என் ஆயுசிலே இதுவரை அனுஷ்டித்ததே இல்லை. யாராயிருந்தாலும் சரி, இங்கே ஒரு கையெழுத்துப் போடு என்ருல் கண்ணை மூடிக்கொண்டு போட்டுவிடுவேன்!" என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டான் ரமணி.

"நல்லதாக இருந்துவிட்டால் சரி; எக்குத் தப்பாகிவிட்டால் அப்போது ஒரேயடியாய் கண்ணை மூடிக்கொண்டுபோய்க் கொண்டே இருப்பீர்களாக்கும்!" என்று குத்தலாகக் கூறின சுதா, பத்திரத்தில் பதிந்திருந்த கண்களை எடுக்கவேயில்லை.

''சிமாட்டி சொல்லுவது பல விஷயங்களுக்கும் ஜாக்கிரதை யானது!'' என்று தாஸ் ஒத்துப் பாடினுர்.

''நம்பினோர் கெடுவதில்லை; அது நான்கு மறைத் தீர்ப் பல்லவா! நம்பிக் கெட்டவர்கள் இந்த உலகத்திலே இன்ஞர் என்று விரல்விட்டு எண்ணுங்கள் பார்க்கலாம்'' என்ருன் ரமணி.

''உங்கள் கண் முன்னுலேயே நான் ஒருத்தி இருக்கிறேனே! எண்ணுங்கள்...ஒன்று...'' என்று சொல்லிச் சிரித்தாள் சுதா.

''யாரை நம்பி நீ இப்போது எந்த விதத்தில் கெட்டு விட்டாய்?'' என்று கேட்டான் ரமணி.

''சொன்னல் உங்களுக்குக் கோபம் வரும். உங்களை நம்பிய தால் தான் இப்போது நம்முடனே ராகினி வந்திருக்கிருள்; மாமா வந்திருக்கிருர்; மிஸ்டர் தாஸும் புறப்பட்டிருக்கிருர்!'' என்று வெடுக்கெனக் கூறினுள் சுதா.

''என்னை நம்பியதாலா...புரியவில்லையே?'' என்ருன் ரமணி.

''புரியவே வேண்டாம்...புரிந்து கொள்ளாத வரைக்கும் க்ஷேமம்'' என்று சொல்லி அந்த விவாதத்திற்குப் புள்ளி வைத்த சுதா. ''அடுத்ததை எடுங்கள்'' என்று தாஸைப் பார்த்துக் கூறினுள்.

மூன்ருவது ரிக்கார்டாக ஒரே பக்கம் 'டைப்' செய்யப் பட்டிருந்த ஒரு காகிதத்தைப் பிரித்து நீட்டினுர் தாஸ்.

சுதா படிக்கவில்லை, தாஸ் குறிப்பிட்டுக் காட்டிய இடத்தில் கையெழுத்திட்டாள். அதன் பிறகு வரிசையாக தாஸ் ஒவ்வொரு பத்திரமாகப் பிரித்துக் கொடுக்க, படித்துப் பார்க்காமலேயே யாவற்றிலும் கையெழுத்துப் போட்டுக்கொண்டு வந்தாள்.

படித்தாலொழியக் கையெழுத்துப் போடாத சுதா இப்போது மளமளவென்று என்ன ஏது என்று விசாரிக்காமலேயே எல்லா தஸ்தாவேஜுகளிலும் கையெழுத்திடுகிருளே என்று மலைத்தார் ராஜாமணி. ரமணியின் மீதுள்ள ஆத்திரத்தில் சுதா இப்படி நடந்து கொள்கிருளா என்று அதிசயித்து சுதாவையே பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.

''இது சென்ற வருஷ ஐந்தொகைப் புள்ளி நிகரலாபம். ஒரு லக்ஷத்து, ஐயாயிரத்தி அறுபத்தி...'' என்று தாஸ் கூற முற்பட்ட போது ''கையெழுத்துப்போட வேண்டிய இடத்தைச் சொல்லுங் கள்'' என்ருள் சுதா.

அவள் குரலில் வெறுப்பு கலந்து தொனித்தது. ''இதோ... இங்கே'' என்று காகிதத்தில் ஓரிடத்தைக் குறிப்பிட்டார் தாஸ்.

கையெழுத்துப்போட முனைந்தாள் சுதாராணி. கதவைப் 'படா'ரெனத் திறந்து கொண்டு 'விர்'ரென ஒருவன் உள்ளே நுழைவதைக்கண்டு தலை நிமிர்ந்தாள் சீமாட்டி. உத்திரவு எதுவும் எதிர்பாராமல் சுதந்திரமாக அட்டகாசத்துடன் உள்ளே நுழைந்த அவ் வாலிபனை தாஸ் உள்பட அனைவரும் வியந்து பார்த்தார்கள்.

"அனுமதியில்லாமல் உள்ளே நுழைந்ததற்கு என்னை மன்னிக்க வேண்டும். அனுமதி கிடைத்த பிறகுதான் நான் உள்ளே நுழையலாம் என்று காத்திருந்தால் கோடீஸ்வரி அதில் கையெழுத்துப் போட்டிருப்பார். 'படிக்காமல், கிரஹிக்காமல் கையெழுத்துப் போடக்கூடாது' என்று பெரிய அம்மாள் புதிய சீமாட்டிக்கு அறிவித்துச் சென்றிருப்பதை நினைவு படுத்தவே குறுக்கிட்டேன். சீமாட்டி அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்" என்று கூறி மிக பவ்யத்தோடு ஒதுங்கி நின்றான்.

"ஏதாவது குடிகாரப் பேர்வழியா?" என்று முறைத்துப் பார்த்தான் ரமணி. அத்தை சொன்னது இவனுக்கு எப்படித் தெரியும் என்ற வியப்போடு பார்த்தாள் சுதா. இந்த அதிகப் பிரசங்கி யார் என்று ஆத்திரத்தோடு பார்த்தார் மிஸ்டர் தாஸ். முகத்திலே ஒரு அசாதாரணப் புன்முறுவலோடு எல்லோரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்த ராஜாமணி, "நீ யாரப்பா இதில் தலையிட?" என்று வாலிபனிடம் கேட்டார்.

"கடமையில்லாமல் எந்த மடையனும் முன்வரமாட்டான். எனக்குப் பொறுப்பு இருப்பதாலேயே குறுக்கிடுகிறேன்" என்று பைத்தியக்காரனைப் போல விறைத்து நின்றபடி முறைப்பாகக் கூறினான் அந்த மனிதன்.

பைத்தியமோ என்னவோ என்பது போல சுதாராணி ராஜாமணியைப் பார்த்துக் கண் சிமிட்டினாள். பிறகு மீண்டும் அதில் கையெழுத்துப் போடுவதில் முனைந்தாள்.

"சீமாட்டி! என்னை அலக்ஷியப்படுத்தாதீர்கள். காரணமில்லாமல் நான் குறுக்கிட வரவில்லை. நீங்கள் இப்போது கையெழுத்திட்டுக் கொண்டிருப்பது ஒரு வருஷத்திய ஐந் தொகைப் புள்ளி வரவு செலவு. ஆழ்ந்து கவனிக்க வேண்டிய ஒரு காரியமல்லவா?"

"கவனிக்க வேண்டியதைக் கவனித்த பிறகுதான் கையெழுத்திடுகிறேன்!" என்றாள் சுதாராணி. எதனாலோ அவனை அவள் அலக்ஷியப்படுத்தி வெளியே அனுப்பவில்லை.

"நிகர்லாபத்தைப் பார்த்துக்கொண்டால் போதுமா? அத் தொகை ரொக்க இருப்புக் கணக்கில் சரியாக இருக்கிறதா என்பதை நீங்கள் விசாரித்துக் கொண்டீர்களா?"

'இல்லை' என்று மனதிற்குள்ளே சொல்லிக்கொண்ட சுதா

'என்ன' என்று கேட்பதுபோல தாஸைப் பார்த்தாள். அவர் முகம் வெளிறி இருந்தது.

"நான் சொல்லுகிறேன் சீமாட்டி! நிகரலாபமாக லக்ஷம் ருபாய் கணக்கு காட்டுகிறதே ஒழிய, லக்ஷம் தம்பிடி ரொக்க இருப்பில் இல்லை. நிச்சயமாக எனக்குத் தெரியும்! ..'இருக்கிறது' என்று தாஸ் ஒருநாளும் கூறமுடியாது!'' என்றான் அவ்வாலிபன்.

''அதிகப் பிரசங்கி!'' என்று கோபத்தோடு எழுந்தார் தாஸ். ராஜாமணி அவரைத் தடுத்திருக்கா விட்டால் வாலிபனை அவர் நொறுக்கித் தள்ளியிருப்பார்.

''அவன் கூறுவது உண்மைக்குப் புறம்பானதாக இருந் தால் 'கிடக்கிறான் பைத்தியம்' என்று பேசாமல் இருப்பதுதானே நம் கௌரவத்துக்கு ஏற்றது!'' என்று ராஜாமணி கூறி தாஸை உட்கார வைத்தார்.

அதற்குப் பிறகு அதில் கையெழுத்துப் போட சுதா முயற் சிக்கவில்லை, நெருப்பில்லாமல் புகை வராது. வாலிபனைப் பார்த்தால் பைத்தியக்காரனாகவும் தெரியவில்லை. ரொக்க இருப்பு எந்த ருபத்தில் இருக்கிறது என்பதைக் கேட்காதது தன் தவறுதான் என்பதை உணர்ந்தாள் சீமாட்டி.

"தாஸ்! ரொக்க இருப்பு உங்களிடம்தானே இருக்கிறது?'' என்று கேட்டாள் சுதா.

''ஆமாம்...பாங்கியில் பத்திரமாக இருக்கிறது!'' என்றார் தாஸ்.

"பாஸ் புஸ்தகம் கொண்டு வந்திருக்கிறீர்களா? அதில் இன் றைய தேதிவரை வரவு செலவு பதியப்பட்டிருக்கிறதல்லவா?... அதை இப்படிக் கொடுங்கள்!''

தாஸ் தடுமாறினார். முகத்திலே மருட்சி மிகையாயிற்று. "அதை அனுப்பச் சொல்லியிருக்கிறேன். அவசியமானால் இப் போது ஒரு தந்தி கொடுக்கிறேன். அவன் சொல்லுகிறான் என்று நீங்களும்...'' என்று இழுத்தார் தாஸ்.

''நம்பிக்கைப் படாமல் அதைக் கேட்பதாக அர்த்தமில்லை. கணக்கு சோதனை ஒன்று வரும்போது ஆத்ம திருப்திக்காகப் பார்த்துக் கொள்வது ஒரு முறைதானே'' என்றாள் சுதா.

மறுபடியும் குறுக்கிட்டான் அந்த வாலிபன். "பாங்கியில் பண மிருந்தால் அதை பதிந்து வந்து உங்களிடம் கொடுத்திருக்க மாட்டாரா? சீமாட்டி! பாஸ் புஸ்தகத்தைப் பதிந்து அனுப்பு கிறேன் என்று கூறுவாரே ஒழிய அனுப்பமாட்டார். நிச்சயமாகச்

சொல்லுகிறேன்! பணம் பாங்கியில் இருந்தாலல்லவா பாஸ் புஸ் தகத்தில் அவர்கள் பதிவதற்கு!'' என்றான்.

"உங்கள் முன்னிலையிலே எனக்கு அவமானமா? அவனைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளாமல் விட்டு வைத்துப் பார்ப்பது நல்லதாக உங்களுக்குத் தோன்றுகிறதா?'' என்று பொதுப்படை யாக ஆத்திரத்தோடு கேட்டார் தாஸ்.

''தம்பீ, இப்படி வா!' என்றார் ராஜாமணி. வாலிபன் அவர் அருகே வந்து நின்றான்.

''தாஸிடம் கணக்குப்படி ரொக்க இருப்பு இல்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்?''

"தெரிந்ததினால்தான் கூறினேன். அவசியம் ஏற்படும் போது நான் உண்மையைக் கூறி குறுக்கிடவேண்டும் என்பது எனக்கு இடப்பட்ட உத்திரவு. அதன்படி நடந்து கொள் கிறேன்.''

''அவர்தான் பாஸ் புஸ்தகத்தைப் பதிந்து வாங்கி அனுப்பு வதாகச் சொல்லுகிறாரே !''

''அப்படி அவர் சொல்லுவது, இன்றல்ல நேற்றல்ல—மூன்று வருஷ காலமாக இதே வார்த்தைதான்!...நான் சொல்வதில் நம்பிக்கைப் படவில்லையென்றால் இதோ இவைகளைப் பார்த் துக் கொள்ளுங்கள்!'' என்று கூறி இரண்டொரு காகிதங்களை மோட்டி முன் வைத்துவிட்டு 'விர்'ரென வெளியே சென்றான்.

அந்தக் காகிதத்தைப் படித்துப் பார்த்த சுதாவின் கண்கள் சுபாவத்தை இழந்தன. வெகு கோபமாக தாஸைப் பார்த்து விட்டு ராஜாமணியிடம் அக்கடிதங்களைக் கொடுத்தாள்.

அவை யாவும் மிஸ்டர் தாஸ் அவர்கள், ஸிலோன் ஏஜண்டு என்ற முறையில் தலைமைக் காரியாலய நிர்வாகியான கோலா லம்பூர் முகர்ஜிக்கு எழுதிய கடிதங்களாக இருந்தன. இதே இருப்புத் தொகை விஷயமாகக் கேட்டு கோலாலம்பூரி லிருந்து தாஸ் அவர்களுக்கு கிடைத்த கடிதங்களுக்கு பதிலாக அவர் எழுதிய அக்கடிதங்களில் 'பணம் பாங்கியிலே இருக்கிறது. விரைவிலே பாஸ் புஸ்தகம் பதிந்து வாங்கி அனுப்புகிறேன்' என் பதே எல்லாவற்றிலும் இருந்தது. பத்து நாட்களுக்கு முன்பு கூட இதே சமாதானம் கூறி எழுதப்பட்டிருந்த கடிதத்தைக் குறிப்பாகப் பார்த்தார் ராஜாமணி.

''மிஸ்டர் தாஸ்...உங்கள் சமாதானம் எதுவும் எனக்கு வேண்டாம்! ...எனக்கு வேண்டியது பாங்கி பாஸ் புஸ்தகம். அது என் கைக்கு வந்து சேரும் வரையில் எதிலும் என் கை யெழுத்துப் போட இஷ்டப்படவில்லை. நீங்கள் போகலாம்!'

என்ருள் சுதாராணி. முகம் கொடுக்கக்கூட விரும்பவில்லை. வேறு புறம் திரும்பிக் கொண்டாள்.

எண் சாண் உடம்பும் ஒரு சாணுகக் குறுகி அவமானத்தைச் சுமந்து கொண்டு வெளியே போனுர் மிஸ்டர் தாஸ். அவர் முகம் பேயறைந்தது போல இருந்தது.

''கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்துப் போட வேண்டும் என்கிறீர்களே! இப்போது தெரிகிறதா!'' என்று ரமணியைக் குத்திக் காட்டினுள் சுதா.

ரமணிக்கு எதிர்த்துப் பேச எதுவும் வாயில்லாமல் போயிற்று!

''முதலில் அந்த வாலிபன் யார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவன் கையில் இக்கடிதங்கள் எப்படிச் சிக்கின என்பது தெரியவேண்டுமல்லவா? போதாததற்கு அவன் இதில் சிரத்தை காட்ட வேண்டிய அவசியத்தையும் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா?'' என்ருள் சுதா.

அவன் யாராக இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தார் ராஜாமணி. ஏதோ அனுமானித்தவர் போல அவர் அதரங்கள் 'ரூப்சந்த்' என்று முணுமுணுத்துக் கொண்டன.

''அவன் பெயர் ரூப்சந்த்...அப்படித்தான் நினைக்கிறேன்'' என்ருர் ராஜாமணி.

''ரூப்சந்த்!...எங்கோ நான் கேட்ட பெயராக அல்லவா இருக்கிறது?'' என்று ஞாபகப்படுத்திப் பார்க்க ஆரம்பித்தாள் சுதா.

அதே சமயம் மீண்டும் உள்ளே நுழைந்த அவ்வாலிபன், 'சிறிது நேரத்திற்கு முன்னல் நான் தங்களிடம் சற்று மரியாதைக் குறைவாக நடந்து கொண்டு விட்டேன். தாஸின் முன்னிலையில் நான் அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டியிருந்தது. சீமாட்டி! மன்னிப்பு பெறவே நான் மறுபடியும் வந்தேன். என் பெயர் ரூப்சந்த். தங்களது ஊழியரான முகர்ஜி அவர்களின் குமாரன். அப்பாவின் விருப்பப்படியே நான் நடந்து கொண்டேன். தவறிருந்தால்...'' என்று கூறி நிறுத்தினுன்.

''முகர்ஜியின் மகனு!'' என்று வியப்போடு அவனைப் பார்த்தாள் சுதாராணி.

''கெட்டிக்காரப் பையன்!'' என்று புகழ்ந்தான் ரமணி.

ஆனல் ராஜாமணியின் முகம் வாட ஆரம்பித்தது. ''பாவம்! சிறு வயது! நல்ல காளைப் பருவம்! ஆனல் தாஸின் முற்றிய பகைமைக்கல்லவா ஆளாகி விட்டான்'' என்று தனக்குள்ளே வருத்தப்பட்டுக் கொண்டார் அவர்.

17

சுதாவின் அறையை விட்டு ரூப்சந்த் வெளியே புறப்பட்டு விட்டான். அவனது கடமை முடிந்து விட்டது. ஆனால் ராஜாமணியின் கருத்து அவனை மேலும் நோட்டம் பார்க்க விரும்பியது.

தன் அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரூப், பின்னாலிருந்து யாரோ கூப்பிடுவது போல அறிந்து திரும்பிப் பார்த்தான். நிற்கும்படி ஜாடை காட்டிக் கொண்டே வந்து கொண்டிருந்தார் ராஜாமணி.

"ரூப்! உன்னோடு தனித்துப் பேசவே வந்தேன். உன் மூலம் எனக்கு சில விஷயங்கள் தெரிய வேண்டியிருக்கிறது. தாஸ் இத்தகைய தில்லு முல்லுகள் செய்து சுதாவை ஏமாற்றி விடுவார் என்று உன் அப்பா சந்தேகப்படக் காரணம் என்ன?" என்று கேட்டார்.

"ஏற்கனவே காலம் சென்ற பெரிய சேமாட்டியிடம் தாஸ் இதைப் போல நடந்து கொண்டிருக்கிறார். ஆனால் அது இதை விட அபாரமான மோசம்! அவர் ஒருதரம் இலங்கை எஸ்டேட்டுகளைப் பார்க்க வந்தபோது இதைப் போல கொழும்பு கணக்கு வழக்குகளையும், குத்தகைப் பத்திரங்களையும் அத்தையம்மாளுக்குக் காட்டி கையெழுத்து வாங்கினார். அத்தையம்மாள் யாரையும் மிக எளிதில் நம்பக் கூடியவர். காட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டு விடுவார். வரிசையாக அவர் கையெழுத்துப் போட்டுக் கொண்டு வரும்போது இடையே ஒரு காகிதத்திலும் கையெழுத்து வாங்கி விட்டார்! அது பின்னால்தான் தெரியவந்தது. மிக நாணயமாகவும், உண்மையாகவும், நம்பிக்கையோடும் அத்தையம்மாளின் சொத்து அபிவிருத்திக்குப் பாடுபட்டதற்காக சேமாட்டி மனமுவந்து கொழும்பு ஆஸ்தியில் ஒரு பகுதியை தாஸுக்குத் தானம் செய்திருப்பதாகக் குறிப்பிடும் சாஸனம் அது!

"அத்தையம்மாள் இறந்த ஒரு வாரத்திற்கெல்லாம் தாஸிடமிருந்து இந்தப் பத்திரம் அப்பாவின் கைக்கு வந்தபோது, அவருக்குத் தூக்கி வாறிப்போட்டது. அப்பாவிற்கு நம்பிக்கை ஏற்படவேயில்லை. அதாவது பெரிய சேமாட்டி, தானம் செய்யக் கூடிய இருதயமில்லாதவள் என்பதனாலல்ல; அவர் மிகுந்த இரக்க சுபாவமுடையவர். கொடுக்கக் கூடியவர்தான். ஆனால் தாஸ் அதில் குறிப்பிட்டிருப்பதுபோல எந்த அளவில் நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் தாஸ் இலங்கை எஸ்டேட்டைக் கவனித்து வந்தார் என்பதை நன்கு அறிவார்.

"எப்படியோ அத்தையம்மாளின் கையெழுத்து இதில் இருக்கிறது. செல்லுபடியாகக் கூடியது. அந்தப் படுமோசத்திலிருந்து எப்படி அந்த சாஸனம் செய்து கொடுக்கப்பட்ட சொத்

துக்களைக் கவர்வது என்று யோசித்தபோது சத்யம் ஒரு போதும் சாகாது என்பதற் கேற்றபடி ஒரு வழி புலனாயிற்று.

"அந்தப் பத்திரத்தை தாஸ் அவசரத்தில் டைப் அடித்திருக் கிறார் போலிருக்கிறது. 1951ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஏழாந்தேதி அன்று எழுதிக் கொடுக்கப்பட்ட சாஸனம் என்ன வென்றால்......" என்று அப்பத்திரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந் தது. அதில் குறிப்பிட்ட செப்டம்பர் மாதம் என்பது தவறு. ஆகஸ்ட் மாதம் என்று இருக்க வேண்டும். ஏனெனில் கொழும் புக்கு வந்திருந்தபோது சாஸனம்செய்து கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்த தேதியில் அத்தையம்மாள் மலாயாவில் இருந் தாள் என்று நிருபிக்க முடியுமாதலால் பத்திரம் செல்லாததாகப் போய்விடும். இதை வைத்துக் கொண்டு அப்பா கொழும்பு சென்று தாஸை மிரட்டினார். அவர் அழாக்குறையாக உடம்பு வேண்டாம் கை வந்தால் போதும் என்ற நிலையில் அப்பாவின் காலைப் பிடித்துக் கொண்டார். அவர் மன்னித்து விட்டார். அதன் மூலம் தாஸ் திருந்தி விடுவார் என்று அப்பா நம்பிவிட வில்லை. கேவல புத்தி எளிதில் நீங்காது என்பது அவருக்குத் தெரியும். சுதாவிடமும் அப்படி ஏதாவது செய்தாலும் செய்து விடுவார் என்றே என்னை அனுப்பினார்" என்று முடித்தான்.

"தாஸ் இப்படிப்பட்ட மோசக்காரனா!" என்று மலைத்தார் ராஜாமணி. இருந்தாலும் ரூப்சந்தை எச்சரிக்கை செய்ய அவர் விரும்பினார். "தம்பீ! ஏற்கனவே அப்பன் கெடுத்தான், இப் போது மகன் கெடுக்க வந்துவிட்டான் என்ற வயிற்றெரிச்சலில் ஏதாவது உனக்கு தீங்கு நினைத்தாலும் நினைப்பான். கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இரு" என்றார்.

'ஜாக்கிரதையாகவே இரு' என்ற கடைசி வாக்கியத்தைக் கேட்டுக் கொண்டே அங்கே வந்த காப்டன் கேதாரி, "என்ன மிஸ்டர் ராஜாமணி...! ஜாக்கிரதை ஜாக்கிரதை என்று எல்லோ ரையும் மிரட்டிக் கொண்டே இருக்கிறீர்களே! இந்தத் தம்பிக்கு என்ன ஆபத்து இப்போது ஏற்பட்டிருக்கிறது?" என்றார் சிரித் துக் கொண்டே.

நிஜத்தைச் சொல்ல ராஜாமணி விரும்பவில்லையோ என் னவோ, "கப்பல் யாத்திரை தம்பிக்குப் புதிதா? அதுதான் வாடைக்காற்று உடம்புக்கு ஆகாது. அதனால் ஜாக்கிரதையாக இரு என்று சொல்கிறேன்" என்றார்.

"என்றைக்கும்விட இன்றைக்குக் குளிர் அதிகமாக இருக் கிறது, இல்லையா?" என்றார் காப்டன். ஆமாம் என்று ஆமோ திப்பது போலத் தலையசைத்தார் துப்பறிபவர்.

"அதனால் இன்றைக்கு எல்லாப் பிரயாணிகளுக்கும் ஒரு டின்னர் வைக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். மாலை ஏழு மணிக்கு. நீங்கள் அவசியம் வந்துவிட வேண்டும்..." என்றார்.

"உங்கள் விருந்து என்ருல் நான் வராமல் இருக்க முடியுமா? ஒருமணி நேரம் முன்ணுலேயே வந்துவிடுகிறேன். சரி தானே?" என்ருர் ராஜாமணி. இருவரும் பிரிந்தார்கள்.

* * *

அன்று மாலை காப்டன் அளித்த அந்த விருந்துக்கு அநேகமாக எல்லோரும் வந்திருந்தார்கள். ஆனுல், ஆஸ்திகத்தில் ஊறிப்போன மதுசூதனரும் சித்தியம்மாளும் மாத்திரமே வரவில்லை. அம்மாவும் மாமனும் போகாத விருந்துக்கு பட்டாபி வர விரும்புவாஞ?

வாடைக்காற்று அதிகமாயிருப்பதால் அல்லவா காப்டன் விருந்து வைக்க ஆசை கொண்டார்! அதஞல் வாடைக் காற்றுக்கேற்ற விருந்தாகவே அது இருந்தது. பழக்கமுள்ளவர்களுக்காக பலவித மதுபானங்கள் தயாராக இருந்தன. மற்றும் அதற்கான சிற்றுண்டிகளும் இருந்தன.

அந்தக் கப்பலிலே யாத்திரை செய்யும் பிரயாணிகளிடையே எவரெவர் யாரோடு சிநேகம் கொண்டுள்ளார்கள் என்பதை அங்கே பார்க்க முடிர்தது. ஷைலோ–ராகினி, ரமணி–சுதா, ஜகத்–டாக்டர், காப்டன்–துப்பறியும் நிபுணர்... இப்படியாக ஜோடியாக அமர்ந்திருந்தார்கள். ஆனுல், யாரோடும் கலந்து கொள்ளாமல் தனியே உட்கார்ந்திருந்தவர்கள் இருவர். வேறு யாருமில்லை: ரூப்சந்த் ஒரு கோடியிலும் தாஸ் மற்ருெரு கோடியிலும் ஏகாங்கிகளாக உட்கார்ந்திருந்தனர்.

ரூப்சந்த் எப்போதும் போல சாதுவாக உட்கார்ந்திருந்தான். துப்பறியும் ராஜாமணி காப்டனேடு பேச்சில் ஈடுபட்டிருந்தாலும் அவரது கழுகுப் பார்வை நாலா பக்கமும் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அந்தப் படுமோசக்காரஞன இலங்கை ஏஜண்டு விழுங்கி விடுவது போல ரூப்சந்தை முறைத்துப் பார்த்துக் கொண்டிருப்பதை அவர் கவனிக்கத்தான் செய்தார்.

பிறகு அவரது கவனம் ராகினி பக்கம் திரும்பியது. அவள் வெகு அடக்க ஒடுக்கமாய் எதிரே இருந்த ஷைலோவோடு சன்னமான குரலில் பேசிக் கொண்டிருப்பதைப் பார்க்க அவருக்கு வியப்பாக இருந்தது. நாலு பேர் கூடியிருக்கும் இந்த சமயத்தில் சண்டித்தனம் செய்து சுதாவின் வம்புக்குப் போகாமல் இருக்கிருளே, நல்ல புத்தி வந்து விட்டது போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டார். ஆனுல், அவர் நினைப்பது போல ராகினி திருந்தி விடவில்லை. அவரும் காப்டனும் இருக்கிருர்களே என்று பயந்து தன் சுயரூபத்தைக் காட்டாமல் இருக்கிருள் என்பது அவருக்கு அப்போது தோன்றவில்லை.

சுதாராணி என்ன செய்து கொண்டிருக்கிருள் என்று கவனித்தார். அவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது. மேஜை மீது இருக்கும் பீர் பாட்டிலையும் ரமணியின் முகத்தையும் வியக்கத்தக்க பொருள் போல மாறி மாறிப் பார்த்துக் கொண்டு, ஏதோ ஒரு பயங்கர காரியத்தை ரமணி செய்து கொண்டிருப்பது போலவும் அதன் முடிவு என்ன ஆகுமோ என்று பயந்து போய் இருப்புக் கொள்ளாமல் உட்கார்ந்திருப்பது போலவும் சீமாட்டி சுதாராணி தவியாய்த் தவித்துக் கொண்டிருந்த காக்ஷி பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது.

வெகு ஆனந்தமாகச் சப்புக் கொட்டிக் கொண்டு சுவைத்துக் கொண்டிருந்தான் ரமணி. அதை அவன் குடித்துக் கொண்டிருந்த போது அவனது முகக் களை மந்தகாசத்தோடு விளங்கியது.

ஆச்சரியமான ஒரு மந்திர ஜாலவித்தையைப் பார்ப்பது போல ரமணியைக் கவனித்துக் கொண்டிருந்த சுதா, 'குடித்தால் கூப்பாடு போட்டு தரையில் உருண்டு புரளுவார்கள் என்பார்களே, இவராஞல் இடித்த புளி போல உட்கார்ந்திருக்கிருரே!' என்ற வியப்பில், "உங்களுக்கு தலை சுற்றி வரவில்லையா?" என்று சிறு குழந்தை போலக் கேட்டாள். குடித்தறியாத பெண்ணல்லவா அவள்!

"அடி பைத்தியமே! இது உடம்புக்கு ரொம்பக் குளுமை. 'டானிக்' போல..." என்று சிரித்துக் கொண்டே மீண்டும் கிளாஸ் டம்ளர் நிறைய ஊற்றி குடிக்கலாஞன்.

"என்ன வேலை இது!" என்று செல்லமாகக் கண்டிப்பது போல, அவனது கையைப் பிடித்துக் கொண்ட அவள், "அதிகமாகச் சாப்பிட்டுவிட்டு ஆட்டம் போட்டு உளற ஆரம்பித்தீர்களோ, ஓடியே போய் விடுவேன். நீங்கள் இருக்குமிடத்தைத் திரும்பிக் கூடப் பார்க்கமாட்டேன்" என்ருள்.

இன்ஞெரு கிளாஸ் ரமணி குடித்தால் சுதா எழுந்து ஓடியே போய் விடுவாள் போலிருக்கிறது என்று ராஜாமணி நமட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டபோது, "ஏ...பாய்" என்று சட்டை செய்பவனை யாரோ கூப்பிடும் முரட்டுத்தனமான குரல் செவிட்டில் அறைவது போல விழவே திரும்பிப் பார்த்தார். வேறு யாருமில்லை. மிஸ்டர் தாஸ் அவர்கள்! பீர் போதாதென்று பிராந்தியை சமஷ்டி செய்து கொள்ள பிராந்தி தேவைப்படத்தானே செய்யும்?

"என்ன மிஸ்டர் ராஜாமணி! மற்றவர்களை நீங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் நான் உங்களை வேடிக்கை பார்க்க வேண்டுமா?" என்று கேட்டு அவரது கவனத்தைத் தன்பால் இழுத்துக் கொண்ட காப்டன், "பாட்டிலில் மிச்சமிருக்கிறதே" என்ருர்.

"இங்கு பேருக்குத்தானே குடிக்கிறேம். பிறகு..." என்று இழுத்தார் ராஜாமணி.

"உங்களை எனக்குத் தெரியாதா? நாலு பேருக்கு மத்தியில் நல்லதனமாக நடந்து கொண்டு......"

"அதில்லை காப்டன்! சென்னையில் மதுவிலக்கல்லவா! அதனுல்தான் நீங்கள் கூப்பிட்டதும் சரி என்றேன். ஒரே ஒரு நாள் மட்டும் ஆசை தீரக் குடிக்க வேண்டும் என்று இருந்தது. கொழும்பிலே நேரம் கிடைக்கவில்லை..."

"இப்போது கிடைத்து விட்டதல்லவா?...நான் கூட ஏன் இங்கே அதிகம் குடிக்கவில்லை தெரியுமா? இன்னும் சில நிமிஷங்கள் மரியாதைக்காக இங்கே இருந்துவிட்டு என் அறைக்குப் போய் ஆசை தீருமட்டும் சாப்பிடலாம் என்று! ஐந்து நிமிஷங்கள் ஆகட்டும்...நாம் போய்விடலாம்" என்ருர் காப்டன்.

"ஸ்பெஷலாக என்ன வாங்கி வைத்திருக்கிறீர்கள் காப்டன்?" என்று கேட்டார் ராஜாமணி.

"உங்களுக்கு எது பிடிக்கும் சொல்லுங்கள்? பெர்னுட்ஷாவா?...ராவுத்தரா?...ரோமரா? என்ஜினு...இல்லே அபிராமியா?"

"புதுப்பெயராக இருக்கிறதே!"

"இது தெரியாதா? அப்படியானுல் நீங்கள் பெரிய மனிதர்கள் கோஷ்டிக்கு லாயக்கில்லை. இப்பவாவது தெரிந்து கொள்ளுங்கள். பெர்னுட்ஷா என்ருல் சாராயம், ராவுத்தர் என்ருல் பீர். ரோமர் ரம், என்ஜின் ஜின், அபிராமி பிராந்தி!" என்று சொல்லிச் சிரித்தார் காப்டன்.

அதே சமயம் யாரோ நாற்காலியை இழுக்கும் சப்தம் கேட்டது. திரும்பினுர்கள். டாக்டரும் ஜகத்தும் காப்டனுக்கு வந்தனம் செலுத்திவிட்டு அந்த ஹாலை விட்டுக் கிளம்பினுர்கள்.

பிறகு ஒருவர் பின் ஒருவராக அந்த இடம் விட்டு நகரவே கூட்டம் குறைந்தது. ராஜாமணியைக் கூட்டிக்கொண்டு காப்டன் தன் அறைக்குப் போய்விட்டார்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தையே இத்தனை நாழி எதிர்பார்த்த ராகினி இடி இடியென்று சிரித்தாள்.

"யார் இப்படிச் சிரிக்கிருர்கள்!" என்று திரும்பிப் பார்த்தாள் சுதா.

"ஏன் சிரிக்கிருய் ராகினி?" என்று கேட்டுக் கொண்டிருந்தாள் ஷைலோ.

''ஏன் சிரிக்கிறேனு? நான் சிங்கப்பூர் போய் இறங்கிய உடனே மறு கப்பலில் சென்னை புறப்பட்டு விட்டால் ருபாய் பத்தாயிரம் தருவதாக ஒருவர் சொன்னதை நினைத்துக்கொண்டேன்'' என்று மேலும் உரக்கச் சிரித்தபடி ராகினி தன்னை ஓரக் கண்ணுல் பார்ப்பதை சுதா கவனித்தாள்.

அந்த வார்த்தைகள் அவளுக்குச் சுருக்கென்று தைத்தன ராகினி வம்புக்கிழுக்க ஆரம்பித்து விட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டதும் சுதாவிற்கு வயிற்றைக் கலக்கியது. மானம் பறி போக ஆரம்பித்திருக்கும் இந்தச் சமயம் யாரெல்லாம் இங்கே இருக்கிருர்களோ தெரியவில்லையே என்று நாலாபுறமும் பார்த்தாள். ஒரு மூலையில் ருப்சந்த் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தான். அவனைத் தவிர வேறு யாரும் அங்கில்லை.

மேலும் அங்கிருந்தால் ராகினியின் அவமானப் பேச்சுக்கு ஆளாகவேண்டி வந்துவிடுமோ என்று பயந்த அவள் ''நாம் கிளம்பலாமா?'' என்று தன் கணவனை அவசரப் படுத்தினுள்.

ரமணியின் உள்ளே தேவாமிர்தமல்லவா இருக்கிறது. ''ராகினியைக் கண்டதும் உனக்குக் கிலி பிடித்து விட்டதாக்கும்! நீ இப்படிப் பயப்படுவதால்தான் அவளும் நம்மை ஓடஓட விரட்டுகிருள்!'' என்ருன் ரமணி.

இந்தப் பேச்சு ராகினியின் காதில் விழுந்து விட்டதுபோல இருக்கிறது. கடகடவென்று பலமாகச் சிரிக்க ஆரம்பித்தாள். ''பேச்சைக் கேட்டாயாடி ஷைலோ! நான் ஓடஓட விரட்டுகிறேனும். நீயே சொல்லு. அந்த மகா வீரர் சொல்வதுபோல நான் அவர்களை விரட்டுகிறேனு அல்லது என்னை அவர்கள் விரட்டுகிருர்களா? அநியாய உலகமடி இது! இந்த லெட்டரை நீயே வாசித்துப் பாரு. அப்போது தெரியும் உண்மை. சீமாட்டியின் லெட்டர். மைனு கண் சிமிட்டுவதுபோல அதோ பார்க்கிருளே அந்தக் கோடீஸ்வரி எழுதினது! நான் தொந்திரவு கொடுக்காமல் சென்னை திரும்பினுல் பத்தாயிரம் கொடுக்ருளாம்?'' என்று நையாண்டியாக மேலும் உரக்கச் சிரித்தாள் ராகினி.

'வெறும் வாயை மெல்லுபவளுக்கு அவல் அகப்பட்டது போல' என்ன பைத்தியக்காரத்தனம் செய்து விட்டோம் என்று புழுங்கினுள் சுதா. ஏனெனில் ராகினி குறிப்பிட்ட லெட்டர் சுதா. எழுதியதுதான். முதல் நாளிரவு ஏதோ லெட்டர் எழுதி ராகினி அறைக்குள்ளே கதவிடுக்கு வழியாகப் போட்டாள் அல்லவா?

ராகினியின் இடும்புப் பேச்சு வளர்ந்து கொண்டே போயிற்று. ''ஷைலோ! அந்தச் சீமாட்டி இருக்கிருளே, அவளுக்கு பிறருடைய காதலர்கள் என்ருல் கனகுஷி. காசைக்

காட்டிக் கடிவாளம் போடுவாள்!'' என்று பரிகசித்துப் பேசுவதை காது கொண்டு கேட்கச் சகியாதவள் போல், ''வரும் போது வாருங்கள்; நான் போகிறேன்'' என்று ரமணியிடம் சொல்லிவிட்டு 'விர்'ரெனக் கிளம்பினாள். அதைப் பார்த்து ஹாலே அதிரும்படி ராகினி சிரித்த சிரிப்பு அவளை பின்னியைப் பிடித்து வேகமாகத் தள்ளுவது போலிருந்தது.

அந்த நையாண்டியை ரமணியால் பொறுக்க முடியவில்லை. கண்கள் சிவந்து பிதுங்கிப்போய் இருந்தன.

'உன் மிரட்டலுக்கெல்லாம் நான் பயந்தவளில்லை!' என்பது போல ரமணியை முறைத்துப் பார்த்தாள் ராகினி. பிறகு ஷைலோ பக்கம் திரும்பி, ''ஷைலி! அந்தப் பெரிய மனிதர் யார் தெரியுமா? தேனீ பார்த்ததில்லை...தேனீ... அதையும் மிஞ்சிப் போனவர்! காதல் என்று பசப்பி கன்னி வேட்டை ஆடுவார்! காசுள்ளவளைக் கண்டுவிட்டால் காலைக்கூடப் பிடிப்பார்! அவர் முகத்தைப் பார்த்தாலே நீ தெரிந்து கொண்டிருப்பாயே...!'' என்று உரக்கவே கூறினாள்.

அதைக் கேட்டு ஆத்திரப்பட்டவனாய், உட்கார்ந்திருந்த நாற்காலியை வேகமாகப் பின்னுக்குத் தள்ளி எழுந்தான் ரமணி. எதிரே கண்ணாடி டம்ளரில் மிச்சமிருந்த பீரை ராகினியை நோக்கி வீசினான்.

பெண்புலி முகத்தைத் துடைத்துக் கொண்டு சீறி எழுந்தது. நடையில் ஒரு துரிதத்தோடு ரமணியை நோக்கிப் பாய்ந்து வந்தாள் ராகினி.

என்ன ஆகுமோ என்று பதைபதைத்தான், பத்திரிகை படித்துக் கொண்டிருந்த ரூப்சந்த். ஆனால், ஷைலோ நிலைமை மோசமாவதற்கு முன் முந்திக் கொண்டு, ராகினியைப் பிடித்திழுத்து வந்து நாற்காலியில் உட்கார வைத்தாள். அவளை அடக்கப் பட்ட பாடு பெரும்பாடாகி விட்டது. இருந்தாலும்கூட ராகினியின் முணுமுணுப்பு அடங்கி விடவில்லை. ரமணியை சுட்டெரித்து விடுபவள் போல பார்த்துக் கொண்டிருந்தாள். ரமணியும் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு இமை கொட்டாது அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இருவரையும் ஒரே இடத்தில் இருக்கவிட்டால்தானே வம்பு வளரும் என்று நினைத்த ஷைலோ, ''ராகினி! வா. நாம் போகலாம்'' என்று அவளை அங்கிருந்து கிளப்பப் பார்த்தாள். லேசுப்பட்டவளா அவள்! ஒரு சிலும்பு சிலும்பினாள். ''ரொம்பவும் தான் என்னை அடக்குகிறாயே! அவன் மனுஷனில் சேர்த்தியா.. ஆசை காட்டி மோசம் செய்தவன்! மணலை அள்ளிக் கையிலே கொடுத்து மண் வீடு கட்டச்சொல்லி மண்

ணோடு மண் ஆக்கியவன்! மனச்சாட்சியை விற்று மங்கையின் பின்னால் ஓடி வந்தவன்! உயர்ந்த ரகத் துணியில் சட்டையும் பைஜாமாவும் போட்டிருக்கிறனே என்று மயங்காதே ஷைலி! ஒரு காலத்தில் கிழிந்த நாலு முழம் வேஷ்டியைக் கட்டிக் கொண்டு ரஸ்தாவெல்லாம் புரண்டு கொண்டிருந்தவன். அப்போது வீதியில் போகும் நாய்கூட இவனைச் சீண்டினதில்லை! என்னவோ, அது விதியோ அல்லது மதியற்ற செய்கையோ மனுஷனுக்கு மனுஷன் காட்டுகிற பச்சாத்தாபத்தைக் காட்டிக் னேன். அவன் எனக்கு சம்பாதித்துப் போட வேண்டியது போக, நாளெல்லாம் நான் உழைத்து என் வாய் வயிற்றை கட்டி அவனை போஷித்தேன்! இப்போது அவன் சீமாட்டியின் கணவன்! காசு கொடுத்து அவளால் வாங்கப்பட்ட ஆண் யந்திரம்! அவன் முகத்தைப் பாரு... பாரடி ஷைலி!''

''ராகினி! மரியாதையாய் பேசு!'' என்றுன் கத்தினுன் ரமணி.

''மரியாதை வேண்டுமா!'' என்று பரிகாசம் கலந்து பேய்ச் சிரிப்புச் சிரித்தாள். ''மரியாதை! வியவஸ்தை கெட்டவனுக்கு மரியாதை! நீ மரியாதைக் காரனுனல் இத்தனை நேரம் மாண்டு போயிருக்க வேணும்! ஒரு ஸ்திரீயை ஏய்த்துப் பிழைக்க மரியாதை வேறு வேணுமா? எதற்காக மரியாதை? என் வாழ்விலே மண்ணைத் தூவியதற்காகவா?''

''உன் மனேபீஷ்டத்திற்கு நான் ஒருபோதும் இடம் கொடுத்ததில்லை. நீயாக பிரமை பிடித்து என் பின்னே திரிந்தாய்!''

''அயோக்யப் பேச்சு!'' என்று சீறி எழுந்தாள் ராகினி. ''பிரமை பிடித்தவன்போல் என்னைச்சுற்றிச் சுற்றிவந்தது நீயா நானு? 'பட்டுப்போன என் வாழ்விற்குப் பசுமை காட்டிய பைங்கிளியே! என்று பசப்பித் திரிந்தது நீயா நானு? 'நீ இல்லாவிட்டால் என் வாழ்வே பாழாகிவிடும்!' என்று கெஞ்சிப் பேசி நான் கொடுத்த காசைக்கொண்டு படாடோபமாகத் திரிந்தது நீயா நானு? 'அப்சரசும் அபரஞ்சியும் உன் கால் தூசிக்கு ஈடாவார்களா?' என்று சொக்கித் திரிந்தவன் நீயா நானு? 'தெரிந்த இடத்தில் கை காட்டினுல் தினமும் உழைத்து திரண்ட பணம் தேடித்தருவேன்' என்று சொல்லிக் கெஞ்சியது நீயா நானு? 'வேலை கிடைத்தால் வேதனையில்லாமல் வாழலாம்!' என்று வேஷமிட்டுக் காரியத்தைச் சாதித்துக் கொண்டது நீயா நானு?' அன்பையும் தூய பிரேமையையும் கொட்டி உன்னை ஆளாக்கிவிட்ட பேதை ஒருவள் இருக்க இடையே குறுக்கிட்டவளின் பவிஷையும் பகட்டையும் பார்த்துப் பரவசமடைந்து பரம துரோகம் செய்தது நீயா நானு? பரக்க விழிக்காதேடா பாவி! பதில் சொல்லு! சொல்ல முடியாது! சொல்வதற்கு யோக்கியதை இருந்தால்தானே?''

இடி இடித்தமாதிரி கூறிவிட்டு முகத்தை வெடுக்கென்று ஷைலோ பக்கம் திருப்பிக் கொண்டாள். ராகினியின் சொல் லம்புகளால் தாக்கப்படும் ரமணியைப் பார்த்துக் கொண்டிருந்த ஷைலோ ராகினி பக்கம் திரும்பினுள்.

"பேச்சை அடக்கு ராகினி! நடந்தது நடந்து விட்டது. உன்னைப் போல ஒரு அழகான பெண்ணைப் புறக்கணிக்க இந்தப் பரந்த உலகம் கண்ணை மூடிக்கொண்டு விட்டதா என்ன! உணர்ச்சியை சாந்தப் படுத்திக் கொள்ளமாட்டாயா?" என்று கூறி அவளது வாயை அடைக்க ஷைலோ எவ்வளவோ பாடு பட்டாள்.

"திராவகங்களைக் கொண்டு உலோகத்தைக் கரைப்பது போல கண்களிலே கண்ணீர் கொண்டு என் மனதைக் கரைய வைத்தானே பாவி, இவனை உயிரோடு விட்டு வைத்து சுக போகத்திலே வாழ இடமாக்கித் தரச்சொல்லுகிருயா ஷைலோ? ஒருக்காலும் மாட்டேன். இவனைப் போன்ற நயவஞ்சகன் இந்த லோகத்தில் இருக்கவே கூடாது. ஒழிந்தால் யாரும் இவனுக்காகச் சொட்டுக் கண்ணீர் கூடச் சிந்த மாட்டார்கள். பகை, வர்மம் அத்தனையும் காட்டி இவனைப் பழிக்குப்பழி வாங்காமல் விட்டுவிடுவேன் என நினைக்காதே ஷைலி! எப்போது பழி வாங்கலாம் என்று கருவிக் கொண்டிருந்தேன். சந்தர்ப்பம் கிட்டி விட்டது! நல்ல சந்தர்ப்பம் ஷைலோ, நல்ல சந்தர்ப்பம்! அவன் எங்கு ஓடி ஒளிந்தாலும் இன்று என் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளாமல் விடப்போவதில்லை."

அவளது பேச்சு மேலும் மேலும் உக்ரமடைந்தது. தன் இடையிலிருந்து சடாரென கைத்துப்பாக்கி யொன்றை வெளியே எடுத்தாள் அவள். ரமணியை நோக்கி அது திரும்பியது.

"ஐயோ...! ராகினி! வேண்டாம்!" என்று பதறினுள் ஷைலோ.

அவளது கையிலே இருக்கும் துப்பாக்கியைப் பிடுங்கி விடலாம் என்று துள்ளி ஓடி வந்தான் ரூப்சந்த்.

இமைப் பொழுது, கண்மூடிக் கண் திறப்பதற்குள் துப்பாக்கியின் குதிரையை ராகினி இழுத்து விட்டாள்.

"ஆ!" என்று வீறிட்டான் ரமணி. "அடி பாவி!" என்று சத்தமிட்டாள் ஷைலோ. ரமணியை நோக்கி ஓடினுன் ரூப்சந்த்.

நல்லவேளை; அவள் சுடப்போகும் சமயத்தில் ரமணி ஒரு பக்கமாகச் சாய்ந்து கொடுத்ததால், பாய்ந்த குண்டு அவனது தொடையைத் துளைத்திருந்தது. குண்டுபட்ட காயத்திலிருந்து ரத்தம் பீறிடாமல் கைக் குட்டையால் அழுத்திப் பொத்திக்

கொண்டிருந்தான் ரமணி. ரத்தம் கசிந்து கொட்டி, கைக்குட்டை ரத்தத்தில் தோய்ந்து கீழேயும் வழிந்தது.

திக்பிரமை பிடித்தவள்போல எதுவுமே செய்யத் தோன்ருமல் நின்றுகொண்டிருந்தாள் ஷைலோ. நடந்ததை ராஜாமணியிடம் கூற நினைத்து ருப்சந்த் விரைந்தான்.

"இப்படி வா ருப்சந்த்!" என்று வேதனையைத் தாங்கியபடி அருகில் கூப்பிட்டான் ரமணி. "எங்கேயும் நீ போகாதே! கொஞ்சம் இரு" என்ருன். அப்போதும் கைக்குட்டையால் குண்டு பட்ட இடத்தை இறுக அமுக்கிக் கொண்டிருந்தான்.

"ருப்! இந்த விஷயத்தைப் பற்றி எதுவும் இப்போது நீ கலவரப் படுத்தாதே. ஆண்டவன் புண்ணியத்தில் நான் உயிர் தப்பிவிட்டேன். வெளியே தெரிந்தால் பெருத்த அவமானம்! கேலிக்கிடமாகும்! எல்லோருக்கும் தெரிந்து இங்கே கூட்டம் கூடிவிட்டால் நானும் சுதாவுமே அவமானத்தால் தலை குனிய நேரிடும். அதனுல்... அதனுல்..." வலி பொறுக்க மாட்டாதவன் போல பேச்சை நிறுத்திப் பற்களைக் கடித்துக் கொண்டான்.

சிறிது நேரம் வெறிச்சிட்டு ரமணியைப் பார்த்துக் கொண்டிருந்த ராகினி பைத்தியம் பிடித்தவள்போலச் சிரித்தாள்.

சிரிப்பு!.. ஒரே சிரிப்பு! பேய்ச் சிரிப்பு! ஏற்கனவே சஞ்சலம்: சுரந்து கொண்டிருக்கும் உதிரத்தைக் கண்ட ரத்த மயக்கம். ராகினியின் கையிலிருந்த துப்பாக்கி தானுக நழுவிக் கீழே விழுந்தது. அதைக் காலால் எட்டி உதைத்த அவள், "ரமணி!... ரமணி!...பாவி நான் உன்னைக் கொன்று விட்டேனே!" என்று ஓடிவந்து ரமணியைக் கட்டிக் கொண்டாள், அழுதாள், குமுறினுள், முத்தமிட்டாள். பிறகு எழுந்து நின்று கொண்டு மருள மருள விழித்தாள். "என்னை விடுங்கள்! என்னைப் போக விடுங்கள்... கடலில் விழுந்து செத்துப் போகிறேன்! என்னை விடுங்கள்!" என்று கத்திக் கொண்டே ஓட ஆரம்பித்தாள் ராகினி.

"ஷைலோ! அவளைப் பிடி. போக விடாதே!" என்று கத்தினுன் ரமணி. ஷைலோ அவளை இறுகப் பிடித்துக் கொண்டாள். ராகினி என்ன திமிரியும் ஷைலோ விடவில்லை.

"ஷைலோ! அவளைக் கூட்டிக் கொண்டு உன் அறைக்குப் போ... அவளைக் கத்த விடாதே... ஓடிப்போகவும் விடாதே. அகால நேரம்... விடியட்டும்... பிறகு பார்க்கலாம். இந்தத் தகவலை யாருக்கும் சொல்லாதே. அவளை இந்த இடத்திலிருந்து கூட்டிக் கொண்டுபோய்விடு ஷைலோ!" என்று ரமணி கெஞ்சினுன்.

ராகினியைக் கட்டிப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே போனுள் ஷைலோ.

''ரூப்! உனக்கும்தான் சொல்லுகிறேன். இப்பொழுது நடந்தது மானக்கேடான விஷயம். நகைப்பிற்கிடமான செய்கை. இந்த இரவிலே இதைக் கூறிக் கலவரப்படுத்த வேண்டாம். சுதாவிற்குக்கூட இப்போதைக்குத் தெரிய வேண்டாம். விடிந்து ஆகவேண்டியதைப் பார்த்துக் கொள்ளலாம். ஓடு. ஓடிப்போய் டாக்டர் சத்யத்தை அழைத்து வா. விஷயத்தை அவரிடம் கூடச் சொல்ல வேண்டாம். நான் பக்குவமாகச் சொல்லிக் கொள்ளுகிறேன். போ...போய் டாக்டரை அழைத்து வந்துவிடு...''

ரமணி கூறியதற்கு தலையசைத்து டாக்டரைத் தேடி ஓடினான் ரூப்சந்த்.

18

ஆத்திரத்தாலும் வேதனைத் துடிப்பிலும் மாபாதகச் செயலைச் செய்து விட்டது போல அலறி அழுத ராகினியை ஷைலோ தன் அறைக்குக் கூட்டிச் சென்றாள். டாக்டரை அழைத்துவரச் சென்ற ரூப்சந்த் அவரது அறையிலே அவரைக் காணாமல் எங்கிருப்பார் என்று கப்பல் முழுதும் தேடி வந்தான்.

எல்லா இடங்களிலும் தேடியாகி விட்டது, டாக்டர் சத்யத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் இந்த அகால வேளையில் எங்கே சென்றிருப்பார்? வேறு யாருடைய அறைக்குப் போயிருப்பார்?...தோழர் ஜகத் அவருக்குப் பிடித்தமானவராயிற்றே, ஒருக்கால் அங்கே இருப்பாரா?

ஜகத் இருந்த அறையை நோக்கி ஓடினான் ரூப். அந்த அறை திறந்திருந்தது. ஆனால் ஜகத்தையும் காணவில்லை. டாக்டரும் அங்கே இல்லை.

தேடவேண்டிய இடம் ஒன்றே ஒன்றுதான் பாக்கி. சுதாராணியின் அறையிலே டாக்டர் பேசிக் கொண்டிருப்பாரா? இதில் நம்பிக்கை இல்லை. அர்த்த ராத்திரியில் தனிமையாக இருக்கும் ஒரு யுவதியிடம் அன்னிய ஆடவனுக்கு என்ன அவசியமான வேலை இருக்கப் போகிறது? சுதாராணி இடம் கொடுப்பாளா?

ரூப்சந்த் யோசித்தான். அனுமானங்களுக்கும் தயக்கங்களுக்கும் இப்போது இடமில்லை. எதற்கும் சீமாட்டியின் அறையையும் பார்த்து விடலாம் என்ற நினைப்போடு கப்பலின் இரண்டாம் தளத்திற்கு ஏறினான்.

என்ன ஆச்சரியம்! டாக்டர் சத்யம் எதிர்கொண்டு இறங்கி வந்தார். அவரைக் கண்டதும் கடவுளைக் கண்டு விட்டது போல இருந்தது ரூப்சந்திற்கு.

"டாக்டர்! கால் மணி நேரமாக உங்களைத்தான் தேடி அலை கிறேன். சீக்கிரம் என்னைப் பின்பற்றி வாருங்கள். ரொம்பவும் ஆபத்தான விஷயம்" என்று ருப்சந்த் பதறியபோது டாக்டர் கலவரமடைந்தார்.

"யாருக்கு என்ன ஆபத்து தம்பி?"

"இப்போது கூறுவதற்கு நேரமில்லை. என்னோடு வந்தால் தெரிந்து கொள்வீர்கள். சீக்கிரம் வாருங்கள்!" என்று கூறிக் கொண்டே வந்த வழியே திரும்ப விரைந்தான் ருப்.

பதட்டமடைந்த டாக்டர் பின்தொடர்ந்து ஓடினார். ரமணி இருந்த இடத்தை அவர் அடைந்த போது, ரமணியின் காலிலே சுற்றப்பட்டிருந்த கைக்குட்டை ரத்தம் தோய்ந்து இருப்பதையும் மயக்கமடைந்த நிலையில் சாய்மான சோபா ஒன்றில் ரமணி கண்மூடிக் கிடப்பதையும் கண்டு டாக்டர் திக்பிரமை யடைந் தார். அருகே சென்று நாடியைப் பிடித்துப் பார்த்த பிறகுதான் அவர் மனம் சமாதானமடைந்தது.

"யாராவது சுட்டு விட்டார்களா?" என்று பரபரப்போடு கேட்டார் டாக்டர்.

"ஆமாம்!...விபரம் பின்னால் கூறுகிறேன். சீக்கிரம் ஆக வேண்டிய சிகிச்சையைக் கவனியுங்கள்" என்று அவசரப்படுத் தினான் ருப்.

"ரமணியை என் அறைக்குக் கொண்டு போனால்தான் நல்லது. நீ தலைப்பக்கம் தூக்கு தம்பி!" என்று கால் பக்கமாக வந்து நின்று கொண்டார் சத்யம். அப்போதும் ரமணி மயக்க முற்ற நிலையிலேயே இருந்தான்.

குண்டுக்காயத்திலிருந்து துப்பாக்கி ரவையை வெளியே எடுத்தார் டாக்டர். பிறகு பத்து நிமிஷத்திற்கெல்லாம் ரமணிக்கு சுய நினைவு வந்தது.

ரமணி பிரக்ஞை அடையவும் சர்வதேச அழகி ஷைலோ உள்ளே புகவும் சரியாக இருந்தது.

சுற்றி இருந்த ஒவ்வொருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு வந்த ரமணி, ஷைலோவைக் கண்டதும், "ராகினி யைத் தனியாக விட்டு விட்டா இங்கே வந்தாய்?" என்று சிடு சிடுத்தான்.

'ஆமாம்' என்று தலை அசைத்த ஷைலோ, "மது மயக்கமோ என்னவோ, மரக்கட்டைபோலப்படுத்துக் கிடக்கிறாள். கதவைச் சாத்திக் கொண்டு வந்தேன்" என்றாள்.

யாரால் அவன் சுடப்பட்டானோ அவள்மீது அதிக அக்கறை

காட்டும் அதிசயத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டான் ரூப்சந்த். டாக்டருக்கும் அதே வியப்பு!

"ரமணி! ராகினியே உங்களை நேருக்கு நேர் சுட்ட பிறகும் கூட, அவள் மீது சிறிதுகூட உங்களுக்கு க்ஷாத்திரம் ஏற்படாதது ஒரு புதிராக இல்லையா?" என்று கேட்டார் டாக்டர்.

"அவளைக் குறைகூற ஒன்றுமில்லை. தவறு என்னுடையது. அந்தத் தவறை நான் செய்யாதிருந்தால் ராகினி ஏன் துப்பாக்கியைத் தொடப்போகிறாள்! பாவம்! அவளுக்கு ஆசை காட்டி ஆர்வத்தைத் தூண்டி, பிறகு அவளை அந்தரத்தில் விட்டது நானல்லவா!...ஆத்திரம் யாருக்கும் இருக்கத்தானே செய்யும் சுட்டு விட்டாள்! ஆனால்...ஆனால் .."

"ஆனால் என்ன ரமணி?" என்று கேட்டார் சத்யம்.

"அவள் சுயநினைவோடு என்னைச் சுடவில்லை. சிதைந்த வாழ்வின் ஏமாற்ற எக்களிப்பு; அதோடு மதுவெறி வேறு! இப்போது அதைப் பரிபூர்ணமாக உணரும்போது..." என்று குறையைச் சொல்லி நிறுத்திய ரமணி, ஷைலோ பக்கம் திரும்பினான். "ஷைலோ! தயவு செய்து நீ உன் அறைக்குப் போய் இரு. ராகினியைக் கவனித்துக்கொள். தன் செய்கைக்காக வருந்தி கப்பலிலிருந்து கடலில் குதித்து தற்கொலை செய்து கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படிப்பட்டவள் அவள். போம்மா.. போ!" என்று கெஞ்சினான்.

ஷைலோ அறையை விட்டு வெளியே போனாள்.

ஒரு ஓரமாக நின்றபடி நடந்ததையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ரூப்சந்த், "உங்கள் நிலையை சீமாட்டிக்குக் கூறி வரட்டுமா?" என்று கேட்டான் ரமணியிடம்.

சிறிது யோசிப்பது போல இருந்த ரமணி, "வேண்டாம்! தூக்கத்திலே அவளை எழுப்பி அவளது மனநிம்மதியைக் கெடுக்க வேண்டாம். விஷயம் தெரிந்தால் நிர்த்தூளி செய்து ஊரையே ஒன்று கூட்டிவிடுவாள் சுதா. மேலும் என் உயிருக்கு ஆபத்து இல்லாமல் தப்பிவிட்டேன். காயம் மட்டும்தானே! விடிந்ததும் கூறிக்கொள்ளலாம்" என்றான்.

சரி என்று இருந்து விட்டான் ரூப்சந்த். ரமணி கூறுவதும் ஒரு விதத்தில் சரியானதாகவே டாக்டருக்கும் பட்டது, பெரும் பாரம் நீங்கியது போலப் பெருமூச்சு விட்டுக் கொண்டான் ரமணி.

ரூப்சந்த் பக்கமாகத் திரும்பினார் டாக்டர். நடந்தது முழுவதையும் கோர்வையாகக் கூறினான் அவன்.

"ராகினி கைத்துப்பாக்கியை எடுத்துச் சுடும்வரை நீ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாயா?" என்று கேட்டார், கதை முழுவதையும் கேட்டுக் கொண்ட டாக்டர்.

"நான் சிறிதுகூட எதிர்பார்க்கவில்லை. கண்மூடித் திறக்கும் நேரத்தில் எல்லாம் நடந்துவிட்டது!" என்றான் ரூப்.

"அந்தக் கைத்துப்பாக்கி இப்போது எங்கே? அவளிடமே இருக்கிறதா?"

"இல்லை; சுட்டவுடன் பயத்தாலோ என்னவோ அது அவளது கையிலிருந்து தானாகவே கீழே நழுவி விழுந்துவிட்டது. அது அந்த இடத்தில்தான் இன்னும் இருக்கவேண்டும்."

"ரொம்ப நன்றாக இருக்கிறது. ஆபத்தான ஆயுதத்தைக் கண்ட இடத்திலா விட்டு விட்டு வருவது? போ...போய் எடுத்துவா சீக்கிரம்" என்று டாக்டர் சிடுசிடுத்தார்.

ரூப்சந்த் வெகு வேகமாக வெளியே போனான். இரண்டாவது தளத்தைக் தாண்டிப் போகும்போது ஷைலோ அவளது அறை வாசலிலே நின்று கொண்டிருப்பதைக் கண்டான்.

"ராகினி இப்போது எப்படி இருக்கிறாள்?"

"அயர்ந்து தூங்குகிறாள். அமர்க்களப்படுத்தவில்லை" என்றாள் ஷைலோ.

"பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று சொல்லி விட்டு மேலும் நடந்து ரமணி சுடப்பட்ட இடத்திற்கு வந்தான்.

எதைத்தேடி ரூப் சந்த் வந்தானோ அது அங்கே அகப்படவில்லை, பரபரப்போடு சுற்றுமுற்றும் தேடிப் பார்த்தான். கைத்துப்பாக்கி கைக்கு அகப்படவில்லை. மூலை முடுக்கெல்லாம் தேடினான்.

சற்று நேரத்திற்கு முன்பு கிடந்த அந்த அபாய ஆயுதம் இப்போது எங்கே போயிற்று?

அவனுக்குத் திகைப்பு அதிகரித்தது. ஒருக்கால் ஷைலோ அதை ..?

அப்போதும் ஷைலோ தன் அறையின் வாசலிலேயே நின்று கொண்டிருந்தாள்.

"ஷைலோ! அந்தக் கைத் துப்பாக்கியை எடுத்தாயா?"

"இல்லையே!...நான் பார்க்கவே யில்லையே!" என்று இரு கைகளையும் விரித்துக் காட்டினாள் அவள்.

"எல்லாமே சூது, யாவுமே சூழ்ச்சி!" என்று முனகிக் கொண்டே டாக்டரின் அறைக்குள் புகுந்தான் அவன்.

பரபரப்போடு முனகிக் கொண்டுவரும் ரூப்சந்தைக்கண்ட டாக்டர், "துப்பாக்கி அகப்பட்டதா?" என்று கேட்டார்.

"அது இப்போது காணவில்லை, யாரோ எடுத்து மறைத்து விட்டார்கள்!"

"ஆச்சரியமாயிருக்கிறதே!" என்று ஏக காலத்தில் டாக்டரும் ரமணியும் திடுக்கிட்டுக் கேட்டார்கள்.

கைத் துப்பாக்கி மறைந்தது மாயமாக இருந்தது!

19

ரமணிக்கு தகுந்த சிகிச்சை யளித்துவிட்டு டாக்டர் நிம்மதியாகத் தூங்கிவிட்டார். அன்றிரவு முழுதும் ரமணி கொஞ்சம்கூடக் கண் அயரவில்லை. வலி பொறுக்க முடியாமல் துடிதுடித்துக் கொண்டிருந்தான்.

விழித்த கண் விழித்தபடி இரவு முழுதும் ரமணியின் அருகிலேயே கவலையோடு உட்கார்ந்திருந்த ரூப்சந்த் கைக் கெடிகாரத்தை பார்த்தான். மணி ஐந்து ஆகிவிட்டது! இன்னும் ஒரு மணி நேரம் சென்றால் சூரியன் தலைநீட்டி விடுவான். விடிந்து விடும். பிறகு...?

முதல் நாள் அளவுக்கு மீறிக் குடித்திருந்ததால் கப்பலின் காப்டனை கேதாரி விடிந்துவிட்டதுகூடத் தெரியாமல் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது அவரது அறைக் கதவு காது இடிபடும்படி பலமாகத் தட்டப்பட்டது.

தூக்கக் கலக்கம்; போதாததற்கு சோர்வு—மேலும் தீர அடங்காத மதுமயக்கம். ஆழ்ந்த நித்திரையின் போது அதைக் கெடுக்க வந்த அழைப்பு. "நான்சென்ஸ்! யாரது?" என்று அதட்டிக் கொண்டே கதவைத் திறந்தார்.

மாலுமி ஒருவன் உடல் வெடவெடக்க நின்று கொண்டிருந்தான். வேகமாக ஓடி வந்திருந்ததால் மேல் மூச்சு வாங்கியது. பேச முடியாமல் உளறிக் கொட்டியது காப்டனுக்கு சிறிதுகூடப் புரியவில்லை.

பீதி கொண்ட அவன் முகத்தைக் கண்ட காப்டன் கப்பலுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டுவிட்டதோ என்ற பரபரப்போடு "சமாசாரத்தைச் சொல்லேன்!" என்று பதறினார். அவன் கூறிய பதில் கேதாரியைத் தூக்கிவாரிப் போடச் செய்தது. சட்டையைக்கூட மாட்டிக் கொள்ளாமல் வெறும் உடம்போடு விடுவிடு வென்று ஓடினார். அவருடைய நடையின் வேகமும் முகத்திலே காணப்பட்ட கலவரமும், கேட்ட சேதி அசாதாரணமானது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்தின.

அவரது நடைவேகம் ராஜாமணியின் அறை வாசலிலே வந்து தடைப்பட்டது. பலமாகக் கதவைத் தட்டினார். அந்த

ஓசை அவசரத்தைப் பிரதிபலித்தது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்துவந்தார் துப்பறியும் நிபுணர்.

காப்டன் கேதாரி வேறு எதுவுமே பேசவில்லை. "சீக்கிரம் என்னோடு வாருங்கள்" என்று முன்னேக்கி நடந்தார்.

நடக்கக்கூடாத ஏதோ ஒரு பயங்கரக் காரியம் நடந்தேறி இருக்கிறது என்று புரிந்துகொண்ட ராஜாமணி கேதாரியைப் பின் தொடர்ந்து விரைந்தார்.

இருவரும் சீமாட்டி சுதாராணியின் அறையை அடைந்த போது, கவலை தோய்ந்த முகத்தோடு அங்கே காவல் இருந்து வந்த ஒருவன், வெளிப்பக்கமாகப் பூட்டியிருந்த கதவைத் திறந்து விட்டான்.

துப்பறியும் ராஜாமணி உள்ளே நுழைந்தார். அங்கே கண்ட ஒரு காக்ஷியைக் கண்டதும் இடிந்து மலைத்துப்போய் பதுமை போல நின்றுவிட்டார். 'ஆ' என்று அலறக்கூட முடியாமல் அவரது வாயும் அடைத்துவிட்டது.

கட்டிலிலே கோடீஸ்வரி சுதாராணி இடப் பக்கமாக ஒருக் களித்து படுத்திருந்தாள். அவளது வலது காதுக்கு மேலே பொட்டிலிருந்து ரத்தம் பீறீட்டு வழிந்தோடி உறைந்து போயிருந் தது.

காப்டன் கேதாரி அவளை அசைத்துப் பார்த்தார். பிறகு மூக்கருகே கைவைத்துப் பார்த்தார். அவரது முரட்டுக் கரங் கள் தளிர் மேனியைத் தொட்டுப் பார்த்தன. அவள் உடலிலே அசைவு இல்லை; மூக்கு வழியாய் சுவாசமில்லை; உடம்பு ஜில் லிட்டு இருந்தது!

காப்டனின் முகத்தை ராஜாமணி பார்த்தார். கேதாரி உதட்டைப் பிதுக்கிக் காட்டினர்.

சுதாராணி கொல்லப்பட்டு விட்டாள்!

பிரமை தட்டிய நிலையில் நடை தள்ளாட சவமாகிக் கிடந்த சுதாராணியின் அருகே போய் நின்று அவளது முகத்தைப்பார்த் தார் ராஜாமணி. சகல சம்பத்தும் நிறைந்து, வாழ்வில் அத்தனை சுகபோகங்களும் கொண்ட ஒரு அழகி ஆழ்ந்த நித்திரையில் ஈடுபட்டிருந்தால், அவளது முக சோபை எப்படி இருக்குமோ அப்படி இருந்தது, அவளது முகக்களை. அதிலே மரணம் தன் கோர முத்திரையை சிறிதுகூட இடவில்லை.

கண்களிலே நீர் ததும்ப காவலுக்கிருந்த மாலுமியை ஏறிட் டுப் பார்த்தார் ராஜாமணி. 'என்ன நடந்தது?' என்று கேட்பது போல இருந்தது அந்தப் பார்வை.

மாலுமி அதைப் புரிந்து கொண்டவன் போல பதில் சொன்னான். "காலை ஆறு மணி இருக்கும். சீமாட்டியின் வேலைக்காரியான மங்கம்மா அலறிப் புடைத்துக் கொண்டு என்னிடம் ஓடி வந்தாள். தன் எஜமானி பிணமாகக் கிடப்பதாக ஓலமிட்டாள். ஓடோடி வந்து பார்த்தேன். கதவு உட்புறம் தாளிடப் படாமல் திறந்து இருந்தது. உடனே நான் இங்கே காவலுக்கு இருந்து கொண்டு காப்டனுக்கு ஆள் அனுப்பினேன்."

ராஜாமணியின் கண்கள் கலங்கி, முகம் துயரக் கோடுகளால் நிரம்பியது. சீமாட்டியின் துர்மரணம் தனக்கேற்பட்ட ஒரு தீராத்தோல்வி போல எண்ணி வருந்தினார். சுதாராணிக்கு எந்த சமயத்திலும் ஆபத்து ஏற்படலாம் என்று உணர்ந்து இது நாள் வரை இரவு பகல் அவளையே சுற்றிச் சுற்றி வந்து கண்காணித்தும் கடைசியில் கோட்டை விட்டுவிட்டோமே என்று நொந்து கொண்டார். முதல் நாள் இரவு காப்டனின் அழைப்பை ஏற்று மதுவில் மனநாட்டம் கொண்டது மகத்தான தவறு என்பதை அவர் உணர்ந்தபோது, சீமாட்டியின் கொலைக்கு தானே காரணம் என்பதை அவர் உள் மனம் சுட்டிக்காட்டியது.

அதற்குள் டாக்டர் சத்யத்தின் காதுக்கு சுதாவின் கொலைச் செய்தி கிடைக்கவே, பரபரப்படைந்து அவரும் வந்து சேர்ந்தார். வேலைக்காரி மங்கம்மா வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கதறி ஓலமிட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த அறை பிண வீடு போல நிர்த்துளிப்பட்டது.

டாக்டர் சத்யம் மங்கம்மாவை சமாதானப்படுத்தி வெளியே அனுப்பிவிட்டு, சவத்தைப் புரட்டி கூர்ந்து கவனித்தார். குண்டுக் காயத்தையும் ஆராய்ந்தார். அருகே கிடந்த கைக்குட்டையைப் பிரித்துப் பார்த்தார். பிறகு சுதாராணி படுத்திருந்த படுக்கையின் ஒரு ஓரத்தில் அவரது பார்வை சென்றது. அதைக் குனிந்து உற்றுப் பார்த்தார். மெத்தையின் மீது ரத்தத்தால் 'ரா' என்று ஒரு எழுத்து கோணல் மாணலாக எழுதப்பட்டிருந்தது. சுதாராணியின் வலக்கரத்தைப் பார்த்தார். ஒரு விரலில் ரத்தம் தோய்ந்திருந்தது. புருவத்தை நெளித்தபடி துப்பறியும் ராஜாமணியை ஏறிட்டுப் பார்த்தார், புரிகிறதா என்று கேட்பது போலிருந்தது அந்தப் பார்வை.

டாக்டர் குறிப்பிட்டுக் காட்டியவைகளை காப்டனும் துப்பறியும் நிபுணரும் பார்த்தார்கள். "தன்னைச் சுட்டது யார் என்பதைச் சாகும் தறுவாயில் தன் மீது பொங்கிய ரத்தத்தை விரலில் தோய்த்து சூசகமாக 'ரா' என்று குறிப்பிட்டிருக்கிறாள்! யாரால் சுதாவிற்கு ஆபத்து இருக்கிறது என்று கருதி வந்தீர்களோ, அதன்படியே முடிவும் ஆகியிருக்கிறது. சீமாட்டியைச் சுட்டது ராகினி என்பது தீர்க்கமாகப் புரிகிறதல்லவா?" என்று காப்டன் ராஜாமணியிடம் கூறினார்.

துப்பறியும் ராஜாமணி தலை அசைத்துக் காட்டி மறுக்கவும் இல்லை. ஆமோதிக்கவும் இல்லை. அவரது மனக்கண் முன்னால் ராகினி கோர ஸ்வருபம் காட்டிக் கொண்டிருந்தாள். 'இந்தத் துப்பாக்கியால் சுதாவைச் சுட்டு வஞ்சம் தீர்த்துக் கொள்ளாமல் விடப்போவதில்லை!' என்று ராகினி முன்பெல்லாம் அடிக்கடி கூறிக்கொண்டிருந்தது அவரது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

குண்டுக் காயத்திலிருந்து துப்பாக்கி ரவையை வெளியே எடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்த டாக்டர், அதை வெளியே எடுத்து ராஜாமணி கையில் கொடுத்தார்,

அது மிகவும் சிறிய குண்டாக இருந்தது.

''மிஸ்டர் ராஜாமணி! சுதாவைக் கொன்றவள் ராகினியே தான். சந்தேகமில்லை. இந்த குண்டும் படுக்கையிலே ரத்தத்தால் எழுதப்பட்டிருக்கும் 'ரா' என்ற எழுத்துமே அதற்கு அசைக்க முடியாத சாக்ஷியங்களாக இருக்கின்றன. ரத்தத்தால் எழுதப்பட்ட அந்த சூசகமான வார்த்தை ஒருபுறமிருக்கட்டும்; இந்தத் துப்பாக்கி ரவையைப் பார்க்கும் போது இது ராகினியின் ரிவால்வருக்குடையது என்பது நன்கு புலனாகிறது. நான் கூறுவது சந்தேகமாயிருந்தால் இதோ இந்த ரவையோடு அதை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம்!'' என்று மற்றொரு சிறிய குண்டை தன் பைக்குள்ளிருந்து எடுத்து ராஜாமணியிடம் கொடுத்தார்.

என்ன ஒற்றுமை! இரண்டு குண்டுகளும் ஒரே அளவாகவும் ஒரே ரிவால்வருக்கு உடையதாகவும் இருந்தன.

''உங்களிடமிருந்து கொடுத்த இந்த மற்றொரு குண்டு ஏது? இது ராகினியின் கைத்துப்பாக்கியைச் சேர்ந்தது என்பதை எப்படி அனுமானிக்கிறீர்கள்?'' என்று கேட்டார் ராஜாமணி.

''நேற்று இரவு நடந்தது உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா?'' என்று வியப்போடு கேட்டார் டாக்டர்! ''ரமணி நேற்று இரவு சுடப்பட்டு விட்டார்'' என்றார் மேலும்.

ராஜாமணிக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''என்ன! .. நிஜமாகவா?'' என்று பதறிப் போய்க் கேட்டார்.

''ஆமாம், நல்ல வேளையாகக் குறி தவறிவிடவே உயிர் தப்பி விட்டார். காலில் குண்டு பாய்ந்திருக்கிறது. என் அறையிலே என் கண்காணிப்பில்தான் இருக்கிறார். நான் என் பையிலிருந்து எடுத்துக் கொடுத்த குண்டு அவரது காலிலே இருந்து எடுத்ததாகும்...''

''சுட்டது யார் டாக்டர்?''

''ராகினி!''

"என்ன...?'

"ராகினி ரமணியைச் சுட்டபோது ரூப்சந்தும் ஷைலோவும் அந்த இடத்திலே இருந்திருக்கிறார்கள். அவர்கள்தான் எனக்குத் தகவல் சொன்னது."

"ஒரே இரவில் இரண்டு பயங்கர சம்பவங்களா!" என்று வெறுப்போடு கூறிய ராஜாமணி பிணமாகியும் வசீகரத்தோடு விளங்கும் சுதாராணியை மறுமுறை பார்த்தார். அதற்குள் சீமாட்டி கொலை செய்யப்பட்ட செய்தி கப்பல் முழுதும் பரவி விடவே, எல்லோரும் அங்கு வந்து கூடிவிட்டார்கள். அத்தையான வைதேகி அலறித் துடித்துக் கொண்டு ஓடிவந்தவள், தொப்பென்று கீழேவிழுந்து புழுப்போலத் துடித்தாள்.

அங்கு கூடியிருந்த அனைவரையும் ஒருவர்பின் ஒருவராகக் கூர்ந்து பார்த்தார் ராஜாமணி. நெஞ்சு வெடித்து விடுவதுபோல பொருமிக் கொண்டிருந்தாள் வைதேகி. கண்களிலே ஒரு சொட்டு நீர்கூட இல்லாமல், ஆனால், முகத்திலே மட்டும் துக்கத்தை வரவழைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார் மாமாவான மதுசூதனர். பட்டாபியின் கண்களிலே நீர் நிறைந்திருந்த போதிலும் ஏனோ சுதாராணியின் சவத்தைப் பார்த்து மிரள மிரள விழித்துக் கொண்டிருந்தான். இலங்கை ஏஜண்டான தாஸ் முகத்திலே பீரேதக்களை சொட்ட அங்கு மிங்கும் சிறு நடை போட்டுக்கொண்டிருந்தார். அங்கே ராகினியைக் காணோம்; ரமணியைக் காணவில்லை; ரூப்சந்த்கூட அந்த இடத்திற்கு வரவில்லை.

"டாக்டர்! ரூப்சந்த் எங்கே?" என்று கேட்டார் ராஜாமணி.

"ரமணிக்குத் துணையாக என் அறையிலே இருக்கிறான்" என்றார் டாக்டர்.

"ஷைலோ?"

"தன் அறையிலே ராகினியைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறாள்."

ராஜாமணி மேலும் எதுவுமே பேசவில்லை. கோடீஸ்வரி பிணமாகிக் கிடந்த அவ்வறையினின்றும் எல்லோரையும் வெளியே போகச் சொல்லிவிட்டு, அறையை வெளிப்பக்கமாகப் பூட்டினார். "உங்கள் அறைக்குத்தான் இப்போது போகிறேன் காப்டன்! நீங்களும் வாருங்கள்" என்று துரிதமாக நடைபோட்டார்.

அவர்கள் மூவரும் ரமணி இருந்த டாக்டரின் அறைக்கு வந்தபோது அவன் வேதனை தாங்காமல் முனகிக் கொண்டு

படுத்திருந்தான். அருகே உட்கார்ந்திருந்த ரூப்சந்த் பணிவிடை செய்து கொண்டிருந்தான்.

உள்ளே நுழைந்த ராஜாமணி ரமணியைக் கண்டதும் 'உடம்பு எப்படி இருக்கிறது?' என்று கேட்கவில்லை. "ரமணி! உங்களைச் சுட்டு விட்ட விஷயம் எனக்கு இப்போதுதான் தெரிந்தது" என்றார்.

மௌனமாகத் தலை அசைத்தான் ரமணி. "அவளைச் சொல்லிக் குற்றமில்லை. அது என் தவறு. நான் அவளுக்கு இழைத்துவிட்ட துரோகம் அவளை அந்த நிலைக்கு ஆத்திரமூட்டி விட்டது! அவளை மன்னித்துவிடுங்கள்!" என்றான்.

இந்த வார்த்தைகள் பெருந்தன்மையாக ரமணியால் கூறப்பட்ட போதிலும் ராஜாமணிக்கு அது கசப்பான வார்த்தைகளாகவே இருந்தன. "ரமணி! நீங்கள் ராகினிக்கு துரோகம் செய்தீர்கள். அதனால் அவள் உங்கள் மீதிருந்த ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டாள். அது உங்கள் சொந்த விஷயம்; அதனால் மன்னிப்பளித்து விட்டீர்கள். ஆனால் சுதாவை அவள் பழிவாங்கி விட்டதையும் அதைப்போல மன்னித்துவிட வேண்டும். அதுதானே உங்கள் கோரிக்கை?" என்று ஆத்திரமாகக் கேட்டார்.

கேள்வியின் அர்த்தம் புரியாததுபோல விழித்தான் ரமணி.

"நேற்றிரவு சுதாராணியையும் அவள் சுட்டுவிட்டாள்!"

"என்ன...?"

"நீங்களாவது உயிர் தப்பி இருக்கிறீர்கள். ஆனால், ராகினி அவளது உயிரையே குடித்துவிட்டாள்!"

"ஆ!" என்று வீரிட்டு அலறினான் ரமணி. அந்த பயங்கரக் கூச்சலோடு அவன் வாய் பேச்சும் அடைத்துவிட்டது. திக்பிரமை கொண்டவன் போல ஆடாமல் அசையாமல் படுத்துக் கிடந்தான். அவனது கண் இமைகள் சிறிதுகூடச் சலனமில்லாமல் திறந்தது திறந்தபடி இருந்தன.

தன் மனைவி சுடப்பட்ட விஷயம் அவன் காதுகளுக்கு எட்டுவதே இப்போதுதான்!

ரமணியின் அந்தப் பரிதாப நிலைக்காக ராஜாமணி சிறிதுகூடப் பரிவு காட்டவில்லை. அவனுக்கு ஆறுதல் கூறவும் முற்படவில்லை. அவரிடமிருந்த கனிந்த சுபாவம் ஓடி ஒளிந்து கொள்ள கடுமை அவரை சுவீகரித்துக் கொண்டது. அங்கிருக்க வெறுப்படைந்தவர் போல வெளியே வந்து நின்று கொண்டு ரூப்சந்தைக் கூப்பிட்டார்.

"ரூப்! ராகினி ரமணியைச் சுட்டபோது நீயும் அங்கே

இருந்ததாகக் கேள்விப்பட்டேன். அந்த விபத்து நேராமல் உன்னால் தடுக்க முடியவில்லையா?"

"முதலில் ஏதோ ஆத்திரமாகப் பேசிக் கொண்டிருந்தாள். ஏதோ கோபமாகப் பேசுகிறுள் என்று இருந்துவிட்டேன். துப்பாக்கி ஒன்று அவளிடம் இருக்கும் என்பதை சிறிதுகூட நான் எதிர்பார்க்கவில்லை."

"சுடப்பட்டவுடன் நீ என்ன செய்தாய்?"

"டாக்டர் சத்தியத்தைத் தேடி ஓடினேன்."

"உடனே அவர் அகப்பட்டு விட்டாரா?"

"நான் தேடிப் போனபோது அவர் தனது அறையில் இல்லை. எங்கெல்லாமோ தேடினேன். கடைசியில் கப்பலில் இரண்டாவது தளத்தில் கண்டுபிடித்தேன்."

"ஆகக்கூடி அவரைத் தேடிப் பிடித்து அழைத்துச் செல்ல பத்து நிமிஷங்கள் ஆகியிருக்குமா?"

"கால்மணி நேரம் இருக்கும்."

"நீ டாக்டருடன் திரும்பவந்த போதும் ராகினி அங்கேயே இருந்தாளா?"

"இல்லை. ஷைலி அவளை கூட்டிக்கொண்டு போய் விட்டாள். ரமணி சுடப்பட்ட பிறகே அவள் தனது அடாத செயலை உணரலானுள். அழுதாள், புலம்பினுள், பைத்தியம் போல நடந்து கொள்ள ஆரம்பித்தாள். ஓடிப்போய் கடலில் விழுந்து சாகப் போவதாக அட்டகாசம் செய்தாள். எங்கே அதன்படியே புத்தி பேதலித்த நிலையில் செய்து விடுவாளோ என்று பயந்து அவளை கூட்டிச் சென்று பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி ரமணி ஷைலோவைக் கேட்டுக் கொண்டார். அதனுல் ஷைலோ தன் அறைக்கு ராகினியை கூட்டிச் சென்றுள்."

"ரமணிக்கு நேர்ந்த விபத்தை சிமாட்டிக்கு உடனே அறிவித்தாயா?"

"இல்லை"

"ஏன்?"

"அந்த அகால வேளையில் சுதாராணியிடம் கூறவேண்டாம் என்று ரமணி கேட்டுக் கொண்டார். மிகவும் கலவரப் படுவாள் என்பது அவரது எண்ணமாக இருந்தது."

"எனக்காவது உடனே நீ தகவல் கொடுத்திருக்கலாமல்லவா?"

''விடியும் வரை யாருக்குமே தெரியப்படுத்த வேண்டாம்' என்று ரமணி என்னைத் தடுத்துவிட்டார்.''

''ராகினி உபயோகித்த அந்த ரிவால்வர் இப்போது யாரிடம் இருக்கிறது?''

''அதுதான் மர்மமாக இருக்கிறது. ராகினியைச் சுட்டாளல்லவா, பிறகு ஏற்பட்ட வெறுப்பினாலோ அல்லது பயத்தினாலோ அது தானாகவே நழுவிக் கீழே விழுந்துவிட்டது. பிறகு அதை அவள் காலால் எட்டி உதைத்தாள். சோபாவிற்கு அடியில் போய் விழுந்தது. அப்போதிருந்த பரபரப்பில் அதை எடுத்து வைத்துக் கொள்ளவில்லை. பிறகு போய் தேடிப் பார்த்தபோது அந்த இடத்தில் ரிவால்வரைக் காணோம். எல்லோரிடமும் கேட்டுவிட்டேன். ஒருவருக்குமே தெரியவில்லை.''

சிறிது யோசித்தார் ராஜாமணி. ''எட்டி உதைத்த அந்த ரிவால்வரை மீண்டும் ராகினி எடுத்துக்கொண்டு போயிருப்பாளா?''

''அவள் எடுக்கவில்லை. அது நிச்சயமாக எனக்குத் தெரியும்.''

''அப்படியானால் அதை யார் எடுத்திருப்பார்கள்? ஷைலோவிடம் கேட்டாயா?''

''இல்லை.''

அதற்குப் பிறகு அரை நிமிஷம்கூட அவர் அங்கே நிற்கவில்லை. ஷைலோவைத் தேடிக்கொண்டு அவளது அறைக்குக் கிளம்பினார்.

அந்த அறையை நெருங்கியபோது ஷைலோ உள்ளே குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டிருந்தாள். ராகினி நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

''ஷைலி!'' என்று கூப்பிட்டார் ராஜாமணி. ''சில சந்தேகங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். சற்று வெளியே வருகிறீர்களா?'' என்று கேட்டார்.

ஷைலோ அறைக்கு வெளியே வந்தாள்.

''ரமணியைச் சுடுவதற்கு உபயோகித்த ரிவால்வர் எங்கே என்பது உங்களுக்குத் தெரியுமா?''

''ராகினி அங்கேயே அதை எறிந்து விட்டாளே! அது சோபாவிற்கடியிலேதான் கிடக்கும்.''

''இப்போது அது அங்கே இல்லை. ராகினி மீண்டும் அதை எடுத்துக் கொண்டிருப்பாளா?''

''அதை அவள் எடுக்கவேயில்லே. அவளே அழைத்துக் கொண்டு என் அறைக்குத் திரும்பும்வரை அவளோடு கூடவே நானும் இருந்தேன்!''

''அவளே உங்கள் அறைக்குக் கூட்டிவந்த பிறகு மறுபடியும் அவள் வேறு எங்காவது போனுளா?''

''இல்லே.''

''நிச்சயமாகச் சொல்வீர்களா?''

''எனக்குத் தெரிந்தவரை அவள் எங்குமே போகவில்லே.''

''அப்படியாளுல் நேற்று இரவு முழுதும் அவளோடு கூடவே இருந்தீர்களா? சிறிது நேரம்கூட அவளே இங்கே விட்டு விட்டு நீங்கள் எங்கும் சென்றதில்லேயா?''

சிறிது யோசித்தாள் ஷைலி. ''நேற்று இரவு ரமணி எப்படியிருக்கிருர் என்று பார்க்க டாக்டர் அறைக்குப்போய் வந்தேன். அதுவும் ஐந்து நிமிஷ நேரத்தில் திரும்ப வந்து விட்டேன்.''

''நீங்கள் போகும்போது ராகினி விழித்துக் கொண்டிருந்தாளா?''

''இல்லே, தூங்கிக் கொண்டிருந்தாள். அதனுல்தான் நான் போனேன்.''

''நீங்கள் திரும்பவும் அறைக்கு வந்தபோது...?''

''தூக்கத்தில்தான் இருந்தாள்!''

''அந்த இடை நேரத்தில் அவள் எங்காவது போய் வந்திருக்கலா மல்லவா?''

''நான்தான் சொன்னேனே, தூங்கிக்கொண்டிருந்தவள் எப்படிப் போயிருக்க முடியும்?''

''நீங்கள் போகும்போது தூங்கிக் கொண்டிருந்தாள். திரும்ப வந்தபோது அவள் விழித்திருக்கவில்லே. அதனுல் அவள் வேறு எங்கும் போய் வந்திருக்க முடியாது என்பது உங்கள் அபிப்ராயம்!.. யூகம்!... அப்படித்தானே?''

''ஆமாம்.''

''நேற்றிரவு சுதாராணியும் சுடப்பட்டிருக்கிருள்!''

''என்ன...!''

''ரமணியைச்சுட்ட அதே துப்பாக்கியால்!''

''நிஜமாகவா?''

''ரமணியாவது உயிர் தப்பினுன். சுதா செத்தே விட்டாள்!''

பேச்சு மூச்சற்று பேய்றைந்தவள் போல உட்கார்ந்து விட்டாள் ஷைலோ.

சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது. ஷைலோவை அருகே அழைத்தார் ராஜாமணி. "நான் திரும்பிவரும்வரையில் ராகினி வெளியே எங்கும் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உனது பொறுப்பாகும். இந்த இடத்தைவிட்டு நீங்கள் வேறெங்கும் நகரக் கூடாது" என்று கடுமையான உத்தரவு போட்டுவிட்டு ராஜாமணி அந்த இடத்தைவிட்டு அகன்றார்.

20

ஷைலோவின் அறையை விட்டுக் கிளம்பிய ராஜாமணி சீமாட்டி சுதாராணியின் அறையை நோக்கி நடந்தார். எதிரே காப்டன் கேதாரி வரவே, அவரையும் அழைத்துக் கொண்டு சென்றார். டாக்டரை அழைத்து வரும்படி கப்பல் சிப்பந்தி ஒருவனையும் அனுப்பி வைத்தார்.

சுதாராணியின் அறைக்குள்ளே காப்டன் கேதாரியும் ராஜாமணியும் நுழைந்தார்கள். உள்ளே அந்த அறையில் இருந்தவைகளை யெல்லாம் உற்று கவனிக்கலானார் துப்பறியும் நிபுணர்.

சுதா சுடப்பட்டுக் கிடந்த கட்டிலை ஒட்டினாற்போல இருந்த ஒரு முக்காலியின் மீது சில தஸ்தாவேஜுகள் பிரித்தது பிரித்தபடி கிடந்தன. அந்த ரிக்கார்டுகள் எதன் சம்பந்தப்பட்டவை என்பதை ஆராய்ந்தார். இலங்கை எஸ்டேட்டு சம்பந்தப்பட்ட கணக்கு வழக்குகளின் புள்ளி விபரங்கள் அடங்கியதாக அவை இருந்தன. சீமாட்டி சாவதற்கு மூன் அவைகளைப் பரிசீலித்துக் கொண்டிருப்பாளா? அப்போது இலங்கை ஏஜண்டான தாஸும் கூடவே இருந்திருப்பாரா? இதன் விபரம் தாஸைக் கேட்டால் அல்லவா தெரியும்.

மேலும் அறையிலிருந்தவற்றைக் கவனித்தார் ராஜாமணி. வேறு எந்தவிதத் தடயமும் தட்டுப்படவில்லை. அதே சமயம் "என்னைக் கூப்பிட்டீர்களா?" என்று கேட்டுக் கொண்டே டாக்டர் சத்யம் அங்கு வந்து சேர்ந்தார்.

"டாக்டர்! சுதாராணியின் சவத்தைப் பரிசோதித்து மேலும் நீங்கள் விபரம் தருவீர்கள் என்றே உங்களைக் கூப்பிட்டனுப்பினேன். சுதாராணியின் உயிருக்கு சுமார் எத்தனை மணிக்கு விபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதை பரிசோதனை மூலம் கண்டு பிடித்துக் கூற முடியுமல்லவா?" என்று கேட்டார் ராஜாமணி.

"ஓ...பேஷாகக் கூற முடியும்!" என்று பலமாகத் தலையசைத்த சத்யம் பிரேத பரிசோதனையில் ஈடுபட்டார்.

சில நிமிஷங்கள் சென்றன. "சுதாவின் உயிர் நேற்றிரவு சுமார் பதினெரு மணிக்கு மேல் பனிரெண்டு மணிக்குள் நீங்கியிருக்க வேண்டும்" என்ருர் டாக்டர். அதாவது கிட்டத்தட்ட ரமணி சுடப்பட்ட நேரத்தை அனுசரித்திருந்தது அவர் குறிப்பிட்ட காலவரையறை.

"மற்ெருரு விஷயம் டாக்டர். ரமணியைச் சுடுவதற்கு உபயோகித்த அதே ரிவால்வரால்தான் சுதாராணியும் சுட்டப்பட்டிருக்க வேண்டும் என்று ஏற்கனவே நீங்கள் தீர்மானமாகக் கூறினீர்கள். அதனுல் ரமணியைச் சுட்டவர் எவரோ அவரே சுதாவையும் சுட்டிருக்க வேண்டும் என்பதுதானே அதன் அர்த்தம்?"

"இரண்டு சம்பவங்களுக்கும் உபயோகிக்கப்பட்ட ரிவால்வர் ஒன்று என்பதைத் தீர்க்கமாக முடிவு செய்யலாம். ஆனுல், அதை கையாண்டவரும் ஒருவராகவே இருக்க வேண்டும் என்று ஊர்ஜிதம் செய்து கொள்வது இந்தக் கொலை சம்பந்தப்பட்ட மட்டில் ஆபத்தாகத் தெரிகிறது. சிக்கலாகவும் இருக்கிறது. மிஸ்டர் ராஜாமணி! கொலையுண்ட சுதா தன் கடைசி மூச்சின் போது ரத்தத்தால் 'ரா' என்று குறிப்பிட்டிருக்கிருளே என்ற மருளுகிறீர்கள். இந்த இடத்தில்தான் சிக்கல் குறுக்கிடுகிறது. எப்படி என்று சொல்லுகிறேன். கவனமாகக் கேட்டுக் கொள்ளுங்கள். சுதா சுடப்படும்போது அவள் விழித்திருக்கவில்லை. நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கும்போது சுடப்பட்டிருக்கிருள். அதுவும் கொலை செய்ய முனைந்த நபர் எட்ட நின்று குறி வைக்கவில்லை. கிட்ட அருகே வந்து பொட்டுக்கு அருகே ரிவால்வர் வைத்துச் சுட்டிருக்கிருன். அப்படிச் சுட்டால், சுட்ட இடத்தையும் அனுசரித்துப் பார்த்தால், குண்டு பாய்ந்த அடுத்த விநாடியே சுதாவின் உயிர் நீங்கி இருக்க வேண்டும்."

"சுதா தூங்கிக் கொண்டிருக்கும் போதுதான் சுடப்பட்டிருக்கிருள் என்பதை எதைக் கொண்டு முடிவு கட்டுகிறீர்கள் டாக்டர்?"

"அதோ சுதாவின் முகத்தைப் பாருங்கள். மரணத்தின் சாயல் அவள் முகத்திலே காணப்படுகிறதா? இல்லை! தூங்கும் அழகிபோல இருக்கிருள். உடல் தத்துவத்தில் இது ஒரு முக்கிய இயற்கை. ஒருவர் கொலைசெய்யப் படுகிருர் என்று வைத்துக் கொள்ளலாம். கொலை என்பது தூங்கும் சமயத்திலும் நடப்பதுண்டு. விழித்திருக்கும்போதும ஏற்படுவதுண்டு. விழித்திருக்கும் போது ஒருவன் கொலைப்பட நேருமானுல் கொலை செய்ய முனைந்தவனை அவன் கண்ணுல் பார்க்கிருன். பயப்படுகிருன். மருள்கிருன். 'ஐயோ சாகிறேமே' என்று வேதனைப்படுகிருன். அந்த உணர்ச்சிகள் அவன் முகத்திலே பிரதிபலித்துக் கொண்

டிருக்க அவன் கொல்லப்பட்டு விடுகிருன். அந்தச் சவத்தை பிறகு பார்த்தால் அந்த முகம் கோரமாகவே இருக்கும். தூங்கு பவன் கொல்லப்படும் விஷயத்தை எடுத்துக் கொள்ளலாம். தான் கொல்லப்பட போகிறேம் என்ற எண்ணமில்லாத நிலே அது. தூங்கும் சமயத்திலே அவன் கொல்லப்பட்டால் முகத் திலே கோரத்தைக் காணமுடியாது. பொதுவாகவே கொல்லப் படும் சமயம் எந்தவித முகபாவம் இருக்கிறதோ அதுவே பிண மானபின் நிலைத்து விடுகிறது. இதை அனுசரித்துப் பார்த்தால் கொலை செய்யப் பட்டிருக்கும் சுதாவின் முகத்திலே பயங்கரம் இல்லை. சாகும் சமயத்தில் அவள் மனம் பயங்கர உணர்ச்சிகளில் தத்தளிக்கவில்லை என்பது புரிகிறது. அதனல் அவள் தூங்கிக் கொண்டிருக்கும் சமயத்திலேதான் கொலை நடந்திருக்கிறது என்பதை நிச்சயமாகக் கூறமுடிகிறது!''

''கொலேகாரன் கிட்டவந்து பொட்டுக்கு நேராக சிறிது இடை வெளியில் வைத்து ரிவால்வாரால் சுட்டிருக்கிருன் என்று நீங்கள் எதைக்கொண்டு கண்டு பிடித்தீர்கள்?''

''இப்படி வந்து பாருங்கள்'' என்று சொல்லி ராஜாமணி யைச் சவத்தருகே அழைத்தார் டாக்டர். கையிலிருந்த சிறு குச்சி ஒன்ருல் குண்டுபட்ட இடத்தின் விளிம்பைக் குறிப்பிட்டுக் காட்டி, ''பாருங்கள் ராஜாமணி! குண்டுக் காயத்தைச் சுற்றி யுள்ள தோல் பொசுங்கியது போல இருக்கிறதல்லவா? இது தான் எனக்கு அதை நிருபிக்கிறது. எட்ட இருந்து ரிவால்வாரால் சுட்டிருந்தால் ரிவால்வர் கக்கும் நெருப்பு உடலைப் பொசுக்காது. குண்டுமட்டிலும் உடலைத் துளைத்துக் கொண்டு உள்ளே போகும், தீ காயங்களைக் காணமுடியாது. ரிவால்வாரை உடம் பின் அருகிலோ, அல்லது உடம்புமீது வைத்தோ சுட்டால், கைத்துப்பாக்கியிலிருந்து வெளிக்கிளம்பும் நெருப்பும் உடல்மீது படுகிறது. அப்போதுதான் உடலில் தோல் பொசுங்கிய அடை யாளம் தெரியும். இதோ அதே போன்று பொசுங்கியிருப்பதை சுதாவின் காதருகே பாருங்கள்!'' என்ருர்.

''சுடப்பட்ட மறுவினுடியே சுதாவின் உயிர் நீங்கியிருக்க வேண்டும் என்று சொன்னீர்களல்லவா? அப்படியானல் 'ரா' என்று எழுதும்வரை சுதா உயிரோடிருந்திருக்கிருளே!'' என்று கேட்டார் ராஜாமணி.

''அதில்தான் மர்மம் இருக்கிறது! மனித உடலில் நெற்றிப் பொட்டு மிகவும் சூட்சுமமான இடம். அது வேகமாகத் தாக்குண் டாலே மனிதன் மூர்ச்சையாகி விடுவான். உயிர்நாடி அதில் தொத்தி நிற்கிறது. அந்த இடத்தில் குண்டு பாய்ந்த பிறகும் உயிர் ஊசலாடுமா? மேலும் சமயோசித புத்திதான் இருக்குமா? இந்த இரண்டுக்கும் இடமில்லாதபோதும் சுதா அவ்வளவு சூசகமாக 'ரா' என்று ரத்தத்தில் தன் விரலைத் தோய்த்து எழுதி

யிருக்க முடியுமா? யோசித்துப் பாருங்கள் ராஜாமணி! இது ஒரு சூழ்ச்சி! கொலைகாரன் தான் தப்பித்துக் கொள்ளக் கையாண்டிருக்கும் ஒரு தந்திரம் இது. பலரது சந்தேகத்திற்கும் ஆளான ஒரு நபரை முன்கூட்டியே தெரிந்து கொண்டு, யார் மீது சந்தேகத்தைச் சாய்த்தால் பொருந்தும் என்பதை அறிந்து இதைச் செய்திருக்கிறான்! சுதாராணியின்மீது வழிந்த ரத்தத்தை அவள் விரலில் தோய்த்து வைத்துவிட்டு தன் கையால் 'ரா' என்று குறிப்பிட்டிருக்கிறான். அந்த எழுத்தின்மீது சுதாவின் கைவிரல் படவேயில்லை! 'ரா' என்ற அந்த எழுத்தைப் பாருங்கள். தடித்த கோடாக இருக்கிறது அதாவது தடித்த விரல் கொண்டு எழுதப்பட்டதாக இருக்கிறது. அதோ சுதாவின் விரலைப் பாருங்கள். எவ்வளவு மெல்லிய விரலாக இருக்கிறது!''

அரை குறையாகத் தலையை ஆட்டினார் ராஜாமணி. சத்யம் வெறும் டாக்டரோடு மட்டுமல்ல; மகா புத்திசாலியாகவும் இருக்கிறாரே என்று வியந்து பார்த்துக் கொண்டிருந்தார் காப்டன் கேதாரி.

''அதனால் கொலை செய்தது ராகினி அல்ல என்கிறீர்களா டாக்டர்?'' என்று கேட்டார் ராஜாமணி.

''அப்படித்தான் தோன்றுகிறது. 'ரா' என்று எழுதப்பட்ட எழுத்து சுதாவின் விரலால் எழுதப்பட்டதில்லை என்று ஒப்புக் கொள்கிறீர்களல்லவா? அப்படி இருக்கும்போது, ராகினி கொலை செய்தவளாகவே இருக்கட்டும், அவள் தன் பெயரைக் குறித்து வைப்பாளா? சொல்லுங்கள் ராஜாமணி...! அது போகட்டும். மற்றொன்றையும் யோசியுங்கள். இந்தத் திட்டவட்டமான கொலைக்கு ஒரு பெண் மனம் அவ்வளவு திடத்தோடு இருக்கும் என்று நினைக்கிறீர்களா?''

''ராகினி அதற்குப் புறம்பானவளாக இருக்கக் கூடாதா?''

''இருக்காது! இருக்கவும் முடியாது! ஏனென்றால் நானும் அவளோடு சிறிது பழகியிருக்கிறேன்'' என்றார் டாக்டர்.

அதே சமயம் காலில் இடறிய ஒரு துணிக் கந்தலை காப்டன் கேதாரி குனிந்து எடுத்து விரித்துப் பார்த்தார். டாக்டரின் கவனமும் ராஜாமணியின் பார்வையும் அதன் மீது பதிந்தது. தீப்பட்டு பொத்தலாகியிருந்த அந்தத் துணியை டாக்டர் வாங்கிப் பார்த்தார். அது ஒரு கைக்குட்டை! பூவேலை செய்யப்பட்டிருந்த அலங்காரத் துணி! அதன் நடுவே தீயால் பொசுங்கிய ஒரு பெரிய துவாரம்! அதைக் காண டாக்டரின் முகம் மலர்ந்தது. ''மிஸ்டர் ராஜாமணி! கொலைகாரனின் முதிர்ந்த துப்பாக்கி அனுபவத்திற்கு இதோ ஒரு சான்று இருக்கிறது. சுடும் போது சப்தம் வெளியே அதிகமாகக் கேட்கக் கூடாதே என்று ரிவால்வரைத் துணியால் அழுத்தி மூடிக்கொண்டு சுட்டிருக்கி

ருன். அந்த துவாரம்தான் இது! இந்த யோசனை ஒரு பெண்ணுக்கு வருமா?'' என்று கேட்டார் டாக்டர்.

''வரும்!...வராது!...'' என்று ஏதேதோ உளற ஆரம்பித்தார் ராஜாமணி. அவர் மூளை அந்த நிலைக்குக் குழம்பிப் போயிருந்தது. அந்தக் குழப்பத்திலும் ராஜாமணிக்கு ஒரு யோசனை!

"டாக்டர்! ரத்தத்தை விரலில் தோய்த்து துணிமீது எழுதினால் எழுதப்பட்ட அளவே அது தோன்றுவதில்லை. அந்த ரத்தம் துணியில் அகன்று பரவிக் கொள்ளும்...அதாவது பிளாட்டிங் பேப்பரில் மையால் எழுதினால் எப்படியோ அப்படி. இதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டுமல்லவா?'' என்று கேட்டார் ராஜாமணி.

"வாஸ்தவம்தான்!'' என்று தலை ஆட்டினார் காப்டன் கேதாரி. தன்னையும் மிஞ்சிவிட்டாரே ராஜாமணி என்று வியந்து பார்த்த டாக்டர் "ஈரக்கசிவு உள்ளவைகளே அப்படித்தான்!", என்று ஒப்புக் கொண்டார்.

வழிக்கு வந்தாயா என்பதுபோல தலையை ஆட்டிய ராஜாமணி, 'ரா' என்ற எழுத்தின் தடிப்பை இப்போது ஒதுக்கி விட்டுக் கவனிக்கலாம், 'ரா' என்ற எழுத்தே குறிக்கப்படாதது போல வைத்து ஆராயலாம். அப்போது ராகினியை சந்தேகிக்க இடமில்லையா?'' என்று கேட்டார்.

''இல்லை. ஏனென்றால் ரமணி சுடப்பட்டபோது மணி கிட்டத்தட்ட பதினொன்று. அதற்கு முன்பு மாலை ஆறு மணியிலிருந்து ராகினி அவள் உட்கார்ந்திருந்த பொது ஹாலை விட்டு நகரவேயில்லை. சுட்ட சம்பவத்திற்குப் பிறகும் அவள் வேறெங்கும் தனியாகப் போகவில்லை. அதற்கு ரூப் சந்த், ஷைலோ ஆகியவர்களின் சாக்ஷியங்கள் இருக்கின்றன!''என்றார் டாக்டர்.

''நான் வேறொரு விதமாக அனுமானிக்கிறேன். அது ஒத்து வருகிறதா இல்லையா பாருங்கள். ரமணி சுடப்பட்ட பிறகு ராகினியை ஷைலோ தன் அறைக்குக் கூட்டிக் கொண்டு போயிருக்கிறாள். பிறகு சிறிது நேரம் சென்று ராகினி தூங்குவதாகக் கண்டு ரமணியின் உடல் நிலையைப் பார்த்துவர ஷைலோ உங்கள் அறைக்கு வந்திருக்கிறாள். தனிமையாக விடப்பட்ட அந்த நேரத்தில் ராகினி எழுந்துபோய் சுதாராணியை ஏன் சுட்டு விட்டு வந்திருக்கக் கூடாது?'' என்று கேட்டார் ராஜாமணி.

"ஷைலோ ரமணியைப் பார்த்து வரச்சென்ற நேரத்தில் ராகினி நல்ல தூக்கத்தில் இருந்தாள் என்றல்லவா அவள் உறுதியாகச் சொல்லுகிறாள்!''

''தூங்குவதுபோல ராகினி பாசாங்கு செய்துகொண்டிருந்து சமயம் பார்த்திருக்கலாமல்லவா?''

"இது நீங்களாகச் செய்யும் வெறும் அனுமானம்தானே! அதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளக்கூடிய வேறு சாக்ஷியம் வேண்டாமா?"

"இருக்கக் கண்டுதான் நான் சொல்கிறேன். ரிவால்வர் சப்தம் வெளிவராமல் இருக்க உபயோகிக்கப்பட்ட கைக் குட்டை யாருடையது தெரியுமா?"

"யாருடையது?" என்று கேட்டார் டாக்டர்.

"ஷைலோ வினுடையது!"

"அது ஷைலோவின் கைக்குட்டையானால் சந்தேகத்திற்குப் பாத்திரமானவள் அவளல்லவா? ராகினிக்கு எதிராக அது எப்படி சாக்ஷியளிக்கும்?"

"ரமணியைச் சுட்டபிறகு ராகினி ஷைலோவின் அறையி லேயே இருந்திருக்கிறாள். ரமணியைச் சுட்ட கைத்துப்பாக்கி அது கிடந்த இடத்தில் காணப்படவில்லை. ஆதலால் அதை ராகினியே திரும்ப எடுத்திருப்பாள் என்று கருதலாம்! ராகினி தூங்குவதாக நினைத்து ஷைலோ ரமணியைப் பார்க்கப்போன தருணத்தில் ராகினிக்கு நேரம் கிடைத்து விட்டது. கைத் துப்பாக் கியை மூடிக்கொண்டு சுடுவதற்கு துணி தேடியிருக்கிறாள். அவ சரத்தில் அவளுக்கு ஷைலோவின் கைக்குட்டை அகப்பட்டி ருக்கிறது. ஏன்...? இப்படியும் நடந்திருக்கக் கூடாதா?"

"கைக்குட்டை சம்பந்தப்பட்ட மட்டிலும் உங்கள் யூகப் படியே இருக்கட்டும். வீசி எறிந்த ரிவால்வரை ராகினி திரும்ப எடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதை உங்களால் எப்படி நிரூபிக்க முடியும்? கொலைக் குற்றத்தை ருசுப்படுத்த வேண்டுமென்றால் அதற்கு உபயோகப் படுத்தப்பட்ட ஆயுதம் முக்கியமல்லவா? அது ராகினியிடம்தான் இருக்கிறது என்பது என்ன நிச்சயம்?"

"அதையும் பார்த்துவிடலாம்!" என்று கூறிய ராஜாமணி, காப்டன் கேதாரி அருகே வந்தார். "காப்டன்! உங்கள் உதவி இப்போது எனக்குப் பெரிதும் உதவும். உங்கள் சிப்பந்திகள் நிறையப் பேர்கள் இருக்கிறார்களல்லவா? ஒவ்வொரு அறைக் கும் ஒருவரை காவல் போட்டுவிட்டு அத்தனை பிரயாணிகளையும் பொதுவான ஹாலுக்கு அனுப்பி வைக்க வேண்டும். சிரமும் கசப்பானதுமான காரியம்தான். ஆனாலும் நடந்திருப்பது கொலையல்லவா!" என்று மெதுவாகக் கூறினார் துப்பறியும் நிபுணர்.

"இதுதானா பிரமாதம்! ஒரு நொடியில் ஏற்பாடு செய்து விடுகிறேன். என் கப்பலில் இந்தக் கொலை நடந்திருக்கும் போது எனக்கு அக்கறை இருக்காதா என்ன?" என்று சொல்லி விட்டு ராஜாமணியின் வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கப் புறப்பட்டார் காப்டன் கேதாரி.

21

துப்பறியும் நிபுணரின் வேண்டுகோளுக்கிணங்க காப்டன் கேதாரி சம்சயப் பட்டவர்களின் அறைகளுக்கெல்லாம் காவல் போட்டுவிட்டு அவர்களையெல்லாம் பொதுவான ஹாலுக்கு அனுப்பி வைத்துக் கொண்டிருக்க, ராஜாமணி ஷைலோவின் அறையிலே உட்கார்ந்து பேச்சில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்.

ராஜாமணியோடு ஷைலோ பேசிக் கொண்டிருந்தாள். ராகினி பரக்க விழித்தபடி அவர்களது பேச்சைக் கவனித்தவாறு பித்துக்குளி போல உட்கார்ந்திருந்தாள்.

ராஜாமணி ஷைலோவை விசாரித்துக் கொண்டிருந்தார்.

''ஷைலோ! இதைப் போன்ற படுகொலை நேர்ந்துவிட்ட சமயத்தில் சந்தேகப்பட்டவர்கள் தனக்குத் தெரிந்த உண்மைகளை மறைக்காமல் கூறுவது எல்லாவிதத்திற்கும் நல்லதாகும். இதோ பார் ஷைலோ, இந்தக் கைக்குட்டை உன்னுடையது தானே?''

ராஜாமணி காட்டிய கைக்குட்டையைக் கையில் வாங்கிப் பார்த்தாள் ஷைலோ. அவள் முகம் 'குப்'பென மாறுபட்டது. ''இது எப்படி உங்கள் கைக்குக் கிடைத்தது?'' என்று பதட்டத்தோடு கேட்டாள்.

''மோட்டியின் அறையிலே கிடந்தது. கொலை செய்தவன் சப்தம் அதிகமாக வெளிவராமலிருக்க துப்பாக்கியை இதனால் மூடிக்கொண்டு சுட்டிருக்கிறான்!...ஷைலோ, இது உன் கைக்குட்டைதானே?''

''ஆமாம்''

''இது எப்படி சுதாராணியின் அறைக்குப் போயிருக்க முடியும் என்பதை விளக்க முடியுமா?''

''எனக்கே புரியவில்லை!''

''நேற்று எப்போதாவது சுதாராணியின் அறைக்குப் போய் அவளோடு பேசிக் கொண்டிருந்தாயா?''

''இல்லவே இல்லை.''

''நேற்று மாலை பொதுவான ஹாலில் நீ, ராகினி, சுதா, ரமணி, ரூப்சந்த் ஆகியோர் இருந்தீர்களே. அப்போது தவறுதலாக உன்னுடைய கைக்குட்டையை சுதாராணி எடுத்துச் சென்றிருக்கலாமல்லவா?''

''இல்லை; நேற்று அந்தப் பொதுவான ஹாலுக்குப் போனபோது நான் கைக்குட்டை ஒன்றையும் எடுத்துச் சென்றதாக ஞாபகமில்லை.''

"அப்படியானால் இந்தக் கைக்குட்டை உன்னை அறியாமலேயே தவறிப் போயிருக்கிறதாக்கும்?"

"அப்படித்தான் தோன்றுகிறது."

"உன்னோடு பேசிப் போக யாராவது உன் அறைக்கு நேற்று வந்திருந்து கைதவறுகக் கைக்குட்டையை எடுத்துச் சென்றிருக்கலாமல்லவா?"

சிறிது யோசித்தாள் ஷைலோ. முன்தினம் அவளை சந்தித்துப் பேச யாருமே வரவில்லை. குறிப்பாக எப்போதும் அவளையே மோகக் கிறுக்கில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் பட்டாபியைக் கூட முன்தினம் மத்தியானம் அறைக்கு வெளியே சந்தித்தாள். அப்போது கைக்குட்டையைக் கொண்டு சென்றது ஞாபகத்திற்கு வந்தது. அதைத் திரும்ப வரும்போது விட்டு வந்திருக்கலாமோ?...ஏதோ சொல்ல வாய் திறந்தாள். ஆனால், அடுத்த வினாடி அதை மூடி மறைப்பதை ராஜாமணி கவனிக்காமல் இருந்திருப்பாரா!

"ஷைலோ! ஏதோ கூறவந்தாய்! உடனே சொல்லாமல் மறைத்து விட்டாய். தைரியமாகச் சொல்லு!" என்று கிட்டி போட்டார் ராஜாமணி.

ஷைலோ தன் மனதிலே உள்ளதைத் திறந்து கூறவில்லை. வேறு வழியில் சமாளித்துக் கொண்டாள். "இப்போதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. நேற்று மத்தியானம் சாப்பாட்டிற்குக் கீழே போயிருந்தபோது எடுத்துப்போன கைக்குட்டையை மறந்து வைத்துவிட்டேன். ஒருக்கால் அதுவாக இருக்குமோ என்னவோ!"

ஷைலோ கூறும் இந்தச் சமாதானம் வெறும் கட்டுக்கதை என்பதை அவளது தடுமாற்றத்திலிருந்தே ராஜாமணி ஊகித்துக் கொண்டார். கைக்குட்டை விஷயத்தை மறைக்கிறுள் என்பது நன்கு புலனாகியது. சமயம் வரும்போது மறுபடியும் உண்மையை கிரகிக்கலாம் என்று நினைத்து, பேச்சை வேறு திசைக்கு மாற்றி ராகினியை ஓரக் கண்ணால் கவனித்தார். ராஜாமணியின் அந்தப் பார்வை ராகினியை எந்தவிதத்தில் கலக்கிவிட்டதோ தெரியவில்லை. "அந்தக் கைக்குட்டையை நான் எடுக்கவேயில்லை. எனக்குத் தெரியவே தெரியாது!" என்று புலம்ப ஆரம்பித்தாள்.

"நீ எடுத்தாயா என்று உன்னை நான் கேட்கவில்லை ராகினி! நீ ஏன் பதட்டப்படுகிறுய்?" என்றார் ராஜாமணி மிக சாந்தமாக.

இந்த வார்த்தைகள் அவரிடமிருந்து அடக்கத்தோடு வெளி வந்தாலும்கூட அது நைச்சியமாகப் பேசப்பட்டது போலவே ராகினியின் மனதிலே சங்கடத்தை விளைவித்தது. தான் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு அகன்று ஆவேசம் வந்தவள்

போல் ஓடிவந்து ராஜாமணியின் கால்களைப் பிடித்துக்கொண்டு 'ஓ' வெனக் கதறி அழுதாள். "ஸார்! ஆணையிட்டுச் சொல்லுகிறேன். சுதாவை நான் பழி தீர்த்துக் கொள்ளவேயில்லை, அவள் இருந்த திசைப்பக்கம் கூட நான் எட்டிப் பார்த்ததில்லை. நான் நிரபராதி...நிரபராதி!...ஏதோ ஆத்திரத்திலே உணர்ச்சி வசப்பட்டு சுதாவைக் கொன்று விடுவதாக நான் பல தடவை கூறியிருக்கலாம். அதை வைத்துக் கொண்டு எல்லோரும் என்னை சந்தேகக் கண்களோடு பார்க்கிறார்கள். நான்தான் கொலை செய்திருப்பேன் என்று விடாப்பிடியாகக் கூறுகிறார்கள். என்னை நம்புங்கள் ஸார்! நேற்று நான் உண்ட மது எனக்கு அசுர குணத்தைத் தந்து விட்டது. இல்லாவிட்டால் ரமணியைக் கூட நான் சுட்டிருக்க மாட்டேன்...! ஏதோ சுட்டுவிட்டேன்! சித்தத் தடுமாற்றத்தால் அப்படிச் செய்து விட்டேன், ஆனால், சுதா விஷயத்தில் நான் ஏதும் தீங்கு தேடவேயில்லை, என்னை நம்புங்கள்!...நம்புங்கள்" என்று அவள் கதறி அழுதபோது ராஜாமணியின் மனமும் இளக ஆரம்பித்தது.

"ராகினி! யார் யார் என்ன வேண்டுமானாலும் சொல்லி விட்டுப் போகட்டும்; ஆனால், நான் உன்னை சந்தேகிக்கிறேனா என்பதுதான் முக்கியம். நீதான் சுதாவைக் கொன்றிருக்க வேண்டும் என்பது சந்தேகத்திற்கிடமாக இருந்தாலும் அது ஊர்ஜிதப்படுத்தும் வகையில் இன்னும் எதுவும் முடிவாக வில்லை. ஆனால், ராகினி! உண்மையிலேயே நீ நிரபராதியானால் என் சந்தேகங்களை நீ தீர்த்துவைக்க வேண்டும். சுதாவின் மலேயா பிரயாணம் மூடுமந்திரமாக வைக்கப்பட்டிருந்தது. அதுவும் நீ பின்தொடர்ந்து வரக்கூடாது என்பதற்காகவே அது திட்டமிடப்பட்டது, அப்படி இருந்தும் அந்தப் பரம ரகஸ்யம் உனக்குத் தெரிந்து நீயும் இந்தக் கப்பலிலேயே புறப்பட்டிருக்கிறாய். அந்தத் தகவல் உனக்கு யார் மூலம் கிடைத்தது?"

"பிரயாணத்திட்டம் ரகஸ்யமானது என்று உங்கள் எண்ணமாக இருக்கலாம். ஆனால், அது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாக இருந்தது!"

"எல்லோருக்கும் தெரிந்ததாகவே இருக்கட்டும். உனக்கு யார் வந்து சொன்னார்கள் என்பதுதான் என் கேள்வி."

"மாமாவான மதுசூதனர் எனக்கு அறிவித்தார். பிறகு தான் நானும் புறப்பட்டேன்."

"ராகினி! உன் சிபாரிசுக் கிணங்க சுதாராணி ரமணியை வேலைக் கெடுத்துக் கொள்வதாக வாக்குறுதி யளித்த அந்த தினத்தை ஞாபகப்படுத்திக் கொள். அன்று மாலைக்குப் பின் நீயும் ரமணியும் ஹோட்டல் பௌராணியில் சந்தித்தீர்கள். ரமணி அப்போது உன்னிடம் கூறிய வார்த்தைகளைச் சொல்கிறேன். 'சிறிது நாள் பொறுத்திரு ராகினி. நம் எதிர்கால

ஆ ஐ வின் சுபிக்ஷத்தைத் எண்ணி பல்லை கடித்துக்கொண்டு சகிப் போடு இரு!' என்ருன். பிரிவுத் துயரில் நீ வாடியபோது ரமணி கூறிய ஆறுதல் வார்த்தை இது! ரமணி கூறிய அந்த வாக்கியத்தில் 'சிறிது நாள்' என்பது என்ன அர்த்தத்தில் கூறப்பட்டது என்பதைச் சொல்லலாமா?''

''வேறு எந்த விபரீத அர்த்தத்தோடும் அவர் அப்படிக் கூறவில்லை. சிறிது நாள் சுதாவிடம் வேலைக்கிருந்தால் நிறைய சம்பாதிக்கலாம்; பிறகு என்னை மணம் செய்துகொண்டு ஆனந்தமாக வாழலாம் என்ற அர்த்தத்தோடு அவர் எனக்கு ஆறுதல் கூறினுர்.''

''மற்ருெரு விஷயம். நீயும் ரமணியும் நீண்ட நாள் காதலர்கள். ஒருவரையொருவர் மனப்பூர்வமாக நேசித்து வந்திருக்கிறீர்கள். சதா சர்வ காலமும் ரமணி உன்னிடம் மாய்ந்து கிடந்திருக்கிருன். அப்படிப் பட்டவன் ஒரு வார காலத்தில் மனம் மாறி சுதாவிடம் மாய்ந்துவிடுவது மிக அபூர்வமான குணமல்லவா?'' என்று கேட்டு ராஜாமணி ராகினியின் பதிலை ஆவலோடு எதிர்பார்த்தார். ராகினியிடமிருந்து ஏதும் பதில் வரவில்லை. மௌனமாகக் கண்ணீர் சிந்தினுள்.

அவளிடமிருந்து கிரகிக்க வேறு எதுவும் இருப்பதாக ராஜாமணிக்குப் புலப்படவில்லை. கடைசியில் ஓரேயொரு கேள்வி கேட்க விரும்பினவராய், ''ராகினி! நீ ரமணியைச் சுட்ட பிறகு அந்த துப்பாக்கியை உன்னேடு எடுத்துக் கொண்டு வந்து விட்டாயா?'' என்று கேட்டார்.

''இல்லை. அதை அங்கேயே போட்டுவிட்டேன். திரும்ப அதை நான் எடுக்கவேயில்லை. இன்னமும் அங்கேயே தான் கிடக்க வேண்டும்.''

''அது அந்த இடத்தில் இப்போது காணப்படவில்லை. அதனுல்தான் உன்னைக் கேட்டேன். அது பற்றி உனக்குத் தெரியாது என்று கூறிவிட்டாய்! சரி...'' என்று பேச்சுக்குப் புள்ளி வைத்துவிட்டு ஷைலோவின் பக்கம் பார்வையை செலுத்தினுர். ''ஷைலோ? ராகினியை உன்னேடு அழைத்துக் கொண்டு பொதுவான அந்த ஹாலிலே போய் இரு. நானும் பத்து நிமிஷத்தில் அங்கு வந்து சேருகிறேன்'' என்ருர்.

கதவைப் பூட்டிக்கொண்டு கிளம்ப பூட்டு ஒன்றை எடுத்த போது, ''பூட்ட வேண்டாம் ஷைலோ! காவலுக்கு ஆள் போட்டிருக்கிறேன். திறந்தே இருக்கட்டும்'' என்ருர் ராஜாமணி.

ராகினியைக் கூட்டிக்கொண்டு ஷைலோ வெளிக் கிளம்பினுள். அதே சமயத்தில் ''ராஜாமணி இருக்கிருரா?'' என்று கேட்டுக் கொண்டே டாக்டர் சத்யம் உள்ளே நுழைந்தார். அவர் கூடவே தோழர் ஜகத்தும் அறைக்குள் பிரவேசித்தார்.

''மிஸ்டர் ராஜாமணி! தோழர் ஜகத்துக்கு சில ரகஸ்யங்கள் தெரிந்திருக்கிறது. உங்களது புலன் விசாரணைக்கு அவரது வாக்குமூலம் மிகவும் உதவியாக இருக்கும்'' என்று கண்களைத் தமாஷாக சிமிட்டினார் டாக்டர்.

ஜகத்தின் கண்கள் பிரகாசித்தன, ராஜாமணியின் முகமும் மலர்ந்தது. ஜகத்திடமிருந்து மேலும் கொலை பற்றிய விபரங்களெல்லவா கிடைக்கப் போகிறது என்ற ஆர்வத்தில் அவனை உட்கார்ந்து கொள்ளும்படி உபசாரம் செய்தார் ராஜாமணி.

22

போலீஸ்காரர்கள் ஆகட்டும் துப்பறியும் நிபுணர்களாகட்டும் எவனிடமாவது தனக்கு வேண்டிய தகவல் இருக்கிறது என்று கடுகத்தனை தெரிந்தால் போதும், அவனைத் தட்டிக் கொடுத்து, குஷால் படுத்தி, உச்சி குளிரப்பேசி, சடோபசாரம் செய்வதில் அசகாய சூரர்களாயிருப்பார்கள். அவனிடமிருந்து தனக்கு வேண்டிய விஷயங்களைக் கிரகிக்கும் வரை அவனை உயர்த்திப் பேசி வாயாரப் புகழ்வதில் அவர்கள் மகா சமர்த்தர்களாயிருப்பார்கள். அந்தக் கூட்டத்திலே ராஜாமணி மட்டும் எப்படிப் புறம்பாக இருக்க முடியும்! தோழர் ஜகத்துடன் வெகு பிரியத்தோடு பேசிக்கொண்டிருந்தார்.

''ஜகத்! நீங்கள் மிகவும் இளைஞராயிருந்தாலும் மிக புத்தி தீக்ஷண்யத்தோடு விளங்குகிறீர்கள். அதோடு நிறைந்த படிப்பும் இருக்கிறது. பல நூல்கள் கற்றறிந்திருக்கிறீர்கள். ஆதலால் உங்களைப் போன்ற வாலிப உள்ளம் புது உலகம் ஒன்றை சிருஷ்டிப்பதில் நாட்டம் கொள்வதும் அதற்கான ஒரு திட்டத்தை உருவாக்குவதில் ஆர்வமும் கொள்வது இயற்கை. நீங்கள் ஒரு நவயுவராக இருபபதால் மனதிலுள்ளதை அப்பட்டமாக எடுத்துச் சொல்லுகிறீர்கள். அதனால் உங்களைக் ஒரு புரட்சிக்காரன் என்று சகலரும் தீர்மானித்துக் கொண்டு விட்டார்கள், ஏன்! கப்பல் காப்டனுன கேதாரிக்குக்கூட உங்களைக் கண்டால் ஒரே கிலி! ஓரிரண்டு சந்தர்ப்பங்களில் புரட்சி, அது, இது என்று கனல் கக்கப் பேசி வந்ததால் நீங்கள் மகா ஆபத்தான ஆசாமி என்று எல்லோரும் உங்களைக் கண்டு ஒதுங்குகிறார்கள். ஆனால், நானும் டாக்டரும் உங்களைப் பற்றியும உங்கள் புத்தி நுட்பத்தைப் பற்றியும் அடிக்கடி பேசிக் கொள்வதுண்டு...'' என்று ஜகத்தை தட்டிக் கொடுக்கும் முறையில் ராஜாமணி பேசிக்கொண்டு வரும்போது, டாக்டரும் 'ஆமாம், ஆமாம்' என்று தாளம் போட்டுக் கொண்டு வந்தார், உச்சி குளிர்ந்து போன ஜகத், இரண்டு திறமைசாலிகளும் சேர்ந்து தன்னை வசமாக வலையில் வீழ்த்துகிறார்கள் என்பதை சிந்திக்க முடியாமல் பூரித்துக் கொண்டிருந்தான்.

ராஜாமணி மேலும் பேசிக் கொண்டே இருந்தார். "ஜகத்! காணும் இந்த ஒரு வாரமாக கவனிக்கிறேன்; இத்தனை பிரயாணிகளுக்குள்ளே, தான் உண்டு—தன் வேலையுண்டு என்று இருப்பவர் நீங்கள் ஒருவர்தான். நீங்கள் அவர்களோடு கலந்து பழகாவிட்டாலும் ஒவ்வொருவருடைய நடவடிக்கைகளையும் குணதிசயங்களையும் கூர்ந்து கவனித்து வருவதை நான் அறிவேன். மனோ தத்துவ ஆராய்ச்சியில் உங்களுக்கு நிறைந்த ஆர்வம் உண்டோ?"

"நன்றாகச் சொன்னீர்கள்! தோழர் ஜகத் ஒரு ஆளைப் பார்த்த மாத்திரத்தில் குணதிசயங்களை கூறிவிடுவாரே! முதல் சந்திப்பின்போது என்னைப் பார்த்து முத்துத் தெறித்தாற்போல ஒரு வார்த்தை கூறினார். ரொம்பப் பொருத்தமாக இருந்தது. அதுமுதல் ஜகத்தை எனக்கு மிகவும் பிடித்துப்போயிற்று!" என்று டாக்டர் குறுக்கிட்டார்.

"அவர் என்ன சொன்னார்?" என்று கேட்டார் ராஜாமணி.

"நான் டாக்டர் தொழிலில் புகுந்ததைவிட துப்பறியும் தொழிலில் ஈடுபட்டிருந்தால் நிறைய சம்பாதித்திருப்பேனும்! பெயரோடும் புகழோடும் விளங்கி இருப்பேனும்! ஏனய்யா இந்த டாக்டர் தொழிலில் வந்து அகப்பட்டுக் கொண்டீர் என்று ஜகத் பரிகாசம் செய்கிறார்!" என்று சிரித்துக் கொண்டே டாக்டர் கூறினார்.

"இப்போது நீங்கள் என்னோடு அந்த வேலையில் தானே ஈடுபட்டிருக்கிறீர்கள்!" என்று கூறிச் சேர்ந்து சிரித்தார் ராஜாமணி.

ஜகத் அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"ஜகத்! கிட்டத்தட்ட நீங்கள் எல்லோரிடமும் பழகிவிட்டீர்கள். எல்லோருடைய மனோபாவத்தையும் ஆராய்ந்திருப்பீர்கள். எங்கே...ஒவ்வொருவராகக் குறிப்பிடுகிறேன்...அவர்களை எப்படி எடை போட்டு வைத்திருக்கிறீர்கள் என்று பார்க்கலாம்" ராஜாமணி மெதுவாக ஜகத்திடமிருந்து அபிப்பிராயம் சேகரிப்பதில் முனைந்தார்.

"ஜகத் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மையாகவே இருக்கும். சந்தேகம் வேண்டாம்!" என்று சிண்டு தட்டிவிட்டார் டாக்டர்.

ராஜாமணி ஆரம்பித்தார், "ஜகத்! நேற்று இரவு நடந்த பயங்கரச் சம்பவங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அந்த விஷயத்தில் உங்கள் புத்திக்கு யார் குற்றவாளியாகத் தோன்றுகிறார்கள், சொல்லுங்கள்!"

"நடந்திருப்பது கொலை. அதில் அனுமானத்திற்கு இடம் கொடுத்துச் சொல்வது புத்திசாலித்தனமில்லை என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம். இதைப் போன்ற விஷயங்களில் கண்ணால் கண்டதைத் தவிர, எதையும் சாக்ஷியமாக எடுத்துக் கொண்டு விடக் கூடாது. நான் கூடக் கேள்விப்பட்டேன். நீங்கள் எல்லோரும் சேர்ந்து ராகினியைச் சந்தேகிப்பதாக! சந்தர்ப்ப சாக்ஷியங்கள் அதற்கு இடம் தரலாம். ஆனால், சுதாவை அவள்தான் சுட்டாள் என்பதற்கு நேரிடையான சாக்ஷியம் ஏதாவது இருக்கிறதா?...கிடையாது!...சரி, சுட்ட சமயத்தில் யாராவது பார்த்தார்களா?...அப்படியும் இல்லை. அதுதான் போகட்டும். சுதா இருந்த அறைப் பக்கமாவது ராகினி சென்றதைப் பார்த்ததாக யாராவது சொல்ல வேண்டாமா?...என்னைக் கேட்டால் 'ராகினி அந்தப் பக்கம் போனதைப் பார்த்தேன்' என்று யாராவது சொன்னால்கூட அதை ராகினிக்கு எதிரான சாக்ஷியமாகக் கொண்டுவிட முடியாது. ஏன் தெரியுமா? நேற்று பல பேர்கள் சுதாராணியின் அறைக்குப் போய் வந்திருக்கிறார்கள்...!"

'அகப்பட்டதடா கிளி!' என்று உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டார் ராஜாமணி. "அப்படி யாரெல்லாம் சுதாராணியின் அறைக்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள்?" என்று சூட்டோடு சூடாக ஒரு கேள்வியைக் கேட்டார்.

இரவு பத்து மணி சுமாருக்கு மிஸ்டர் தாஸ் சுதாவோடு பேசிக் கொண்டிருந்தார். அவர் எப்பொழுது போனாரோ எனக்குத் தெரியாது! அரை மணி நேரத்திற்குப் பிறகு வேலைக்காரி மங்கம்மாவைப் பார்த்தேன். அதற்கும் கால் மணி சென்று, பட்டாபி சுதாராணியின் அறையிலிருந்து வெளிவந்ததைப் பார்த்தேன்..."

"பட்டாபியா?...சுதாராணியின் அறையிலிருந்தா?...அப்போது எத்தனை மணி இருக்கும் ஜகத்?"

"கணக்கிட்டுப் பாருங்களேன்! முன்பின்னாக சுமார் பதினொரு மணி இருக்கும்!...இல்லை...பதினொன்று அடித்துவிட்டது என்று நினைக்கிறேன். நான் தூங்கப் போன சமயம் அது!"

"பார்த்தீர்களா ராஜாமணி! உங்களுக்குத் தெரியாததெல்லாம் ஜகத்துக்குத் தெரிந்திருக்கிறது! இவ்வளவுதான் என்று நினைக்கிறீர்களா? பட்டாபி எப்படிப்பட்டவன் என்பதை வர்ணிக்கச் சொல்லுகிறேன் பாருங்கள்!" என்று ராஜாமணியைப் பார்த்து டாக்டர் பெருமிதமாகக் கூறிவிட்டு, "எங்கே ஜகத்! ஆரம்பி பார்க்கலாம்" என்று தோழரைத் தட்டி விட்டார்.

"பட்டாபிதானே! அவன் கிராக்குத்தனம் யாருக்குத்தான் தெரியாது! ஒரு காலத்தில் பாலாமணியைச் சுற்றிவந்து உயிரை

விட்டுக் கொண்டிருந்தாலும், இப்போது ஷைலோ அவனுக்குக் கண்கண்ட தெய்வமாக இருக்கிறாள். மகாப் பெண்பித்துக் காரன் அவன்! நேற்று மத்யானம் வெகுமதியாக ஷைலோ பூவேலைப்பாடு நிறைந்த ஒரு கைக்குட்டையை பட்டாபிக்குக் கொடுத்தாலும் கொடுத்தாள், அதற்கு வாய் இருந்திருந்தால் ஒரு சுரல் அழுதே இருக்கும்! அந்தக் கைக்குட்டையை ஷைலோ என்றே கருதி கசக்கி முகர்ந்து அவன் பட்ட ஆனந்தம் இருக்கிறதே...அப்பப்ப! . ஒரே பைத்தியக்காரக் கூத்து!''

"அப்படியானல் ஷைலோவிற்கும் பட்டாபிக்கும் இடையே காதல் பிரமாதமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்று சொல்லுங்கள்!''

"சந்தேகம் வேறு! . காதல் மொட்டு மலர்ந்துகூட விட்டது!''

". ஜகத் எப்படியெல்லாம் ஹாஸ்யமாகப் பேசுகிறர் பார்த்தீர்களா!'' என்றார் டாக்டர்.

ராஜாமணி அதை ரஸிக்கவில்லையோ அல்லது வேறு கோணத்தில் அவர் புத்தியும் யோசனையும் திரும்பிவிட்டதோ தெரியவில்லை. டாக்டரின் 'ஷொட்டு'ப் பேச்சிற்கு அவர் பதில் பேச்சுக் கொடுக்கவில்லை.

அப்போது தானகவே சிறிது நேரம் மௌனம் குடிகொண்டு விட்டது.

"பிரமாதமான யோசனை போலிருக்கிறதே!'' என்று மறுபடியும் உரத்த குரலில் கேட்டார் டாக்டர்.

கனவிலிருந்து விழித்தவர்போல தன்னைத்தானே சிலும்பிக் கொண்ட ராஜாமணி "காப்டன் கேதாரியின் ஞாபகம் வந்துவிட்டது. ஐந்து நிமிஷத்தில் வருவதாக அவரிடம் கூறியிருந்தேன். உங்களோடு பேசிக்கொண்டிருந்த சுவாரஸ்யத்தில் மறந்தே போய் விட்டது!'' என்று சொல்லிய ராஜாமணி, "ஜகத்! உங்களோடு பேசிக் கொண்டிருந்த ஒவ்வொரு விநாடியும் எனக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்ததோடு பல அனுமானங்களுக்கு வழி காட்டும் தன்மையிலும் அமைந்து விட்டது! ஓழிந்த வேளைகளில் நீங்கள் அடிக்கடி என்னேடு வந்து பேசிக்கொண்டிருக்கலாம்'' என்று உபசார வார்த்தைகள் கூறிக்கொண்டே எழுந்தார்.

ராஜாமணி தனக்குப் பிரிவதற்கு விடை கொடுக்கிறர் என்பதைப் புரிந்து கொண்டான் ஜகத். அவன் நாசூக்குத் தெரிந்த பேர்வழி அல்லவா!

ஜகத் வெளியே சென்ற ஒரு நிமிஷத்திற்கெல்லாம் டாக்டரை ரமணி அழைப்பதாக ரூப்சந்த் வந்து கூறவே அவரும் கிளம்பிச் சென்றார்.

தனியே விடப்பட்ட ராஜாமணி பலவித யோசனைகளில் மூழ்கினார். இப்போது சந்தேகத்திற்கிடமான விஷயம் அவரது மூளையைக் கொதிக்கவைக்க ஆரம்பித்தது.

ஜகத் உத்தேசமாகக் குறிப்பிடும் நேரம் இரவு பதினொரு மணி. பட்டாபி சுதாராணியின் அறைப்பக்கம் நடமாடியிருக்கிறான். ரிவால்வரை சுற்ற உபயோகப் பட்டிருக்கும் கைக்குட்டை ஷைலோவினுடையது. அன்று மத்யானம் ஷைலோ பட்டாபிக்கு ஒரு கைக்குட்டை கொடுத்திருக்கிறாள். சுதாராணியை பட்டாபி கொன்றிருப்பானா?

சந்தர்ப்பப் பொறுத்தம் இருக்கிறது. ஆனால், சுடுவதற்கு அவனுக்கு ஏது துப்பாக்கி?

ராஜாமணியின் நுட்ப புத்தி மேலும் யூகத்தில் வட்டமிட்டது. ஷைலோவின் கடைக்கண் பார்வைக்காக பட்டாபி எதையும் செய்யக் கூடியவனாய் இருக்கிறான். ஏதோ ஒரு திட்டம் அவர்களிடையே ஏன் ஏற்பட்டிருக்கக் கூடாது? ராகினி ரமணியைச் சுட்டபிறகு கைத்துப்பாக்கியை அவள் கீழே போட்டாளே, அதை ஷைலோ எடுத்துவந்து பட்டாபியிடம் கொடுதிருந்தால்?

பட்டாபி பரம சாதுபோல தென்படுகிறான்! சாதுபோல இருப்பவர்கள்தான் அசாத்யமான காரியம் செய்கிறார்கள்! எந்தப் புற்றில் எந்தப் பாம்பும் இருக்கலாம். சுதாராணியை பட்டாபி ஏன் கொன்றிருக்கக் கூடாது?

இதற்கு எதிரிடையான மற்றொரு அபிப்பிராயமும் தொடர்ந்து ராஜாமணியின் மனதிலே தோன்றியது. சுதாராணியைக் கொல்வதன் மூலம் பட்டாபி என்ன பலனைக்கண்டுவிடப் போகிறான்?

ஷைலோவின் அறையை சோதனையிட்டால் என்ன என்று அவருக்கு ஒரு விபரீத எண்ணம் உதித்தது. அவ்வளவுதான்... அறையைத் துழாவ ஆரம்பித்தார்.

பத்து நிமிஷத்திற்கு மேலாகச் சோதனையிட்டாகி விட்டது. எந்தவிதத் தடையமும் அவர் கைக்கு அகப்படவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தார், கட்டிலின்மீது கிடந்த ஷைலோவின் கைப் பை அவர் பார்வையில் பட்டது.

அதைத் திறந்து பார்த்தார். கூரிய அவரது திருஷ்டி பைக்குள் சென்றதும் அவரது விழிகள் விழித்தது விழித்தபடி நின்று விட்டன. ஆச்சரியத்தால் அவரது புருவம் மேலுக்கு உயர்ந்தது. வலது கை பரபரப்போடு பைக்குள் இருந்த அந்தப் பொருளை வெளியே எடுத்தது.

அது ஒரு முத்துமாலை! ஏற்கனவே ஒருதரம் பட்டாபியால் திருடப்பட்டு மீண்டும் கைக்கு வந்து சேர்ந்த முத்துமாலை! சுதாவின் விலையுயர்ந்த ஆபரணம். அது ஷைலோவின் பையிலா?

அவரது ஞாபகம் பழைய ஒரு சம்பவத்திற்குத் திரும்பியது.

முன்பு ஒரு நாள் ஷைலோவும் பட்டாபியும் சிருங்காரப் பேச்சில் ஈடுபட்டிருந்தபோது ஷைலோ பட்டாபியிடம் 'உங்கள் ஆசைக்குகந்த ஷைலோவுக்கு என்ன அவ்வளவு பெரிய வெகுமானம் தந்துவிட்டீர்கள்?' என்று கூறிய அந்த வார்த்தைகள் அவரது காதுகளிலே ரீங்கார மிட்டது.

ஷைலோவுக்கு வெகுமதியளிக்க சுதாவின் முத்து மாலையா? ...அந்த முத்துமாலையைக் கவர ஒரு உயிர் பலி வேறு!

கண்களிலே ரௌத்திரம் பிரதிபலிக்க முத்து மாலையோடு அந்த அறையை விட்டு வேகமாகக் கிளம்பினார் ராஜாமணி.

23

ராஜாமணியின் நடை வேகத்தைப் பார்த்தால் பட்டாபியை உடனே தேடிப்பிடித்து கழுத்தை நெறித்துவிட்டே மறு காரியம் பார்ப்பார் போலிருந்தது. நல்லவேளை! அப்படி ஏதும் நடந்துவிடவில்லை. சுதாராணியின் அறைக்குள்ளே போய் புகுந்துகொண்டு அங்கேயும் சோதனையிட ஆரம்பித்தார். தன் கைக்குச் சிக்கிய முத்துமாலை சீமாட்டியுடையது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளாமல் சட்டுப்புட்டென்று முடிவுக்கு வருவது முதிர்ந்த திறமை கொண்ட ஒரு துப்பறியும் நிபுணருக்கு அழகில்லை அல்லவா!

ஒரு மூலை முடுக்கு விடாமல் சுதாராணியின் அறையை ராஜாமணி சோதித்துப் பார்த்துவிட்டார். முன் தினம் வரையில் சுதாராணி தன் கழுத்திலே போட்டிருந்த முத்துமாலை அங்கே எங்கேயும் காணப்படவில்லை.

அந்த அறையின் மூலையிலே உட்கார்ந்து தன் எஜமானிக்காக வருந்துவதுபோல விசும்பி அழுது கொண்டிருந்த வேலைக்காரி மீது அவரது கவனம் திரும்பியது. ''மங்கம்மா? இங்கே வா!'' என்று கூப்பிட்டார்.

புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டே துப்பறியும் நிபுணர் அருகே வந்து நின்றாள் மங்கம்மா.

''உன் எஜமானியை நேற்று நீ கடைசியாக உயிரோடு பார்த்தது எப்போது மங்கம்மா?''

''எட்டு மணிக்குப் பிறகு இரண்டு தடவை பார்த்தேன். அவரை சாப்பிட அழைக்க வரும்போது சுமார் பத்துமணி இருக்கும். 'பசி எடுக்கவில்லை' என்று சொல்லிவிட்டார். அந்த சமயத்தில்தான் கொழும்பு ஏஜண்டிடம் ஏதோ கணக்கு வழக்கு கேட்டுக் கொண்டிருந்தார்.''

"சமுகமாகத்தானே பேசிக் கொண்டிருந்தார்கள்?"

"இல்லே, சீமாட்டி மிகவும் கோபமாகப் பேசிக் கொண்டிருந்தார். மோசம், சூது... போலீஸ் இது போன்ற வார்த்தைகளைப் பொரிந்து கொட்டிக் கொண்டிருந்தார்."

"அந்த ஏஜண்டு பதிலொன்றும் பேசவில்லேயா?"

"அவரும் ஏதோதோ கடுமையாகப் பேசினுர். ஆனுல், என்ன பேசினுர் என்பதுதான் எனக்குப் புரியவில்லே."

"மறுபடியும் இரண்டாம் தடவையாக உன் எஜமானியை எப்பொழுது பார்த்தாய்?"

"சுமார் பதினேரு மணி இருக்கும்."

"அதுவரை நீ எஜமானியின் அறை வாசலிலேயே காத்திருந்தாயா?"

"இல்லே. கீழ்தளத்துக்குப் போகும் படிக்சட்டுகள் ஓரமாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். எஜமானி கூப்பிட்டனுப்பியதும் போகலாம் என்று காத்திருந்தேன்."

"ஆமாம்...நீ அங்கே உட்கார்ந்திருந்தாயே, யாராவது வந்து போனுல் உனக்குத் தெரிந்திருக்குமில்லேயா? நீ உட்கார்ந்திருந்த இடம் படிக்கட்டுக்குச் சமீபமானதால்தான் கேட்கிறேன். யாராவது அப்படி வந்தார்களா?"

"யார்தான் வரவில்லே! நடமாட்டம் இருந்து கொண்டேதான் இருந்தது. இடையே பட்டாபியைக் கூட ஒரு தரம் பார்த்தேன். என்னேத் தாண்டிக் கொண்டுதான் படிக்கட்டு இறங்கி கீழ் தளத்துக்குப் போனுர்."

"பட்டாபியா?"

"ஆமாம்...அந்தத் தம்பிதான்."

"எங்கே வந்து போனுன்?...சுதாவைப் பார்த்தானு?"

"அது எனக்குத் தெரியாது. எப்பொழுது அந்த இரண்டாவது தளத்திற்கு வந்தார் என்பது கூட அறியவில்லே. இறங்கிப் போவதைத்தான் பார்த்தேன். அப்போது சரியாகப் பதினென்று இருக்கும்."

"அவன் உன்னேடு பேசவில்லேயா?"

"நான் உட்கார்ந்திருப்பது தெரிந்திருந்தால் பேசியிருப்பார். ஆனுல், நான் இருந்த இடம்தான் இருட்டாக இருந்ததே, அதனுல் அவர் என்னேக் கவனிக்கவில்லே."

பட்டாபியின் அறை மூன்ருவது தளம் என்பது ராஜாமணிக்கு ஞாபகம் வந்தது. இரண்டாவது தளத்திலிருந்து மூன்ருவது தளத்திற்கு வேருரு பக்கமல்லவா படிக்கட்டு

இருக்கிறது என்று யோசித்தார். தெளிவற்ற, தீர்க்கமற்ற ஒரு யூகம் தோன்றியது. சரியான சமயம் பார்த்து மூன்றும் தளத்தி லிருந்து பட்டாபி இரண்டாவது தளத்திற்கு வந்திருக்கிருன். சுதாராணி தூங்கிக்கொண்டிருந்திருப்பாள். அவனுக்கு வேண் டிய முத்துமாலை அவளது கழுத்திலே இருந்திருக்கும். பார்த் தான். பாசத்தைவிட ஆசை பெரிதல்லவா! சுதாவைக் கொன்றுவிட்டு முத்து மாலையைக் கவர்ந்து வெளியே வந்தி ருப்பான். தன் அறைக்குப் போய் பலன்? ஷைலோவிடம் அதைச் சேர்த்தாலொழிய தூக்கம் வருமா? அதனுல் அவன் வந்த வழியே போகவில்லை. கீழ்தளத்துக்குப் போயிருக்கிருன். அங்கேதானே ஷைலோவின் அறை இருக்கிறது. அப்போது மங்கம்மா பட்டாபியைப் பார்த்திருக்க வேண்டும். மங்கம்மா என்ன...ஜகத்கூட அவனைப் பார்த்ததாகச் சொல்லவில்லையா?

பட்டாபியின் நடமாட்டம் பற்றி மங்கம்மாவிடம் மேலும் ஏதாவது விபரம் சேகரிக்க முடியுமா என்பதில் ஈடுபட்டார். "மங்கம்மா! பட்டாபி எப்படிப் பட்டவன்?...சுதாவிடம் ரொம் பவும் ஒட்டுப்பித்தாக இருப்பானு?" என்று கேட்டார்.

"அது ஒரு போக்கு! பூனைபோல வரும், பூனைபோல போகும்!"

"அதுசரி...நடமாட்டம் இருந்துகொண்டே இருந்தது என் கிருயே, அப்படி வேறு யார் வந்தது?"

"ஏழை, பாழை என்றெல்லாம் பிரசங்கம் போலவே பேசு வாரே, அவர்கூட உலாத்துவதுபோல நடை போட்டுக் கொண் டிருந்தார்...அப்புறம் வடநாட்டுக்காரன் போல் இருக்கிருனே அவனைக்கூட பார்த்தேன்."

"யாரு? ரூப்சந்த்தைச் சொல்லுகிருயா?"

"ஆமாம், அவரேதான்."

"எப்பொழுது அவர் வந்தார்? பட்டாபி வந்து போன பிறகா அல்லது அதற்கு முன்பாகவா?"

"எல்லாம் ஒரு நிமிஷம் முன்பின்னுக இருக்கும். சரியாக ஞாபகமில்லை. ஏன்... அந்த நேரத்திலே டாக்டரைக் கூட அந் தப் பக்கத்தில் பார்த்தேன். குடிகாரன் போல ஆடிக்கொண்டு போனுர்...! இப்போது ஞாபகம் வருது. டாக்டர் படிக்கட்டு இறங்குகிருர். இன்னொரு பக்கமிருந்து ரூப்சந்த் வந்தான். பிறகு இருவரும் சேர்ந்து கீழே இறங்கிப் போய்விட்டார்கள்."

"அப்புறம்...?"

"நாழியாகி விட்டதே என்று மறுபடியும் எஜமானி அறைக்கு எழுந்து போனேன். கதவு ஒருக்களித்து சாத்தியிருந்தது.

உள்ளே சிறிய நீல பல்பு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. கதவும் திறந்திருக்கிறது. சப்தத்தையும் காணுமே என்று எட்டிப் பார்த்தேன். அம்மா கட்டிலின் மீது படுத்திருப்பதைக் கண்டேன். அசதியில் தூங்குகிருர் என்று நினைப்பு. தூங்கும் போது அவரை யாரும் எழுப்புவது வழக்கமில்லை. அப்படி எழுப்பக் கூடாது என்பது அவரது உத்திரவு. அதனுல் ஒருக்க ளித்து இருந்த கதவை நன்ருக மூடினேன். அப்புறம் மற் ருெரு சங்கடம். எஜமானி கதவை உட்புறம் தாழிட்டு கொள் ளாத நிலை. கதவோ திறந்து கிடக்கிறது. அந்நிலையில் எப்படி நான் இருக்குமிடம் போவது? காவல் இருந்துதானே ஆகவேண்டும்? எஜமான் வரும் வரையில் அங்கேயே முடங் கிக் கிடக்கலாம் என்று முந்தானையை விரித்து அறை வாசலிலே படுத்துக் கொண்டேன்."

"அப்போது ராகினி இந்தப் பக்கமே வரவில்லையா?"

"இல்லை. ஆனுல், நான் தூங்கின பிறகு என்னவோ...யார் கண்டது."

"நீ எப்போது தூங்கினுய்?"

"படுத்ததுதான் தாமதம். உடனே தூங்கி விட்டேன்."

"நீ டாக்டர், ரூப்சந்த் ஆகியவர்களைப் பார்த்த பிறகு எஜ மானி அறைக்கு வந்தாய். பிறகு அறை வாசலிலேயே படுத்துக் கொண்டாய். எல்லாம் அரை மணி நேரத்தில் நடந்திருக் குமா?"

"இல்லை, எல்லாம் ஐந்தே நிமிஷத்தில்."

ராஜாமணி அதற்கு மேல் அவளிடம் எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை. அடுத்தபடியாக என்ன செய்ய வேண்டும் என்பதே அவரது கருத்தின் கவனமாக இருந்தது.

அதே சமயம் ரமணி அவரை அவசரமாகப் பார்க்க விரும்பு வதாக ஒருவன் வந்து கூறவே, சுதாவின் அறையைப் பூட்டிக் கொண்டு கிளம்பினுர்.

ராஜாமணி ரமணியின் அறையினுள்ளே புகுந்தபோது டாக் டரோ, ரூப்சந்தோ எவருமே இல்லை. தனியாக இருந்தான் ரமணி.

"எப்படி இருக்கிறது ரமணி? ஆயாசம் ஏதுமில்லையே?" என்று கேட்டுக் கொண்டே அவனருகில் உட்கார்ந்து கொண் டார்.

"பாதகமில்லே... ஆனால் நான் இனி ஆயுள் வரை முடமாகவே கழிக்க வேண்டும் என்பதை நினைத்துப் பார்க்கும் போது மனம் மிகவும் சஞ்சலப்படுகிறது! அது என் தலே விதி!" என்று நொந்து கொண்டவன், நீண்டதொரு பெருமூச்சு விட்டு விட்டு. "ராகினியைச் சந்தித்தீர்களா? அந்தப் பைத்தியக்காரி தான் சுதாவை சுட்டிருக்கிருளா?" என்று கேட்டான்.

"ஆமாம்!...இல்லே!...இந்த இரண்டுமே அவள் விஷயத்திற்கு அனுசரணையாக இருக்கிறது. ஆமாம்...நீங்கள் எப்படி நினைக்கிறீர்கள் ரமணி?"

"சொல்லட்டுமா?...சொன்னுல் நீங்கள் நம்பமாட்டீர்கள், ஏதோ விட்ட குறை தொட்ட குறையில் நான் சபலப்பட்டு கூறுவதாகத் தோன்றும்: உள்ளபடியே ராகினி சுதாவைச் சுட்டிருக்க மாட்டாள். நேற்றைய இரவு இங்கு என் விஷயத்தில் நடந்த சூழ்நிலேயை உபயோகித்துக் கொண்டு வேறு யாரோ காரியத்தை முடித்திருக்கிருர்கள். என் சந்தேக மெல்லாம் இந்தக் கிழ டாக்டர் மீதே இருக்கிறது. நேற்று இரவு எனக்கு சிகிச்சை அளித்தபிறகு கொஞ்ச நேரத்திற்கொருதரம் வெளியே அடிக்கடி போய் வந்துகொண்டிருந்தார். இரவு பதினேரு மணி சுமாருக்கு கப்பலின் இரண்டாவது தளத்திலே டாக்டரைப் பார்த்ததாக நம் ருப்சந்த்கூடக் கூறினுன்!"

"மங்கம்மாள் கூடத்தான் கூறினுள். அதற்காக அவரை சந்தேகிப்பதா? சுதாவிற்கும் அவருக்கும் என்ன விரோதம் இருக்கிறது. காரண மில்லாமல் யாராவது கொலே செய்ய முற்படுவார்களா ரமணி?"

"ஏதோ எனக்குத் தட்டிய சந்தேகத்தைக் கூறினேன்" என்று சொல்லிவிட்டு 'சாய்மான நாற்காலியில் சுகமாகச் சாய்ந்து கொண்டான் ரமணி.

'எல்லாவற்றிலும் பெரிய அசடு இவன்! இருந்திருந்து இவனேப் போய் சுதாராணி மணந்துகொள்ள வேண்டுமா! பிராப்தம்...ஏதோ நடந்தது...இப்போது முடிந்தும் விட்டது!' என்று தனக்குள்ளே ரமணியை மட்டமாகக் கருதிக் கொண்டிருந்தார் ராஜாமணி.

"ரொம்பவும் நன்ருக இருக்கிறதே உங்கள் காரியம்! மிஸ்டர் ராஜாமணி, உங்களேத்தான் கூப்பிட வந்தேன். அவரவர்கள் அறையைவிட்டு எல்லோரையும் வெளியே தள்ளி நடு ஹாலில் கொண்டுவந்து ஒன்று சேர்க்கச் சொல்லிவிட்டு, நீங்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறீர்களா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார் கப்பல் காப்டன்.

24

ராஜாமணி பொதுவான அந்த ஹாலுக்கு வந்த போது காப்டன் கேதாரி கூறியது போல அத்தனை பேர்களும் அங்கே கூடியிருந்தார்கள். அவர் வந்ததும் எல்லோரும் பேச்சை நிறுத்தி அவர் என்ன செய்யப் போகிறார் என்பதிலே சிரத்தை கொள்ள ஆரம்பித்தார்கள்.

எல்லோருக்கும் மத்தியில் போடப்பட்டிருந்த நாற்காலியில் ராஜாமணி உட்கார்ந்து கொண்டு அங்கு கூடியிருந்தவர்களை ஒவ்வொருவராகக் கூர்ந்து கவனித்தார். அவருக்குத் தேவைப் பட்ட அத்தனை பேர்களும் அங்கிருந்தார்கள். ராகினிகூட அமைதியாக உட்கார்ந்திருந்தாள். அக்கூட்டம் கிட்டத்தட்ட ஒரு விசாரணை சபை போலவே விளங்கியது.

ராஜாமணி பேச ஆரம்பித்தார்.

"நேற்று நடந்த துர்ப்பாக்கிய சம்பவம் பற்றி எல்லோருக்குமே தெரியும். உங்களையெல்லாம் விசாரிக்க எனக்கு எவ்வித அதிகாரமும் இல்லாவிட்டாலும்கூட துப்பறிபவன் என்ற ஹோதாவிலும், இந்தக் கப்பலின் காப்டனை கேதாரி எனக்குக் கொடுத்த சுதந்திரத்தாலும் தீவிரமாக ஈடுபடுகிறேன். நிரபராதிகள் வீண் கஷ்டங்களுக்கு ஆளாகி விடாமல் இருக்க வேண்டும் என்பதே என் கவலையாக இருக்கிறது. அதனால் இக்கொலை பற்றிய தகவல் எது உங்களுக்குத் தெரிந்திருந்தாலும் மூடிமறைக்காமல் சொல்லி விடுவது உங்களுக்கு நல்லதாகும். உங்களுக்கு ஆக்ஷேபணை உண்டா?" என்று கேட்டு எல்லோரையும் பார்த்தார்.

பல தலைகள் 'இல்லை' என்று தெரிவிப்பது போல ஆடிக் காண்பித்தன.

"குறிப்பாகக் கேட்கிறேன்; தகவல் ஏதாவது சொல்லக் கூடியவர்கள் இருக்கிறார்களா?"

யாருமே எதுவுமே பதில் கொடுக்கவில்லை.

ராஜாமணி தலையை ஆட்டிக் கொண்டே ஷைலோவின் பக்கம் திரும்பினார். "சொல்வதற்கு உன் மனதில்கூட எதுவும் இல்லையா ஷைலோ?" என்று கேட்டார்.

"புதிதாகச் சொல்ல எதுவுமே இல்லையே. நான்தான் தனியாக தாங்கள் கேட்டதற்கெல்லாம் ஏற்கனவே சொல்லியிருக்கிறேனே!" என்றாள்.

"சொன்னாய் ஷைலி. ஆனால், முக்கியமானதை நீ எனக்குச் சொல்லவில்லை. ஏதோ கூறினாய். ஆனால், உண்மையைக் கூறவில்லை. நேற்று மத்தியானம் நீ பட்டாபிக்கு உன் கைக்குட்டையைப் பரிசாகக் கொடுக்கவில்லையா?"

மௌனமாக விழித்தாள் ஷைலோ.

"இதோ பார் ஷைலோ! இனி மறைக்க வேண்டி யத்தனம் செய்யாதே. நீ கொடுத்ததற்கு இங்கேயே நேரில் கண்ட சாக்ஷியம் இருக்கிறது. நீ பட்டாபிக்குக் கைக்குட்டை கொடுத்தது வாஸ்தவமா இல்லையா?"

வாய்திறந்து அவள் பேசவில்லை. மௌனமாகத் தலையசைத்து ஆமோதித்தாள்.

"சரி...ஷைலோ! நிமிர்ந்து என்னைப் பார். நேற்று இரவோ அல்லது அதற்குப் பிறகோ நீ பட்டாபியை தனிமையில் சந்தித்தாயா இல்லையா?"

"இல்லவேயில்லை."

"சத்தியமாகவா?"

"ஆமாம்."

சட்டென பட்டாபியின் பக்கமாகத் திரும்பினார் ராஜாமணி. "பட்டாபி! நீயும் அப்படித்தான் சொல்லப் போகிறாயா?" என்று கேட்டார் கடுமையாக.

"நான் சந்தித்திருந்தால் மன்னிப்பதற்கு அவசியமே இல்லை. சத்யமாகச் சொல்லுகிறேன். உயிரோடு இருக்கும் என் தாயின் ஆணையாகக் கூறுகிறேன். நேற்று மத்தியானத்திற்குப் பிறகு இப்போது வரை ஷைலோவை தனிமையில் சந்திக்கவேயில்லை."

"அப்படியா? சரி...நேற்று சுதாராணியின் அறைக்கு எப்போது போனாய்?"

"குறிப்பாகச் சொல்லுகிறேன். இருட்டியபிறகு நான் அவளிருந்த பக்கம்கூடப் போகவில்லை."

"பொய் சொல்லுகிறாய்!"

"சொல்லத் தூண்டுகிறீர்கள்!"

"இல்லை. நீ சுதாவின் அறைக்கு இரவு பதினொரு மணிக்குப் போய் வந்திருக்கிறாய். கண்ணால் பார்த்த சாக்ஷி இருக்கிறது."

"அந்தி மறைந்த வேளையில் ஆள் மாராட்டமாகச் சொல்லியிருக்கலாம்."

"நெருப்புக் கோழி பாலைவன மணலில் தலையைச் செருகிக் கொண்டு, யாருமே பார்க்காமல் ஒளிந்து கொண்டு விட்டோம் என்று நினைத்துக் கொள்வது போல இருக்கிறது உன் பேச்சு. பட்டாபி! நீ படியிறங்கிப் போனதை மங்கம்மா பார்த்ததாகச் சொல்லுகிறாள்."

"இருக்காது; இருக்கவே இருக்காது. அவள் அங்கே இருந்திருக்கவே முடியாது. வெறும் பொய்."

"உன் அவசரத்தில் நீ அவளைப் பார்க்கவில்லை. ஆனால், அவள் உன்னைப் பார்த்து விட்டாள்."

"இல்லை...இல்லை...இல்லவேயில்லை. நான் அந்தப் பக்கம் போயிருந்தாலல்லவா அவள் பார்ப்பதற்கு!"

"மிஸ்டர் ஜகத் கூடக் கூறுகிறார்."

"ஒன்றைப் பலவாறாகத் திரித்துக்கூறி நாசவேலைகளில் நாட்டம் செலுத்தும் புரட்சிக்காரனின் பித்தலாட்டப் பேச்சு உங்களுக்குப் பெரிதாக ஆகிவிட்டது!"

"இல்லை யென்று ஒரேயடியாகச் சாதிக்கிறாயா?"

"சாதிக்கவில்லை, உண்மையைக் கூறுகிறேன்."

"கண்ணால் கண்டவர்கள் பொய்யர்களாக இருக்கட்டும். கைக்கு அகப்பட்டிருக்கும் இதைப்பற்றி என்ன சொல்லப் போகிறாய்?... இதைப் பார் பட்டாபி. நன்றாகப் பார்" என்று சொல்லிக் கொண்டே ஷைலோ அவனுக்குக் கொடுத்ததாக ஒப்புக் கொண்ட கைக்குட்டையை எடுத்து ஆட்டிக் காட்டினார். "வாயில்லாத இது கூடவா பொய் சொல்லுகிறது. இது சுதா ராணியின் அறையிலே அகப்பட்டது. துப்பாக்கி சத்தத்தை மூடி மறைக்க உபயோகிக்கப் பட்டிருக்கும் இந்தக் கைக்குட்டை சுதாராணியின் அறைக்கு கால் முளைத்து நடந்து சென்றதா?"

"நேற்று மத்தியானம் சுதாராணியைச் சந்திக்க அவளது அறைக்குப் போயிருந்தேன். அப்போது அங்கே மறந்து வைத்து விட்டு வந்துவிட்டேன். அது கொலைகாரனுக்கு உபயோகப் பட்டு விட்டது!"

"ஆகக்கூடி நீ கொலைகாரனில்லை என்ற அர்த்தத்தில் பேசுகிறாயாக்கும், பட்டாபி! இன்னமும் தப்பித்து விடலாம் என்று மனப்பால் குடிக்காதே! சுதாவை நீதான் கொன்றிருக்கிறாய்."

"என்னிடம் ஏது துப்பாக்கி. முதலில் அதை யோசியுங்கள்!"

"உன்னிடம் இல்லை என்பது எனக்குத் தெரியும். ஷைலோ அதை உனக்குக் கொடுத்தாள் என்பதும் எனக்குத் தெரியாததில்லை. ரமணியை ராகினி சுட்ட பிறகு கைத்துப்பாக்கியை கீழே போட்டு விட்டாள். அதை ஷைலோ எடுத்து வந்து உன்னிடம் கொடுத்திருக்கிறாள்."

"கற்பனை! யூகம்! அவ்வளவும் அனுமானம்! அருமைமிக்க தங்கையை எந்த சகோதரனாவது கொல்லத் துணிவானா?"

"வாஞ்சை மிக்க தந்தையை, பாசம் கொண்ட தாயை, பந்தத்தில் பிணைந்த மனைவியைக் கொலை செய்கிறார்கள்!"

"நான் ஏன் சுதாவைக் கொல்லவேண்டும். எனக்கென்ன விரோதம் இருக்கிறது? அவளைக் கொன்றால் அந்த சொத்து சுகங்களுக்கு நான் அதிபதியாகி விடப்போகிறேனா?"

"அவ்வளவுக்கு நீ ஆசைப்படவில்லை என்று தெரியும்..."

"அர்த்தம்?"

"கொஞ்சத்துக்கு ஆசைப்பட்டாய், ஆசைப்பட்டதையும் அபகரித்துக்கொண்டு விட்டாய்!"

"புதிர் போடுகிறீர்கள்."

"இல்லை, புலன் கண்டு பிடிக்கிறேன். பட்டாபி! கண்ணால் கண்ட சாக்ஷியங்கள் பொய்யாகி விட்டன. கைக்கு அகப்பட்ட கைக்குட்டைக்கு சமாதானம் கூறிவிட்டாய். இன்னொன்றும் உனக்குத் தெரியப்படுத்த வேண்டுமா?"

"ஒன்றென்ன! ஓராயிரம்கூட இட்டுக்கட்டுவீர்கள்."

"ஓ! அப்படியா அது. பேஷ்...பட்டாபி! முழுப் பூஷணிக் காயை சோற்றில் மறைக்க முடியாதப்பா!"

"கடுகைக்கூட மூடி மறைக்கவில்லை."

"பார் இதை!" என்று வெகு கோபமாகக் கூறிக்கொண்டு சட்டைப் பையிலிருந்த முத்துமாலையை எடுத்து அவன் காலடியில் வீசினார் ராஜாமணி.

பட்டாபி முத்துமாலையைப் பார்த்தான், பிறகு ஷைலோவின் கழுத்தைப் பார்த்தான்.

ஷைலோவும் அதை உற்றுப் பார்த்தாள். அதிசயிப்பவள் போல ராஜாமணியைப் பார்த்தாள். பிறகு நாலடி நெருங்கி வந்து முத்துமாலையைக் கையிலெடுத்துப் பார்த்து, "இது என்னுடையதல்லவா! இதை ஏன் என் அறையிலிருந்து எடுத்து வந்தீர்கள்?" என்று வெகு கோபத்தோடு கேட்டாள்.

"அது உனக்கு சொந்தமில்லாததால் எடுத்துவந்தேன்!" என்று வெடுக்கென பதில் கூறினார் ராஜாமணி.

"எனக்குச் சொந்தமில்லை என்பதை நீங்கள் கண்டு விட்டீர்களா?"

"அதைப் பட்டாபியிடம் கேளேன்."

"அவர் எனக்குக் கொடுத்தால் அது என் கைக்கு வந்த பிறகு எனக்குச் சொந்தமில்லையா?"

"எந்த விதத்திலோ தெரியவில்லையே!"

"எனக்கு அதை அவர் வெகுமானமாகத்தந்தார்."

"பிறர் பொருளைக் கவர்ந்து வந்தா...!"

பதில் கூருமல் பட்டாபியை ஏறிட்டுப் பார்த்தாள் ஷைலோ. 'என்ன இது, மானம் போகிறது. பேசாமல் இருக்கிறீர்களே' என்று கேட்பதுபோல இருந்தது அவள் பார்த்தபார்வை.

"அவனை முறைக்காதே ஷைலோ! நீ சொந்தம் கொண்டாடும் இந்த முத்துமாலை சுதாராணியுடையது. அதைக் கவர்வதற்காகவே பட்டாபி நேற்று அவளைக் கொன்றிருக்கிருன். புரிகிறதா உனக்கு?" என்று ராஜாமணி குறுக்கிட்டார்.

"பொய்! முழுப்பொய்! நம்ப முடியாத கதை!" என்று அலறிய ஷைலோ, "சுதா கொலைப்பட்டது நேற்று இரவு. பட்டாபி எனக்கு முத்துமாலை தந்தது நேற்று மாலைநேரத்தில்! ஏன் வீணுகப் பழிபோடுகிறீர்கள்?" என்று குதித்தாள்.

அதற்கு ராஜாமணி செவிசாய்க்கவே இல்லை. குற்றவாளிகள் கடைசிவரை தன் குற்றத்தை மறைப்பதற்குப் பாடுபடுவது சகஜமல்லவா என்று நினைத்து விட்டார்.

"பட்டாபி, சுதாவைச் சுட்ட அந்த ரிவால்வர் எங்கே? அதை எந்த இடத்தில் ஒளித்து வைத்திருக்கிருய்?" என்று கேட்டு ராஜாமணி பட்டாபியை நெருங்கினர்.

"நான் என்ன சொன்னலும் நீங்கள் நம்பப் போவதில்லை. நான் கொலைகாரனுக இருந்தால் அல்லவா, 'இதோ இருக்கிறது' என்று கொடுப்பதற்கு! துப்பறியும் ஸார்! நான் குற்றமற்றவன். அதனுல் சற்று துடுக்காகவே பேசுகிறேன். மூன்றுவித சாக்ஷியங்களைச் சேகரித்து என்மீது பழி சுமத்தும் நீங்களே ரிவால்வர் இருக்குமிடத்தையும் கண்டு பிடித்துவிட்டால் என் கழுத்தை தூக்குமரத்தில் கொடுக்கமாட்டேனு!"

அதுவரை மௌனமாக நடப்பதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த காப்டன் கேதாரி, "சுத்த ஹராம் இவன்! மிஸ்டர் ராஜாமணி! அவனிடமிருந்து உங்களால் எதுவும் கிரகிக்க முடியாது. நான் கக்க வைக்கிறேன் பாருங்கள்" என்று சொல்லியபடி பற்களை நறநற வென்று கடித்தபடி பட்டாபியை நெருங்கி 'பளார்' என ஓங்கி ஒரு அறை விட்டார்.

அடி தாங்காத பட்டாபி, "அம்மா!" என்று அலறித் துடித்தான்.

என்ன சோதனை. 'அம்மா!' என்ற அந்த அலறலைக் கேட்டு ஓடிவருபவள் போல பட்டாபியின் அம்மாவான வைதேகி பரபரப்போடு உள்ளே நுழைந்தாள். அவள் வந்த

கோலம் பாண்டியன் சபையிலே பொற் சிலம்போடு கண்களில் நெருப்புப் பொறி பறக்க வந்து நின்ற கண்ணகி போல விளங்கியது.

"என்ன அநியாயம் இது! படித்தவர்களா நீங்கள்? பகுத்தறிவைப் பறிகொடுத்துவிட்ட பாபிகளே! என் அருமைக் குழந்தையடா அவன். பெற்று வளர்த்த என் விரல்கூடப் படாத அவன் உடம்பிலே அடித்த முரடா!...இதோ இருக்கிறது நீங்கள் தேடும் முத்துமாலை. காணுமல் போய்விட்டதாகக் கருதும் கோடீஸ்வரியின் முத்துமாலை! பாருடா...! கண்ணைத் திறந்து பார்! கக்கவைபபதாகச் சொல்லிக் கன்னத்தில் அடித்த சண்டாளா! பாரடா! பார்! இந்தா..." என்று காப்டன் முகத்தை நோக்கி முத்துமாலை ஒன்றை வீசி எறிந்தாள்.

காப்டனுக்குப் பேச வாயில்லை. ராஜாமணியின் எண் சாண் உடம்பும் ஒரு சாணுகக் குறுகிக் கொண்டது. அவரது உருண்டை விழிகள் அந்த முத்துமாலையை ஆராய்ந்து கொண்டிருந்தன. அவரது விழிகள் மட்டுமா? அத்தனை பேர் கண்களும் அதன் மீதே பதிந்திருந்தன.

வேலைக்காரி மங்கம்மா அதைக் குனிந்து எடுத்துப் பார்த்தாள். "இதேதான்! சந்தேகமேயில்லை" என்று உரக்கக் கூவினுள்.

வைதேகி ராஜாமணியை நெருங்கினுள். "முத்துமாலை யாரிடமிருக்கிறதோ அவர்தான் குற்றவாளி என்பது உங்கள் அனுபவமாக இருந்தால் இதோ நான் இருக்கிறேன். என்னைக் கைது செய்யலாம்!" என்ருள்.

ராஜாமணியின் முகம் கருத்தது! என்ன செய்வதென்றே புரியாத நிலையில் தடுமாறிக் கொண்டிருந்தார்.

25

யாருமே எதுவுமே அதற்கு மேல் பேசாததால் பட்டாபியைக் கூட்டிக் கொண்டு வைதேகி அந்த இடத்தை விட்டு வெளியேறி தன் அறைக்கு வந்து விட்டாள்.

அவள் வந்து சேர்ந்த ஒரு நிமிஷத்திற்கெல்லாம் அங்கு வந்த ராஜாமணி, கண்களிலே நீர் ததும்ப நேராக வைதேகியின் அருகே சென்று அவளது காலைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்.

வைதேகி என்ருல் ராஜாமணிக்கு ஒரு தனிப் பற்றுதல். தெய்வப் பிறப்பு என்பதாகக் கருதி வந்தார் என்றுகூடச் சொல்லலாம். அவள் வாய் திறந்து ஒரு வார்த்தை சொன்னுல் கூடப் போதும். தூக்குமரத்திலே சுருக்கிடப்பட இருக்கும் குற்ற

வாளியைக்கூட விடுதலை செய்யப் பாடுபடுவார். இத்தகைய மதிப்புக்குப் பாத்திரமாயிருந்தாள் வைதேகி. பெற்ற பிள்ளையாக இருந்தாலும் குற்றம் குற்றமே என்று கூறக் கூடியவளல்லவா அவள். ஏற்கனவே ஒரு தரம் பட்டாபி முத்துமாலையைத் திருடி பாலாமணிக்குக் கொடுத்த போது, அதை திரும்பச் சேர்த்தவள் வைதேகிதானே!

"உங்கள் மகனைப் போல நினைத்து நான் செய்த தவறை மன்னித்து விடுங்கள்" என்றார் ராஜாமணி.

"இது என்ன அசட்டுத்தனம். தவறு செய்யாதவர்கள் யார்தான் இருக்கிறார்கள். நான் வந்து கோபமாகப் பேசி விட்டேனே என்று கலங்குகிறீர்களா?...பெற்ற வயிறல்லவா? ஏதோ குமுறியது. ஆத்திரம் கொண்டு விட்டேன். அதனால் நீங்களும் எதையும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டாம்" என்றாள் வைதேகி.

வைதேகியின் கைக்கு சுதாவின் முத்துமாலை எப்படிக் கிடைத்தது என்றுகூட ராஜாமணி கேட்கக் கூசினார். ஆனால், வைதேகி அந்த விபரத்தைக் கூறி விட்டாள்.

சுதாராணி மிக அஜாக்ரதைக்காரி. முத்துமாலையோ விலை மதிப்பற்றது. அதனால் அதைப் பத்திரப்படுத்த வைதேகியிடம் கொடுத்து வைத்திருந்தாள். இன்று நேற்றல்ல. கொழும்பை விட்டுப் புறப்படும் முன்பே அந்த முத்துமாலை வைதேகியின் கைக்கு மாறிவிட்டது. ஆதலால் முத்துமாலை போட்டுக் கொள்வதில் மோகம் கொண்ட சுதா கொழும்பில் ஒரு இமிடேஷன் முத்துமாலை வாங்கிக் கொண்டாள், அதைத்தான் அவள் இறக்கும் வரையில் போட்டுக் கொண்டிருந்தாள்.

இந்த விபரம் தெரிந்து கொண்டவுடன் ராஜாமணிக்கு வேறொரு சந்தேகம் தோன்றியது. வைதேகியின் சம்மதத்துடன் பட்டாபியோடு பேசலானார். தாயின் வார்த்தைக்கு தலை சாயும் பட்டாபி சுதாராணி கொலையுண்ட இரவில் தன் சம்பந்தப்பட்ட மட்டில் நடந்தது யாவையும் ஒளியாமல் கூறிவிட்டான்.

அதாவது. சுதாராணி கொலை செய்யப்பட்ட அன்றைய இரவு திருடன் போல அவளது அறைக்குள்ளே பட்டாபி நுழைந்தது உண்மைதான். மோகக் கிறுக்கில் ஷைலோவிற்கு வெகுமதியாகத் தர சுதாராணியின் முத்துமாலையின் மீது கண் வைத்ததும் பொய் அல்ல. இரவு சுமார் பதினொரு மணிக்கு பட்டாபி அந்த அறையினுள் புகுந்தபோது சுதா குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள். சாதாரணமாக அவள் படுத்துக் கொள்ளும் போது இமிடேஷன் முத்துமாலையைக் கழற்றி கட்டிலுக்கருகே உள்ள முக்காலியில் வைப்பது வழக்கம். அது பட்டாபிக்குத் தெரியும். பூனை போல அறைக்குள்ளே புகுந்த அவன்

முக்காலியின் மீதிருந்த முத்துமாலையை எடுத்துக் கொண்டான். ஆனால், தன் கையிலே வைத்திருந்த கைக்குட்டை கீழே நழுவி விட்டதை அவன் கவனிக்கவில்லை.

இதுதான் உள்ளபடியே பட்டாபி சம்பந்தப்பட்டமட்டில் நடந்தது. ராஜாமணி நம்பினார். ஏன் நம்பக்கூடாது? எத்தனையோ வழக்குகளில் பட்டாபியைப் போன்று எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்ட குற்றவாளிகளை யெல்லாம் அவர் பார்க்கவில்லையா! பட்டாபி கை நழுவ விட்ட கைக்குட்டையை சாதுர்யமாக அல்லவா சுதாவைக் கொன்றவன் உபயோகப் படுத்திக் கொண்டிருக்கிறான், என்று வியந்தார்.

ஆகவே சுதாவைக் கொன்றவன் சாதாரண பாமர னாகவோ ஏமாளியாகவோ இருக்க முடியாது. சாதுர்யமும் முன் யோசனை நிறைந்தவனுமாகவே இருக்க வேண்டும். அப்படிப் பட்டவர் அந்தக் கூட்டத்திலே யாராக இருக்க முடியும்?

ராஜாமணியின் மனக்கண் முன்னே இலங்கை ஏஜண்டான தாஸ் தோன்றினார். இவனைப் போல எத்தனையோ மலை விழுங்கிகள் இருக்கிறார்கள். ஏமாற்றக்காரர்கள் இருக்கிறார்கள். புத்தியை உபயோகித்து சொளை சொளையாக அமுக்குபவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் புத்தி தீக்ஷண்யம் இருக்கும். தந்திரத்தாலேயே குற்றத்தை மறைக்க முயல்வார்கள். நெஞ்சு உரம் பெற்றிருக்காது. அதனால், செய்யும் கொலையைப்பற்றிச் சிந்திக்கக்கூட மாட்டார்கள். தன் மோசக் கருத்து வெளிப்பட்டால் சிறிது நாள் சிறையிலிருந்துவிட்டு உயிரோடு திரும்பலாம். கொலையில் ஈடுபட்டால் உயிரையல்லவா பணயமாக வைக்க வேண்டிவரும்? ஜீவனை நசுக்குவதற்காகவா அவர்கள் கையாடல் செய்கிறார்கள்? வாழ அல்லவா! அதனால் கொலை என்றால் குலை நடுக்கம் கொள்ளுவார்கள். அந்த ரகத்தைச் சேர்ந்தவரல்லவா தாஸ்?

வேறு யார் இருக்கிறார்கள்? மதுசூதனர்; சுதாராணியின் மாமன். அவரைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. அதிகமாக யாருடனும் பழகுவதுகூடக் கிடையாது. சுதாராணியைக் கொன்று அவருக்கு என்ன ஆகிவிடப் போகிறது? அவள் உயிரோடு இருந்தால், இன்றில்லாவிட்டாலும் என்றாவது கொஞ்சமாவது காசு கிடைக்கும்! அதுதானே அவருக்கு வேண்டும்! அது கிடைக்கும்வரை சுதா 'தீர்க்காயு'ளுடன் இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கக் கூடியவரல்லவா அவர்!

அப்புறம்......? ருப்சந்த் இருக்கிறான். கொலையை நினைத்த மனதால் அவனை நினைப்பதுகூட அநீதி. தங்கக் கம்பியல்லவா அவன்!

வேறு யார்......? டாக்டர்தான் பாக்கி! சுதாவிற்கும்

அவருக்கும் ஸ்நானப் பிராப்திகூட இல்லை! அதுவும்தள்ளா கிழம்! அவரைச் சந்தேகிக்க என்ன இருக்கிறது......?

ஏன் இல்லை? அவரைப் பற்றி ரமணி ஏதோ ஒரு மாதிரியாகக் கூறினானே; ஏதோ ஒரு வகையில் சந்தேகம் தட்டாமலா அவன் அப்படிக் கூறியிருப்பான்......? அவனிடம் மேலும் புலன் விசாரித்தால் என்ன?

சிந்தனையிலிருந்த ராஜாமணி எழுந்தார். வைதேகியைப் நோக்கிக் கை கூப்பியபடி "போய் வரட்டுமா?" என்று சொல்லி உத்திரவு பெற்றார். அவர் கால்கள் அவரை டாக்டரின் அறைக்கு இழுத்து வந்தன. ரமணி அங்கல்லவா இருக்கிறான்!

அவர் டாக்டரின் அறைக்குப் போன பொழுது ரமணி தனியாக இருக்கவில்லை. டாக்டரோடு, ரூப்பும் மதுசூதனரும்கூட அங்கிருந்தனர்.

ராஜாமணியைக் கண்டதும் ரமணி மிக ஆவலோடு வரவேற்றான். அதே சமயம் பட்டாபியின் விஷயம் என்ன ஆயிற்று என்று டாக்டர் விசாரித்தார்.

"எதையும் முடிவு செய்ய முடியவில்லை. இதைப் போன்ற கேஸ்களில் முக்கிய சாக்ஷியம் எந்த ஆயுதத்தைக் கொண்டு கொலை செய்யப்பட்டதோ, அது கைக்கு அகப்பட வேண்டுமே!" என்றார் ராஜாமணி.

"உங்களையே இது திண்றவைக்கிறது போலிருக்கிறதே!" என்று அலக்ஷியமாகக் கேட்டான் ரமணி.

"யானைக்கும் அடி சருக்குமல்லவா!...ஆனால், ஒன்று சொல்லுகிறேன். கப்பல் சிங்கப்பூரை அடைவதற்குள் கொலைகாரனை நான் எப்படியும் கண்டுபிடித்து விடுவேன்."

"நாளை மாலைக்குள்ளா?"

ஏன் முடியாது? நேற்று இரவு பதினோரு மணி சுமாருக்கு சுதாவின் அறையிலே நுழைந்தவர்களோ அல்லது அந்தப்பக்கம் நடமாடியவர்களோ யார் என்பது எனக்குப் பூர்ணமாகத் தெரிந்துவிட்டால் என் காரியம் மிகச்சுலபமாகிவிடும். அதில்தான் தீவிரமாக இருக்கிறேன். மேலும் எனக்கு ஒரு சரியான பேர்வழி அகப்பட்டு இருக்கிறான். அவனிடமிருந்து எப்படியும் அதை கிரகித்து விடுவேன்" என்று சொல்லிய ராஜாமணி மதுசூதனரைப் பார்த்து, "நீங்கள்கூட அந்த நேரத்தில் சுதாவின் அறைப்பக்கம் போனீர்கள் போலிருக்கிறதே!" என்று கேட்டார்.

"மதுசூதனர் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. பதில் என்ன சொல்லலாம் என்று தடுமாறிக் கொண்டிருந்தபோது ராஜாமணி மேலும் கூறினார்.

"நீங்கள் அப்போது ஒருவரை எதிரே சந்தித்தீர்களல்லவா?"

அதற்கும் மதுசூதனர் மௌனமாக இருந்தார். ராஜாமணி கேள்வி கேட்பதை விடவில்லை.

"காப்டன் கேதாரி உங்களை உடனே கைது செய்யும்படி நிர்ப்பந்தப் படுத்துகிறார். நீங்கள்தான் கொலைகாரன் என்று தர்க்க ரீதியாக எடுத்துச் சொல்லுகிறார். இருந்தாலும் முறைக்கு உங்களை நேரிலும் விசாரித்து விட்டு பிறகு ஆகவேண்டியதைக் கவனிக்கலாம் என்று அவசரப்படாமல் இருக்கிறேன். மதுசூதனரே! இப்போது உம் தலைக்கு ஆபத்து காத்திருக்கிறது. நீர் தப்பவேண்டுமானால் நேற்றிரவு சுதாராணி அறைப்பக்கம் நடந்தவைகளையோ, அல்லது கண்டவர்களையோ மறைக்காமல் கூறினால் நீங்கள் தப்பித்துக் கொள்ள வழி இருக்கிறது!"

காப்டன் கேதாரியும் சொல்லவில்லை. வேறு யாரும் மதுசூதனரைச் சந்தேகிக்கவில்லை. ராஜாமணி ஏதோ சும்மா மடக்கிப் பார்த்தார்! என்ன ஆச்சரியம்!...பலன் கைமேல் கிட்டியது. மதுசூதனரின் உடல் நடுக்கம் கொள்வதை ராஜாமணி கண்டு கொண்டார்.

"என்ன சொல்லுகிறீர்கள் மதுசூதனரே?"

"நான்...வந்து..." என்று வாய் குழறக்கூறிய அவர் அதைச் சொல்லமாட்டாமல் தவித்தார். அவரது வலதுகை கழுத்தைத் தடவிக் கொண்டது. தூக்குக் கயிற்றின் ஞாபகம் வந்து விட்டதோ என்னவோ!

"சொல்ல வந்ததைச் சொல்லுங்கள் உம்..." என்று நெருங்கினார் துப்பறியும் நிபுணர்.

சொல்லமாட்டாமல் தடுமாறினார் மதுசூதனர். பிறகு கொஞ்சத்துக்குக் கொஞ்சம் தடுமாறிப் பேச முயன்றபோது ரமணி, ரூப்சந்த், டாக்டர் ஆகியோர் ஆவலோடு, ஆனால், முகத்தில் இருளடித்ததுபோல மதுசூதனர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்றறிய துடித்துக்கொண்டிருப்பதையும் ராஜாமணி கண்டார்.

மதுசூதனர் அங்கிருந்த யாரையுமே பார்க்காமல் எங்கோ திரும்பியபடி மிரள மிரள விழித்துக் கொண்டிருந்தார். மதுசூதனர் ஏன் தயங்குகிறார் என்பதை ராஜாமணி யோசித்தபோது இத்தனை பேருக்கும் மத்தியில் கூற அஞ்சுகிறாரோ என்று தோன்றியது. அதற்கு சந்தர்ப்பம் கொடுப்பதுபோல துப்பறியும் நிபுணர் நடந்து கொண்டார்.

"மதுசூதனரே! பதில் சொல்ல இஷ்டப்படாவிட்டால் நீங்கள் போகலாம்! உங்களிடம் நிஜத்தை கிரகிக்க வழி தெரியும்... ம்...போங்கள்!" என்றார்.

மதுசூதனர் சிறிது நேரம் தயங்கினார். பிறகு நடப்பது நடக்கட்டும் என்று நினைத்துக் கொண்டாரோ என்னவோ. 'விர்'ரென

வெளியே சென்றார். போகும் அவரை கண்ணுக்கு மறையும் வரை டாக்டர் வியப்போடு பார்த்துக் கொண்டு நின்றார்.

"என்ன டாக்டர் அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்று குறுக்கிட்டார் ராஜாமணி.

"வேறொன்றுமில்லை. உங்கள் சந்தேக மனம் ஒவ்வொருவரையும் பதம் பார்க்கிறதே என்று வியக்கிறேன். இன்னும் சிலமணிநேரம் சென்றால் என்னையே ஒரு உலுப்பு உலுப்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை போலிருக்கிறது" என்றார் டாக்டர்.

"விளையாட்டாகக் கூறுகிறீர்களே டாக்டர்! நிஜமாகவே சொல்லுகிறேன்...உங்களையும் சந்தேகிக்கத்தான் செய்கிறேன். உங்களைப் பற்றிய பூரா தகவல்களும் நீங்கள் கூறுவதுபோல இரண்டொரு மணி நேரத்தில் கிடைக்கத்தான் போகிறது!"

"என்ன?...என்னைப் பற்றியா?" என்று திடுக்கிட்டார் டாக்டர்.

"ஆமாம்" என்று அமைதியாகக் கூறிக்கொண்டே அந்த இடத்தை விட்டு அகன்றார் ராஜாமணி.

டாக்டரின் முகம் பேயறைந்தது போல ஆயிற்று. அவரது உதடுகள் 'இன்னும் சில மணி நேரம்' என்று லேசாக முணுமுணுத்துக் கொண்டது யார் காதிலும் விழவில்லை.

26

அன்று மாலை வரை ராஜாமணி வெளியே எங்கும் போகவில்லை. தன் அறையிலேயே உட்கார்ந்து கொண்டு பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டிருந்தார். அவர் எழுதிக் கொண்டிருந்த வேகம் தடைப்படவே பேனாவைப் பல தடவைகள் உதறிப் பார்த்துக் கொண்டார். பேனாவில் மை வற்றி விட்டது! மை அடைக்கலாமென்றால் அவரிடம் மைக்கூடு கிடையாது. இரண்டு நாட்களுக்கு முன்புகூட இதே போல மை இல்லாமல் சுதாவின் அறைக்குப் போய் ஊற்றிக் கொண்டு வந்தது கவனம் வரவே, பேனாவிற்கே மை ஊற்றி வரலாமென்று சுதாவின் அறைக்கு வந்து சேர்ந்தார்.

மைக்கூடு வழக்கமாக வைக்கப்படும் இடத்திலேயே இருந்தது. ஒரு சிறு தந்தப் பெட்டியில் கருப்பு மை நிறைந்தது ஒன்றும் சிகப்பு மை நிறைந்தது ஒன்றுமாக இரு சீசாக்கள் இருந்தன. அவருக்கு வேண்டியது சிகப்பு மை. அதனால் அந்த சீசாவை எடுத்து மூடியைத் திறந்தார். ஆனால், மைக்கூடு காலியாக இருந்தது. மை இல்லை!

இதைப் போன்ற ஏமாற்றம் சகஜமாக நேரிடக் கூடியது தான். ஆனால், ராஜாமணியின் முகம் அதில் மையில்லை என்று

கண்டதும் சட்டென மாறுபட்டது. ஏன்...? இரண்டு நாட்களுக்கு முன் தன் பேனாவிற்கு மை அடைக்கும் போது சீசா நிறைய மை இருப்பதை ராஜாமணி பார்த்தார். இப்போது அது காலி! மாதக் கணக்கிற்கு உபயோகமாகக் கூடிய அளவு இருந்த மை மணிக்கணக்கிற்குள் தீர்ந்து விட்டதா?

ஒன்றும் புரியாதவராய் சுற்றுமுற்றும் பார்த்தார். அவரது பார்வை எதேச்சையாக குப்பைக் கூடையில் விழுந்தது. பல காகிதங்கள் சிகப்பு மை துடைக்கப்பட்டு கசக்கிப் போடப்பட்டிருந்தன. அதிலே மற்றொரு கைக்குட்டையையும் கண்டார். அது முழுதும் சிகப்பு மையில் நனைந்து இருந்தது. ஒருக்கால் மைக்கூடு கவிழ்ந்து. மையெல்லாம் கொட்டியிருக்கலாம். குப்பைக் கூடையிலே கிடக்கும் இவைகளைப் பார்க்கும் போது அப்படித்தானே தோன்றுகிறது.

மை தோய்ந்த கைக்குட்டை சரியாக ஈரம் காயாததால் மை ராஜாமணியின் கைகளில் ஒட்டிக் கொண்டு விட்டது. கையைக் கழுவலாம் என்று கையலம்பும் தொட்டிப் பக்கம் போனார். அதிலும்கூட அங்கொன்றும் இங்கொன்றுமாக மை சிதறியது போல சிறு சிறு துளிகள் காய்ந்து போய் கலர் பிடித்திருந்தது.

இது விசேஷ கவனத்துக்கு உரியதல்ல. ஆனாலும் அவைகள் ராஜாமணியின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தன. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் போல துப்பறியும் தொழிலில் புகுந்திருக்கும் ராஜாமணிக்கு சர்வ சாதாரண விஷயங்களில் கூட நுணுக்கமாகப் புத்தி செல்வது சகஜமாகி விட்டது!

தொட்டியில் கை கழுவினார், சிகப்பு மை பட்டுவிட்டால் எளிதிலே விடுமா? மை போகவில்லை.. எதைப் போட்டுத் தேய்க்கலாம் என்று சுற்றுமுற்றும் பார்த்தார். சுதாராணி சோப்புப் பெட்டி வைத்திருந்த அலமாரி கண்ணுக்குத் தட்டுப்பட்டது. சோப்பு எடுத்து வர நெருங்கினார். அதே அலமாரியில் சோப்பின் அருகில் உடம்பு தேய்த்துக் குளிக்கும் கடல் பஞ்சு இருந்தது.

ராஜாமணி எத்தனையோ தடவை கடல் பஞ்சைப் பார்த்திருக்கிறார். அது பழுப்பு நிறமாகவே இருக்கும். இது சிவப்பு நிறமாகவே இருந்தது! 'சரிதான், இதைத் தயாரிப்பவர்கள் இப்போது பல வர்ணங்களில் விற்பனைக்கு விடுகிறார்கள் போலிருக்கிறது!' என்று நினைத்துக் கொண்டே கை கழுவ அதையும் எடுத்துக் கொண்டார்.

சோப்பை கையிலே பூசிக் கொண்டு அதை அழுத்தித் தேய்ப்பதற்காக கடல் பஞ்சை உபயோகப்படுத்திய பொழுது,

கை முழுதும் சிகப்புக் கலர் அதிகமாகப் பரவியதே ஒழிய குறையவில்லை. குளிக்கப் போய் சேற்றைப் பூசிக் கொண்ட கதை போலல்லவா ஆகிவிட்டது! சோப்புப் பட்டதும் கையில் பட்டிருந்த மை அதிகரித்து விட்டதா என்று கவனித்த போது தான் விஷயம் அவருக்குப் புரிந்தது. கடல் பஞ்சு உள்ளபடி கலர் சாயம் ஏற்றப்பட்டதல்ல என்பதைக் கண்டு கொண்டார். அதைத் தண்ணீரில் முக்கிப் பிழிந்தார். சிகப்பு நிறத் தண்ணீர் ஏராளமாகச் சிந்தியது. கடல் பஞ்சின் மீது பார்த்த சிகப்பும் வெளி வர ஆரம்பித்தது. அட கடவுளே! கொட்டிய சிகப்பு மையை துடைப்பதற்கு காகிதம் போதாமல், கைக்குட்டை போதாமல், கடல் பஞ்சுமா வேண்டியிருந்தது! சுதா எவ்வளவு தான் பணக்காரியாக இருக்கட்டும், சிந்திப் போனதைத் துடைக்க கடல் பஞ்சைக் கூடவா நாசம் செய்யவேண்டும்!

தன் கைகளை மறுபடியும் பார்த்துக் கொண்டார் ராஜாமணி. சிகப்பு நன்றாகப் பிடித்திருந்தது. இனி அந்த மையை அகற்ற வேண்டுமானால் மண் தரையிலேதான் தேய்க்க வேண்டும். கடலில் மிதக்கும் கப்பலிலே மண்ணுக்கு எங்கே போவது!

அந்தச் சமயத்தில்தானா அந்தச் செய்தி வரவேண்டும்? காப்டன் கேதாரி மதுசூதனர் அறையிலே இருப்பதாகவும் உடனே அவரை அழைத்து வருமாறு உத்திரவிட்டதாகவும் கப்பல் மாலுமி ஒருவன் வந்து கூறினான்.

மதுசூதனர் என்ற பெயரைக் கேட்டதும் ராஜாமணிக்கு முகம் மலர்ந்தது. ஏதோ முக்கியமான தகவல்களை மதுசூதனரிடமிருந்து கேதாரி கிரகித்து இருப்பாரோ என்ற ஆவலுடன் வெகு வேகமாக மதுசூதனரின் அறைக்கு விரைந்தார் அவர்.

ராஜாமணி எதிர் பார்த்ததுபோல அங்கு அவருக்கு வரவேற்பு காத்திருக்கவில்லை. மதுசூதனரின் அறை வாசலில் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நின்றிருந்த கேதாரி, ராஜாமணி அந்த அறையை நெருங்கியதும் சாற்றப்பட்டிருந்த கதவைத் திறந்து விட்டு உட்பக்கம் கையைக் காட்டினார். பேசவில்லை.

அறையினுள் நுழைந்த ராஜாமணி அதிர்ச்சி அடைந்தார். உள்ளே மதுசூதனர் உயிரோடு இருக்கவில்லை. மாண்டு கிடந்தார்!

"நான் எந்த வேளையில் கப்பலை துறைமுகத்தை விட்டு எடுத்தேனோ, கொலைக்குமேல் கொலையாக நடக்கிறது! கப்பல் சிங்கப்பூரை அடைவதற்குமுன் இன்னும் எத்தனை கொலைகள் நடக்குமோ தெரியவில்லையே!" என்று சலித்துக்கொண்டே உள்ளே வந்தார் காப்டன் கேதாரி.

ராஜாமணி மௌனமாக பிரேதத்தின் அருகே போய்க் கவனித்தார். மதுசூதனர் துப்பாக்கியால் சுடப்பட்டு இறக்க வில்லை; கத்தியால் குத்தப்பட்டு இறக்கவில்லை. விஷமிடப் பட்டும் கொல்லப் பட்டிருக்கவில்லை. தடிகொண்டு அடிபட்டு உயிரை விட்டிருக்கவும் இல்லை. ஆனால், குத்தப்பட்ட ஆயுதம் உடலிலே செருகப்பட்டபடியேதான் இருந்தது. அந்தக் கூரிய ஆயுதம் எந்த ரகத்தைச் சேர்ந்தது என்பதை அவரால் புரிந்து கொள்ள அதிக நேரம் பிடித்தது. டாக்டர்கள் உபயோகிக்கும் கூர்மையான ஆபரேஷன் கத்தி அது!

ரண சிகிச்சைக்காக உபயோகப்படும் அந்தக் கத்தியைப் பார்த்ததும் ராஜாமணியின் கண் முன்னே டாக்டரின் உருவம் தோன்றி நகைத்தது. அதே சமயம் 'டாக்டரின் மீது சம்சயப் படுகிறேன்' என்று ரமணி ஏற்கனவே அவரிடம் கூறியிருந்த சொற்கள் அவரது காதுகளில் ஒலித்தன. ரமணி அப்படி எச்ச ரித்திருந்தும் தான் உஷாராக இல்லாதது எவ்வளவு முட்டாள் தனத்தில் கொண்டுவந்து விட்டது என்று தன்னையே நொந்து கொண்டார்.

அதற்கப்புறமும் ராஜாமணி அங்கே ஏன் நிற்கப் போகிறார்? வெகு கோபத்தோடு டாக்டரின் அறைக்கு வந்துசேர்ந்தார். வீரபத்திரன்போல வரும் துப்பறிபவரைக்கண்ட டாக்டர், "என்னவாவது மேலும் உளவு கிடைத்து விட்டதா?" என்று கேட்டார்.

"மேலும் ஒரு கொலை நடந்திருக்கிறது. அதுவும் பட்டப் பகலில்...!" என்றார் ராஜாமணி.

"யாரது ?"

"மதுசூதனர்."

"எப்படிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்?"

"அதைப்பற்றி என்னைக் கேட்கிறீர்களா?" என்று டாக்டரை முறைத்துப் பார்த்தார்.

"பிறகு எப்படிப் பேசுவார்கள். கொன்றவர்கள் எதுவுமே தெரியாதது போல நடிப்பது தானே சகஜம்!" என்று கூறிக் கொண்டே உள்ளே நுழைந்த கேதாரி, "டாக்டர்! எப்படிக் கொலைப்பட்டார், எந்த ஆயுதத்தால் என்பதை இதோ இந்த ஆயுதம் கூறும். நன்றாகப் பாருங்கள்!... ஆபரேஷன் கத்தி! இது யாருடையது!... ஏன் விழிக்கிறீர்?" என்று அதட்டி மிரட்டினார்.

கிழ டாக்டரின் கைகள் கிடுகிடுவென்று நடுங்கின. ஆனாலும் அவரது நா குழறவில்லை. "மிஸ்டர் ராஜாமணி!

அவசரப்பட்டு நீங்கள் எதையும் தீர்மானித்து விடுகிறீர்கள்! முதலில் ராகினி; பிறகு தாஸ்; அப்புறம் பட்டாபி; இப்போது நான்!...எதைக் கொண்டு என்னைக் கொலைகாரனாக ஆக்குகிறீர்கள் தெரியுமா? டாக்டரிடம் இருக்கக் கூடிய ஒரு ஆயுதத்தால் கொலை செய்யப்பட்டிருப்பதால் என் தலை மீது கை வைக்கிறீர்கள்! இனி சுதாவைக் கொன்றதும் நானே என்று பழி சுமத்தப் போகிறீர்கள்! அது தானே நீங்கள் நினைப்பது?"

"நினைப்பது அல்ல. முடிவே செய்து விட்டேன்! டாக்டர்! ரமணி சுடப்பட்டவுடன் ரூப்சந்த் உங்களைத் தேடி வந்தான். அப்போது அவன் உங்களைச் சந்தித்தது எந்த இடத்திலே? இரண்டாவது தளத்திலே சுதாராணியின் அறைக்கு அருகாமையில்! மணி என்ன தெரியுமா? பதினொன்று! அந்த அகால வேளையில் கீழ் தளத்திலே உமக்காக ஒதுக்கப்பட்டுள்ள அறையை விட்டு மேல் தளத்திற்குப் போகக் காரணமென்ன?"

"பொழுது போகாத தோஷம். கப்பலைச் சுற்றி வந்தேன். மிஸ்டர் ராஜாமணி! நான்தான் சுதாவைக் கொன்றிருப்பேன் என்கிறீர்களே, எனக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம் பிணைத்து முடிவு கட்டுகிறீர்கள்?"

"அது இன்னும் தீர்மானிக்கப்படாத விஷயம்."

"ஆனால், கொலை செய்தது நான்தான் என்பது மட்டும் காரணம் கண்டு பிடிக்காமலேயே தீர்மானிக்கப்பட்டு விட்டதாக்கும்!"

"கொலைக்கு உபயோகிக்கப்பட்ட ஆயுதம் ஒன்றே போதுமே! அது உங்களுடையது தானே!"

"ஓஹோ! உங்கள் அபிப்பிராயம் அப்படியா? சரிதான்! இது குழந்தைகள் விளையாட்டு போல இருக்கிறது! ராஜாமணி! மதுசூதனரை நான் ஏன் கொல்ல வேண்டும் என்பதற்காக வாவது காரணம் கண்டு பிடித்தீர்களா? இல்லை... அது இனி மேல்தான் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயமாக இருக்கிறதா?"

"தீர்மானிக்கப்பட்டு விட்டது!"

"எப்படியோ!" என்று ஏளனமாகச் சிரித்தார் டாக்டர்.

"சுதாராணி கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக தனக்குத் தெரிந்ததை ஒளியாமல் கூறும்படி மதுசூதனரைக் கேட்டது உங்கள் அறையில்!"

"ஆமாம், அதனால்...?"

"அப்போது யாரை நீங்கள் சந்தேகிக்கிறீர்கள் என்று அவரைக் கேட்டேனல்லவா?"

"என் பேரைச் சொன்னாரா?"

"உங்கள் பேரைச் சொல்லவில்லை. சொல்லுவதற்குத் தயங்கினார்!"

"சாவதற்கு முன் உங்களிடம் சொன்னாராக்கும்!"

"சொல்ல வேறு வேண்டுமா! குறிப்பில் கண்டு பிடித்தேன் டாக்டர்! நான் கேள்விகள் கேட்டபோது எனக்குத் தப்பாது அகப்பட்டுக் கொண்ட மதுசூதனர் உள்ளதைச் சொல்லிவிட விரும்பினார். யாரைச் சந்தேகிக்கிறீர்கள் என்று கேட்டபோது அதையும் தெரிந்தவர்போல, ஆனால், சொல்ல மாட்டாமல் தவித்தார். அதற்குக் காரணம் தெரியுமா? அந்த சமயத்தில் அவர்கூற நினைத்த குற்றவாளி அப்போது அங்கு இருந்திருக்கி ருன் என்றுதானே அர்த்தம்...?"

"அப்போது நான் மட்டிலுமா இருந்தேன்? ரூப் இருந்தான். ரமணி இருந்தானே. ஏன்...? அவர்களைக் குறிப்பிட்டதாகக் கொள்ளகூடாதா?"

"சுதாராணி சுடப்படுவதற்கு முன்னுலேயே ரமணி காலில் சுடப்பட்டு நடக்க முடியாத நிலையை அடைந்து விட்டார். ரூப் சந்த் ரமணிக்குப் பணியாற்றுவதில் இருந்து விட்டான். அவர்களை முழு முட்டாள்கூடச் சந்தேகிக்க மாட்டான்!"

"அதனுல் என்னை சந்தேகிப்பதின் மூலம் நீங்கள் புத்திசாலி யாகி விட்டீர்கள் போலிருக்கிறது! ராஜாமணி! அவசரமும் ஆத்திரமும் துப்பறியும் தொழிலுக்குப் பரம விரோதிகள். நிதானம் வேண்டும். சுதாவைச் சுட உபயோகிக்கப்பட்ட ஆயுதத்தைக் கண்டுபிடிக்காதவரையில் நீங்கள் யாரைச் சந்தேகித்தும் எதுவும் செய்ய முடியாது. அதைக் கண்டு பிடித்தீர்களா?"

"கண்டு பிடித்தே தீருவேன்! அது எங்கே இருக்கிறது என்பது எனக்குத் தெரியும்!"

"அதைக் கைப்பற்றுவதுதானே!"

"அதற்காகத்தான் வந்திருக்கிறேன்!" என்று சொல்லி விட்டு, ராஜாமணி காப்டன் பக்கம் திரும்பினார். "காப்டன்! இந்த அறையை சோதிக்க வேண்டும். உத்திரவு தருகிறீர்களா?" என்று கேட்டார்.

"அது அவசியம் செய்ய வேண்டிய காரியம். நானும் வேண்டுமானுல் சேர்ந்து தேடுகிறேன்" என்று கூறிக்கொண்டே டாக்டரின் உடமைகளையெல்லாம் புரட்டி ஆராய ஆரம்பித்தார்.

அரைமணி நேரமாகியும் அவர்களது கைக்கு எதுவுமே அகப்படவில்லை. நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக்கொண்டே ராஜாமணி டாக்டரை மேலும் கீழும் பார்த்தார்.

"டாக்டர்! உங்கள் உடையின் பைகளேயும் சோதிக்க வேண்டும்'' என்ருர்.

டாக்டரின் முகம் கோபத்தால் குப்பென்று சிவந்தது. "வேண்டுமென்றே செய்யும் அவமானம் இது'' என்று கத்திஞர் அவர்.

" அவமானம் ஆகாது! சந்தேக நிவர்த்தி! துப்பறியும் ஸார்! என் சட்டைப் பையையும் சோதித்துக் கொண்டு விடுங்கள்! எப்போது சோதனே என்று வந்து விட்டதோ. அறையிலுள்ள அத்தனே பேரையும் பரீக்ஷிப்பதுதான் முறை'' என்று ரமணி குறுக்கிட்டான்.

ராஜாமணியின் வேண்டுகோளுக் கிணங்க காப்டன் கேதாரி சோதனே இட ஆரம்பித்தார்.

டாக்டர் எகிரிக் குதிக்காமல் இருப்பதற்காக காப்டன் முதலில் ரமணியை சோதனே போட்டார். பிறகு ரூப்சந்தை சோதனேயிட முனேந்தார். அவனது கோட்டுப் பைக்குள் கை விட்டபோது கேதாரியின் கைகள் மின்சாரத்தால் தாக்குண்டன. அவன் கையிலே ஒரு சிறு ரிவால்வர்! டாக்டரின் கையிலிருந்து எடுக்கப்பட்டது.

"என்ன! ரூப்சந்தின் பையிலேயா ரிவால்வர்?'' என்று திடுக்கிட்டுக் கேட்டார் ராஜாமணி.

"ஏன் இருக்காது?'' என்ற சப்தம் வாசல் பக்கமிருந்து வந்தது. ஜகத் உள்ளே வந்து கொண்டிருந்தான்.

"துப்பறியும் ஸார்! கொலேகாரன் கையிலேதானே கொலேக்கு உபயோகிக்கப்பட்ட கருவியும் இருக்கும்! அதனுல் ரூப்சந்த் பையிலே ரிவால்வரும் இருக்கும்! நல்ல பிள்ளேபோல வேஷம் போட்டுக் கொண்டிருக்கும் ரூப்சந்த்தான் சுதாராணியைக் கொன்ருன் என்பதை நிரூபிக்கவே இதோ நான் வந்திருக்கிறேன்'' என்ருன்.

எதிர்பாராத அதிர்ச்சிதான் காரணமோ அல்லது அகப்பட்டுக்கொண்டு விட்டோமே என்ற பயத்திஞலோ ரூப்சந்த் மயக்கம் போட்டுக் கீழே சாய்ந்து விட்டான்.

27 சுதார்ராணியைக் கொன்ற கொலேகாரன் ரூப்சந்த் என்பதை ராஜாமணியால் நம்பவே முடியவில்லே. உத்தமமான குணம் படைத்த முகர்ஜியின் மகன் உன்மத்தனுக இருக்கிருன் என்புதை கேட்கவே நாராசம்போல இருந்தது. சுதாராணியைக் கொல்ல அவனுக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?

"துப்பறியும் ஸார்! இந்தப் பைத்தியக்காரத் தோழனுக்கு சண்டப் பிரசண்டமாக உழைக்கத்தான் தெரியும் என்று நினைக்காதீர். உளவறியவும் முடியும். 'சுதாராணியை ரூப்சந்த் எப்படிக் கொன்றிருக்க முடியும்? அவனுக்கு அவகாசம் ஏது?' என்று தயங்குகிறீர்களல்லவா? கூறுகிறேன், கேளுங்கள்" என்று பிரசங்கம் செய்வதுபோல வழக்கமான தோரணையில் மேலும் ஆரம்பித்தான் ஜகத்.

"ரமணி ராகினியால் சுடப்பட்டான், ராகினியின் கைத் துப்பாக்கி கை நழுவி விட்டது. அந்தக் கலவரத்தில் சந்தடி சாக்கில் கீழே கிடந்த ரிவால்வரை ரூப்சந்த் எடுத்துக்கொண்டு விட்டான். ஷைலோ ராகினியைக் கூட்டிக் கொண்டு போய் விட்டாள். ரமணி டாக்டரை அழைத்து வரும்படி ரூப்சத்தை அனுப்பினன். அதைப்போன்ற நேரம்தான் அவனுக்குத் தேவையிருந்தது. டாக்டரைத் தேடி அலைவதுபோல காரணம் ஒன்றைச் சாதகமாக் வைத்துக்கொண்டு சுதாராணி அறைக்குச் சென்றிருக்கிறன். அவள் தூங்கிக் கொண்டிருந்திருக்கிறள். தூங்குபவர்களைச் சுடுவது எவ்வளவோ சுலபமல்லவா! பிறகு ஏதும் அறியாதவன்போல டாக்டரைத் தேடிக் கிளம்பினன். டாக்டரும் எதிர்ப்பட்டார். சந்தேகத்திற்கிடம் தராத சூழ்நிலையாக அது அமைந்து விட்டது. ரமணி இருந்த ஹாலுக்குத் திரும்பி விட்டான். அன்றிரவு முழுதும் ரமணியை விட்டு அங்கே இங்கே போக முடியாமல் கூடவே இருக்கும்படியாக நேர்ந்து விட்டதால் கைத்துப்பாக்கியைப் பதுக்கி வைத்துவிட நேரம் கிடைக்கவில்லை. பிறகு நீங்கள் அவன்மீது அலாதி அன்பு காட்டி சந்தேகப்படாமல் இருந்து விட்டதாலும், தீவிரமான உங்கள் புலன் விசாரணையில் அவன் அக்கறை கொண்டு விட்டதாலும் ரிவால்வர் தன் பையிலேயே இருக்கிறது என்பதை அறவே மறந்து இருந்து விட்டான்.

"பிறகு டாக்டரின் அறையில் மதுசூதனரை நீங்கள் விசாரித்தபோது அங்கே ரூப்சந்த் இருந்ததை மீண்டும் ஞாபகப் படுத்திக் கொள்வது அவசியமாகும். மதுசூதனருக்கு ரூப்சந்தின் மீது ஏதோ ஒரு விதத்தில் பலத்த சந்தேகம் ஏற்பட்டிருந்ததால், உங்களது கிடுக்கி விசாரணையின் போது அதைக் கூறிவிட நினைத்தார். ஆனல், அவர் யாரைக் குறிப்பிட விரும்பினரோ, அந்த ஆசாமி – அதாவது ரூப் அங்கிருந்ததால் அவன் எதிரே கூற அவர் பயந்து போய் விட்டார். அவரது தடுமாற்றம் ரூப் சந்தைக் கலக்கிவிட்டு விடவே, அவன் உண்மையை சொல்லி விட்டால் அகப்பட்டுக் கொள்ள நேரிடுமே என்ற நடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. அவனை ஒழித்து விட்டால் அந்த சாக்ஷியம் ஒழிந்து விடுமல்லவா! அதை எப்படி நிறைவேற்றுவது என்று யோசித்திருக்கிறன். தன் கையில் ரிவால்வர் இருப்பது அவனுக்கு ஞாபகம் வந்தது. ஆனல், அதை உபயோகிக்க பயம்! ஏன் என்கிறீர்களா?... பகல் நேரம்! சுடும்போது சிறிது

சப்தம் கேட்டால் கூடப் போதும்! அகப்பட்டு விடுவான். யோசித்தான். அவனது சிறந்த அறிவு பக்குவமாக வேலை செய்தது. டாக்டர் இல்லாத சமயத்தில் ஆபரேஷன் ஆயுதத்தை எடுத்து வந்து அந்த ஆயுதத்தைக் கொலைக்கு உபயோகப் படுத்துவது மற்றொரு விதத்திலும் சாதகமாகிறது. அதாவது கொலைபற்றிய சந்தேகம் டாக்டர் பக்கம் சாயுமல்லவா! அருமை யான திட்டம். பிறகு பாக்கியையும் நான் சொல்லவேண்டுமா?'' என்று கேட்டு நிறுத்தினன் ஜகத்.

'நம்பிக்கையில்லை' என்று மறுப்பது போல தலை அசைத்த ராஜாமணி, ''ஜகத்! பட்டப் பகலில்—விழித்திருக்கும் நேரத்தில் —ஒருவனைக் குத்தும்போது சிறு அலறல் சப்தம் கூடவா கேட்டிருக்காது? மேலும் மதுசூதனர் சிறு குழந்தையல்லவே. கொலை காரனேடு சிறிது கூடவா த்வந்த யுத்தம் செய்திருக்கமாட்டார்? அப்படியும் நடந்துதான் கொலை செய்யப்பட்டிருக்கிறுர் என்பதாக வைத்துக் கொண்டாலும், அதற்கு அறிகுறியாக போட்டுக் கொண்டிருக்கும் சட்டை கொஞ்சம்கூட கசங்கிக் காணப்பட வில்லையே!'' என்ருர்.

''அதைப்போல சண்டைக்கு அவசியமே இல்லாத நிலையில் மதுசூதனர் இருந்தார். உங்களுக்கு வியப்பாக இருக்கும், நீங்கள் மதுசூதனரை விசாரணை செய்து கொண்டிருந்த சமயம் பயத்திஞல் ஏற்பட்ட நாவறட்சியோ என்னவோ, மதுசூதனர் ருப்சந்திடம் கொஞ்சம் தண்ணீர் கேட்டார். அப்போது அவனும் கொண்டு வந்து கொடுத்தான். அது வெறும் தண்ணீர் என்று நினைக்கிறீர்களா? இல்லை. ருப்சந்த் அதில் தூக்க மருந்தைக் கலந்து விட்டான்!''

''அவனிடம் ஏது தூக்க மருந்து ஜகத்?'' என்று குறுக்கிட்டார் ராஜாமணி.

''ஏன் இல்லை?... ஒன்றுக்கு இரண்டு பொட்டலங்கள் இருந்தது. எப்படி அது அவனுக்குக் கிடைத்தது என்பதையும் சொல்லவேண்டுமல்லவா?...ரமணி சுடப்பட்ட அன்று வலி தாங்காமல் இருந்தார். வேதனை மீறுகிற சமயத்தில் ரமணிக்குக் கொடுக்கும்படி தூக்க மருந்து பொட்டலம் இரண்டை டாக்டர் ருப்சந்திடம் கொடுத்து வைத்திருந்தார்...''

''என்ன டாக்டர்? ஜகத் சொல்வது நிஜம்தானு?'' என்று கேட்டார் ராஜாமணி. ஆமோதிக்கும் தலை அசைப்பு டாக்டரிடமிருந்து வந்தது.

''அப்புறம்?'' என்ருர் ராஜாமணி.

''மதுசூதனர் தன் அறையை அடைந்ததும் அவரை அறியாமல் தூக்கம் வந்து விட்டது. சாய்ந்து விட்டார். சாதகமாகி விட்டது ருப்சந்திற்கு! ஆளைச் சத்தமில்லாமல் சாய்த்து விட்டான்!' என்று கூறிப் பெருமிதமாகப் பார்த்தான் ஜகத்.

மௌனமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த ரமணி, ''ராகினி சொன்னது சரியாப் போச்சு!'' என்றான் உரக்க.

''அவள் என்ன சொன்னாள்?'' என்றார் ராஜாமணி.

''விபரமாகச் சொல்லவில்லை. சந்தேகமாகத் தெரிவித்தாள்'' என்றான் ரமணி.

''ராகினி வந்து உங்களிடம் சொன்னாளா? அது எப்போது?''

''இன்று பத்து மணி சுமார் இருக்கும்!''

''இங்கேயா வந்து சொன்னாள்?''

''ஆமாம்! தான் நிரபராதி என்று நிரூபிப்பதற்காக அந்த சந்தேகத்தைச் சொன்னாள்! அது சரியாய் போய்விட்டது. பாவம்! நாமெல்லாம் சேர்ந்து அவளைப் படுத்திவைத்து விட்டோம்!'' என்று அனுதாபத்தோடு ரமணி கூறிய பொழுது. ' ஜகத்!'' என்று கூப்பிட்டார் ராஜாமணி, ''ஆமாம்... காரணம் எதுவுமில்லாமல் ரூப் சுதாராணியைக் கொலை செய்வானேன்?'' என்று கேட்டார். கொலை வழக்குகளுக்கு அது முக்கிய அம்சமல்லவா?

''காரணம் இருக்கிறது. அதுவும் லேசுபாசானதல்ல. சுதாராணி இறந்தால் அவளது சொந்த சுகம் முழுவதையும் ரூப்சந்த் அடைகிறான்!''

''என்ன'' என்று திடுக்கிட்டுக் கேட்டான் ரமணி.

''ஆமாம், கோலாலம்பூர் அத்தையின் உயில் அப்படி இருக்கிறது. சுதாராணி மணம் செய்து கொண்டு, அவளுக்கு வாரிசாகக் குழந்தை இருந்தால்-ஆஸ்தி அதைச் சேரும். குழந்தைகளே இல்லாவிட்டால் ரூப்சந்திற்குச் சேரவேண்டும் என்பது அந்த உயிலின் ஜீவ நிபந்தனை!''

''உமக்கெப்படித் தெரியும்? ஒருக்காலும் அப்படி இருக்கவே இருக்காது! யாரோ கிளப்பியிருக்கும் வதந்தியாக இருக்கும்'' என்று கொதித்துப் பேசின ரமணியைக் கையமர்த்தி அமைதியாக இருக்கும்படி சைகை காட்டினான் ஜகத். ''பதட்டப்படாதீர்கள் ரமணி! நான் சொல்லுவது நூற்றுக்கு நூறு உண்மை. வேண்டுமானால் இதைப் பார்த்துக் கொள்ளுங்கள், அத்தையம்மாள் சாஸனம் செய்திருக்கும் உயிலின் நகல் இது. அவளது கையெழுத்து கூட இதில் இருக்கிறது'' என்று சொல்லி நீண்ட கவர் ஒன்றை ரமணியிடம் கொடுத்தான்.

அவசர அவசரமாகப் பிரித்து அதை வாசித்துப் பார்த்தான் ரமணி. படிக்கப் படிக்க அவனது முகம் கருத்து வந்தது. சரீரம் துவண்டது போலத் தொய்ய ஆரம்பித்தது. கையில் பிடித்திருந்த பேப்பர் கை நழுவுவதைக் கூட உணர முடியாத நிலையில் மயக்கமுற்று பின்பக்கம் சாய்ந்து விட்டான்.

ஏன் மயக்கம் வராது? கோடீஸ்வரியை மணந்த கோமக னுக்கு சல்லிக்காசைக் கூடத் தொட அருகதையில்லை யென்றால்...!

"ஜகத்! இந்த உயில் உன்னிடம் ஏது? எப்படி வந்தது?" என்று பரபரப்போடு கேட்டார் ராஜாமணி.

ஜகத் புன்சிரிப்பு சிரித்துக் கொண்டான். "அத்தையம் மாள் உங்களுக்கு எத்தகைய பொறுப்பைக் கொடுத்தாங்களோ, அதே போன்று எனக்கும் பணம் கொடுத்து பொறுப்பைச் சுமற்றி யிருக்கிறார். நம் இருவருக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா? உங்களுக்கு உயிலின் நகலை அனுப்பவில்லை. எனக்கு அனுப்பி யிருக்கிறார். இல்லாவிட்டால் நான் ஏன் இந்தக் கப்பலில் பிரயாணம் செய்ய வேண்டும்?"

"அப்படியானால் நீங்கள்...?" என்று முடிக்காமல் பார்த்தார். இதுவரை நீ என்றே பேசி வந்த ராஜாமணி அவரை அறியாம லேயே நீங்கள் என்று மரியாதை காட்ட ஆரம்பித்தார். "உங் களைப் போன்ற ஒருவன்! ஆனால், இந்த பொது உடமைத் தோழன் வேஷம் போட வேண்டியிருந்தது... போட்டுக் கொண் டேன்!"

"நீங்கள் யார் என்பதைத் தெரிவிக்கலாமா?"

"இந்தாருங்கள்" என்று பையிலிருந்து 'விஸிட்டிங் கார்டு' ஒன்றை எடுத்துக் கொடுத்தான் ஜகத்.

அதைப் பார்த்ததும் ராஜாமணியின் கண்களில் வியப்பு பிரதிபலித்தது. அதில் "துப்பறியும் அன்வர், பம்பாய்" என்று அச்சடிக்கப்பட்டிருந்தது.

"எந்த விஷயத்திலும் சரி, பாடுபடுபவன் ஒருவனாக இருக்க பக்குவமாகப் புகழை அடித்துக் கொண்டு போய் விடுகிறான் வடநாட்டான்!" என்றார் டாக்டர் தமாஷாக.

"அந்த விஷயத்தில் தென்னாட்டான் பிந்தி விடமாட்டான். இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் மிஞ்சி விடுவான்!" என்று அடக்கமாகக் கூறினார் அன்வர்.

ராஜாமணி தலைகுனிந்து நின்றார். அவமானத்தால் அல்ல. கையிலிருந்த சிறு துப்பாக்கியை நிரடியபடி யோசனையில் ஆழ்ந்து விட்டார்!

ரமணி மயக்கமுற்ற நிலையிலேயே தான் இன்னும் இருந் தான். டாக்டர் அவனைத் தெளிய வைப்பதில் முனைந்தார். அறு ருப்சந்தும் சுயநினைவற்று விழுந்தவன் கண் திறக்கவில்லை. அவன் கைகளிலே விலங்கை மாட்டிக் கொண்டிருந்தார் காப்டன் கேதாரி.

ஆயிற்று; இன்னும் இரண்டு மணி நேரம்; கப்பல் சிங்கப்பூரை அடைந்து விடும்.

கொலைகாரனைத் திரும்பி வரும் தன் மகனைக் கண்டு முகர்ஜி துடிதுடிக்கப் போகும் காக்ஷியைக் காண விரைவது போலக் கப்பல் வேகமாகத் துறைமுகத்தை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தது.

28

'துறைமுகத்தில் நுழையலாமா?' என்று உத்திரவு கேட்பதுபோல கப்பல் 'ஜீஹா' என்று ஊதி அறிவித்தது.

'அதற்காகத்தானே நாங்களும் காத்திருக்கிறோம்' என்பதுபோல போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் துறைமுகக் கரையிலே நின்று கொண்டிருந்தார்கள். கப்பல் காப்டனை கேதாரி ரூப்சந்த் கைது செய்யப்பட்ட உடனேயே கோடீஸ்வரியின் துர்பாக்கிய மரணத்தையும், கொலைகாரனைக் கண்டு பிடித்து விட்ட விஷயத்தையும் சிங்கப்பூர் போலீசுக்கு கம்பியில்லாத் தந்திமூலம் தெரிவித்திருந்தார்!

கரையை எப்போது காணப் போகிறோம் என்று ஏங்கிக் கொண்டிருந்த கேதாரி கப்பலின் உச்சியில் நின்றபடி துறைமுகத்தை நோக்கிக் கொண்டிருந்தார்.

"மிஸ்டர் கேதாரி!" என்ற குரல் அலையோசையையும் மிஞ்சி அவர் காதிலே எட்டியது. குனிந்து பார்த்தார். துப்பறியும் ராஜாமணி அவரை கீழே இறங்கி வரும்படிச் சைகை காட்டிக் கொண்டிருந்தார்.

காப்டன் கீழிறங்கி வந்தார். தன்னோடு சிறிது நேரம் வந்து போகும்படி வேண்டினார் ராஜாமணி.

இருவரும் கப்பலின் பொது ஹாலுக்கு வந்தார்கள். துறைமுகம் நெருங்கி விட்டதால் பிரயாணிகள் பலரும் அங்கே கும்பலாகக் கூடியிருந்தார்கள். ஒரு மூலையிலே கையில் விலங்கோடும் இருபுறமும் காவலுடனும் நின்றுகொண்டிருந்த ரூப்சந்த் தன் விதியை நொந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான். அருகாமையில் இருந்த நாற்காலிகளில் அன்வர், ரமணி, ராகினி ஷைலோ, வைதேகி, பட்டாபி, ஜகத், மங்கம்மா ஆகியோரும் உட்கார்ந்திருந்தார்கள்.

அந்தப் போது ஹாலுக்கு வந்த ராஜாமணி நேராக ரூப்சந்திடம் சென்றார். ஏதோ அவனோடு பேசப்போகிறார் என்று அத்தனை கண்களும் அத்திசைக்குத் திரும்பின. அவர் ரூப்சந்துடன் என்ன பேசப் போகிறார் என்பதைக் கேட்க ஆர்வம்

கொண்டவர்கள் போல அங்கிருந்தோர் மௌனத்தைக் கைக் கொண்டு நிசப்தமாக இருந்தார்கள்.

"காப்டன் கேதாரி! தயவு செய்து அவனது கை விலங்குகளை அகற்றுங்கள்" என்றார் ராஜாமணி.

"ஏன்...? எதற்காக...?" என்று கேட்டார் கேதாரி.

"அவன் நிரபராதி!"

"என்ன...! அவன் நிரபராதியா? அப்படியானால் குற்றவாளி யார்?" என்று எழுந்து வந்தார் பம்பாய் நிபுணர் அன்வர்.

"ஏன் இந்தப் பரபரப்பு? நிரபராதியைக் குறிப்பிட்டவன் குற்றவாளியைக் காட்டமாட்டானா?" என்று பதில் கூறிய ராஜாமணி, "காப்டன்! என் வார்த்தைக்கு நீங்கள் தரும் மதிப்பு இவ்வளவுதானா?" என்றார்.

கேதாரி சற்றும் தாமதிக்கவில்லை. கைவிலங்குகளைக் கழற்றினார். அதைக் கேதாரியிடமிருந்து வாங்கிக்கொண்ட ராஜாமணி கூட்டத்தை ஊடுருவிப் பார்த்தார். அடுத்த வினாடி கூட்டத்திடையே புகுந்தார். யார் கையில் அவர் விலங்கு மாட்டப்போகிறார் என்று ஆச்சரியத்தோடு ஒவ்வொருவரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

துரித நடைபோட்ட ராஜாமணியின் கால்கள் ரமணிக்கு முன்னே வந்து நின்றன. "தங்க ஆபரணங்களைத் தாங்க வேண்டிய கையில் இரும்பு வளையத்தை மாட்ட வேண்டியதற்காக வருந்துகிறேன் ரமணி" என்று சொல்லிக்கொண்டே விலங்கை அவன் கையிலே மாட்டினார் அவர்.

கூட்டத்திலே கசமுசா சப்தம் ஒரு வினாடிதான் நிலவியது. பின்பு உடனே ஓய்ந்தது.

"அக்ரமம். அநியாயம். வீண்பழி" என்று ரமணி கத்திக் குதித்த அட்டகாச அரவம்கூடச் சிறிது நேரத்திற்கெல்லாம் அடங்கிவிட்டது.

"எல்லாம் புதிர்போல இருக்கிறதே மிஸ்டர் ராஜாமணி!" என்று கேட்டார் அன்வர்.

"புதிர்போல இருந்ததெல்லாம் தங்களால்தான் விடுவிக்கப்பட முடிந்தது. அன்வர்! நான் நிஜக்குற்றவாளியைக் கண்டு பிடிக்க நீங்கள்தான் உதவினீர்கள்...!"

"என்ன நானா...? இதுவும் ஒரு புதிராக அல்லவா இருக்கிறது!"

"ரூப்சந்த் எதற்காக சுதாராணியைக் கொல்லவேண்டும் என்பதற்குக் காரணம் சொன்னீர்கள் அல்லவா?, அது எனக்கு வழி காண்பித்தது! அந்தப் பெருமை உங்களைத்தான் சேரும்."

"புரியும்படியாகச் சொல்லுங்கள் ராஜாமணி" என்று கேட்கத் துடிதுடித்தார் அன்வர். அங்கிருந்த அனைவரும் அந்த ஆர்வத்தோடுதான் இருந்தார்கள்.

ராஜாமணி விபரமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

"அன்வர்! குற்றவாளியைக் கண்டு பிடித்த விதத்தை நான் கூறுகிறேன். இடையிடையே சந்தேகம் இருந்தால் கேட்டுக் கொள்ளலாம். ரூப்சந்தை நீங்கள் காரண காரியத்தோடு குற்றம் சாட்டியபோது அதை நான் முழுக்க முழுக்க நம்பத்தான் செய்தேன். ஆனால். அத்தையம்மாளின் உயில் நிபந்தனையை நீங்கள் கூறியபோது ரமணி பரபரப்புக் காட்டினான். கோடீஸ்வரியை மணந்தும் நடுத்தெரு நாராயணனாகி விட்டோமே என்று நினைத்து மயக்க முற்றபோது என் அறிவு நுட்பம் கொள்ள ஆரம்பித்தது. ரமணிக்கு சுதா கொலை செய்யப்பட்ட விஷயத்தை நான்தான் முதல் முதலாகக் கூறினேன். அப்போது அவன் 'ஆ' என்று அலறக்கூட இல்லை. உயில் நிபந்தனை அவனை மயக்கமுறச் செய்து விட்டதென்றால் அதிலிருந்து என்ன புரிகிறது? அகால மரணமடைந்துவிட்ட மனைவியின் பேரில் பாசமில்லை; பணத்திலே நேசம் இருக்கிறது என்றுதானே அர்த்தம்! இது என் புத்திக்குப்பட்டது. ஏன் ரமணி கொன்றிருக்கக்கூடாது என்று ஆலோசனையில் ஆழ்ந்தேன். அப்போது என் கையிலே இருந்த ரிவால்வரை அர்த்தமற்று திறந்து மூடிப்பார்த்துக் கொண்டிருந்தபோது, அதுவும் என் கருத்தைக் கவர்ந்தது. அந்தத் துப்பாக்கி இரண்டு தடவை சுடப்பட்டிருப்பதை அறிந்தேன். அந்தத் துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட மூன்று குண்டுகளில் ஒன்று ரமணியின் காலைப் பதம் பார்த்திருக்கிறது. மற்றொன்று சுதா ராணியை. அப்படியானால் இன்னொரு தோட்டா எப்படிப் பயன் பட்டிருக்க வேண்டும்? ராகினி இரு தடவை சுட்டு ஒன்றுதான் குறி சரியாகப்பட்டதா? சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள ஷைலோவை விசாரித்தேன். ரூப்சந்திடம் கேட்டேன். ரமணியிடம்கூட விசாரித்தேன். குண்டு சப்தம் ஒரே முறைதான் 'கேட்டதாகக் கூறினார்கள். அப்படியானால் மற்றொரு தோட்டா? புதிராக இருந்தது. ஒருக்கால் இருதடவை 'டப் டப்' என்று இடை நேரம் கொடுக்காமல் சுட்டிருந்தால் பரபரப்பில் ரூப்பும் ஷைலோவும் வித்தியாசம் கூற முடியாமல் போயிருக்குமல்லவா? எதற்கும் ரமணி சுடப்பட்ட இடத்தை ஆராயலாம் என்று போனேன். அங்கும் என் சந்தேகத்தை அதிகப்படுத்த ஒரு தடயம் கிடைத்தது. ரமணி உட்கார்ந்திருந்த இடத்திற்கும் ராகினி நின்று சுட்ட இடத்திற்கும் நடுவே போடப்பட்டிருந்த மேஜையின் டிராயரில் தோட்டா பொத்ததுபோல ஒரு துவாரத்தைக் கண்டேன். டிராயரினுள்ளே சிறு குண்டும் கிடந்தது. ஆகவே மற்றொரு தோட்டா பாய்ந்த இடமும் தெரிந்து விட்டது. ரமணி சுடப்பட்டபோது அவன் உட்கார்ந்திருந்த சோபாவின் கீழ் பார்த்தேன். தரையில் ரத்

தம் சிந்தியிருந்த இடத்தை உற்றுக் கவனித்தேன். அது கழுவி விடப்பட்டிருந்தது. அப்படிக் கழுவிய பிறகும் கூட மங்கலான சிகப்பு நிறம் மரப்பலகையினுலான தளத்தில் நன்கு தெரிந்தது. அது என் அனுபவத்தைப் பதம் பார்த்தது. தண்ணீர் கொண்டு வந்து மேலும் கழுவி விட்டேன். சிகப்பு நிறம் நீங்கவேயில்லை. அப்படியானுல் அது தரும் முடிவு? சிந்தி யிருப்பது இரத்த மானுல் கழுவியவுடன் ரத்தக் சிவப்பு மாறிவிடும். கறை மட்டி லுமே தட்டுப்படும். சிகப்பு நிற்காது. சிகப்பு மையாக இருந்தால் என்னதான் கழுவினுலும் லேசாகச் சிவப்பு இருந்து கொண்டு தான் இருக்கும். இந்த விஷயத்தால் எனக்கு சுதாராணியின் அறையிலே பார்த்த காலி மைக்கூடும், சிகப்பு மை தோய்ந்த கடற்பஞ்சும் ஞாபகத்திற்கு வந்தன. அதோடு ரமணியின் வலக்கை விரல்களிலே நகக்கண்கள் ஓரங்களில் லேசாக சிகப் புச் சாயம் இருந்ததைப் பார்த்தேன். எல்லாம் குழப்பி வைத் தன. மேலும் சிந்தித்தேன். கொலைப்பட்ட மதுசூதனர் குறிப் பாகக் கூறிய சந்தேகப் பேர்வழி ரமணியாக ஏன் இருக்கக் கூடாது என்று சிந்தித்துப் பார்த்தேன். அதிலும் ஒரு இடைஞ் சல்! ரமணி சுடுபட்ட பிறகே சுதாராணி சுடப்பட்டிருக்கிருள். அப்படியானுல் குண்டுபட்ட கால்களை ஊன்றவும் முடியாத நிலை யில் ரமணி சுதாவின் அறைக்கு நடந்துபோவது சாத்தியமானதா? என் யூகங்களுக்கெல்லாம் இது குறுக்கே நின்றது. இருந்தாலும் நுட்பமாக யோசித்தேன். ரமணியால் முடியும் என்ற சந்தே கத்திற்கு வலுவு கிடைத்தது. அப்படியானுல் மதுசூதனர் கொலைப் பட்டது? ரமணி செய்யவில்லை. ஆனுல், ரமணியின் ஏற்பாடு என்பதற்கு சந்தர்ப்பப் பொருத்தம் அனுமானம் ஒன்றைத் தந் தது. இவைகள்தான் ரமணியை நான் குற்றவாளியாகக் கருத சந்தேகத்தை விளைவித்தன. இப்போது நான் ஆதிமுதல் விபர மாகக் கூறுகிறேன். உள்ளபடியே சுதாராணி மீது ரமணிக்கு அன்புமில்லை, ஆசையுமில்லை. பணத்திற்காகவே அவன் கல் யாணம் செய்துகொண்டான். அதை தன் ஆளுகைக்குக் கொண்டு வரவேண்டு மென்பதே அவனது விருப்பம். அதற்கு சுதா உயிரோடு இருப்பது இடைஞ்சல். அவளை ஒழித்தாக வேண்டும்; திட்டம் வகுத்தான். ராகினியும் சேர்ந்துதான்! அவள் வெளி பாவனைக்கு அட்டகாசம் செய்து கொண்டிருந் தாளே யொழிய அந்தரங்கத்தில் அவள், அவ்வப்போது ரமணி யின் திட்டப்படிதான் நடந்து வந்திருக்கிருள். என்ன திட்டமென் பதையும் சொல்ல வேண்டுமல்லவா. ஆதிநாளில் ராகினியும் ரமணியும் கஷ்ட வாழ்வு வாழ்ந்தவர்கள். காதல் வாழ்வுக் கை நிறைந்த பணமில்லாவிட்டால் கனிரஸம் தராது. அதற் எவ்வழியிலேனும் பணம் திரட்ட வட்டமிட்டான், அந்த சந்தர் பத்தில்தான் சுதா சென்னை வந்திருந்தாள். ரமணியை வேலைக் குச் சேர்த்து வைப்பதில் ராகினி முயன்ருள். ஆனுல், ரமணியின் மூளை வேறு விதமாக வேலை செய்தது. ராகினி தன் அருகே இல் லாத அந்தஸ்து அவனது வாழ்விற்கு ஒரு அஸ்தமனம் போல.

பணமில்லா வாழ்வோ பாழடைந்த பாதாளம். ஆனால், இந்த இரண்டொரு மித்து வாழக் கொள்ள ஆசை. அதற்கு ஒரு வழி கண்டு பிடித்து. அதற்கு ராகினி சம்மதமளிக்கும் வகையில் அவளைச் சரிக்கட்டி விட்டான்.

அந்தச் சதியாலோசனை இதுதான். எப்படியோ மாயம் செய்து சுதாவை ரமணி தன் வசமாக்கிக் கல்யாணம் செய்து கொண்டுவிட வேண்டியது. அதே சமயம் ராகினி துரோகத்தைக் கண்டு கொதித்தெழுந்தவள்போல் நாடகம் நடித்து வர வேண்டியது. சமயம் நேரும்போது அகப்பட்டுக் கொள்ளாத வழியில் சுதாவைக் கொன்று தீர்க்கவேண்டும். சுதா இறந்து விட்டால் சொத்து சுகத்திற்கு ரமணி வார்சாகி விடுவான். பிறகு ராகினியை மணந்து கொண்டு ராஜ வாழ்வு வாழலாம்.

சதி இது. அதை நிறைவேற்ற சந்தர்ப்பம் வந்தது. அது தான் அன்று ராகினி ரமணியைச் சுட்டது. அது வெறும் நடிப்பு. ஏற்பாடு எப்படித் தெரியுமா? ராகினி ஆத்திரத்தோடு ரமணியை வம்புக்கிழுத்து சுடுவது போலச் சுடவேண்டியது அதே சமயம் தன் காலில் குண்டு பாய்ந்து விட்டதுபோல ரமணி ஐயோ என்று அலறி, ஏற்கனவே சிகப்பு மை கொட்டி வைத்திருக்கும் கடற்பஞ்சை கைக்குட்டையில் சுற்றிக்கொண்டு காலில் ஒரு இடத்தில் வைத்து அழுத்திக் கொள்ளவேண்டும். கடற்பஞ்சில் ஊறியிருந்த மை கசிந்து வெளியே சொட்டும். பார்ப்பதற்கும் ரத்தம் போலிருக்கும். பரபரப்பில் யாரும் கிட்ட நெருங்கி அவ்வளவு உன்னிப்பாய் கவனிக்க மாட்டார்கள். அந்தச் சமயம் அங்கு இருக்கும் ஷைலியை ராகினி கூட்டிக் கொண்டு போய் விடவேண்டும். டாக்டரை அழைத்து வரும் படி ரூப்சந்தை அனுப்பிப் போக்குக் காட்டிவிட்டு ராகினி நழுவவிட்டுச் சென்ற ரிவால்வரை ரமணி எடுத்துக்கொண்டு சுதாவின் அறைக்குப் போய் அவளைச் சுட்டுவிட வேண்டும். பிறகு திரும்ப வந்து, ஏற்கனவே உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு ரமணி தன்னைத் தானே காலில் ஒரு இடத்தில் சுட்டுக் கொண்டுவிட வேண்டும்!... அதன்படியே திட்டம் நிறைவேறி விட்டது...''

அன்வர் இந்த இடத்திலே குறுக்கிட்டார். ''ராகினிக்கும் ரமணிக்கும் தொடர்பு இருந்தது என்பதற்கு ஆதாரம் என்ன?'' என்று கேட்டார்.

''கேட்க வேண்டிய கேள்விதான்! அதையும் சொல்கிறேன். சுதாராணி இலங்கையை விட்டு மலாயா புறப்படுவதை மூடுமந்திரமாக வைத்திருந்தோம். நம்பிக்கைக்குகந்த வைதேகிக்குக் கூடச் சொல்லவில்லை. எனக்கும் ரமணிக்கும் மட்டுமே தெரியும். அப்படியிருக்கும் நிலையில் ராகினிக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது. யார் சொல்லியிருக்க முடியும்?

நாளு...இல்லே, ரமணி! எப்படி அதை அவன் ராகினிக்குத் தெரியப்படுத்தினுன் என்பதைச் சொல்கிறேன். பிரயாணத் தேதியை ரகசியமாக ராகினிக்குக் கூற அவள் அறைக்கு ரமணி போனுன். அவள் அங்கு இல்லே. குறிப்பு எழுதி வைத்து விட்டு வந்தான். ஒரே வார்த்தை — சூசகமாக! 'கர்நாடகா' என்று மட்டும் குறிப்பிட்டிருந்தான். அந்தத் துண்டுக் காகிதம் இதோ இருக்கிறது..."

மறுபடியும் அன்வர் குறுக்கிட்டார்: "ரமணி தன் காலே ஒடித்துக் கொள்ள வேண்டிய அவசியம்? வேறு திட்டம் வகுக்கத் தெரியவில்லேயா?"

"அதுதான் அற்புதமான புத்திசாலித்தனம். கொலே செய்தவன் எப்படியோ அகப்பட்டு விடுவான். அதே போல ரமணி மீது கோர்வையான சாக்ஷியம் அகஸ்மாத்தாகத் தெரிகிறது என்று வைத்துக் கொள்ளலாம். அப்போது தப்பித்துக் கொள்ள இது ஒரு தந்திரம். வழக்கின்போது ஒரு பெரிய கட்டை குறுக்கிடும். ரமணி சுடப்பட்ட பிறகு சுத்ராணி கொலே செய்யப்பட்டிருக்கிருள். குண்டுபட்டு எலும்பு முறிந்த ரமணி எப்படி அவளே அவள் அறைக்குப் போய் கொன்றிருக்க முடியும் என்ற வாதம் கிளம்பலாம். அது ரமணியைக் காப்பாற்றி விடுமல்லவா?"

" மற்ருெரு சந்தேகம்: மதுசூதனரைக் கொன்றது?" என்று கேட்டார் அன்வர்.

" ராகினி."

" அவளுக்கு அந்த ஆயுதம் கிடைத்தவிதம்?"

"டாக்டரின் அறையில் ரமணி இருந்ததால் அவன் அதை எடுத்துக் கொடுத்திருக்கிருன்."

" ஒரு பெண்ணுல் மதுசூதனரைக் கொல்ல முடியுமா?"

" தூங்கும்போது ஒரு சிறு பையன்கூடக் கொல்லலாம்."

" குத்து விழுந்ததும் சப்தம் வீரிட்டெழாதா?"

" எழ சந்தர்ப்பமில்லே. மதுசூதனருக்கு தூக்க மருந்தின் மயக்கம்"

" அதைக் கொடுத்தது?"

" ரமணி!"

" எப்போது?"

" நான் அறைக்குள்ளே வந்து மதுசூதனரை விசாரிப்பதற்கு முன்."

"சரி...மற்றொன்று. ரிவால்வர் ருப்சந்த் பைக்கு எப்படி வந்தது?"

"அந்தப் பையன் அசந்திருந்த சமயம் ரமணி போட்டிருக்கிறான்!"

"ரமணி சுதாவைச் சுட்டு சுகபோகம் அனுபவிக்கத் திட்டமிட்டான் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"ஹோட்டல் பௌராணி கூறிற்று! அங்கே ராகினியும் ரமணியும் முதல்நாள் பேசிக்கொண்டிருந்தபோது, "எதிர்கால வைகுந்த வாசத்தை எண்ணிப் பல்லை கடித்துக் கொண்டிரு ராகினி!" என்று ரமணி கூறிய ஆறுதல்மொழி இன்னும் என் செவியிலே ஒலித்துக்கொண்டே இருக்கிறது."

அதே சமயம் "பிடியுங்கள்! பிடியுங்கள்!" என்று பலர் கத்தும் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தனர் அனைவரும். பேய் போல் ஓடிய ராகினி சமுத்திரத்திலே தொப்பெனக் குதித்து விட்டாள்!

அந்தக் கப்பல் யாத்திரை மூன்று பேருக்கு மரண யாத்திரையாக அமைந்து விட்டது!

ராமநாத் பிரஸ் சென்னை—14

பனிரண்டு ஆண்டுகளாகத்
தென்னிந்திய சினிமாத் தொழிலுக்கு
மகத்தான சேவை.

பேசும் படம்

தமிழ் நாட்டின் தலைசிறந்த
சினிமா மாத இதழ்

இப்பொழுது எங்கள் தொண்டின்
பதின்மூன்றாம் ஆண்டு தொடங்குகிறது.

★

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

சென்னை—14.